
உ

சக்தி துணை

சக்தி பீட நாதம்

சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள்

மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு :-

அருள்மிகு சுன்னாகம்

வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

ஜய வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள்

08.06.2014

உ

சக்தி துணை

சக்தி பீட நாதம்

சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள்

மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு:

வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

ஜய வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள்

08.06.2014

மலரின் பெயர் : 'சக்தி பீட நாதம்'
கும்பாபிஷேக சிறப்பு மலர்

உரிமை : சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

பக்கங்கள் : 290

தொகுப்பு : வைத்திய கலாநிதி அ. ஜெயகுமரன்,
(கவிஞர் சுன்னைக்குமரன்)
சுகாதார வைத்திய அதிகாரி - உடுவில்,
பிராந்திய வைத்திய அதிகாரி (பி.ம.த.பி)
யாழ். பிராந்தியம்

காலம் : 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை

வெளியீடு : சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

பதிப்பு : கரிகணன் (தனியார்) நிறுவனம்,
இல. 681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

சக்தி துணை

சமர்ப்பணம்



"சக்தி பீட நாதம்" கும்பாபிஷேக மலரை


எல்லாம் வல்ல வருஷப்புல ஸ்ரீ மகாமாரி

அம்பிகையின் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.



உ

சிவமயம்



திகட சக்கரச் செம்முக மைந்துளான்

சகட சக்கரத் தாமரை நாயகன்

அகட சக்கர வின்மணி யாவுறை

விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உ

சக்திமயம்

காயத்திரி மந்திரம்



ஓம்

பூர் புவஸ் ஸ/வ:

தத் ஸவிதுர் வரேண்யம்

பர்கோ தேவஸ்ய தீமஹி !

தியோ யோ ந: ப்ரசோதயாத் !!

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

ஓம் - ஓம், பூ - பூலோகம், புவ - புவர்லோகம், ஸ/வ - ஸ/ர்வலோகம், ய - யார், ந - நம்முடைய, தீய - அறிவை, ப்ரசோதயாத் - தூண்டுகிறாரோ, தத் - அந்த, தேவஸ்ய - சுடருடைய, ஸவிது - கடவுளின், வரேண்யம் - மேலான, பர்க - ஒளியை, தீமஹி - தியானிப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



"சக்தி பீட நாதம்" எனும் இம்மலரை
எம்பெருமாள் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள்
பாதக்கமலங்களில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

"மலர்க் குழுவினர்"

உள்ளே மலர்பவை...

	ஆசிச் செய்திகள்	ix-xxiv
	வாழ்த்திச் செய்திகள்	xxv-xxxviii
1.	ஆலய வரலாறு	01
2.	ஸ்ரீ மகாமாரியம்மையின் 4ஆம் மண்டலாபிஷேக மலர் பற்றிய பாமாலை	08
3.	மாரியம்மன் வழிபாடு	11
4.	சக்தி மந்திரங்கள்	42
5.	மஹாமேரு யந்திரத்தில் தேவி உபாசனை	47
6.	அம்பிகை வழிபாட்டின் மகத்துவம்	49
7.	ஆலயங்களில் உள்ள மரங்களும் அவற்றின் சிறப்புக்களும்	54
8.	பகவத் கீதையில் காணப்படும் இந்து வாழ்வியலின் அறநெறி விழுமியங்கள்	62
9.	சைவாலயங்களும் திருமுறைகளும்	73
10.	அருள்தரும் சக்தி	80
11.	சுன்னாகம் முதல் தமிழ் இராச்சியம்	82
12.	"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ"	85
13.	சக்தி வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள்	89
14.	வாழ்வு மிகுத்து வரும்	97
15.	வருஷப்புலம் அருள்மிகு ஸ்ரீமகாமாரி அம்பாள் பதிகம்	100
16.	அண்டங்கள் அனைத்தும் அம்மையின் ஆட்சி	102
17.	அகத்தியர் தேவாரத் திரட்டு	108
18.	சக்தியும் சிவமுமாய தன்மை "ஒருமையின் இருமை"	112
19.	கும்பாபிஷேகம்	117
20.	ஆயகலைகள் அறுபத்து நான்கு	128
21.	சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு	145

22	புனிதவதி - காரைக்கால் அம்மையார்	153
23.	தாயே மகாசக்தி	158
24.	அன்னையின் அருள்	163
25.	சித்தாந்தம் கூறும் சைவசமயம்	165
26.	ஸ்ரீமகா மாரியம்மன்	169
27	கும்பாபிஷேகக் கிரியைகளின் மகிமையைத் தெரிந்து கொள்வோம்	173
28	ஆடிமாதப் பெருமை	181
29	அம்மையே	184
30.	கேட்ட வரங்களெல்லாம் தந்தருளும் ஸ்ரீ சந்தோஷி மாதா	187
31.	சைவ மக்களின் வாழ்க்கையில் விரதங்கள்	194
32.	"அன்றும் இன்றும் என்றும் அம்பாள்"	198
33.	கண்ணகி வழிபாடு	200
34.	வாழ வைக்கும் கோவில் திருப்பணிகள்	204
35.	நான் கண்ட இந்திர விழா	207
36.	அப்பாவின் டயறியிலிருந்து அன்பு மகள்	210
37.	எங்கும் சக்தி மயமே	212
38.	மஹா கும்பாபிஷேக மகிமை	215
39.	அம்பாள் பெருமை	222
40.	அன்னை மகாமாரி	224
41	பிரார்த்தனை	225
42.	வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பிகையின் சித்திரத் தேர்	227
43.	"மாரியம்மா... மாரியம்மா'...'	230
44.	ஆலய வழிபாட்டின் மகத்துவம்	232
45.	வருஷப்புல நாயகியே	234
46.	ஆலய தரிசனம்	235
47.	சக்தி வழிபாடு	237
48.	ஊஞ்சல் பாட்டு	238
49.	கீர்த்தனைகள்	243
50.	யாழ்ப்பாணத்துப் பண்ணிசை மரபு	246
51.	கோவில் நோட்டீஸ்	250
52.	தன்பணிக்கு ஆளாக்கிய தாய் மகாமாரி	252
53.	திருப்பணிக்கு நிதிவழங்கியோர் விபரம்	254
54.	நன்றி	255

கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை

ஏகவக்த்ரம் சதுர்பாஹீம் டமரும் பாச கட்சம்
ரக்தபாத்ர தரம் திவ்யம் சர்வா பரண பூஷ்தம்
ஸர்வல ஷ்ண ஸங்காசம் மாரிகாமிதி பாவயேத்

(மகா மாரித்யானம்)

வருஷப்புலம் மகாமாரி அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் மண்ணவரும் விண்ணவரும் துதி செய்ய சிறப்பாக இனிதே நிறைவேறியது. இப் புண்ணிய கைங்காரியம் சிறப்புற எம்முள் இருந்து எம்மை செயற்படுத்திய சக்திபீட வருஷப்புல மகாமாரி அருள் பரிபூரணமாக அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து மண்டலாபிஷேகப் பூர்த்தி தினத்தில் கும்பாபிஷேக மலர் எனும் ஆன்மீக சிறப்பு மலர் பல அரிய சமயக் கருத்துக்களையும் உலகலாவிய சமய சிறப்புக்களையும் ஏற்று சிறப்பாக வெளிவருகின்றது. அம்மலர் ஆன்மீக நறுமலராய் சிறந்தோங்க எமது பூரண நல்லாசிகள் வழங்கி மகிழ்கிறேன்.

சுமபஸ்தது.

"லோகா சமஸ்த்தா அகிணோ பவளது"
மண்றின் மணி விளக்கெனலா மருவு முகநகை போற்றி
யொன்றிய மங்கல றாணி - ணொறி போற்றி யுலகும்பர்
சென்று தொழ அருள் சுரக்கும் சிவகாம சுந்தரித
னின்ற திருநிலை போற்றி நிலவு திருவடிபோற்றி

(கோயிற் புராணம்)

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

"ஸ்ரீ வாகீசவாரிதி"
சிவஸ்ரீ. கணேச சபாபதிக்குருக்கள்
சுன்னாகம்,
வருஷப்புல மகாமாரி தேவஸ்தானம்

ஆசியுரை

இலங்கை யாழ்ப்பாணத்தின் வடக்கே சுன்னாக நகரத்தில் வருஷப்புலத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 08.06.2014 அன்று நடைபெற இருப்பதைக் கேள்வியுற்று ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

அம்பாளை "ஸர்வோபகார காணய ஸதார்த்த சித்தா" என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. இதற்கு எல்லாவித உதவிகளையும் செய்வதற்கு கனிந்த இதயத்துடன் காத்துக் கொண்டு அம்பாள் இருக்கின்றாள் என்பது பொருள்.

"இந்த அம்பாளை வணங்கும் பக்தர்களை அம்பாள் வித்யாவஸ்தம் யசஸ்வந்தம் லக்ஷ்மீவந்தம்" ஆக இருக்க அருள் பாலிக்க வேண்டும் என்று பிரார்த்தித்து இந்த கும்பாபிஷேகம் சிறப்புடன் நடந்தேற ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் ஆசீர்வதிக்கின்றார்கள்.

இந்த கும்பாபிஷேக வைபவத்தில் பங்கு ஏற்கும் எல்லாப் பக்தர்களும் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று வாழ்வில் சிறந்த பத்திமான்களாகத் திகழ ஆசீர்வதிக்கிறார்கள்.

ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்
காஞ்சி காமகோடி பீடம்,
காஞ்சிபுரம்
இந்தியா.

ஆசியுரை

இயற்கை வளத்துடன் பல அறிஞர் பெருமக்களையும், தவசீலர் களையும், அருள் நூல்களையும் உலகிற்கு வழங்கிய பெருமை யாழ்ப்பாணம் பகுதிக்கு உண்டு.

இங்கு சுன்னாகம் வருஷப்புலத்தில் எழுந்தருளி வேண்டுவோர்க்கு வேண்டுவன தந்து ஸ்ரீ மகாமாரியம்மன் அருள்பாலிக்கின்றாள்.

இந்த சக்திபீடத்தின் திருப்பணிகள் செவ்வனே நிறைவுபெற்று மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து, கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுவது குறித்த செய்தி மிக்க மகிழ்வைத் தருகின்றது.

கும்பாபிஷேக மலர் அனைவருக்கும் பயன்தரும் வகையில் பக்திமணம் பரப்பவும், இத்திருக்கோயில் திருப்பணியில் அயராது பணி யாற்றிவரும் மதிப்பிற்குரிய தலைவர் இந்திரன் உள்ளிட்ட நிர்வாகத்தினரும், பக்தப் பெருமக்களும் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவும், எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

அன்புடன்

K. பிச்சைக் குருக்கள்
பிள்ளையார்பட்டி,
தமிழ்நாடு இந்தியா

ஆசிச்செய்தி

வருஷப்புலமும் மகாமாரியும்

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே."

சைவமும், தமிழும். தமிழர் பாரம்பரியமும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் வட பகுதியில் சுன்னாகப் பதியின் எல்லையில் அதாவது மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்குமிடையில் ஓர் மதகு அமைந்துள்ளது. அதனருகே ஓர் தெரு வளைந்து, வளைந்து செல்கின்றது. இப்பாதையின் இரு மருங்கிலும் மக்கள் வரிசையாகக் குடியமர்ந்து இருப்பதாலோ என்னவோ இப்பகுதிக்கு வரிசைப்புலம் எனப்பெயர் அமையப் பெற்றுள்ளது., இப்பகுதியில் வாழும் மக்களுக்குக் குல தெய்வமாக மகாமாரியம்பாள் விளங்குகின்றாள். இந்த அம்பாள் தோன்றிய காலம் தெரியாது.

எனது பாட்டனார் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஐயாவிற்கு அவருடைய தந்தை பிரம்மஸ்ரீ வைத்தியநாத ஐயாவினால் இந்த ஆலய பூஜை ஒழுங்கு ஒப்படைக்கப்பட்டது. அப்போது எனது பாட்டனாருக்கு பதினேழு வயது. அதற்கு முன் ஓர் சைவப் பூசாரியார் பூஜை செய்ததாக அறிந்தேன். அப்போது ஓர் சிறிய மடாலயம். அதன் பின்னர் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. எனது பாட்டனார் காலத்தில் ஒரு காலப்பூஜை நடைபெற்றது. பாட்டனார் காலையிலே கோவிலுக்குச் சென்று அங்குள்ள கிணற்றில் நீராடிவிட்டு நைவேத்தியம் வைத்து பூஜை செய்து அந்தப் பிரசாதத்தைக் கும்பிட வரும் அடியார்களுக்குக் கொடுப்பாராம். பாட்டனார் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் கோவில்கள் அழிக்கப்பட்டதாம். மூல விக்கிரகம் அகற்றப்பட்ட தாம். அன்றைய கால கட்டத்தில் ஒருநாள் பாட்டனார் கனவில் அம்பாள் தோன்றி என்னை எங்கும் தேடாதே

ஆலயத்திற்கு அருகே நீருள் அமிழ்ந்துள்ளேன். என்னைத் தூக்கு என்றாராம். மறுநாள் கோவில் திருமஞ்சனக் கிணற்றுள் அம்பாள் காட்சி கொடுத்ததாக வரலாறு. அந்த விக்கிரகம் தான் இன்றும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

எனது பாட்டனார் சபாரத்தின ஐயாவிற்குப் பின் எமது தந்தை பொறுப்பேற்று பூஜைகள் நடாத்தி வந்தார். அம்பாள் ஆலயமும் அடியார்களின் பொருளுதவி, சரீர உதவிகள் மூலம் வளர்ச்சியடைந்தது. சில காலத்தின் பின் எமது தந்தையார் சோமஸ்கந்த குருக்கள் ஐயா ஆலய பூஜைகள், உற்சவப் பொறுப்புக்களை மூன்று தலைமுறையினரும் பூஜைகள், திருவிழாக்கள் நடாத்தியுள்ளோம்.

பின்னர் நாட்டு நிலைமை, பல இன்னல்கள், இடம்பெயர்வுகள் என்ற நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. எனினும் அம்பாள் அடியார்கள் ஆலயத்தை பல நிலைகளிலும் வளர்த்துள்ளார்கள். இன்று ஆலயம் இராஜகோபுரத்துடன் அழகாக அற்புதமாக காட்சியளிப்பது கண் கொள்ளாக் காட்சியாம். எல்லாவற்றிற்கும் அடியார்களே மூல காரணம்.

இத்தகைய அற்புதத் திருப்பணி செய்து கும்பாபிஷேக ஒழுங்குகள் செய்த திருப்பணிச் சபையினருக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும் கும்பாபிஷேக கிரியைகள், பூஜைகள், விழாக்கள் சிறப்புற நடாத்தி வரும் சபா ஐயாவிற்கும் அடியார்களுக்கும் நல்லாசிகள் கூறி என்றென்றும் அம்பாள் பாதாரவிந்தங்களை வணங்குகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஶ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள்
சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான ஆதீனகர்த்தா
தெஹிவளை நெடுமால் விஷ்ணு ஆலய பிரதமகுரு

அருளாசிச் செய்தி

வருஷப்புலம் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ மகாமாரி அம்பாளுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறு வதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் பொருட்டு ஸ்ரீ மகாமாரி அம்பாளாக அருள்பாலிக்கும் அம்பிகைக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது ஆலயத்திற்கும், ஊர்மக்களுக்கும் நன்மையைத் தேடித்தருவதாகும். பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகமானது இன்று அம்பிகைக்கு நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், நித்தமும் எம்பிரான் கோவில்புகுக, ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனும் எமது முன்னோர்களின் வாக்கிற்கமைய வருஷப்புலம் பிரதேசத்தில் அம்பிகைக்கென கோவில் அமைத்து இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது ஊருக்கும், ஊர்வாழ் மக்களுக்கும் இறையருளைத் தேடித்தருவதாகும்.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இப்புனிதப் பணியைச் செய்யும் ஆலய பரிபாலன சபையினரையும் குருமார் களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

அருளாசிச் செய்தி

திருவருள்மிகு வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய புன ராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் அம்பிகையின் திருவருளோடு நிறைவெய்தியிருக்கிறது. தர்மவள்ளல்களின் பெருநிதியோடும் சிற்பா சாரியாரின் சிறந்த சிற்ப கைவண்ணத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவுடன் பிரகாசிக்கும் ஆலயத்தை இராஜகோபுரமும் அணிசெய்கிறது. சிவாச்சாரியார்களின் மந்திரம் கிரியைப் பாவனைகள் மூலம் அம்பிகை மூலாலயத்தில் விக்கிரகத்திலே சாந்நித்யமாகி பக்தர்களுக்கு திருவருள் பாலித்துக்கொண்டு இருக்கிறாள்.

இம் மஹா கைங்கர்யத்திற்குத் துணைநின்ற அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

'சிவாகமஞான பாஸ்கரன்'
சிவஶ்ரீ. தா. மகாதேவக் குருக்கள்
காயத்ரீ பீடம், தர்மசாஸ்தா குருகுலம்
ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரீ தேவ்யாலயம்
இணுவில், சுன்னாகம்.

சுன்னாகம் வருஷப்புலம்
ஸ்ரீ மகாமாரி அம்பாள் நல்லருள் தருவாள்

சுன்னாகம் பகுதியில் தர்ம சிந்தையாளரும் கல்வியாளரும் நிறைந்த வருஷப் புலம் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்து வரும் மகாமாரி அம்பாள் ஆலயம் புதிதாகப் பல திருப்பணிகள் செய்து அழகாக வர்ணம் தீட்டி, திரிதள இராஜகோபுரம் அமைத்து சிறப்புடன் மஹா கும்பாபிஷேகம் செய்து மண்டல பூர்த்தி நடைபெறவுள்ளது. எல்லோர்க்கும் நல்லருளைத் தரும் நற்செயலாகும். இதில் பங்கு கொண்டு அரும்பணியாற்றிய அனைவரும் போற்றுதற்குரியவர்கள். ஊரில் உள்ளோரும் வெளிநாடுகளில் வாழும் அம்பாள் அடியார்களும் பொருளுதவி செய்து ஆலய நிர்வாக சபையினர்கள், பொறுப்பான திருப்பணிச்சபையினர்கள் ஒன்றிணைந்து குருமார்களின் வழிகாட்டலுடன் இந்திய ஸ்தபதி புருஷோத்தமனின் கைவண்ணத்தில் ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இன்று நிறைவாக மண்டலாபிஷேகமும் மலர் வெளியீடும் நடைபெறுவது மகிழ்ச்சியாகும். இவைகள் சிறப்பாகவும் தொடர்ந்து ஆலயப் பணிகள், நித்திய விழாக்கள் நடைபெறவும் இப் பணிகளில் பங்குகொண்டவர்கள், நிதி கொடுத்தவர்கள், அடியார்கள் அனைவரும் அருள் பெறவும் ஸ்ரீ கதிரமலை சிவன்பாதம் பணிந்து ஆசீர் வதிக்கிறோம்.

சுபம்

முத்தமிழ்க் குருமணி, சகலாகமசங்கிரகர்
சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்.

இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய பிரதமகுருவின் ஆசியுரை

சீர்நிறைந்த வருஷப்புலம் என்னும் பகுதியில் சக்திபீடமாக விளங்குகின்ற மகாமாரி அம்பிகையின் மஹா கும்பாபிஷேகம் (08.06.2014) அன்று நடைபெற்று இன்று மண்டல பூர்த்தி நடைபெறுவதைக் குறித்துப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாணத்தில் உள்ள சக்தி தலங்களில் இன்று உலகம் அறிந்த ஆலயமாக விளங்குகின்றது. இத் திருக்கோவிலில் காலம் தவறாது பூஜை, சிவாகம நெறிமுறைக்கமைய சகல நித்திய நைமித்தியக் கிரியைகளும் நடைபெற்று வருவது சிறப்பிற்குரியது. இத் திருக்கோவிலின் வளர்ச்சிக்கு ஆலய நிர்வாக சபைத் தலைவராகவும். ஆலய கட்டிட நிர்மாணப் பணித் தலைவராகவும் தொண்டுகளை மேற்கொண்டு தன்னை அர்ப்பணித்து உழைத்தவர்.

திரு. இந்திரன் முருகேசு அவர்கள். அவரது தலைமைத்துவத்திலும் அவருடன் சார்ந்த உறுப்பினர்களும் சமூகப் பணிகளையும் இத் திருக்கோவிலில் நிறைவாகச் செய்து இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி அமைந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். எனவே அம்பிகையின் அடியார் கள் யாவருக்கும் எல்லாம் வல்ல கனக துர்க்கை அம்பிகையின் ஆசியும் மகாமாரி அம்பாளின் அனுக்கிரகமும் கிடைக்க வேண்டி நல்லாசி கூறி அமைகிறோம்.

சிவஸ்ரீ கனகபாலகுமார்க் குருக்கள்
பிரதமகுரு
இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை
அம்மன் ஆலயம்.

ஸ்ரீ சக்தி பீடம்
மஹா கும்பாபிஷேக ஆசிச்செய்தி

குடமுழுக்குக் காணும் வருஷப்புலம் ஸ்ரீ சக்தி பீடம் மகாமாரி அம்பாளின் கருணை அகிலம் எங்கும் பரிபாலித்துக் காத்தருளும் அன்னையின் திருப்பாதக் கமலங்களுக்கு எங்கள் சமர்ப்பணம்.

சக்தியின் அருட்செயல்களை ஒரு சொல்லில் கூறிவிட முடியாது. வருஷப் புலத்திலே வீற்றிருந்து தன்னைத் தஞ்சமென நாடி வருவோர்க்குக் கடைக்கண் பார்வையிலே அருள்மழை பொழிகின்ற அன்னை அவள். தன்னகத்தே பல கல்விமான்களையும் பல தனவான்களையும் உருவாக்கிய அன்னை அவள். பிறநாடு சென்றவர்களும் அன்னையின் நாமம் கூறி நலமாக வாழ்ந்தவர்கள் பலர். பெண்கள் திருமாங்கல்ய காலத்தில் திருமணாளர்களையும் அமைத்துக் கொடுத்த அன்னை அவள். சந்தான விருத்தியையும் தந்தருளும் அன்னை அவள்.

இன்பமாய் இந்திரலோகம் போல் இப்புவியில் காட்சி தருகின்ற அன்னை மகா மாரியின் குடமுழுக்கைக்கண்டு களித்த அனைத்து பக்தர்களுக்கும் எனது நல்லாசி களைக் கூறி அம்பாளைப் பிரார்த்திக் கின்றேன்.

"தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இன்பம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே"

சிவஸ்ரீ இரத்தின நாவேந்தக்குருக்கள்.
கனடா

திருமலை காளிகோயில் குருக்கள் வழங்கிய அருளாசி

சுன்னாகம் அருள்மிகு வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்மன் தேவஸ்தான குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா 08.06.2014 அன்று இனிதே அம்பாளின் கருணையால் பூரணமாய் நிறைவடைந்துள்ளது.

இறைவனது சக்தி ஆன்மாக்களுக்கு அருள் பாலிப்பதற்கும் துஷ்டர்களை ஒழிப்பதற்கும் பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளாள். மகாமாரி என்பதும் ஒரு திருத் தோற்றமாகும். தமிழர்களின் ஆதித் தெய்வ வழிபாடாக சக்திவழிபாடும், முருக வழிபாடும் இருந்துள்ளமை வரலாறு மூலம் அறியக்கிடக்கின்றது. மகாமாரிஅம்மன் முத்துமாரி எனும் பெயரிலும் கோயில் கொண்டுள்ள சுன்னாகத் திருப்பதியில் வருஷப் புலத்தில் கோயில் கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் மகாமாரி பரிவாரமூர்த்தி சகிதம் இத்திருத்தலத்தில் எழுந்தருளி உள்ளாள்.

அம்மன் கோயில்கள் உள்ள இடங்கள் அனைத்தும் அருள் பொலிவதாகவும் அடியார்களைத் தம்பால் ஈர்க்கும் சிறப்புக்களும் கொண்டவை. புனராவர்த்தன குடமுழுக்கு மூலம் மகாமாரிக்கு அருள் பாலிக்கும் சக்தி ஓமகுண்டங்கள் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

குடமுழுக்கு விழாவைச் சிறப்பாக நிறைவேற்றிய திருப்பணிச் சபையினர் நிர்வாகசபையினர் பாராட்டுக்கு உரியவர்கள். திருத் தலத்தில் பூசை வழிபாடுகள் தொடர்ச்சியாக நடைபெற இறை யருள் வேண்டுகின்றேன்.

"வேதாகமமாமணி"
சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் J.P
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
(ஆலய ஆதீனகர்த்தா)
திருக்கோணமலை

அருளாசிச் செய்தி

சுன்னாகம் நகரத்தில் வருஷப்புலம் எனும் பதியில் கோயில் கொண்ட மகாமாரிஅம்மனுக்கு 08.06.2014 கும்பாபிஷேகம் நிறைவடைந்தமையையிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மகாவிஷ்ணுவின் சகோதரியான சக்தி பல்வேறு வடிவங்களில் வழிபாடு செய்யப்படுகின்றாள். அவற்றுள் மகாமாரி எனும் வடிவமும் ஒன்றாகும். மகாமாரி திராவிட வழிபாட்டு முறையில் சக்தி வழிபாட்டிற்குரிய தெய்வமாகும்.

வருஷப்புல மகாமாரி அம்மன் திருக்கோவிலில் பரிவார மூர்த்திகளாக மகாவிஷ்ணு, இலக்குமி, சரஸ்வதி ஆகியோரும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர். எமது இக் கோவிலில் பூரணமாக வழிபாடு செய்யக்கூடிய வகையில் ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

குடமுழுக்கு விழா சிறப்புற நிகழ ஆலயத்திருப்பணிச் சபையினரும், நிர்வாக சபையினரும் மேற்கொண்ட இறைதுணையுடனான செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

இப்பெருவிழாவை சிறப்புற நிகழ்த்திய அனைவரும், பயன்பெற்ற பக்தர்களும் வையத்துள் சிறப்புற வாழ்த்து கின்றோம்.

இ.இராதாகிருஷ்ணன்
அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள்
6ஆம் கட்டை, திருநெல்வேலி
பிரதான வீதி, திருகோணமலை.

செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

சுன்னாகம் வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் குறித்து வெளியிடப்படும் மலருக்கு ஆசி வழங்குவதை யிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இத் திருக்கோயில் இன்று பெருங் கோயிலாக வளர்ச்சி பெற்று காட்சி தருகின்றது. இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இவ் ஆலயத்தில் தொடர் விரிவுரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சிறிய ஆலயமாக அலங்கார உற்சவம் அக்காலத்தில் நடைபெற்று வந்தது. அம்பாளின் அடியவர்களது அயராத முயற்சியினால் துரித கதியில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. அம்பாள் மிகவும் சக்தி மிக்க தெய்வமாக விளங்குகின்றாள். இக் கோவிலை வலம் வந்தவர்கள் வாழ்வில் பல வெற்றிகளை சந்தித்துள்ளார்கள். இக் கோவில் சூழலில் உள்ள சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் யான் ஆசிரியராகப் பணியாற்றினேன். அதனால் கோவில் சுற்றாடலில் வாழும் குடும்பங்கள் அனைவரோடும் பழகும் வாய்ப்புக் கிட்டியது. அனைவரும் மகாமாரி அம்பாள் மீது உருக்கமான பக்தி உடையவராக விளங்கினார்கள். தங்கள் வாழ்வில் வெற்றிக்கு மகாமாரி அம்பாளே காரணம் எனக் கூறி மகிழ்வார்கள்.

மகாமாரி அம்பாளின் திருப்பணி வேலைகளுக்கு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பலர் பங்களிப்புச் செய்துள்ளனர். அழகான கோபுரம், சுற்றுப் பிரகார வேலைகள் பெருந்தெரு வீதி வரவேற்பு வாயில் எனப் பல திருப்பணிகள் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன்பு அழகான சித்திரத் தேர் உருவாக்கப் பெற்றுள்ளது. அதன் பின் அழகான அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டது.

காலத்திற்குக் காலம் அம்பாளின் திருப்பணிகள் நடை பெற்றுக் கொண்டு இருக்கின்றது. அம்பாள் அடியவருக்கு அள்ளிக் கொடுக்கின்றாள். அடியவர்களும் அம்பாளின் திருப்பணிக்கு மனம் உவந்து கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆலய திருப்பணிச் சபை நன் முறையில் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அம்பாளின் திருப்பணியில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் அன்பர் திரு. இந்திரன் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை எவராலும் மறக்க முடியாது. அவரது கடின முயற்சியின்

விளைவே இன்று நாம் காணும் மகாமாரி அம்மனின் புதியதோற்றம் எனலாம். இத்தகைய ஆர்வலர்களை அம்பாள் காலத்திற்குக் காலம் உருவாக்குவாள். எதிர் காலத்தில் இன்னும் பல திருப்பணிகள் நடைபெறும் என்பதில் ஐயமில்லை . இம் மலரை ஆவணமாக வெளியிடும் ஆலய கும்பாபிஷேக சபையினருக்கும் மலரின் பதிப்பாசிரியரான Dr. ஜெயக்குமரன் அவர்களுக்கும் நன்றி கூறுவதோடு அன்பர்கள் அனை வருக்கும் எனது நல்லாசிகளைச் சமர்ப்பித்து அமைகின்றேன்.

செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

ஆசிச் செய்தி

வருஷப்புலம் அருள்மிகு மகாமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் சென்ற 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மஹா கும்பா பிஷேகத்தை முன்னிட்டுத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகப் பூர்த்தி தினவிழாவன்று ஆலய கும்பாபிஷேக மலர் வெளிவரவிருக்கும் செய்தியானது அம்பிகையடியார்களுக்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது. அன்னையின் ஆலயத்தில் மிகவும் பக்தி பூர்வமாகவும் கிரியாபூர்வமாகவும் அடியார்களின் தாராள சிந்தையுடன் பெரும் பொருட் செலவில் மிக மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடந்தேறியமை அம்பிகையின் அருட்கடாச்சமே ஆகும். இப் புனிதமான கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெறுவதற்கு, ஆகமநெறிமுறைநின்று கிரியைகளையாற்றிய ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சபாபதிக்குருக்கள் ஐயா அவர்கள், திருப்பணிச்சபையினர், நிர்வாக சபையினர், அன்னதானச் சபையினர் ஆகியோரின் சேவைகள் போற்றுதற் குரியனவாகும்.

கோபுரம் உள்ள கோயிலுக்கு மகத்துவம் அதிகம் என ஆகமங்கள் பகர்கின்றன. இந்தவகையில் எம்பெருமாட்டியின் திருக்கோயிலுக்குப் புதிதாக திரிதள கோபுரமும், திருவருட்பொலிவுடைய அலங்காரவளை வும் நிர்மாணிக்கப்பட்டமை ஆலயத்தில் நடைபெற்ற திருப்பணிகளுக் கெல்லாம் கிரீடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது.

அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் அன்னையின் திருவருளாலேயே இப் பிரபஞ்சம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. உருவமே இல்லாத சிவசக்தி உலகிலுள்ள ஜீவன்கள் மீது பெருங்கருணை கொண்டு தையே வடிவான தாயுருக்கொண்டு கருணை மழை பொழிகின்றாள். காஞ்சியிலே காமாட்சியாக, காசியிலே விசாலாட்சியாக, மதுரையிலே மீனாட்சியாக, தில்லையிலே சிவகாமியாக, திருக்கடவூரிலே அபிராமியாக, சமயபுரத் தில் முத்துமாரியாக, திருவேற்காட்டில் கருமாரியாக, வருஷப்புலத்தில் மகாமாரியாகப் பலமூகூர்த்தங்களையும் பல திருநாமங்களையும் கொண்டு அகில உலகத்தையும் காத்து இன்னருள் புரிந்து வருகின்றாள். செந்தமிழும்

சைவமும் சிறப்புற்றோங்கும் யாழ் குடாநாட்டில் பிரசித்திபெற்ற மகாமாரி அம்பாள் ஆலயங்களுள் ஒன்றாக எம்பெருமாட்டியின் ஆலயம் (சக்தி பீடம்) விளங்குகின்றது.

இத்தலத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் கருணையே வடிவான மகாமாரித்தாய் நம்பித்தொழும் அடியார்களின் வல்வினைகளைக் களைந்து வேண்டுவார் வேண்டுவதை அருளும் அன்னையாக விளங்குகின்றாள். வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் அன்னையின் அருளை வேண்டி அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழும் அம்பிகையின் பக்தர்களைக் கண்கூடாகப் பார்க்கிறோம். அவர்கள் அன்னையின் அருளை வியந்து போற்றி மகிழ்ந்து வழிபட்டு வருகின்றனர்.

இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அடியவர்கள் அன்னையின் திருவருட் சிறப்புடன் இனிது வாழவும், இப் பணியை முன்னின்று நடாத்திய திருப்பணிச் சபையினர், நிர்வாக சபையினர், அன்னதானச் சபையினர் அனைவருக்கும் அன்னையின் திருவருட்கடாட்சம் கிட்டவும், இக் கும்பாபிஷேக மலர் அனைவரினதும் திருக்கரங்களில் மலர்ந்து பக்தி மணம் வீசவும் அகில புவனமாதா, ஆதிபராசக்தி அருள்மிகு மகாமாரி அம்பாளை மனதாரப் பிரார்த்திப்பதுடன் எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதிலும் மகிழ் வெய்து கின்றோம்.

சிவானந்தவாரிதி
சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்
மயிலணி, சுன்னாகம்,
இலங்கை.

வாழ்த்துச் செய்தி

கலைமா தவளே; கமலை அவளே;
மலைமா தவளே; மடவாக் அனைவர்
தலைமா தவளே, தலைசேர் சடையில்
அலைமா தவளே; அறிவார் சிலரே

அகில புவனத்தையும் படைத்தும், காத்தும், அழித்தும் விளையாடல்களை நிகழ்த்தும் அருள்மிகு வருஷப்புல ஸ்ரீ மகாமாரியன்னை தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு உண்மைப் பொருளாய், கற்பகக் கொழுந்தாய் விளங்குகின்றாள்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பரமேஸ்வரி, வருஷப்புலத்தில் கைமாறு கருதாது பக்தர்களுக்கு அருள்சொரியும் மாரித்தாயாய் எழுந்தருளி குறையகற்றும் கோமளமாய் விளங்குகின்றாள்.

தாய் தெய்வ வழிபாட்டில் தனக்கென்று தனித்தடம் பதித்துள்ள வருஷப்புலத்து அன்பர்கள் ஒருங்குகூடி ஒன்றிய மனத்ததாய், மிகக் கோலாகலமாக நிகழ்த்தியிருக்கும் (08.06.2014) திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா கீர்த்தியுடனும் சிறப்புடனும் மேலும் பல ஆண்டுகள் மக்கள் மனங்களிலே நிலைத்து நின்று வரலாற்றுப் பெருமையை எடுத்தியம்பும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வருஷப்புலத்து அன்பர்களின் தொண்டு வாழ, தூய பணிகள் வாழ ஸ்ரீ மகாமாரி அன்னையின் திருவடி மலர் பணிந்து வாழ்த்துகின்றேன்.

தொண்டுகள் தொடரட்டும்!

அருள்மொழி அரசி
கலாபூஷணம் வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்.

உடுவில் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

ஐயவருடம் மங்கலகரமாக மலர்ந்து மணம்பரப்பும் வேளையில் சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரியம்மனுடைய கும்பாபிஷேக மலர் வெளிவருவது இந்து மக்களுக்கெல்லாம் புதுத் தெம்பூட்டுகிறது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழப்பிறந்த மக்கள்" மண்ணில் நல்லவண்ணம் வாழ ஆலயங்கள் வழிகாட்டுகின்றன. அன்னை அணுகுதற்கு எளியவள். அதனால்தான் " அம்மையே அப்பா" என்று வழிபடுகிறோம். இறைவனும் இறைவியும் எங்கும் வியாபித்திருப்பதாலும் அவர்களருள் சிறப்பாகக் கிடைக்கும் இடம் ஆலயமே. அந்த வகையில் அழகு பொலியும் சுன்னாகத்தில் வருஷப்புல மகாமாரியாக அமர்ந்திருக்கும் அன்னையவள் தாயினும் நல்ல தாயாக இருந்து அருள்பாலிக் கின்றாள்.

ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருக்கின்றது என்றால் மிகையாகாது. அந்த வகையில் கும்பாபிஷேக மலர் வெளிவருவதற்குரிய பணிகள் பாராட்டுதற்குரியவை. சக்தி வடிவங்களுள் ஒன்றான மகாமாரி நாமெல்லாம் அன்புடனும், சாந்தி சமாதானத்துடனும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற அடிப்படையிலும் இணைந்துவாழ வழிகாட்டிக்கொண்டிருக்கிறாள். சக்தியின் சந்நிதியில் சங்கடங்கள் சங்காரிக்கப்பட்டு விடும். ஆலயங்கள் சிறப்படைந்தால் நம் வாழ்க்கையும் சிறப்படையும்.

இவ்வாலயச் சூழலில் வசிப்போரை சைவச்சான்றோர்களாகவும், புலமையாளர்களாகவும் ஆக்கியது மகாமாரியின் கருணையன்றி வேறொன்று இருக்க முடியாது. வருஷப்புல மகாமாரியின் அருளால் துன்பங்கள் அகன்று அனைத்து செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு எய்த வேண்டும் எனவும் உலகில் சாந்தி சமாதானம் நிலவி யாவரும் இன்புற்று வாழவும் மகாமாரியின் பாதம் பணிந்து வாழ்த்துகிறேன்.

திரு. முத்துலிங்கம் நந்தகோபாலன்,
பிரதேச செயலர்,
உடுவில்.

வாழ்த்துச் செய்தி


சுன்னாகம் வருஷப்புலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மகாமாரி அம்மன் கோயில் புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்று சங்காபிஷேகம் நடைபெறும் தினத்தில் சக்தி பீட நாதம் கும்பாபிஷேக சிறப்பு மலர் பெரியோர்களால் எழுதப்பட்ட அம்பாளின் அருட் பெருமைகளையும் சமய தத்துவங்கள்; சிறுவர்களின் கட்டுரைகள், ஆலய வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கி வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அதே சமயம் திருப் பணிகளையும் சிறந்த முறையில் நிறைவேற்றிய அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

"சக்திபீட நாதம்" கும்பாபிஷேக சிறப்பு மலரை வெளியிடுவதன் மூலம் எதிர்காலச் சந்ததியினருக்கு இந்த ஆலயத்தைப் பற்றிய வரலாற்று ஆவணமாக இது உதவுவதுடன் அம்பாளைப் பற்றிய பெருமைகளையும் வழிபாட்டு முறைகளையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நன்நோக்கோடு திரு. முருகேசு இந்திரன் அவர்கள் இப்பெருமுயற்சி எடுத்துள்ளார். அவர்களுக்கு உதவியாக டாக்டர் அருமைநாயகம் ஜெயக்குமார் அவர்கள் மலர் பதிப்பாசிரியராகவிருந்து அனைவரின் ஒத்துழைப்பு டனும் இவ்வரிய மலரை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

சுன்னாகம் ஐயனார் கோயிலும் வருஷப்புலம் மகாமாரி அம்மன் கோயிலும் தொன்மையான ஆலயங்களாகவுள்ளன. அக்காலத் திலிருந்தே இரு ஆலயங்களும் நெருங்கிய தொடர்பு களைப் பேணி வருகின்றன. இத்தகைய தொடர்புகளை கொண்ட ஸ்ரீமகா மாரி அம்மன் ஆலயத்தினால் வெளியிடப் படும் "சக்தி பீட நாதம்" தேவஸ்தானத்தின் சார்பில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் எதிர்காலச் சந்ததியினர் சமய விழுமியங் களை மதிப்பதற்கும், பின்பற்றுவதற்கும் அறவாழ்வு, சமய வாழ்வு வாழ்ந்து அமைதியான வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கக்கூடிய இத்தகைய அரிய மலர்கள் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட அம்பாள் அருள்புரிவார் என்பதில் சந்தேகமில்லை என்பதைக் கூறி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

சி. குமரவேல் J.P,
தலைவர்
அருள்மிகு ஐயனார் தேவஸ்தான பரிபாலன சபை,
சுன்னாகம்.



வாழ்த்துச் செய்தி

சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்மன் கோயிலின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த 08.06.2014 அன்று அன்னையின் அருளால் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அதைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் மண்டலாபிஷேகப் பூஜையின் நிறைவு நாளன்று சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட உள்ளதென அறிந்து, அம்மலருக்கு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

மனித உறவிலே, தாய் - சேய் உறவு மிகவும் புனிதமானதும், நெருக்கமானதுமாகும். தாயிடம் குழந்தை பூரண பாதுகாப்பை உணருகிறது. எனவே, வாழ்க்கையின் அபாயங்களோ, இன்னல்களோ அதனைச் சிறிதும் பாதிப்பது கிடையாது. இவ்வாறே, இறைவனைத் தாயாகக் கண்டுவிட்டால், அவளிடத்திலே அன்பை வளர்த்துக்கொண்டு, அந்தப் பூரண பாதுகாப்பிலே வாழ்க்கையின் இன்னல்களை எளிதில் கடந்துவிடலாம். சக்தி உபாசகர் களான அபிராமிப்பட்டர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற தெய்வீக புருஷர் களது வாழ்க்கை, மேற்கூறிய உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கும்பாபிஷேக மலரைப் பக்தர்கள் அன்னையின் அருட்பிர சாதமாய்ப் பெற்று அகம் மகிழ்வார்கள் என்பது திண்ணம். அன்னை யின் அருட்திறத்தால் அனைத்தும் மங்களமுறப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

ஜெ. விஸ்வநாதன்
ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி

கும்பாபிஷேகத் திருப்பணிச் சபை தலைவர் வழங்கிய வாழ்த்துச் செய்தி

அன்னையின் திருவருட்கடாட்சத்தினால் இன்று வெளிவரும் "சக்தி பீட நாதம்" ஸ்ரீமகாமாரி அம்மன் கும்பாபிஷேக மலருக்கு சிறியேனும் என் பணிவான கனிவான இதயத்து ஆசிகளையும், வாழ்த்துச் செய்தியையும் வழங்குவதற்கு கருணைக் கடலாம் என் அன்னை அருள்பாலித்ததை யிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அன்னையின் கருணையினாலும் கும்பாபிஷேகத் திருப்பணிச் சபையின் அயராத உழைப்பினாலும் ஊர் மக்களின் மனம் நிறைந்த பங்களிப்பினாலும் திருப்பணி வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு அன்னையின் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகப் பூர்த்தி ஆகியவற்றில் பங்குபற்றி அன்னையை மனதார வணங்கும் வாய்ப்பையும் பெற்றதையிட்டு என் தாய் அன்னை மகாமாரிக்கு நன்றியைக் கூறுகின்றேன்.

தானே உரியவர்களைத் தேர்ந்து தந்து அவ்வப் பணிகளுக்கு ஏற்ற வல்லுநர்களை அறிமுகமாக்கித் தன் மஹா கும்பாபிஷேகத்தை ஓர் ஆவணப்படுத்தும் படியும் எம்மை ஆளாக்கி பல பெரியோர்களதும், அறிஞர்களதும், புலவர், பண்டிதர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி, வருங்கால சந்ததியினருக்கும் ஒரு வளமான ஆன்மீக நூலாக மிளிரும் வண்ணம் இம் மலர் அமையத் திருவருள் பாலித்துள்ளாள். இம் மலருக்கு ஆசியுரைகள், வாழ்த்துக்கள், கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள் முதலியவற்றை மனம் உவந்து வழங்கிய, பெரியார்கள், சிவாச்சாரியார்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், சைவப்புலவர்கள், பண்டிதர்கள் அனை வரையும் இவ் ஆவணங்களைப் பெற உதவிய அன்பு உள்ளம் படைத்த அன்பர்களையும் இம் மலரை ஒழுங் கான முறையில் தொகுத்தளித்த மலர் ஆசிரியரையும் பாராட்டுவதுடன் அவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னையின் அருளும், கருணையும் இவ்வூர் மக்கள் அனைவருக்கும், வெளிநாடுகளில் வதியும் உறவினர்களுக்கும் கிடைக்கப்பெற்று அனைவரும் சகல ஐஸ்வர்யங்களுடனும், சந்தோஷமாக வாழ வாழ்த்து கின்றேன்.

மு. இந்திரன்
தலைவர், திருப்பணிச்சபை

வாழ்த்துச் செய்தி

நம்பியவர் குறை தீர்க்கும் அன்னை....

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பார்கள். கோபுரத்துடன் கூடிய ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயம், அருகில் சித்திரத்தேர், அன்னதான திருக்கல்யாண மண்டபம் ஆகியவற்றுடனும், பிரதான வீதியில் அலங்கார வளைவுடனும் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. இவ்வாலயத்தில் குடி கொண்டு அடியார்களுக்கு அருளாட்சி செய்யும் ஸ்ரீ மகாமாரி அம்பாளுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்று வரும் மகிழ்ச்சியை நாம் அனுபவிக் கின்றோம்.

இப்பகுதியில் உறைந்துள்ள அன்னையின் தெய்வீக சக்தி அற்புதமும் கீர்த்தியும் மிக்கதாகும். இதனை அனுபவித்தவர்களுக்கு நன்கு புரியும். இவ்வகையில் இம் மண்ணிலும், பிறநாட்டுமண்ணிலும் வாழ்ந்து வரும் அன்பர்கள் பலரின் ஒருமுகப்பட்ட பக்தி உணர்வுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக.

அம்பாளின் திருவருளை முன்னிட்டு மேலும் இவ்வூர் மக்கள் சைவ எழுச்சி பெற்று, ஆலயங்களை உயிராக மதித்து, சமூகப்பணிகள் பலவற்றையும் முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டு; மேலும் இக் கைங்கரியங்களில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களையும் பாராட்டி அம்பாள் கிருபை என்றும் கிடைக்கப் பிரார்த்தித்து; இவ்வாலயம் மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

சுபம்

ந. பழனிவேல்
உப தலைவர், தேவஸ்தான நிர்வாகசபை
ஸ்ரீ மகாமாரிஅம்பாள் தேவஸ்தானம்
வருஷப்புலம், சுன்னாகம்.

வாழ்த்துச் செய்தி

பூத்தவளே புவனம் பதின்நான்கையும் பூத்த வண்ணம் காத்தவளே சக்திபீடமாக சுன்னாகம் வருஷப்புலத்தில் கோயில் கொண்டு வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டுள்ள ஸ்ரீ மகாமாரி அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் 08.06.2014 ஞாயிற்றுக் கிழமை நிறைவு பெறத் திருவருள் கிடைக்கப்பெற்றது. எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்வையும் புத்துணர் வையும் தருவதாக அமைந்துள்ளது.

எமது அம்பாள் வீற்றிருக்கும் ஆலயம் மிகவும் கம்பீரமான எழிலுடன், 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்றதற்கு அமைய புதிய கோபுரம் மிளிர்கின்றது. மேலும் உள்ளே அம்பாளின் கருவறை விமானம் இரண்டு தளங்களாக அமையப் பெற்றது. மிகவும் சிறப்பாக உள்ளது. மற்றும் வசந்தமண்டபமும் புதுப்பிக்கப்பட்டு பொலிவுடன் காட்சி தருகின்றது. கோயிலின் முன் பக்கம் எல்லாம் வளைவு மண்டபமாக அமைந் துள்ளது அம்பாளின் அருட்கடாட்சம்.

எமது ஆலயம் 200 வருடங்களுக்கு முற்பட்டதாக அறியப்படு கின்றது. அன்று தொடக்கம் காலத்திற்கு காலம் திருத்தலங்களும் புதிதாகவும் அமைக்கப்பெற்று இன்று இவ்வளவு பொலிவுடன் காட்சி தருகின்றது. அம்பாளுக்கு ஒரு அன்னதான, கல்யாண மண்டபம் மற்றும் வாகனசாலை உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக் கைங்கரியங்கள் எல்லாம் எமது கிராமத்தில் தோன்றி வாழ்ந்த வாழுகின்ற கல்வியாளர்கள், சான்றோர்கள், சைவப் பெரியார்கள், வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது உடன்பிறப்புக்களின் அயராத விடா முயற்சியாலும் கடின உழைப்பினாலும் தன்னலம் இல்லப் பெரும் சேவையாலும் ஆலய வளாகம் இன்று பெருமை நிறைந்த உன்னத நிலையில் அம்பாளின் அருளால் மிளிர்கின்றது.

எமது ஆலயத்தில் பரிவாரமூர்த்திகளாக கணபதி, கிருஸ்ணர், முருகன், இலக்குமி, சரஸ்வதி, வைரவர், சண்டேஸ்வரியும் அமையப்பெற்றது. அம்பாளின் அருட் கடாட்சமே இன்று நடைபெறும் நவகுண்ட

மஹா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல மகாமாரி அம்பாளின் பாதாரவிந்தங்களில் பணிந்து சீமாட்டியின் அருளும் கடைக்கண் பார்வையும் எல்லா ஜீவராசிகளுக்கும் கிடைக்க வேண்டுமென்று இறைஞ்சி வணங்குகின்றோம். கே.கே.எஸ் வீதியிலிருந்து கோயிலுக்கு வரும் பாதையில் வளைவும் அமையப்பெற்றது மேலும் சிறப்பாக உள்ளது.

சிவசம்பு யோகநாதன்
செயலாளர்
ஸ்ரீ மகாமாரிஅம்பாள் தேவஸ்தானம்,
ஸ்ரீ மகாமாரி அம்பாள் மஹா கும்பாபிஷேகத் திருப்பணிச் சபை.

அன்னதான (திருமண) மண்டப திருப்பணிச்சபைத் தலைவரின் இதயத்திலிருந்து...

சுன்னாகம், வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் குடமுழுக்குக் கண்டு பெருமிதம் அடையும் அதேவேளை அதனை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருவிருப்படை கிறேன்.

எமது சபை, ஆலயநிர்வாகசபை, ஆலய கும்பாபிஷேக திருப்பணிச் சபை ஆகியவற்றுடன் இணைந்து பல முன்னேற்றகரமான நடவடிக்கை களை முன்னெடுத்து அதன் ஓர் அங்கமாக இம் மலர் வெளிவருகிறது.

ஆலயத்தின் வளர்ச்சியானது ஆலயம் சார்ந்துள்ள சமூகத்தின் வளர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. அவ்வகையில் சமூகம் ஆலயத்தில் அக்கறை செலுத்தும்போது ஆலயப் பணி மேலும் சிறப்படைய வாய்ப்பாகிறது. இவ்வகையில் எமது ஆலயம் சமூகத்தின் ஒத்துழைப்புடன் மேலும் வளர்ச்சி அடைந்து பல சமூகப் பணிகளை முன்னெடுக்கும் என்பது உறுதி.

இச் சிறப்புக்களை உருவாக்கிய சபையினர் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அன்பர்கள் சரீர உதவிகள் செய்து பாடுபட்ட ஆர்வலர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் அம்பாள் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து அமைகிறேன்.

நன்றி

நா. யோகராஜா
தலைவர்
அன்னதான (திருமண) மண்டப
திருப்பணிச்சபை
ஸ்ரீ மகாமாரிஅம்பாள் தேவஸ்தானம்
வருஷப்புலம், சுன்னாகம்.

வாழ்த்துச் செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான உமையவள் தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கும் பொருட்டு மகாமாரி அம்பாளாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருத்தலம் சுன்னாகம் வருஷப்புலம் ஆலயமாகும்.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாக விளங்கும் ஆதி சக்தி ஸ்ரீ மகாமாரி அம்பாள் கருணையே வடிவானவள். கைதொழும் அடியார்களின் கடுவினை அகற்றி மன இருள் நீக்கி அருள்பாலிக்கும் அம்மனின் மஹாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை யடைகின்றோம். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாகிய அம்பிகை ஸ்ரீ மகாமாரி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்ததையிட்டு மனம் பூரிக்கின் றோம். 'அம்பாளைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே' என்றபடி ஆலய திருப்பணி வேலைகளை அழகுற அமைத்து வர்ண வேலைப்பாடுகள் செய்து விரைவில் பூர்த்தியாக்கிய நேர்த்தி பாராட்டப்பட வேண்டியது.

வருஷப்புலம்வாழ் மக்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையாகப் பாடுபட்டு இக் கும்பாபிஷேகக் குடமுழுக்குப் பெருஞ்சாந்தி வைபவத்தை நிறை வேற்றியுள்ளனர். திருப்பணியில் ஈடுபட்ட அனைத்து அடியவர்களும் அம்பிகையின் திருவருளுக்குப் பாத்திரமாகி சகல சௌபாக்கியங்களும் பெற்றுச் சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இதில் பங்கேற்ற அந்தண சிவாச்சாரியர்கள் அனைவரதும் பணி மகத்தானது. திருவருளும் குருவருளும் சேர்ந்து கும்பாபிஷேகப் பெருவிழாவை இத்தனை சிறப்புக் களுடன் நிறைவேற்றியது அம்பாளின் சித்தமே. அந்தவகையில் இக்கும்பாபிஷேகப் பணியில் கலந்து கொண்ட எல்லோருக் கும் ஸ்ரீ மகாமாரி அம்பாளின் பரிபூரண கிருபாகடாட்சம் கிடைக்க வேண்டுமென்று ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

"அம்பிகையின் பொன்னான கமலப்பாதங்களுக்கு வணக்கம்"

இராசையா ஸ்ரீதரன்
ஆன்மீக எழுத்தாளர், நல்லை ஆதீன சமயப் பிரசாரகர்
"தெய்வத்தமிழ்ச்சுடர்", "கலாபூஷணம்"

மலராசிரியரின் மகிழ்ச்சி

சுந்தரமும் சுபீட்சமும் மிகுகின்ற நகராம்
சுன்னாகம் பெயர் கொண்டு சுடர்கின்ற பரப்பாம்
இந் நகரின் பிரிவாய் இருக்கின்ற குறிச்சி
இலங்கிடும் வருஷப்புல மழைவாரிப்புலவு
சந்தன மரவாடை சாயலிலே அமைந்திட்ட
சரித்திர மகாமாரி சயனிக்கும் ஆலய
சிந்தும் மணியாய் சிலிர்த்திடும் அருட்காட்சி
கும்பாபிஷேகம் கண்ட குதூகலத்தில் நாமல்லோ

அந்நியராட்சியால் ஆலயங்கள் அழிந்திட்ட
அன்னாளில் அருள்வீசி அதிகாலை மிளிர்ந்தவளே
சன்னியோடு பேதியும் சலியாத கலியும் கண்டு
சரிந்திட்ட உடலாய் சாய்பாய் சுற்றுண்ட - மழைநாளில்
இங்கிவரை யார்தான் இடுகாடு இடுவாரோ - அறியாமல்
இக்கொடிய நோய் தொட்ட உடல் தான் தொடுவாரோ
என்றிந்த நிலை போக்கி எழுந்தருளி வாக்களித்த
எந்தன் தாய் எழுந்தாளே இப்புவியில்

மணிகள் கிலுங்க மலர்கள் மருவ
மந்த மாருதம் சாமரம் வீச
அணிகலம் ஆயிரம் ஜொலிக்க
ஆயிரம் அடியார் அரோகரா ஒலிக்க
பணிசெய் அந்தணர் பாசுரம் செபிக்க
பல்லிசை முழங்க பவளமல்லி மணக்க
பிணி தழைய ஆத்தாள் மறுவீடு அரசாள
பிரதிட்ட கும்பாபிஷேக பிரமிப்பில் நாமல்லோ.

சத்தி பீடம் என்னை அழைத்தது

சக்தி இன்றிச் சிவன் இல்லை. சிவன் இன்றி சக்தி இல்லை இவை இரண்டும் இரண்டறக் கலந்ததுதான் இறைவன். அந்த இறை தான் சக்தி. அதுதான் இயற்கை

இந்த இயற்கையைத்தான் இறைவனாக வழிபாடு செய்தனர். அப்படியான வழிபாடு சக்தி வழிபாடு எனப்படும்.

இவற்றில் இருந்து தெரிவது சக்திதான் பராசத்தி ஆதிசக்தி எனப்பட்டு நாம் வணங்கும் சொரூபங்கள் ஆகும். அப்படிப்பட்ட சக்தி சொரூபம் மாரியாக மகாமாரியாக எழுந்தருளியது, அன்றும் இன்றும் எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் சுன்னாக நகரில் வருசப்புலம் என்னும் பகுதியில் வாய்க்கால் கரை ஓரத்தில் என்றால் அது வியப்புறவைக்கின்ற விடயமாகும்.

"வாய்க்கால் கரைஓரம் மாரியாக வந்தமர்ந்த அற்புதம் என்ன"

மாரி காலத்தில் , மழை பொழியும் காலங்களில் மட்டும் தான் வாய்க்காலில் வெள்ளம் ஓடும். ஆனால் மாரியாக வந்தமர்ந்த நான் என்னை நாடிவரும் பக்தர்களுக்கு அருள் வெள்ளத்தை வாரி வாரி வழங்குவேன். என்பதை எடுத்துக்காட்டவே இக்கரையில் அமர்ந்ததாக எண்ண வேண்டி இருக்கின்றது. அப்படிப்பட்ட அருள் சக்திக்கு குடமுழுக்கு வைபவம் மிகச் சிறந்த முறையில் 08.06.2014 அன்று நடந்தேறியது.

அந்தணப் பெருந்தகையினர் வேத பாராயணங்கள் ஓத,அடியார்கள் தேவாரங்கள் பண்ணிசைகள் இசைக்க, மங்கள வாத்தியங்கள் முழங்க, விண்ணும் மண்ணும் மகிழ, மிகசிறுதாகலமாக நடைபெற்ற கும்பாபிஷேகத்தை சிறப்பு மலராகசக்திபீட நாதமாக வெளி யிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வயதில் குறைந்தவனாகவும் அறிவில் இளையவனாகவும் இருக்கும் அடியேனை முன்செய்த புண்ணியத்தின் பயனாக இந்தப் பெருங் கைங்கரியத்தை செய்யும் பொறுப்பை ஏற்க வைத்த அந்தச் சக்தியின் பாதாரவிந்தங்களை இதய சுத்தியுடன் முதற்கண் வணங்குகின்றேன். அதுமட்டுமன்றி செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஐயா மூலம் அழைப்பு விடுத்து இந்தப் பணியை செய்ய வைத்த அன்னையை எண்ணி வியக்கின்றோன்.

- மிகக் குறுகிய காலத்தில், ஆசியுரைகள், வாழ்த்துக்கள், கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள், பயனுள்ள கருத்தமைந்த

கட்டுரைகள் போன்றவற்றைத் தந்துதவிய பேராசிரியர்கள், சிவாச்சாரி யார்கள் பண்டிதர்கள், சைவப்புலவர்கள், ஊர்ப் பெரியவர்கள், சிறியவர்கள் இந்நூல் வெளியிடுவதற்கு ஒத்துழைத்த ஓய்வு நிலை அதிபர் க. செல்வகுமார் அவர்கள் ஆலயத்தின் அன்றைய நிலை இன்றைய நிலை போன்றவற்றைக் காட்டும் புகைப்படங்கள் முதலியன தந்து ஆக்கமும் ஊக்கமும் காட்டியவர்கள் புகைப்பட கலைஞர்கள் மற்றும் உரிய நேரத்தில் இம் மலரினை அழகுற அச்சிட்டு உதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தி னருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இக் கும்பாபிஷேகச் சிறப்பு மலரின் முக்கியத்துவத்தை உணர்ந்து இம்மலர் மலருவதற்குக் காரணமாக இருந்த திரு. மு. இந்திரன் அவர்களையும் பாராட்டி சக்தியாம் அன்னை வருஷப்புல ஸ்ரீ மகாமாரித் தாயின் காலடியில், இந்நூலைத் தொகுத்து சக்தீ பீடத்திற்கு சமர்ப்பணமாக அர்ப்பணிக்கின்றேன்.

தொகுப்பாசிரியர்
வைத்தியகலாநிதி அ. ஜெயகுமரன்
சுகாதார வைத்திய அதிகாரி உடுவில்.
பிராந்திய வைத்திய அதிகாரி (பி. ம.த.பி),
யாழ் பிராந்தியம்




ஆலய உட்புறத் தோற்றம்



மணிக்கோபுரம்



வ. குமாரசாமி ஐயர் மண்டபத்தில்
சொற்பொழிவாற்றிய போது



முன்னார் காணப்பட்ட
கிருஸ்ணர் ஆலயம்




தீர்த்த
உற்சவத்தின் போது



ஆலய திருப்பணிகளுக்கு
முன்னரான ஆலய தோற்றம்



மகாமாரி தேரில் உலாவரும் காட்சி



தேர் வெள்ளோட்டத்தின் போது



தேர் வெள்ளோட்டத்தின் போது



தேர் வெள்ளோட்டத்தின் போது



ஆரம்பகால அம்பாளின்
வீதி உலா



அம்பிகையின் ஆரம்பகால
ஆதிமூலம்



ஆறு திருமுருகன் அவர்கள்
பட்டிமன்றம் நடாத்திய போது



முன்னைய கால ஆலய மண்டபத்தில்
இசைக்கச்சேரி

சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வரலாறு

இட அமைவும் தோற்றமும்

யாழ். மாவட்டத்தின் வளம் மிக்க நகரமாகத் திகழ்கின்ற சுன்னாகம் எனும் புனித பூமியின் வடபால் அமைந்துள்ளதே வருஷப்புலம் எனும் கிராமமாகும். இக்கிராமம் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகப் பிரிவில், வலிதெற்குப் பிரதேச சபை எல்லையினுள் சுன்னாகம் நகர் வடக்கு (J/195) கிராம அலுவலர் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. யாழ்ப்பாண நகரிலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக 10 கிலோமீற்றர் வடக்காகப் பயணம் செய்து சுன்னாகத்தை அடைந்த பின், சுன்னாகம் நகரின் முடிவு எல்லையிலும், மல்லாகம் நகரின் ஆரம்ப எல்லையிலும் யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்கு அருகே வருஷப்புல மகாமாரி அம்பாளின் நுழைவாயில் எல்லோரையும் அன்புடன் வரவேற்று கிராமத்தினுள் உள்ள அம்பாள் ஆலயத்திற்கு அழைத்துச் செல்கின்றது. அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இந்நுழைவாயில் 2014ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 07ஆம் நாள் (கும்பாபிஷேகத்திற்கு முன்னைய நாள்) வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மக்கள் மாண்புற மாசற்ற சோதியாய் விளங்கும் எம் அன்னை வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் குடிகொண்டுள்ள ஆலயச் சூழல் மிகவும் அமைதியானது. இங்கு எழுந்தருளி இருக்கும் மகாமாரித் தாயின் அருட் கடாட்சத்தினால் இவ்வூர் மக்கள் கல்வி அறிவில் மேம்பட்டவர் களாக, உயர் தொழில்களில் சிறந்து விளங்குவதோடு தாம் தேடிய செல்வத்தின் ஒரு பகுதியை ஆலயத் திருப்பணிகளுக்குக் கொடுத்தும், தான தர்மங்கள் செய்தும் புண்ணிய சீலர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர் வருஷப்புல கிராமத்தில் வாழ்ந்த மக்களின் பக்தியைச் சோதிப்பதன் பேரில் மாரியம்மன் சித்தம் கொண்டார். அக்காலப்பகுதியில் ஆட்கொல்லித் தொற்று நோய்களான வாந்திபேதி, கொலரா போன்ற நோய்கள் வந்து மக்களை வாட்டின. வருஷப்புலப் பகுதியிலும் இந்நோய் காரணமாகப் பலர் இறந்தார்கள். தக்க மருந்துக்கள் அற்ற நிலையில் அக்கால மக்கள் கடவுளையே நம்பி வாழ்ந்து வந்தனர். இவ் வாந்திபேதி நோய் காரணமாக இப்பகுதியில் அன்று ஒரு பெண் இறந்து விட்டாள். அடைமழை

காரணமாக அப்பெண்ணின் உடலை ஒரு பாயினால் சுற்றி ஒரு மரத்தினடியில் புறம்பாக வைத்து விட்டார்கள். மறுநாள் அவ் உடலை எடுத்துத் தகனம் செய்வதற்கென உறவினர் சென்றபோது, அப்பெண் தன்னை இங்கேயே வைத்து ஆதரிக்குமாறும், தான் இவ்வூர் மக்களைக் காத்தருள வேண்டும் என்றும் அசரீரியாக வாக்களித்தாள். இதனைக் கேட்ட மக்கள் அன்றே அதே இடத்திலேயே அவளைத் தெய்வமாக மதித்து விளக்கேற்றி வழிபடத் தொடங்கினர். சிறிது காலத்தில் தீபம் வைத்த இடத்தில் ஒரு சிறு குடிசை அமைத்து பூசைகளை நடாத்தி வரலாயினர். ஆரம்ப காலத்தில் ஆசாரசீலரான ஒரு முதியவர், வெள்ளி செவ்வாய் நாட்களில் பூசை செய்து வந்தார். காலப்போக்கில் அம்மனின் அருட்கடாட்சம் பெற்று மக்களெல்லாம் மேன்மையுறத் தொடங்க அன்னையவளுக்கு கட்டடம் அமைத்து சிறு கோவிலாக்கினர். பூசை செய்வதற்கு பூசகர் ஒருவரை ஒழுங்கு செய்தனர். அவர் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்களின் தந்தையாவார். அவரின் பக்திச் சேவையால் முத்துமாரி அம்மனின் கோவில் பொலிவு பெற்றது. நித்திய பூசைகள் நடைபெற்றன. பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் கூடிச் சென்றது. தந்தையாரின் உடல்நிலை தளர்வடைந்ததால் சபாரத்தினக் குருக்கள் அவர்கள் நித்திய பூசைகளை நடாத்தத் தொடங்கினார்.

இவ் ஆலயத்தில் 1910 களில் நைமித்திய பூசைகள் இடம்பெறத் தொடங்கியதாகக் கூறப்படுகின்றது. 1950 களிற்குப் பின் வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரியென்று பெயர் பெற்ற இக்கோவில் அபரித வளர்ச்சி பெற்றமை அம்பாளின் அருட்கடாட்சம் என்றே கூறலாம். ஆரம்பத்தில் திருவெம் பாவை. நவராத்திரி விழா போன்றவைகளுடன் காலப் போக்கில் அலங்கார உற்சவங்களும் நடைபெறத் தொடங்கின. எழுந்தருளி விக்கிரகம் செய்யப் பட்டது. சுவாமி வீதிவலம் வருவது வழக்கமாகியது. இறைவியை ஊஞ்சலில் இருத்தி பூசைகள் செய்தனர். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் இத்தலத்திற்கு ஊஞ்சற் பாடல் பாடியதுடன் பன்னெடுங்காலமாக இப்பாடல் பாடப்பெற்று வந்துள்ளமையையும் யாவரும் அறிந்ததே. இவ் ஊஞ்சற் பாட்டு அனர்த்தங்களால் தவறி விட்டதால் இணுவில் கலாபூஷணம் நா. வீரமணி ஐயர் அவர்களால் ஊஞ்சல் பாடல் மீள எழுதப் பெற்று பாடப்பட்டு வருகின்றது. அப்பாடலின் சில வரிகள்:

மஞ்சளிணி குங்குமமும் மாலையாட
மன்னு செவிக் குண்டலங்கள் மின்னி ஆட
கஞ்ச மலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம் அபய விரதங்கள் கனிந்தே ஆட

நீண்ட காலமாக அலங்காரத் திருவிழாவாக இருந்து வந்த உற்சவத்தை மஹோற்சவமாக மாற்றிவிட வேண்டும் என ஊர் மக்கள் விரும்பினர். அம்பாள் கிருபையால் 2000 ஆம் ஆண்டில் மஹோற்சவம் நடைபெறும் கோவிலாக மாற்றம் பெற்றது. அந்த ஆண்டிலேயே கொடித்தம்பம் அமைக்கப்பட்டு சித்திரத் தேர் வெள்ளோட்டமும் இடம்பெற்று தேரில் திருவீதியுலாவும் நடைபெற்றது.

தற்போதைய நித்திய பூசைகளையும் மஹோற்சவங்களையும் ஸ்ரீவாகீசவாரிதி சிவப்பிரம்மஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள் நடாத்தி வருகின்றார். ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகங்கள் இடம்பெற்ற ஆண்டுகளும் சிவாச்சாரியார்களும்

1971 ஆம் ஆண்டு - பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் - நவாலி
1987 ஆம் ஆண்டு - பிரம்மஸ்ரீ விஸ்நாதக் குருக்கள் - நவாலி
2000 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் - மயிலணி
2014 ஆம் ஆண்டு சிவப்பிரம்மஸ்ரீ கணேச சபாபதிக் குருக்கள்

கோயிலின் முன்றலில் இராஜகோபுரம் இல்லாமல் தனியே மணிக்கோபுரம் தலைநிமிர்ந்து நின்றது. பலரது மனத்திலும் கோபுரம் ஒன்று கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திய அன்னை, தனக்குக் குறுகிய காலப்பகுதியிலேயே அழகிய திரிதள கோபுரத்தினை அமைக்க அருள்பாலித்தாள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" ஒரு கோபுரத்தை அமைத்தல் என்பது சாதாரண விடயமல்ல. பாரிய பணி. அப்பணி சீரிய முறையில் நிறைவுற்று இன்று கோவில் முன்றலில் தலைநிமிர்ந்து நிற்கின்றது இராஜகோபுரம்.

ஆலயத்தில் வருடாந்த உற்சவங்கள் தவிர பல திருவிழாக்கள், உற்சவங்கள், விஷேட அபிஷேகங்கள் என்பன சிறப்புற நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்டட நிர்மாணத் திருப்பணிகள்

1.	மூன்று தள இராஜ கோபுரம்	சரவணமுத்து குமாரபாலன் சரவணமுத்து தவபாலன்
2.	மூலஸ்தான விமானம்	முருகேசு இந்திரன்
3.	வசந்த மண்டபம்	முருகேசு இந்திரன்
4.	பரிவார மூர்த்திகள்	

1. பிள்ளையார் - சரவணமுத்து குடும்பம்
2. சீதேவி பூதேவி சகிதம் மகாவிஷ்ணு - முருகேசு இந்திரன்

3. வள்ளி, தெய்வயானை சமேத முருகப் பெருமான் அண்ணாத்தம்பி குடும்பம்
4. வைரவர் : சுப்பிரமணியம் குடும்பம்
5. சண்டேஸ்வரி : அருந்தவராஜா குடும்பத்தினர்
6. புதிதாக அமைக்கப்பட்ட மகாலக்ஷ்மி - பிறேமாகரன் குடும்பத்தினர், அருந்தவராஜா குடும்பத்தினர்
7. சரஸ்வதி : ஐங்கரன் குடும்பத்தினர் தற்பரன்ன் குடும்பத்தினர், தயாபரன் குடும்பத்தினர்
8. ஸ்தம்பப் பிள்ளையார் - சிவயோகம் குடும்பம்

5. நுழைவாயில் சின்னையா குடும்பம் (பஞ்ச லிங்கம்)

வருடந்தோறும் நடைபெறும் திருவிழா மற்றும் பூஜை, அபிஷேக தினங்கள் மஹோற்சவம்

கிராமசாந்தி அபிஷேகம்	திரு. பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்
1கொடியேற்றம்	திரு. இளையதம்பி குடும்பத்தினர்
2ஆம் திருவிழா	திருமதி நாகேஸ்வரி - தேவராசா திரு. திருஞானசம்பந்தர் குடும்பத்தினர்
3ஆம் திருவிழா	திருமதி கனகசபை ஐங்கரன் குடும்பத்தினர்
4ஆம் திருவிழா	திருமதி பூபதி சுதாகரன் , க. ஜெயக்குமார் குடும்பத்தினர் திரு. க. சஸ்டிவரதன் குடும்பத்தினர்
5ஆம் திருவிழா	திருமதி மகேஸ்வரி செல்வரத்தினம் குடும்பத்தினர் திரு. சோ. சபாரத்தினம் குடும்பத்தினர்
6ஆம் திருவிழா	திரு. சி. யோகநாதன் திரு. மு. மகேசன் குடும்பத்தினர் திரு. சி. ஆறுமுகசாமி குடும்பத்தினர்
7ஆம் திருவிழா	திரு. வ. சுதந்திரன் குடும்பத்தினர்
8ஆம் திருவிழா (வேட்டைத் திருவிழா) (சப்பறத் திருவிழா)	திரு. மா. பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்
9ஆம் திருவிழா (இரதோற்சவம்)	திரு. ஆ. வைத்திலிங்கம் குடும்பத்தினர் திரு. வே. இராசா குடும்பத்தினர்

10ஆம் திருவிழா	
(தீர்த்தத் திருவிழா)	திரு. ச. நன்னித்தம்பி குடும்பத்தினர்
பிராயச்சித்த அபிஷேகம்	திரு. ஆறுமுகம் குடும்பத்தினர்
வைரவர் பொங்கல்	திரு. செ. சிவயோகம் குடும்பத்தினர்

திருவெம்பா

1ஆம் பூஜை	திருமதி பாலாம்பிகை பாஸ்கரன்
2ஆம் பூஜை	திரு. நாகேஸ்வரியும் சகோதரர்களும்
3ஆம் பூஜை	திரு. செ. கைலாயரும் சகோதரர்களும்
4ஆம் பூஜை	திரு. வ. சண்முகம் குடும்பத்தினர்
5ஆம் பூஜை	திரு. குலசிங்கம் குடும்பத்தினர்
6ஆம் பூஜை	திரு. செல்லத்துரை, திரு. மு. சின்னத்துரை குடும்பத்தினர்
7ஆம் பூஜை	திருமதி பூரணம் செல்லப்பா குடும்பத்தினர்
8ஆம் பூஜை	திரு. வை. நவராசா குடும்பத்தினர்
9ஆம் பூஜை	திரு. ச. நன்னித்தம்பி குடும்பத்தினர்
10ஆம் பூஜை	
(ஊஞ்சல்)	திரு. சி. யோகநாதன் குடும்பத்தினர்
	திரு. மு. மகேசன் குடும்பத்தினர்
	திரு. சி. ஆறுமுகசாமி குடும்பத்தினர்

தை மாத பூசை

தைப்பொங்கல் - திரு. வ. மகேசன் குடும்பத்தினர்
தைப்பூசம் - திரு. சின்னையா குடும்பத்தினர்
தை அமாவாசை - திரு. கா. ஐயம்பிள்ளை குடும்பத்தினர்

மாசி மாதம்

சிவராத்திரி - முதலாம் பூஜை - திருமதி சறோஜினி
இரண்டாம் பூஜை - திரு. கை. சிறிதரன்
மூன்றாம் பூஜை - திரு. ஆ. தேவதாசன்
நான்காம் பூஜை - திரு. ம. சுரேஸ்

பங்குனி

சித்திரை வருடப்பிறப்பு - திரு. மு. இந்திரன் குடும்பத்தினர்

வைகாசி

மஹா கும்பாபிஷேக தினம் திரு. முருகேசு நாகேஸ்வரி குடும்பத்தினர்,
திரு. அண்ணாதம்பி குடும்பத்தினர்.

ஆனி

ஆடி

ஆடிப்பூரம்	திரு. விவேகானந்தன் குடும்பத்தினர்
	திரு. இராசரத்தினம் குடும்பத்தினர்
சங்காபிஷேகம்	பொது

ஆவணி

ஆவணி ரோகிணி	திரு. மு. கிரிதரன்

புரட்டாதி

நவராத்திரி

1ஆம் பூஜை	திரு. மு. மகேசன் குடும்பம்
2ஆம் பூஜை	திரு. பொ. திருஞானசம்பந்தர் குடும்பம்
3ஆம் பூஜை	திருமதி க. பூபதி குடும்பம்
4ஆம் பூஜை	திரு. சு. ஜெயக்குமார் குடும்பம்
	திருமதி சுதாகரன் குடும்பம்
	பூபதி - திரு சஸ்டி வரதன் குடும்பம்
5ஆம் பூஜை	திரு. ச. குலசிங்கம் குடும்பம்
6ஆம் பூஜை	திரு. பொ. மனமோகன் குடும்பம்
7ஆம் பூஜை	திரு. விஜயபாலன் குடும்பம்
8ஆம் பூஜை	திரு. சீ. பத்மநாதன் குடும்பம்
	திரு. கருணாகரன் குடும்பம்
9ஆம் பூஜை	திரு. வை. குணாளன் குடும்பம்
10ஆம் பூஜை	திருமதி சு. இராசமலர் குடும்பம்

ஐப்பசி

ஐப்பசி வெள்ளி	
முதலாம் வெள்ளி	திரு. சண்முகசுந்தரம் குடும்பத்தினர்
இரண்டாம் வெள்ளி	திரு. சவுந்தரநாயகம் குடும்பத்தினர்
மூன்றாம் வெள்ளி	திரு. மா. பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்
நான்காம் வெள்ளி	திரு. ஆ. மா. திருவாதவூரன் குடும்பத்தினர்

கௌரி காப்பு	
ஆரம்பம்	திரு. செ. சிவயோகம்
முடிவு தினமும் தீபாவளி	திரு. மு. மார்க்கண்டு

கார்த்திகை

விஜயாலய தீபம் திருமதி - செ. விஜயலட்சுமி குடும்பத்தினர்

மார்கழி

வைகுண்ட ஏகாதசி - திரு. சிவராசா குடும்பத்தினர்

திருவெம்பா பூசை

பிரதி மாதமும்

பூரணை பூசை - திரு. மு. இந்திரன் குடும்பம்

வருஷப்புல மகாமாரி அம்பாள் ஆலயத்தின் வரலாறு சுருக்கமாகக் கிடைத்த தகவல்களினடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. மேலும், தகவல்கள், படங்கள், கதைகள், (அற்புதங்கள்) கிடைக்குமாயின் ஆலய நிர்வாகத்திடம் சமர்ப்பித்துதவுமாறு அன்பர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் தகவல்கள் கிடைக்கும்பட்சத்தில் அடுத்த பதிப்பில் அவற்றையும் சேர்க்க முடியும் எனக் கருதுகின்றோம்.

வட இலங்கை யாழ்ப்பாணத்தின் வலிகாமம் தெற்கில்
சுன்னாகம் வருஷப்புலத்தில் கோயில் கொண்ட
ஸ்ரீமகாமாரியம்மையின்
4ஆம் மண்டலாபிஷேக மலர் பற்றிய

பாமாலை

எண்சீர், கழிநெடிலடி, ஆசிரிய விருத்தம்)

1. சீர் மேவும் வட இலங்கை யாழ்ப்பா ணத்தின்
செல்வமிகு வலி தெற்கில் சுன்னா கத்தில்
பார்மேவும் பக்தர் குழாம் கூடி வாழும்
பண்பான வருஷப்புலம் கோயில் கொண்ட
உளர் மேவு ஸ்ரீ மகா மாரியம்மை மீது
ஒப்பிலன்னை அற்புதங்கள் ஒன்றாய்ப் பாட
கார்மேவும் ஆனைமுகக் கணபதி தன்னை
காப்பருள வேண்டிக்கை கூப்பு வேனே.

2. அருளரசி மாரியம்மை பாதஞ் சேர்ந்த
அன்பரசி அன்றிரா அசரீரி வாக்கைப்
பொருளாக வருஷப்புல அடியார் கேட்டு
புதுமையென அவ்விடத்தில் விளக்கை யேற்றி
திருவருளால் அவ்விடமோர் குடிசை கட்டி
தினந்தோறும் பொங்கல் பூசை படைய லிட்டு,
ஒருபெரிய ஆராதனை நடாத்தி வந்தார்
ஒப்பில் ஸ்ரீ மகாமாரி உவக்கத் தானே.

3. கற்பகமாம் மகாமாரி யம்மை தானே
காலமெல்லாம் தனையன்பால் வேண்டு வார்க்கு
அற்புதமாய் அவர் கேட்ட வரங்க ளெல்லாம்
அத்தனையும் கொடுத்துவர அதைய றிந்தே
பற்பலரும் அன்னை தனை கூடிப் போற்றி
பத்தியொடு கொடி, குடைகள், வரிசை யோடு
சுற்றிமேள தாளத்துடன் கோயில் வலம்வரவும்
கொலுவாக மாரித்தாய்க்கு விழாவை எடுத்தார்.

4. ஆகமமுறை எழுபத்திரன் டாண்டு தனிலும்
அடுத்தெண்பத்தேழின் பின் ஈராயி ரத்திலே
பாகமுற குடமுழுக்குச் செய்த தோடு
பற்றாக தேர் தீர்த்த விழாவெடுத்தார்.
யோகமாக ஈராயிரப் பதினான் கிந்த வாண்டில்
இக் கோயில் திருப்பணிச் சபையார் கூடி
வேகமாகத் தமது பணியைத் தலைமேற் கொண்டு
வேண்டிமூல மண்டபமுதல் மண்டபங்கள் புதுமை செய்தார்.

5. மன்னிடவே கோயில் வாசல் புதுமை யாக
வழிமுறையே கோபுரத்துக் கத்தி பாரம்
பொன்னாக அமைத்த தன்மேற் சிற்ப மெல்லாம்
பொருந்தும் வகை அழகாகப் பொருந்தக் காட்டி
தன்னிகரில் மாடங்களின் மேல் கலசம் நாட்டி
தாரணியோர் வியக்கும் வண்ணம் பூர்த்தி செய்தே
முன்னிலையாய் அக்கோயில் விளங்க வைத்தார்
மூர்த்தி ஸ்ரீ மகாமாரியம்மையருள் வருஷப் புல பதியே.

6. கோயிலின் இவ்வாண்டு குடமுழுக்குப் பெருஞ்சாந்திக்கே
குவலயத்தின் மேலாம் குருக்கள் மாரை அழைத்து
ஆவலுடன் நவகுண்டம் அமைத்து நிறைவு செய்து
அடுத்து மண்டலாபி ஷேகத்துடன் மலரொன்றும் ஆக்கி
தோயு மன்பால் பெரியார்கள் ஆசி, வாழ்த்துங் காட்டி
தோகை ஸ்ரீ மகாமாரி அற்புதங்கள் விளங்க
நேயமுடன் வருஷப்புல தேவிதிருக் கோயிலிலே
நேர்த்தியாக தங்கமல ரொன்றை வெளியிட்டாரே.

7. ஆலயத்தில் எழுந்தருள் ஸ்ரீ மகாமாரி யம்மையின்
அருளாலே வருஷப்புலம், சுன்னாகம் அன்றி
காலமெல்லாம் அன்னையருட் கண்ணால் மக்கள்
கல்வி செல்வம் தொழில்யாவும் பெற்றுயர நோக்கி
சாலவே முன்னேறிச் சந்தோஷம் தழைக்க
தாயவளின் திருப்பாதம் அடியாருடன் பணிந்தேன்
வாழ்கவென பல்லாண்டு சொல்லாண்டு வணங்கி
வாழ்த்துவேன் அம்மைதனை மறவேனே யானே.

வணக்கம்

8. **வேறு –1**

(பதினான்கு சீர், கழிநெடிலடி, ஆசிரிய விருத்தம்)

சுன்னாகம் வருஷப்புல கோயில் கொள் மகாமாரி
சோதியே உன்னாடலாலே
சூதுவா தின்றியே மக்களொன்றாய் வாழ்தல்
சுந்தரி உந்தன் செய்கையே,
பன்னாளும் கோயில் வந்து உன்பாத மேந்துவதும்
பாவையுன தருட் பெருஞ் செய்கையே
பண்பாக அவரொன்றாய்க் கல்விசெல்வத் தோடுயர்ந்து
பணிவதும் உன்தன் செய்கையே
மன்னாதி மன்னர் போல் இப்பதி வாழ மக்களெல்லாம்
வாழ்வதும் உனது செய்கையே
மற்றுமவர் செய்தொழில்கள் பலித்துயர வைப்பதும்
மாரியம்மே உனது செய்கையே
எந்நாளும் உனை நாம்பி வாழ்கின்ற அடியவர்கள்
என்றும் உந்தன் அருட் செய்கையால் உனை
இருகையும் ஒன்றாக தலைவைத்து வணங்குவோம்.
தேவி ஸ்ரீ மகாமாரி யம்மையே வணக்கம்.

வேறு –2 வாழ்த்துதல்

அன்னமெனப் பிடி யென்ன நடைபயிலும் வருஷப்புல
அம்மை ஸ்ரீ மகாமாரி வாழ்க,
அருள்மாரி குடைநிழல் வாழும் மக்கள் அனைவரும்
அருளைப் பெற்று வாழ்க
பொன்னான அப்பதியின் திருக்கோயில் அறங்காவலர்
போற்றுமத் தலைவருடன் வாழ்க
புகழ்பூத்த கோபுரம் கட்டிய திருப்பணிச் சபையாரும்
போது மனத் தோடு வாழ்க
எந் நாளும் பூசைசெயும் ஐயாவும் குருக்களும்
ஏற்ற கும்பாபிஷேகக் குருக்கள் மாரும் வாழ்க
இனிய உபயகாரர், தொண்டர்கள், மங்கல மொலிப்போர்
இறைஞ்சுவோர் யாவரும் வாழ்க
மன்னாதி மன்னர் போல் மக்களும், குடும்பமாய்த் தம்
மக்களுடன் மகிழ்ந்து வாழ்க, உயர்ந்த
மாநிலம் ஸ்ரீ மகா மாரியம்மை கும்பாபிஷேக
மலராசிரியரும் வாழ யான் வாழ்த்துவேனே
வணக்கம்

முதுபெரும் புலவர் கலாபூஷணம்
புலவர்மணி அகவை நூறு வாழும்
இணுவில் ஆசான் - வை. க. சிற்றம்பலம்

மாரியம்மன் வழிபாடு

தோற்றுவாய்

கல்வியறிவிற் குறைந்த மக்களால் வழிபடப்படும் கிராமியத் தெய்வமாக விளங்கும் அதே நேரத்தில் ஆகம நெறிமுறைப்படி சிவாச்சாரியப் பெருமக்களால் போற்றி வழிபடப்படும் பெருந் தெய்வமாகவும் ,விளங்குபவள் மாரியம்மன். மாரியம்மன், முத்துமாரி, கருமாரி, ரேணுகாதேவி, சீதளாதேவி, கௌமாரி முதலிய பல பெயர்களாலும் போற்றப்படும் பெருமை கொண்ட சக்தியாக இவள் விளங்குகிறாள்.

உத்தர காரணாகமம் கூறும் மாரியம்மனும் கூர்ம புராணம், காஞ்சிப்புராணம் முதலிய புராணங்கள் கூறும் ரேணுகாதேவியும், காத்தவராயன் கதை கூறும் முத்துமாரியும் ஆகம வழிவந்த பத்ததிகள் பலவற்றில் காணப்படும் சீதளா கௌமாரியும் ஒரே சக்திதான்.

முக்கண்ணுடைய தோற்றமும் உமாதேவியின் அம்சமாக விதந்துரைக்கப்படும் பாங்கும் பிராமணோத்தமர்களாலும் சைவப் பெருமக்களாலும் குலதெய்வமாக வழுத்தப்படும் சிறப்பும் வியக்க வைக்கும் அதேநேரத்தில் பலி கொடுக்கும் மது மாமிசங்கள் படைத்தும் வழிபடப்படும் நிலை சிந்திக்க வைக்கிறது.

தமிழர் வாழும் இடமெங்கும் மாரியம்மன் வழிபாடு பொலிவு பெற்றிருக்கிறது. தென்கிழக்காசிய நாடுகளிலும் மேற்கைரோப்பிய நாடுகளிலும்கூட மாரியம்மன் வழிபாடு விரவிக் காணப்படுகிறது. மாரி என்ற சொல்லுக்கிணங்க மழையுடன் தொடர்புடையவளாகவும் சீதளா என்ற பெயருக்கிணங்க குளிர்மையைத் தருப வளாகவும் வெப்பம், சூட்டுநோய்கள், பஞ்சம், வரட்சி முதலிவற்றுக்கெதிரான செழுமை விளைவிக்கும் தெய்வமாகவும் இவள் விளங்குகிறாள்.

மிக உயர்நிலையிலிருந்து கிராமிய நிலைவரை பரந்துபட்ட வழிபாட்டு மரபுகள் மாரியம்மனுக்கிருந்தபோதிலும் இத்தெய்வ வழிபாட்டின் சரியான பின்னணி பற்றிய அறிவு மக்களிடையே மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

விநாயகர், முருகன் முதலிய உயர்நிலைத் தெய்வங்கள் பற்றியும் கண்ணகி, திரௌபதி முதலிய கிராமியத் தெய்வங்கள் பற்றியும் நிறையக் கதைகளையும் வழிபாட்டு முறைகளையும் பொதுமக்கள் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு மாரியம்மன் பற்றிய தகவல்களைத் தெரிந்துவைத்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று ரீதியிலும் சமூகவியல் நோக்கிலும் அவதானிக்கும் போது சாதாரண மக்களால் கிராமிய அடிப்படையில் வழிபடப்படும் தெய்வங்கள் நாளடை வில் படிப்படியாகத் தரமுயர்த்தப்பட்டு ஆகம வழிபாட்டு முறைகளைப் பெறுவது மரபாகும். கிராமிய மரபு பௌராணிக மரபினுள் உள்வாங்கப்பட்டுப் பின் ஆகம மரபிற்குள் நிலைப்படுத்தப் படுகிறது எனக் கருதப்படுகிறது. ஆனால் மாரியம்மன் வழிபாட்டில் இதிகாச பௌராணிக மரபிலிருந்து ரேணுகாதேவி வழிபாட்டு முறை நேரே கிராமிய மரபு நோக்கிக் கீழிறங்கிவரும் போக்கு சற்று வியப்புடன் அவதானிக்கத்தக்க புதுமையான அம்சமாகும். நேரடியாக இவ்வழிபாடு ஆகம மரபுக்குள்ளும் உள்வாங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மாரியம்மன் பற்றி அவ்வப்போது சிறு சிறு வெளியீடுகள் ஆங்காங்கே வெளியிடப்பட்டிருப்பினும் முழுமையான ஓராய்வு இதுவரை நிகழ்த்தப்பட வில்லை.

மாரியம்மன் வழிபாடு - தோற்றமும் வளர்ச்சியும்

பௌராணிக மரபில் சக்தி

பௌராணிக மரபு சக்தி வழிபாட்டின் பல்வேறு கிளைத் தோற்றங்களுக்கு வழிவகுத்தது. பக்தர்களின் துயர் போக்குவதற்காகவோ வேறு சில தெய்வீகக் காரணிகளுக்காகவோ சக்தி பல்வேறு அவதாரம் எடுத்துப் பூவுலகிலும் தேவருலகிலும் அருள்செய்த கதைகள் புராணங் களில் விரித்துக் கூறப்படுகின்றன.

"ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்றாள்"

என்று அபிராமிப்பட்டர் கூறும் தத்துவ விளக்கத்தின் அடிப் படையில் இப் பௌராணிக மரபு விளங்கிக் கொள்ளப் படவேண்டும். ஏனெனில் இப்புராணக் கதைகளில் பல கற்பனைத் தன்மை கொண்ட வையாகவும் நம்ப முடியாதவையாகவும், அருவருக்கத் தக்கவையாகவுங் கூடக் காணப்படுகின்றன. சமய நம்பிக்கையும் தத்துவ உணர்வும் இருக்குமானால் இக்கதைகள் புலப்படுத்தும் பேருண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

இருசார் நிலைப்பாடுகள்

இவ்வடிப்படையில் பலவாக விரிந்து காணப்படும் சக்தி வழிபாட்டில் இருவகைப் பாரம்பரியங்களை நாம் அவதானிக்கலாம். ஒன்று பாமரமக்களின் நம்பிக்கைகளால் வளம்பெற்று வரும் முறை. மற்றது வேத, சிவாகம நெறிமுறையில் கட்டுக்கோப்பான ஒழுங்கு முறைகளுடன் ஆசாரிய பாரம்பரியத்தில் பேணப்பட்டு வருவது.

பிடாரி, கண்ணகி, காளி, எல்லையம்மன், திரௌபதியம்மன் முதலியன முதல்வகை வழிபாட்டு உதாரணங்களாகும். ராஜராஜேஸ்வரி, காமாட்சி, சிவகாமி, மீனாட்சி முதலிய வழிபாடுகள் இரண்டாவது வகைக்கு உதாரணங்களாகும்.

மாரியம்மன் வழிபாடு இவ்விருவகை வழிபாடுகளையும் இணைத்துச் செல்வதாக அமைந்திருக்கிறது. பாமர மக்களின் பொங்கல், குளிர்த்தி வழிபாடுகளை ஏற்றருளும் கிராமியத் தெய்வமாக மிளிரும் அதே நேரத்தில் ஆகம நெறி முறைப்படி அமைந்த உயர்நிலைத் தெய்வமாகவும் விளங்கும் நிலையை மாரியம்மன் வழிபாட்டில் நாம் காணலாம்.

மாரியம்மனைப் பற்றிக் காஞ்சி முனிவர் கூறுவதை நோக்கலாம்.

"...வாழ்க்கையில் இருக்கக்கூடிய எல்லாவித வியாதிகளையும் போக்கடித்து அருள்பாலிப்பவள் மாரியம்மன். சிவவழிபாடு, பெருமாள் வழிபாடு செய்பவர்கள் கூட மகாமாரியம்மனை வழிபட்டே ஆகவேண்டும்... சக்திகளுக்கெல்லாம் சக்தியளிப்பவள் பராசக்தி. அந்தப் பராசக்தியின் அம்சமாக விளங்குபவள் மகாமாரியம்மன்." இங்கு பராசக்தியின் அம்சம் மாரியம்மன் எனக் கூறப்படும் கருத்து சிவபுராணம் முதலிய புராணங்களில் கூறப்பட்ட கதைகளை அடியொற்றியதாகலாம்.

மாரியம்மன் வழிபாட்டின் தொன்மை

உத்தர காரணாகமத்திலேயே மஹாமாரிப் பிரதிஷ்டை என ஒரு பகுதி தனியாக உள்ளது. பொதுவாக ஆகமங்களின் காலத்தை ஆராய்ந்த ஆய்வாளர்கள் அதன்பின் எல்லையாக கி.பி. 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளைக் கொள்வர். எனவே உத்தரகாரணா கமம் அதற்கடுத்த நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றிருக்கலாம்.

மேலும் "மாராசுரனை வதம் செய்ததால் மஹாமாரி எனப் பெயர் பெற்ற..." என உத்தர காரணாகமம் கூறுவதால் மாராசுரனை வதம் செய்த புராணக்கதையுடன் தொடர்புபடுத்தப்படும் நிலையில் மாரி பற்றிய கதைகள் புராண காலத்திலேயே உயர்நிலைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணரமுடிகிறது.

மாரியம்மன் வரலாறு தனித்து நிற்கும் வரலாறாக இல்லா விட்டாலும் மாரியம்மனுடன் தொடர்புடைய பரசுராமர், ஜமதக்னி முனிவர் ஆகியோரின் வரலாறுகள் புராணங்களில் மட்டுமல்லாமல் இதிகாசங்களிலும் இடம்பெறுகின்றன. இவர்கள் வரலாற்றினூடாக ரேணுகாதேவி என்ற பெயரில் மாரியம்மனை இப்பழம் பெரும் இலக்கியங்களில் நாம் தரிசிக்க முடிகிறது.

இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும் சிவபுராணம், விநாயக புராணம், மச்சபுராணம், சூரியபுராணம், வராகபுராணம், கூர்மபுராணம், லிங்கபுராணம், விஷ்ணுபுராணம், பாகவதபுராணம் முதலியவற்றிலும் தமிழ்க் கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டத்திலும் காஞ்சிப்புராணம் முதலிய தல புராணங்களிலும் ரேணுகாதேவி - ஜமதக்னி முனிவர் கதைகளின் ஊடாக மாரியம்மன் வழிபாட்டின் ஆதார மூலக்கூறுகளைக் கண்டுணர முடிகிறது. பரசராமரின் தந்தை ஜமதக்னி முனிவர் பற்றிய சில குறிப்புக்கள் வேதப்பாசுரங்களில்கூட இடம் பெறுவதால் மாரியம் மன் வழிபாட்டின் தொன்மை வியக்க வைக்கிறது.

ஜமதக்னி முனிவர் - ரேணுகாதேவி கதை

ஏனைய பல புராணங்களிலும் இக்கதை இடம்பெறுகின்ற போதிலும் பெரும்பாலும் சிவபுராணத்தை அடியொற்றியே இங்கு தரப்படுகிறது. கி.பி. 1899 இல் வெளிவந்த ஆ. சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணியிலும் இந்த மாரியம்மன் வரலாறு சுருக்கமாகக் கூறப்படுகிறது.

விந்திய மலைச்சாரலிலே நர்மதை ஆற்றங்கரையிலே செழுமைமிக்க வனப் பிரதேசத்திலே அழகிய பர்ணசாலை ஒன்றில் ஜமதக்னி முனிவரும் அவரது தர்மபத்தினி ரேணுகையும் வாழ்ந்து வந்தனர். யாகங்கள் பல செய்து கொண்டும் தவத்திலீடுபட்டுக் கொண்டும் இனிமையாக அவர்கள் நல்லறத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பிரம்மாவின் மானச புத்திரர் பிருகு முனிவர். அவருடைய வம்சத்தில் பிறந்தவர் இருசிகர். இவர் குசநாபன் என்ற முனிவரின் மகளும் விசுவாமித்திரரின் சகோதரியுமாகிய சத்தியவதி என்பவளைத் திருமணம் செய்து பெற்றெடுத்த புதல்வனே ஜமதக்னி முனிவர். ஜமதக்னி என்றால் புலன்களை வென்றவர் என்றும் யாகங்கள் செய்பவர் என்றும் பொருள்.

பாஞ்சால தேசத்துக்குத் தென்கிழக்குத் திசையில் தர்மசீலனாக வாழ்ந்து வந்த ரேணு என்பான் சிறந்த அரசனாயிருந்தான். அவன் நெடுங்காலம் மகப்பேறின்றி வருந்தி மனைவியுடன் வனம் சென்று தவத்திலீடுபட்டான். இவர்களது தவத்தைக் கண்டு மகிழ்ந்த உமையம்மையார் சிவபிரானிடம் வேண்டுதல் செய்கிறாள்.

"ரேணுவுக்கு மகளாகப் பிறந்து அறிவு குறைந்த ஏழை மக்களுக்கு அருள் செய்து நோய், வறுமை முதலியவற்றைப் போக்க விரும்புகிறேன்"

அதற்குச் சம்மதித்த சிவபிரான்,

"நீ ரேணுவின் மகளாகப் பிறந்து ஒரு தவசிரேஷ்டரின் மனைவியாகி விஷ்ணுவின் அம்சமான ஒரு புதல்வன் உட்பட நான்கு புதல்வர்களைப் பெறுவாய். பின் அபாண்டமான குற்றச் சாட்டினால் கொல்லப்படுவாய். அதன்பின் மனித சுபாவம் அகன்று கிராமிய தேவதையாகித் தென்னாட்டுக்குச் சென்று மக்களுக்கு அருள் செய்வாய்" எனக் கூறி அனுப்பினார்.

அதன்படி உமாதேவியார் ரேணு என்ற மன்னன் மகளாகத் தோன்றி ஆதிரை, ரேணுகை என்ற பெயர்களுடன் வளர்ந்தாள். உரிய காலத்தில் முறைப்படி ஜமதக்னி முனிவரைத் திருமணம் செய்து இல்லறம் நடாத்தினாள். இவர்களுக்குத் தண்ணுவன், அவணுவன், விசுவாசு, பரசுராமன் என நான்கு புதல்வர்கள்.

கிருதவீரியன் அல்லது தனதன் என்ற பெயரையுடைய மன்னனொருவன் சுநந்தை என்ற தன் மனைவியோடு புத்திரபாக்கியம் வேண்டித் தவம் செய்தான். முற்பிறப்பில் செய்த பல பாவம் காரணமாக அவனுக்குக் கைகளும் கால்களும் இல்லாத ஒரு குழந்தை பிறந்தது. அர்ச்சுனன் எனப் பெயரிட்டு வளர்த்த இவன் வடமொழித் தத்திதாந்த முறைப்படி கார்த்த வீர்யார்ச்சுனன் எனப்பின்னர் அழைக்கப்படலா யினான்.

இவன் சகல கலைகளையும் கற்றுணர்ந்து தத்தாத்திரேய முனிவரிடம் குருகுலவாசம் செய்து அவரிடம் வரம் பெற்று இருகால்களையும் ஆயிரம் கைகளையும் உடையவனானான். கிருதர் என்ற முனிவரிடம் அக்னியாஸ்திரமும் பெற்றுக் கொண்டான். தன் கரங்களின் பலத்தினாலும், அஸ்திரத்தின் பலத்தாலும் யாவரையும் வென்று மமதை கொண்டவனாக வாழ்ந்த காத்தவீர்யார்ச்சுனன் பற்றிப் பல கதைகளைப்

பல்வேறு புராணங்களில் காணமுடிகிறது. தேவர்களுடன் சேர்ந்து பாற்கடல் கடைந்தான் என்றும் அமுதம் குடித்ததனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தான் என்றும் சொல்லப்படுகிறது. அழகிய பெண்களையெல்லாம் பலாத்காரமாகக் கவர்ந்து சென்று அந்தப்புரத்தில் வைத்திருந்தான். கார்த்தவீரயனின் வீரத்தைக் கேள்விப்பட்ட இராவணன் அவனுடன் வந்து மோதித் தன் செருக்கழிந்து சென்றமையைக் கூர்ம புராணம் (தமிழ் மொழி பெயர்ப்பு - அகத்தியன் இராவணன் மரபு உணர்த்தப்படல்) கூறுகின்றது.

காரத்தவீர்யன் பார்க்கவ முனிவரின் யாகத்தைக் குழப்பியதனால் அவரிடமிருந்து "ஊனது ஆயிரம் கரங்களும் ஒரு பிராமணனால் அழியக் கடவது" என்ற சாபம் பெற்றான். இதேபோல் இன்னொரு சந்தர்ப்பத்தில் வேறொரு முனிவரிடம் "உன் சிரம் பரசுராமனால் அறுக்கப்படும்" என்று சாபம் பெற்றான்.

கார்த்தவீர்யன் வருகை

கார்த்தவீர்யனும் பரிவாரங்களும் ஒரு சமயம் வேட்டையாடிக் களைப்போடு திரும்புகையில் வழியில் ஜமதக்னி முனிவரால் அவரது ஆசிரமத்தில் நன்கு உபசரிக்கப்பட்டனர். காட்டில் வாழும் முனிவர் அத்தனை பேருக்கும் பெருவிருந் தளித்தமை அவனுக்கு வியப்பாக இருந்தது.

தேவலோகப் பசுவாகிய காமதேனு அவ்வேளை அவரிடம் இருந்தமையே இச்செயல் நிகழத் துணைசெய்தது என அறிந்த கார்த்தவிர்யன் அதனைக் கவர விரும்பினான். அனால் காமதேனு அவனது படையினரைக் கொன்று அவனை யும் விரட்டியது. அவ்வாறு அவமானத்துடன் ஓடும்போது ஆசிரமத்தினுள்ளிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி எட்டிப்பார்த்த முனிவரின் மனைவி ரேணுகையைக் கண்ட கார்த்தவீர்யன் அவளது அழகில் மயங்கி அவளைக் கவர விரும்பினான்.

தன்னை அழகிய வாலிபனாகிய உரு மாற்றிக்கொண்ட கார்த்த வீர்யார்ச்சுனன் ரேணுகை செல்லும் வழி நின்றான். கற்பில் சிறந்த ரேணுகை அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மீண்டும் வேறோருபாயம் செய்தான் கார்த்தவீர்யன்.

ஓர் அழகிய கந்தர்வன்போல் உருமாறி அதிகாலையில் ரேணுகை நீராடும் பொய்கையின் மேல் பறந்து சென்றான். நீரில் தெரிந்த அந்த அழகிய உருவத்தைக்கண்டு ரேணுகை ஒருகணம் தடுமாறினாள். பின்

தனது தவறை உணர்ந்து மனம் வருந்தியவாறு நீராடிவிட்டுப் புறப்பட்டாள். சிவபுராணம் மட்டுமே கார்த்தவீர்யனே கந்தர்வனாக வந்தானென்று கூறுகிறது. வேறு புராணங்கள் சித்ரசேனன் என்ற கந்தர்வன் வந்ததாகக் கூறும். நீராடியதும் மலர்கள் கொய்துகொண்டு தன் கற்பின் வலிமையால் நீரை ஒரு பந்து போலத்திரட்டிக் கொண்டுபோவது அவளது வழக்கம். ஆனால் அன்று நீர் திரளவில்லை. அவள் வாடிய முகத்துடன் ஆசிரமம் திரும்பினாள். கணவர் அப்போதுதான் துயிலெழுந்து வெளியே வந்தார். அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள் ரேணுகை. அவளது முக வாட்டத்தைக் கண்டு ஆலோசித்த ஜமதக்னி முனிவர் தம் தவவலிமையால் அன்று அதிகாலையில் பொய்கைக்கரையில் நிகழ்ந்ததை உணர்ந்தார்.

பரசுராமன் தாயின் தலை கொய்தல்

தம் புதல்வர்கள் நால்வரையும் அழைத்துக் கற்புநிலை தவறிய தாயின் தலையை வெட்டிவிடும்படி பணித்தார். முதல் மூவரும் மறுத்துவிட்டு ஓடிவிட்டனர். அவர்கள் தந்தையின் சாபத்தால் நரிகளாய் அலைந்தனர். பரசுராமன் தந்தையின் தவவலிமையும் கோபத்தையும் சிந்தித்தான். ஆனால் தாயின் மீதுள்ள அன்பு காரணமாகச் சிறிது தயங்கினான். ரேணுகை மகனை நோக்கி, "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. அதனாலே நீ யோசிக்காது அக்கட்டளையைச் செய்தால் நானும் எனது குற்றம் நீங்கிப் பதிவிரதை ஆகிவிடுவேன்" என்றாள்.

உடனே பரசுராமர் தாயைக் கொலைக்களத்துக்கு அழைத்துச் சென்று அவளது தலையை வாளால் வெட்டி விழுத்தினார். அதனைத் தடுக்கவந்த பலரையும் அவர் வெட்டி வீழ்த்த நேர்ந்தது. அதனால் அங்கு போர்க்களம் போல் உடல்கள் சிதறிக்கிடந்தன. பரசுராமன் மீண்டும் தந்தைமுன் வந்து பணிந்து நின்றபோது அவர் கோபம் தணிந்து நின்றார். "உன் தாய் சிவனிடம் பெற்ற வரம் நிறைவேறுகிறது. அவள் இனி மனிதப்பெண் அல்ல, தெய்வமாகி விட்டாள்" எனக்கூறி விட்டு, "என் சொல்லை நிறைவேற்றியபடியால் நீ விரும்பிய மூன்று வரங்களைத் தருவேன்" என்றார். பரசுராமன் மகிழ்ந்து, "உங்கள் கோபம் தணிந்து என் தமையன்மாரை மீண்டும் மனிதர்களாக்க வேண்டும்" என்றார். அவ்வாறே அவர் சம்மதிக்க மூத்தபுதல்வர் மூவரும் வந்து பணிந்தனர். "எம் தாய் மீது வெறுப்பை நீக்கி மறுபடி அவளை முன்போல் தங்கள் அன்பு மனைவியாக ஏற்க வேண்டும்" என்பதை இரண்டாவது வரமாகக் கேட்டான்.

"முன்போல் அவள் ஆசிரமத்திலிருந்து வரலாம்" என்றார் ஜமதக்னி முனிவர். மூன்றாவது வரமாக, இறைவனை மறவாத சிந்தையை

வேண்டிக்கொண்டு தந்தையிடமிருந்து பெற்ற சிறந்த ஆயுதத்தையும் ஏந்திக்கொண்டு கொலைக்களம் நோக்கிப் புறப்பட்டான் பரசுராமன்.

தாயினை உயிர்ப்பித்தல்

தந்தை அவனிடம் நீர்க் கலசமொன்று கொடுத்துத் தாயின் தலையை உடலிலே பொருத்தி அந்நீரைத் தெளித்ததும் அவள் உயிர்பெற்றெழு வாளெனக் கூறினார். அவ்வாறே சென்ற பரசுராமன் தாயின் தலையைக் கண்டெடுத்து அங்கே வீழ்ந்துகிடந்த முண்டங்களில் ஒன்றைத் தாயினது எனத் தேர்ந்தெடுத்துப் பொருத்தி நீரைத் தெளிக்க அவள் உயிர்பெற்றெழுந்து வந்தாள். அந்த உடல் உண்மையில் தீண்டத்தகாத குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுடையதாகும். தவறையுணர்ந்து எதுவும் செய்யவியலாநிலையில் ஆசிரமம் திரும்பினர்.

மீண்டும் ஒரு தடவை யாரும் இல்லாதவேளை கார்த்தவீரியன் ஜமதக்னி முனிவரது ஆசிரமம் வந்து ரேணுகையைக் கவர முயற்சித்தான். அப்போது ஜமதக்னி முனிவரும் வந்துவிட்டார். ஒரு நீண்டவாளை எடுத்து ரேணுகை கொடுக்க அவர் அதனால் கார்த்தவீரியனின் ஆயிரம் கரங்களையும் வெட்டி வீழ்த்தினார். அவன் அலறிக்கொண்டு ஓடியதும் அவனது புதல்வர்கள் ஓடிவந்து முனிவரைக் கொன்று விட்டனர்.

பின்னர் அங்கு வந்த பரசுராமன் இதையறிந்து கார்த்தவீரியனைத் தேடிச் சென்று கொலை செய்துவிட்டு வந்து தந்தையைத் தகனம் செய்தான். அவன் நீரோடைக்குச் சென்ற சமயம் ரேணுகை கணவரின் சிதையில் உடன்கட்டை ஏறினாள். ஆனால் அவளைக் காக்கவேண்டி இந்திரன் மழையைப் பொழிந்தான். ஆடைகள் எரிந்து விட்ட நிலையில் தீக்காயங்களுடன் சிதையிலிருந்து இறங்கிய ரேணுகை அங்கிருந்த வேப்பமரத்தின் இலைகளை ஆடையாக அணிந்து கொண்டு தென்திசை நோக்கி நடந்து ஒரு சேரியை அடைந்தாள்.

ரேணுகை மாரியம்மன் ஆதல்

அவளைக் கண்ட அச் சேரிவாழ் மக்கள் தாம் தீண்டத் தகாதவர்கள் ஆதலால் அவள் பசிபோக்க பச்சரிசிமா, வெல்லம், இளநீர், பானகம் இவற்றைப் புதிய மட்பாண்டத்தில் கொண்டுவந்து கொடுத்தனர். அவள் வரும்போது அங்கே கடும் மழை பெய்து அச்சுற்றாடல் உடனே வளம் கொண்டு பூத்துக்குலுங்கியது.

இவ்வாறு தென்னாட்டுக்கும், சேரிவாழ் மக்களுக்கும் மாரி மழைக்கும், வேப்பிலைக்கும், பச்சை உணவுகளுக்கும், குளிர்மையான

உணவுகளுக்கும், மாரியம்மனுக்கும் உள்ள தொடர்பு இக்கதை மூலம் புலப்படுத்தப்படுகின்றது. இதன்பின் முத்துமாரி, மாரியம்மன் என்ற பெயர்களுடன் அவள் அப்பிரதேச மக்களுக்குத் தெய்வமாக விளங்கி வரலானாள். பின்னர் மீண்டும் வடக்கு நோக்கிச் சென்று கைலையில் தவம் செய்தாள். சிவபிரான் காட்சி தந்து அவளது பழைய விருத்தாந்தங்களைச் சொல்லி, அவளை ஆறுதல்படுத்தினார்.

பரசுராமன் அவளது தலையை உடலுடன் சேர்த்த பொழுது வேறொரு பெண்ணின் உடலே சேர்க்கப்பட்டது. அதனால் பரசுராமன் அவளுக்கு இறுதிச்சடங்கு செய்ததும் அவளது உடல் பிரிந்து போய்விடத் தலை மட்டுமே உலகத்தவர்க்குத் தெரியும். அதனை உலகோர் வழிபடட்டும் எனவும் சிவன் கூறி வேண்டிய வரம் என்னவெனக் கேட்டார்.

"சேரிகளில் வாழும் பாமர மக்களுக்கு இன்னல் செய்வோரை வருத்தி, என்னை வழிபடும் பாமர மக்களுக்கு நல்லருள் பாலிக்க விரும்புகிறேன்" என்று ரேணுகாதேவி கேட்டாள். சிவபிரானும் அவளுக்கு அருள் செய்து தீயவர்களுக்கு வேதனை செய்யும் முத்துக்களை மாரியம்மனிடம் கொடுத்தார்.

"நீ இப்போது தேவதை ஆகிவிட்டாய். இந்த முத்துக்களை எடுத்துக்கொண்டு பூமியைச் சுற்றிவா. துட்டர்களுக்கு இவற்றை எறிந்தால் நீ கணவர் உடலுடன் தீயில் வீழ்ந்து பின் மழை பெய்தபோது நெருப்பு அணைந்து உன் உடலில் விழுந்த கொப்புளங்கள் போல் கொப்புளங்கள் உண்டாகும். நீ ஆடையாக அணிந்த வேப்பிலையே அந்தப் புண்களுக்கு மருந்தாகும்" என்று கூறி மறைந்தார்.

பௌராணிக மரபிலமைந்த இக்கதை மாரியம்மன் தோற்றத்தை ரேணுகா தேவியாகக் காட்டுகிறது. இன்றைய மாரியம்மன் வழிபாட்டு முறைகள் இதனோடு பொருந்திவரக் காணலாம். இன்றும் பல இடங்களில் தலைமட்டும் தனியாக உருவாக்கி வைத்து அதற்கு அலங்காரம் செய்து வழிபடும் முறை காணப்படுகிறது. இதற்குக் காரணமாக அவளது தலையுடன் தவறான உடல் பொருத்தப்பட்ட கதை அமைகிறது. மேலும் இங்கு உமாதேவியின் அவதாரம் நேரடியாகச் சேரிப்புற மக்களுக்குரிய கிராமியத் தெய்வமாகப் படியிறங்கிவரும் நிலை கவனிக்கத்தக்கது.

தேவீ பராக்கிரமம் தரும் செய்தி

இதே கருத்தை நாம் 'தேவீ பராக்கிரமம்' என்ற நூலிலும் அறியலாம். 'அஷ்டாஷ்டலீலை என்னும் தேவீ பராக்கிரமம்' என

மகுடமிடப்பட்ட அந்நூல் ரேணுகையை அபேதவர்மன் என்ற மன்னன் மகளாகக் குறிப்பிடுகிறது.

சிவபுராணக் கதையே இங்கும் காணப்படுகிறதெனினும் இறுதியில் மகன் மூலம் எழுதப்பட்ட ரேணுகாதேவி காஞ்சி நகரில் சிவலிங்கபூஜை செய்து கலியுக மானிடர் விருப்பமும் இழிகுலத்தோர் விருப்பமும் நிறைவேற்றும் வல்லமை பெற்றாள் என்றும் சிவனிடமிருந்து சர்ப்பகுண்டலமும், வாளும், கேடயமும் பெற்றுக் கொண்டு போதராஜன் முதலிய சிறுதேவ கணம் புடைசூழப் புறப்பட்டாள் எனக் குறிப்பிடப்படுகிறது.

காத்தவராயன் கதையில் மாரியம்மன்

மாரியம்மன் வழிபாடு தொடர்பாக ஆராயும்போது மக்களிலக்கியமாகக் கூத்து முறைப் பாரம்பரியத்தில் நீண்ட காலம் வழங்கிவரும் காத்தவராயன் கதையும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். இக்கூத்து பெரும்பாலும் சேரிவாழ் மக்களாகிய பாமரமக்களாலேயே இன்றளவும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

காத்தவராயன் மாரியம்மனுடன் தொடர்புடைய ஒருசிறு தெய்வமாக வழிபடப்படுதலைத் தமிழ் மக்களிடையே காணலாம். காத்தவராயன் என்ற பெயர் காத்தான் என்றும் வழங்கப்படுகிறது. காத்தவராயன் நாடகம் தென்னிந்தியாவின் சில பகுதிகளில் தெருக் கூத்தாக ஆடப்படுகிறது. ஈழத்தில் ஊர்ப்புறக் கோயில் வீதிகளில் அமைக்கப்பட்ட மேடைகளில் பயபக்தியோடு நேர்த்திக்கடன் இறுத்தல் என்ற வகையில் புனிதமாக நடாத்தப்படுகிறது. கூத்து, கதைப்பாடல், கரகப்பாடல், வில்லுப்பாட்டு, கும்மிப்பாடல் முதலிய பல வடிவங்களில் காத்தவராயன் கதை மக்களிடையே வழங்கி வருவதன் மூலம் இதன் கிராமியத்தன்மை புரிந்து கொள்ளப்படலாம்.

1930 களிலும் 1960களிலுமாக இரு தடவை "காத்தவராயன்" திரைப்படமாகவும் வெளிவந்தமை மக்கள் மத்தியில் இக்கதைக்கிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துகிறது.

தமிழகத்தில் சென்னையில் திருமகள் விலாச அச்சகத்தில் "காத்தவராயர் சண்டை எனும் காத்தமுத்து நாடகம்" என்ற பெயரில் மிகப்பழைய காலத்தில் இக்கதை நூல்வடிவில் வெளியிடப்பட்டிருக்கிறது. இதைவிட " காத்தவராய சுவாமி கதை" என்றபெயரில் ஒரு நூல்

வெளிவந்திருக்கிறது. 1971 இல் பேராசிரியர் நா. வானமாமலை பதிப்பாக மதுரைப்பல்கலைக்கழகம் "காத்தவராயன் கதைப்பாடல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது. ஈழத்தில் யாழ்ப்பாண மாவட்ட கலாசாரப்பேரவை வெளியீடாக கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களது முயற்சியில் "காத்தவராயன் நாடகம்" என்ற நூல் 1986 இல் வெளிவந்துள்ளது.

காத்தவராயன் பிறப்பு

இவை எல்லாவற்றிலும் சிலசில முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் காத்தவராயன் மாரியம்மனின் மகன் என்பது பொதுமைப் பண்பாக உள்ளது. முருகனே காத்தவராயனாக அவதாரம் எடுத்தார் என்பது சிலபிரதிகளின் கருத்து. சிவன் பெண் மானாகவும், திருமால் - ஆண் மானாகவும் தோன்றிப் பெற்றெடுத்த மான்கன்று மாரியம்மனிடம் ஆண்குழந்தையாக மாறி வளர்ப்புக் குழந்தையாக வளர்கிறது. அவளது பூந்தோட்டங்களைக் காத்தமையால் காத்தவராயன் என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இக்கதைகளில் மாரி உமாதேவியின் தங்கையாகச் சித்திரிக்கப் படுகிறது.

ஆனால் ரேணுகாதேவி கதையுடன் இங்கு பெரும் முரண்பாடு காணப்படுகிறது. ரேணுகாதேவி திருமணமாகிக் குழந்தைகள் பெற்றெடுத்து வைதவ்யம் அடைந்தவள். ஆனால் காத்தவராயன் கதைகளில் மாரியம்மன் கன்னிப் பெண்ணாகவும் தவவலிமையால் சிவனிடம் வரம் பெற்றுக் காத்தவராயனை வளர்ப்பு மகனாகக் கொண்டாள் எனவும் கூறப்படுகிறது.

உமாதேவியின் தங்கையாகிய மாரியம்மன் பூமாதேவியின் வேண்டு கோளுக் கிணங்கப் பூபாரம் தீர்ப்பதற்காகச் சிவனை நோக்கித் தவமிருக்கிறாள். கண்டசுரமாலை என்னும் முத்துமாலையைச் சிவனிடமிருந்து பெறுகிறாள். இதுவே நோய்களை உண்டாக்குவதாகும். இதன்மூலம் ஊருலகத்தில் தீயவர்களுக்கு நோய் கொடுத்து நல்லவர்களைக் காத்துவரும் மாரியம்மன் சிவனிடம் வரம் வாங்கிக் காத்தவராயனை வளர்ப்புமகனாகப் பெற்றுத் தனது பூந்தோட்டத்தைக் காவல் செய்ய வைத்தாள். நந்தவனத்தைக் காவல் செய்தமையாலே 'காத்தான்' எனப் பெயர் பெற்றான் என்பர்.

வைரவர், வீரபத்திரர், முனியப்பர் முதலிய தெய்வங்களைப் போன்று காத்தவராயரும் கிராமியக் காவல்தெய்வமாகவே போற்றப்படுகிறார். சிலப்பதிகாரத் தில் சாத்தன் என்பது காவல் தெய்வமாகும். அவ்வாறாயின் சாத்தன் என்பது காத்தான் ஆயிற்றோ

எனவும் ஐயுற இடமுண்டு. சிவன், திருமால் இருவருக்கும் பிறந்த ஹரி ஹர புத்திரனே ஐயனார், ஐயப்பன், சாத்தன், சாஸ்தா என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். காத்தவராயரின் கதை கூறும் பிறப்பும் அவரை ஹரிஹர புத்திரனாகவே காட்டுகின்றது.

ரேணுகாவிற்கும் மஹாமாரிக்குமுள்ள இணைப்பு

இன்னொருவிதத்திலமைந்த கதையும் புராணங்களில் வழங்கிவருகிறது. சகல உயிர்களுக்கும் சிவபிரான் படியளக்கின்றாரா எனப் பரிசோதிக்க விரும்பிய உமையம்மையார் சில சிற்றெறும்புகளைப் பிடித்து ஒரு சிமிழியிலடைந்து வைத்தாள்.

மறுநாள் அதனைத் திறந்து பார்த்தபோது ஒவ்வோர் எறும்பும் ஒவ்வொரு நெல்மணிகளைக் கவ்விக் கொண்டிருந்தன. இறைவனைச் சந்தேகித்த குற்றத்துக்கு வருந்திப் பாபவிமோசனம் தரும்படி சிவனை வேண்டினாள். பூமியில் ஒரு நந்தவனம் அமைத்து அரனை அர்ச்சிக்க வேண்டுமென அவர் கட்டளையிட்டார். இதன்படி அவதரித்தவளே மகாமாரிதேவி.

இக்கதை மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களால் 1971இல் வெளியிடப்பட்ட "மகாமாரித் தேவி திவ்விய கரணி" என்ற நூலில் காணப்படுகிறது. இந்த மகாமாரி தனது பூந்தோட்டத்தைக் காவல் செய்யக் காத்தவராயனை நியமித்ததாகவும் அவன் காமம் கொண்டு தவறு செய்தபொழுது சிவன் சாபமிட்டார் எனவும் அதற்கு மாரியம்மன் மறுசாபம் கொடுத்தபோது சிவன் மாரியம்மனுக்கு கொடுத்த சாபத்தின்படி அவள் ரேணுகாதேவியாகப் பிறந்தாள் என்று இக்கதை கூறுகின்றது.

எனவே ரேணுகாதேவி மகாமாரி என மாற்றம் பெற்ற முதற்கதைக்கு இது அடிநாதமாக இருந்தது ரேணுகாதேவியின் வரலாற்றுக்கு முன்னரே மாரியம்மன் இருந்தமையைக் காட்டுகிறது.

மட்டக்களப்பு மாரியம்மன் பத்ததிகள்

இக்கதைகளுக்கான ஆதாரம் மட்டக்களப்பு நகரிலே காலங்கால மாகப் பாதுகாத்துவரப்படும் பாரம்பரியமான மாரியம்மன் பத்ததி களாகும். இப்பிரதிகள் பலவற்றைப் பரிசோதித்துத் தொகுத்தவராகிய சி. கணபதிப்பிள்ளை என்பார் வியாச பாரதத்தில் இடம்பெறும் ஜமதக்னி முனிவர் கதைக்கும் இந்தப் பத்ததிகளிலுமுள்ள கதைக்குமிடையில் காணப்படும் முரண்பாடுகளையும் சுட்டிக் காட்டுகிறார்.

மட்டக்களப்புக் கதை மரபிலே ஜமதக்னி முனிவரின் மனைவி எக்கலாதேவி எனக் காணப்படுவதோடு சிலபிரதிகளில் ஜமதக்னி என்பதற்குப் பதிலாக கந்தமாமுனி என்ற பெயரும் காணப்படுகிறது. இவர்களது பிள்ளைகள் எழுவர் என்றும் அவர்களிலொருவர் பரசுராமர் எனவும் இக்கதை கூறுகிறது.

மேலும் உத்தரகாரணாகமம் கூறும் மாராசுரவதம் பற்றி இன்று கிடைக்கும் புராணங்களில் நேரடிக்குறிப்பெதுவும் கிடைக்கவில்லை யெனினும் மட்டக்களப்புப் பத்ததிகளில் அதற்கு விடைகாண முடிகிறது. தவம் செய்த மாரியம்மன் சிவனிடம் கண்டசுரமாலையைப் பெற்றபின் மாராசுர அரசனது பட்டணத்துக்குச் சென்று முத்துக்களை வீசியதாக இக்கதை கூறுகிறது. யாழ்ப்பாணத்துக் காத்தவராயன் நாடகத்தில் வைசூர ராசனுடைய நகரம் செல்வதாகக் கூறப்படுகிறது. மாராசுரன், வைசூரராசன் பெயர்ப் பொருத்தம் அவதானிக்கப்படலாம்.

மாராசுரவதம் ஸ்காந்தபுராணச் செய்தி

இவ்விடத்தில் மாராசுரவதம் பற்றிய செய்தியை டாக்டர் இரா. செல்வக்கணபதி எம்.ஏ. பி.ஏட். பி. எச்.டி அவர்கள் எழுதிய "மகாமாரியம்மன் அருள் வரலாறு" என்ற நூலிலும் நாம் கண்டறியலாம். இக்கதையில் சீதளாதேவி தான் மகாமாரி என்பதற்கான ஆதாரங்களை நாம் பெறமுடிகிறது.

அசுரர்களின் பெருந்தொல்லை பொறுக்கமாட்டாத தேவர்கள் இறைவன் துணையால் அவர்களை ஒடுக்கிப் பாதாள உலகுக்கு அனுப்பினர். இதனால் வருந்திய அசுரர் தம் குலகுருவாகிய சுக்கிராச்சாரியார் மூலம் அபிசார வேள்வி ஒன்றைச் செய்வித்து, அதனால் வெம்மையை உண்டாக்கினர். தேவர்கள் உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்றிக் கடும் நோயினால்துன்புற்றனர்.

அவர்கள் சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தபோது அங்கு தோன்றிய சிவபிரான் கருணைகொண்டு தமது சடாமுடியிலுள்ள சந்திரனிலிருந்தும் கங்கையிலிருந்தும் மாயா சக்தியாகிய சீதளாதேவியைக் குளிர்ந்த வடிவினளாக உருவாக்கினார். சீதளா என்றால் குளிர்மை என்பது பொருள்.

மாரியின் தோற்றம்

நான்கு திருக்கரங்களில் கத்தி, கபாலம், உடுக்கை, பாசம் ஆகியவற்றை ஏந்தியவாறு தீக்கொழுந்து போன்ற சடாமுடியுடனும்

ஐந்தலை நாகம் குடைபிடிக்கத் தோன்றிய அந்தத் தேவி சிவனால் வழங்கப்பெற்ற பிரம்பும், வேப்பிலையும் கொண்டு அவ்வப்போது உலகில் தோன்றும் வெப்பு நோய்களை மாற்றி அருள் செய்தாள். மாரியையும் பொழிவித்தாள்.

அசுரர்கள் அடையும் தோல்விகளைக் கண்டு மனம் பொறாத சுக்கிராச்சாரியார் மீண்டும் ஓர் அபிசார வேள்வி செய்தபோது யாவரையும் மரணமடையச் செய்யும் ஆற்றலுடைய மாராசுரன் என்ற அசுரன் தோன்றினான். அம்பிகை அந்த அசுரனோடு போர் செய்து அவளைச் சங்காரித்தாள். மாராசுரனை வதம் செய்ததால் மகாமாரி எனப் பெயர் பெற்றாள்.

இக்கதை இடம்பெறுவது ஸ்காந்த மகாபுராணத்தில் ஆகும். ஸ்காந்த மகாபுராணத்திலிடம்பெறும் உமா மகேஸ்வர சம்பாஷணையாக அமைந் திருக்கும் சீதளா ஸ்தோத்திரம் நித்திய பாராயணத்துக்குரியதாக ரிஷி, சந்தஸ் முதலியவற்றுடன் அமைக்கப்பட்டு வழங்குவது இதன் சிறப்புக்கு எடுத்துக் காட்டு. பி.பா. பஞ்சாட்சரக்குருக்கள் வெளியிட்ட "மாரியம்மன் ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்" நூலில் இத்தகவல் உள்ளது.

கலைக்களஞ்சியம் தரும் செய்திகள்

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக்களஞ்சியம் மாரியம்மனைப் பற்றிக் கூறுகையில் ஏனைய கிராமியத் தெய்வங்களைவிட மாரியம்மன் பிரபலம் பெற்றிருப்பதாகக் குறிப்பிடுகிறது. செல்வி, செல்லி, செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன், ஆயிரங்கண்ணுடையாள், முத்துமாரி, மாரியாத்தா, ஆயி, மகாமாயி முதலிய பெயர்கள் பலவற்றால் அவள் அழைக்கப்படுவதே அவளது செல்வாக்கைப் புலப்படுத்துகிறது.

மாராக்கா, மாராப்பா, மாரியப்பா, மாரிமுத்து, மாரியாயி, அங்கமுத்து, முத்தம்மா, கண்ணாயிரம், முத்தாலம்மை, முத்தம்மாள் முதலிய மக்கட் பெயர்கள் இந்தச் செல்வாக்கின் விளைவாக எழுந்தன என்பதும் கலைக்களஞ்சியத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது.

கண்ணகி வழிபாட்டுடன் ஒப்பீடு

கண்ணகி வழிபாடு பற்றிச் சிலம்பு கூறியிருக்கும் கருத்துக்கள் இன்றைய மாரியம்மன் வழிபாட்டுடன் ஒத்திருக்கும் இயல்பையும் எடுத்துக் காட்டிக் கண்ணகி வழிபாடே மாரியம்மன் வழிபாடாக மாறியிருக்கலாம் என அங்கு குறிப்பிடப்படுகிறது.

ஆனால், குளிர்த்தி, பொங்கல் முதலிய வழிபாட்டு முறைகளிலும் கோபம், ஆங்காரம் முதலிய குண இயல்புகளிலும் வைதவ்யம் என்ற பண்பு நிலையிலும் ஒற்றுமையிருப்பினும் இரு தெய்வங்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடிருக்கிறது. கண்ணகி வழிபாட்டின் மூலவேர்கள் சங்கத் தமிழிலக்கியங்களில் காணப்படுகிறது. அவள் தமிழர்களுக்கு மட்டுமே உரிய தெய்வமாக விளங்குகிறாள்.

மாரியம்மன் வழிபாட்டின் ஆரம்பநிலை தெளிவுடையதாக இன்னும் புலப்படவில்லையெனினும் தமிழர் மத்தியில் மிகப் பிரபலமாயிருக்கும் இவளது தோற்றம் பௌராணிக மரபில் உருவானது என்பது நிச்சயமாகிறது. தமிழர் மரபிலே மாரியம்மனின் வழிபாட்டு மரபுக் கூறுகளை நாம் சங்க இலக்கியங்களில் காண முடியவில்லை என்பது உண்மையே எனினும் தமிழ்நாட்டில் வழங்கும் பழங்கதை ஒன்றைக் கலைக்களஞ்சியம் தருகிறது.

தமிழகப் பழங்கதை

பிருகு முனிவரின் மனைவி நாகவல்லி அழகில் சிறந்தவள். இவளது கற்பைச் சோதிக்க வந்த மும்மூர்த்திகளையும் தனது கற்பின் வலிமையால் இவள் குழந்தைகளாக்குகிறாள் (அநசூயா கதையுடன் ஒப்பிடலாம்) இதனால் கோபமுற்ற மும்மூர்த்திகள் அவளைச் சபிக்கின்றனர். இதனால் அவளது அழகு மங்கி முகத்தில் வடுக்கள் தோன்றுகின்றன. இல்லம் திரும்பிய முனிவர் மனைவியின் குரூபியான தோற்றத்தைக் கண்டு வெறுப்புற்று அவளை விரட்டி "உலகில் அலகையாய்த் திரிந்து நோய்களைப் பரப்பி வருவாய்" எனச் சாபமிட்டார்.

உருமாறி வந்தபடியால் இவள் மாரி என வழங்கப்பட்டாள். இவளை ஒரு சலவைத் தொழிலாளி காப்பாற்றியதால் "உப்பை" என்றும் அவள் பெயர் பெறுகிறாள். மாரியம்மன் பற்றிய எல்லா வரலாறுகளிலும் அவள் தன் உருமாற்றம் பெற்றுத் தெய்வீக நிலை அடைந்தவுடன் சேரிகளுக்குச் செல்வதாகக் குறிப்பிடப்படும் இடத்தில் சலவைத் தொழிலாளர், பறையர் ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றனர்.

இன்றும் மாரியம்மன் வழிபாட்டிடங்கள் பலவற்றில் பொங்கல் குளிர்த்தி மடைகளின்போது பறையடிப்பது கவனிக்கத்தக்கது. மேலும் பல மாரியம்மன் ஆலங்களில் சலவைத் தொழிலாளர் பூசாரிகளாக உள்ளனர் என மட்டக்களப்புப் பிரதேச மாரியம்மன் வழிபாடு பற்றி எடுத்துக் கூறிய திரு. சி. கணபதிப்பிள்ளை சுட்டிக் காட்டுகிறார்.

தமிழகத்தில் மாரியம்மன் வழிபாடு

மைசூர் இராச்சியத்தை ஆண்ட பல்லாலகுல அரசனும் துளவ, கொங்கு, பாண்டி, சோழ, ஈழ, மலைய, மத்திய, விஜயநகர, கலிங்க, பல்லவ, வாதாபி நாடுகளைச் சேர்ந்த அரசர்களும் மாரியம்மனை வழிபட்டனர்.

பல்லவ இராச்சியத்தை ஆண்ட 2ஆம் நரசிம்மன் திருச்சபைப்பள்ளிக்கு வடக்கே ஒன்பது மைல் தூரத்தில் சமயபுரம் என்ற இடத்தில் மாரியம்மன் கோயில் ஒன்றைக் கட்டி வழிபாடு செய்தான். 1310இல் அலாவுதீன் படைகள் கொய்சலேசுவரர் கோயிலைத் தரைட்டமாக்கியபோதும் கண்ணனூர், சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்குத் திறை கொடுத்ததாக அறிய முடிகிறது. சமயபுரம் முத்துமாரியம்மன் கோயிலின் தலவரலாறு கூறும் நூல்கள் பலவற்றிலும் இத்தகவல் காணப்படுகிறது.

தஞ்சாவூருக்குக் கிழக்கே 5 கல் தொலைவில் மாரியம்மன் கோயில் என்ற சிற்றூரில் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் சோழர் கட்டிய கோயில்உண்டு என முனைவர் இரா. செல்வக்கணபதி தெரிவிக்கின்றார்.

சென்னையை அடுத்துள்ள திருவேற்காட்டில் பிரபலமாக விளங்கும் தெய்வம் கருமாரி. இத்தெய்வமும் மகாமாரியம்மனின் வடிவமாயிருப்பதுடன் இத்திருவுருவத்தின் முன்னே வைக்கப்பட்டிருக்கும் தலைமட்டுமான வடிவம் ரேணுகாதேவியின் கதையை ஆதாரமாகக் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டலாம். ஆனால் இத்தலத்தில் வேறுபட்ட ஒரு கதை வழங்குவதை இரா. செல்வக்கணபதி அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்.

"முன்னொருகாலத்தில் சிவபிரான் உருத்திரபூபதியாகிய சுடுகாட்டிலிருந்து கைலை திரும்பினார். அப்போது தன்னருகேயிருந்த பாலாம்பிகையிடம் தன்மேனியிலிருந்த விபூதியை எடுத்துக்கொடுத்து, "இதைக் கொண்டு ஐந்தொழில் புரிந்து வருக" எனப்பணித்து நிஷ்டையிலமர்ந்ததால் அம்மை அந்தராட்சி, ஆகாசாட்சி, பிரமாட்சி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, மாரி எனப்படும் ஏழு கன்னியராக மாறினார். அந்தராட்சி காடுகளிலும், ஆகாசாட்சி மலைகளிலும், பிரமாட்சி நதிகளிலும், காமாட்சி காஞ்சியிலும், மீனாட்சி மதுரையிலும், விசாலாட்சி காசியிலும் சென்று தங்கினர்.

மாரி இறைவன் தன்னைவிட்டுப் பிரிந்த இடத்தையே தமதிருப்பிடமாகக் கொண்டு தன்னை மேலும் இரு உருவாக்கி முன்னும் பின்னுமாக அமர்ந்திருந்தாள். முன்னுள்ள உருவத்தில் தலைமட்டும் மேலே விளங்க உடலைப்பூமியில் மறைத்துச் சிவசக்தி ஐக்கிய ரூபமாக

விளங்குகிறார். பின்புறம் உள்ள உருவில் கைகளில் பொற்கிண்ணம், சூலம், உடுக்கை இவற்றையேந்தி ஐந்தலைநாகம் குடைபிடிக்க வீரசாசனத்தில் காட்சி தருகிறாள்."

உத்தர காரணாக மம் மாரியம்மன் பிரதிஷ்டை பற்றிக் கூறுகிறது என்பதை ஏற்கனவே எடுத்துக்காட்டினோம். அதற்கு முன்னரே யோகஜ ஆகமத்தில், "நித்திய வழிபாடு, மாத வழிபாடு, உற்சவம் - இவை முறையாக நடத்த பெறுகின்ற ஆலயத்தைச் சுற்றிலும் குறைந்தது பத்துக்கல் சுற்றளவுக்கு எந்த ஆபத்தும் நேராது. தீவிபத்து, வெள்ளவிபத்து, பூகம்பம், சுவர் இடிந்து சரிதல், மஹாமாரீ போன்ற நோய்கள் - இவை அப்பரப்பை அணுகா" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மஹாமாரீ என்பது நோய்களுக்குள்ள பெயராகச் சுட்டப்படுவதால் இத்தகைய நோய்களுக் குரிய தேவதையை மஹாமாரீ என்ற பெயரால் அழைக்கும் வழக்கம் இருந்திருப்பதையும் உணரலாம்.

இதற்கான அடிப்படைகளை ஏற்கனவே கண்ட சிவபுராணம் ஸ்கந்தபுராணம் முதலியவற்றின் கதைப்பகுதிகள் விளக்கி நிற்கின்றன. வாதுளாகமத்திலும் மஹாமாரி ஸ்தாபனம் என்ற ஒரு பகுதி இருப்பதுடன் தனியாக மஹாமாரி யந்த்ர விதிப் படலமும் இருப்பது சிறப்பான செய்தியாகும்.

சிவாகம பத்ததிகள் கூறும் மரபு

இனி, ஆகமங்களின் வழிவந்த பல பத்ததிகளில் மாரியம்மன் பிரதிஷ்டை கூறப்படும்போது 'சீதளாகௌமாரீ பிரதிஷ்டை' என்றே கூறப்படுகிறது. இங்கு சீதளாதேவிக்கும் கௌமாரிக்கும் உள்ள தொடர்பு ஆராய்ப்படவேண்டியது. கௌமாரி என்பவள் பிராமி, மாஹேஸ்வரி முதலிய அஷ்டமாதர்களில் ஒருத்தியாகவும் குமரக்கடவுளாகியமுருகனின் சக்தி வடிவமாகவும் கூறப்படுகிறது.

இன்னொரு வகையில் குமரக்கடவுளின் பஞ்சாசன பூஜையில் விமலாசனத்திலி டம் பெறும் சக்திகளில் ஒன்று சிதளாதேவியாகும். எனவே முருகவழிபாட்டுடனும் மாரியம்மன் இணைக்கப்படுகிறாள். Hindu Godesses என்ற நூலில் Devid kinsly என்பார் சீதளா, மாரியம்மன் இரண்டுமே நோய்களுடன் தொடர்புபடுத்தப்படுபவை என்றும் வட இந்தியாவில் மனசாதேவியும் தென்னிந்தியாவில் மாரியம்மனும் மிகப் பிரபலமாக விளங்கும் கிராமியத் தெய்வங்களிற்கு உதாரணங்கள் எனவும் தெரிவிக்கின்றார்.

மாரியம்மன் வழிபாட்டின் ஆரம்பத்தளமாகத் தென்னிந்தியத் தமிழகமே இருந்திருக்கிறது. மிகப்பிரபலமாக விளங்கும் சமயபுரம் மகாமாரியம்மன், திருவேற்காடு கருமாரியம்மன், தஞ்சாவூர் முத்துமாரியம்மன் முதலிய கோயில்களும் இதனை எடுத்துக்காட்டு கின்றன.

சுமார் இருபது நூற்றாண்டுகளாக இந்துப்பண்பாட்டுக் கூறுகள் நிலைபெற்றிருக்கும் தென்கிழக்காசிய நாடுகளில் மாரியம்மன் கோயில்கள் நிறையக் காணப்படுகின்றன. வட சுமாத்திராவில் மட்டும் இருபத்தொரு மாரியம்மன் கோயில்கள் இருப்பதாக ஆத்ம ஜோதி முத்தையா அவர்கள் தகவல் தருகிறார்கள்.

தமிழகத்தின் நேரடித் தொடர்பினால் இலங்கையின் மலைய கத்தில் மாரியம்மன் வழிபாடு மிக அதிகம். கேகாலை மாவட்டத்திலுள்ள 16 வழிபாட்டுத்தலங்களில் 12 அம்மனுக்குரியவை எனவும் இரத்தினபுரி மாவட்டத்தில் எட்டு மாரியம்மன் கோயில்கள் உள்ளன எனவும் கண்டி, மாத்தளை மாவட்டங்களில் 36 வழிபாட்டுத் தலங்களில் 21 முத்துமாரியம்மன் கோயில்கள் எனவும் கலாநிதி துரை மனோகரன் குறிப்பிடுகிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக் கோயில்கள் பற்றி எழுதிய வித்துவான் பண்டிதர் வீ.சி.கந்தையா அவர்கள் பிரபலமான மாரியம்மன் கோயில்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார். கொத்துகுளம் மாரியம்மன் கோயில், கோட்டை முனை புன்னையம்பதி மகாமாரியம்மன் கோயில், வெல்லாவெளி முத்துமாரியம்மன் கோயில் ஆகிய இம்மூன்று கோயில்களும் இந்தியத் தொடர்பை உடையன. இக்கோயில்கள் தொடர்பாக மாரியம்மன் உற்பத்தி, மாரியம்மன் காவியம், மாரியம்மன் தவநிலைப்பாடல்கள், மாரியம்மன் அகவல், மாரியம்மன் அந்தாதி, மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் திருக்குளிர்த்தி, மாரியம்மன் ஊஞ்சல் மாரியம்மன் வீதி உலா முதலிய பாடல்கள் மரபு வழியாகப் பாடப்பட்டு வருகின்றன.

சிங்கப்பூர் நாட்டில் மாரியம்மன் கோயில் தேசியப்பெருமை வாய்ந்ததாகப் பேணப்படுகிறது. "சிங்கப்பூர் மாரியம்மன் கோயில் நமது பண்பாட்டின் தேசியச் சின்னமாகப் பாதுகாக்கப்படும்" என 18/06/1973 இல் சிங்கப்பூர் அரசாங்கம் கசற் வெளியீட்டில் அறிவித்துள்ளது.

இந்தோனேஷியாவிலுள்ள மேடான் ஸ்ரீ மாரியம்மன் கோயில் மிகப் பிரபலமானது. இந்நாட்டிலுள்ள சகல சமயச் செயற்பாடுகளும் இந்த மாரியம்மன் கோயில் பரிபாலகர்களதும் குருமாரதும் ஆலோசனைகளை முன்னிட்டே செய்யப்படுகின்றன. இன்று மேற்குலக நாடுகளிலும் இந்துப் பண்பாட்டம்சங்கள் வெகுவேகமாகப் பரவி வருகிறது. அங்கும் பல மாரியம்மன் கோயில்கள் கட்டப் பட்டிருக்கின்றன.

ஆகமக் கிரியை மரபிலும் ஆகமம் சாரா மரபிலும் மாரியம்மன் வழிபாடு

உத்தர காரணாகமம் மாரியம்மனுக்குரிய பிரதிஷ்டா விதியை விரித்துக் கூறுகிறது. உத்தர காரணாகமம் 95 ஆவது படலமாக மஹாமாரீ பிரதிஷ்டா விதி அமைகிறது.

அதாதஸ் ஸம் ப்ரவக்ஷ்யாமி ஜ்வர பீடா நிவாரணம்
ஸ்போடகாதி ப்ரசமனம் சர்வலோக பயங்கரம்
மாரா சுரேண பலினா பீடிதே ச ஜகத் த்ரயே
மாராசுர வதம் பூர்வம் மஹாமாரீதி நாமத

என்று ஆரம்பிக்கும் இப்பகுதி "மூவுலகையும் துன்புறுத்திய மாராசுரனை வதம் செய்ததால் மஹாமாரி எனப் பெயர் பெற்ற தேவியின் பிரதிஷ்டையை நோய்கள் துன்பங்களின் நீக்கத்துக்காகக் கூறுகிறேன்" என்று கூறுகிறது.

மாரியம்மனின் திருவுருவத் தோற்றமும் பூஜை முறைகளும்

சாந்தமானவளாகவும் முக்கண்களும் நான்கு கரங்களும் உடையவளாகவும் தீச் சுவாலை போன்ற அக்னிஜடை உடையவளாகவும் கபாலம், கத்தி, பாசம், உடுக்கு ஆகியவற்றை ஏந்தி தாமரைப் பீடத்தில் இருப்பவளாகவும் வலதுகால் தொங்கவிட்டு இடதுகால் மடித்து வைத்திருப்பவளாகவும் பாம்பைப் பூணூலாக அணிந்து எல்லா அணிகலன்களும் தரித்த கோலத்தில் மாரியம்மனின் திருவுருவத்தை உத்தர காரணாகமம் வர்ணிக்கிறது.

கிராமத்தின் ஈசானம், கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகியவற்றுள் ஏதாவதொரு திக்கில் ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யுமாறு கூறும் இப்பகுதியில் விரிவான கும்பாபிஷேகக் கிரியைகள் சொல்லப்படுகின்றன. கிழக்கு முதல் எட்டுத் திசைகளுக்கும் உள்ள கும்பங்களில் பூஜிக்க வேண்டிய தெய்வங்களையும் இங்கு விபரிக்கிறது. முதலாவது ஆவரணத்தில் சம்ஹிதா மந்திர தேவதைகளும் இரண்டாவது ஆவரணத்தில் காளி, காலராத்ரி, பத்ரா, கோமளீ, யாமளீ, பாசாங்கீ, சகோரா, ஷட்கோணவாசினீ ஆகியோரும் மூன்றாவது ஆவரணத்தில் பிருதுவி, அத்பினீ, தேஜஸ்வீ, வாயவீ, ஆகாசீ, ஆதித்யா, சந்த்ரா, யஜமானனீ

ஆகியோரும் நான்காவது ஆவரணத்தில் லோக பாலர்களும் ஐந்தாவது ஆவரணத்தில் வஜ்ரம் முதலிய ஆயுதங்களும் கூறப்படுகின்றனர்.

பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் ஆதிசைவரால் நிகழ்த்தப்பட வேண்டுமென்றும் நித்ய பூஜைகள் பாரசைவரால் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதோடு இறுதியில் மிருகபலியும் குறிப்பிடப்படுகிறது. ஆகமங்கள் சாத்வீகமான பூஜையைச் சொல்வதே மரபென்பதால் இப்பகுதி இடைச் செருகலாயிருக்குமோ என்ற ஐயமும் எழுகின்றது. இங்கு பலிகொடுத்தல், சைவக்குருமார் மூலம் நித்ய பூஜை செய்வித்தல் என்பன கிராமிய வழிபாட்டு முறையிலிருந்து தரமுயர்த்தப்பட்டதற்கான அடையாளமாகக் கொள்ளமுடியும்.



ருத்ரயாமளத்தில் கூறப்பட்டுள்ள மஹாமாரி ஸ்தாபன விதி காரணகாமத்தை ஒத்திருக்கின்றது. ஒன்பது நாள் யாகம் உத்தமமானது. நவகுண்டம் இடும் பட்சத்தில் எட்டு யோனிகுண்டங்களும் பிரதானம் விறுத்தகுண்டமாகவும் அமைக்கலாம். இரண்டாவது ஆவரணத்தில் வாமா முதலிய எட்டுச் சக்திகள் இடம்பெறுகின்றார்கள். இங்கும் பிரதிஷ்டை உற்சவம் ஆதிசைவராலும் நித்திய பூஜைகள் பாரசைவராலும் செய்யப்பட வேண்டும் எனப்படுகின்றது.



யாமளா சாஸ்திரம் என்ற நூலில் பிரதிஷ்டாதந்திரம் என்ற பகுதியில் ரேணுகாதேவி பிரதிஷ்டை சொல்லப்படுகிறது. இங்கு மத்தியில் ரேணுகா குடும்பமும் இடப்புறத்தில் மந்திரசக்தி கும்பமும் வைத்து எட்டுக் கும்பங்களில் வாமாதி அஷ்ட சக்திகளையும் பூஜிக்குமாறு சொல்லப்படுகின்றது.



மாரிக்கு இரண்டு, நான்கு, எட்டுக் கரங்களுடன் ரூபபேதங்கள் காணப்படு கின்றன. இதனடிப்படையில் அஷ்டபுஜ மாரியம்மன் என்ற பெயரில் எட்டுக் கரங்களுடன் ஒரு மாரியம்மன் தோற்றம் வர்ணிக்கப்படு கின்றது. இவ்வடிவத்திற்குரிய தியான சுலோகமோ சிற்ப சாஸ்திர விளக்கமோ கிடைக்கவில்லை. இவ்வடிவம் எங்கும் சிற்பமாக வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால், இத்தகைய ஓவியங்கள் வழக்கிலுண்டு.





லலிதாகமத்தில் பெறப்பட்ட பத்ததிகளில் சீதளா கௌமாரி பிரதிஷ்டை என்ற பகுதி காணப்படுகின்றது. இதுவும் ஏற்கனவே பார்த்தவற்றையொத்ததாகவே காணப்படுகின்றது.

சிவாலயங்களுடன் உள்ள தொடர்பு

பெரும்பாலான சிவாலயங்களுக்கு மிக அருகில் மாரியம்மன் கோவில்கள் இருப்பதை அவதானிக்கலாம். இதற்கு ஆகமங்களில் நேரடிக் குறிப்புகள் எதுவும் இல்லை. யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும், வல்வெட்டித்துறையிலும் இதற்கான உதாரணத்தை நாம் காட்டலாம். இன்னும் சில சிவாலயங்களில் மாரியம்மனுக்குத் தனியான சந்நிதியோ தனியாக விக்கிரமோ இருக்கும். சுன்னாகம் சிவன்கோவில் இதற்கு உதாரணம்.

சுன்னாகம் சிவன்கோவில், வல்வெட்டித்துறை சிவன் கோவில் மருதானை கப்பித்தாவத்தை சிவன்கோவில் முதலிய ஆலயங்களில் மூலவராகிய சிவனுக்கு மஹோற்சவம் ஆரம்பிக்கும் முன் மஹாமாரியை வழிபாடு செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. கொடியேற்றத்திற்கு முன்னர் மாரியம்மன் உற்சவம் எனத் தனியாகத் திருவிழா நடைபெறுகிறது. சுன்னாகம் சிவன்கோவிலின் அருகில் மாரியம்மன் கோவில் எதுவுமில்லை. எனவே அங்கேயே விசேட வழிபாடு நடைபெறும். வல்வெட்டித்துறை சிவன் கோவிலின் அருகில் பிரபல்யமான முத்துமாரி அம்மன் கோவில் உண்டு. அவ்வாலயத்திற்கு ஊர்வலமாகச் சென்று விசேட வழிபாடுகள் நடாத்துகின்றனர்.

தியானங்களும் தோற்றப் பொலிவும்

ஒரே தெய்வத்திற்குப் பல்வேறு பிரதிமாலட்சணங்கள் சொல்லப் படுவது உண்டு. ஒரே பிரதிமாலட்சணத்துக்குப் பல்வேறு தியானங்கள் வழங்கப்படுவதும் உண்டு. தியான சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டே விக்கிரகங்கள் உருவாக்கப்படுகின்றன.

உத்தர காரணாகமம் மாரியம்மனைப் பின்வருமாறு வர்ணிக்கிறது.

த்ரிநேத்ரா சதுர்புஜா சாந்தா கராள வதனான்விதா
ஜ்வலோர்த்வ கேசினீ ரக்தா கபால கட்க பாசினீ
டமருந் தார்யதே சைவ பத்ம பீடோபரிஸ்ததா
சயனம் வாம பாதந்து லம்பிதம் சவ்ய பாதகம்
க்ருஷ்ண வஸ்த்ர சமாயுக்தா நாக யஜ்ஞோப வீதிநம்
தாடங்கம் தக்ஷிணே கர்ணே வாமே லம்ப சமன்விதாம்
சர்வாபரண பூஷ்யஞ்ச ப்ரபா மண்டல மத்யகாம்
ஏவம் சங்கல்ப்ய விதிவத் ப்ரதிஷ்டாம் காரயேத் தத:

(உத். கார. 95-3-6)

"முக்கண்ணும், நான்கு கரங்களும், அகன்ற முகமும், அக்கினிகேசமும், செந்நிறமும், சாந்த சொரூபமும் கொண்டவளாக கத்தி, கபாலம், பாசம், டமருகம் என்பவற்றை நான்கு கைகளிலும் கொண்டவளாக, தாமரைப் பீடத்தில் இடதுபாதம் மடித்து வலதுபாதம் தொங்கவிட்டவாறு கரிய ஆடையுடன் நாகபாம்பைப் பூணூலாக அணிந்தவாறு சர்வாபரண பூஷிதையாக" இங்கு மாரியம்மன் வர்ணிக்கப்படுகிறாள்.

ருத்யாமளத்தில்,
த்ரிநேத்ராம் சதுர்புஜாம் சௌம்யாம் ரக்தவர்ணாம் சுயௌவனாம்
கட்கம் கபால சம்யுக்தாம் பாசம் டமருகம் ததா
மஹாமாரீ ஸ்வரூபந்து முக்தாதிபிரலங்கிருதாம்

எனவரும் தியான சுலோகம் அதே தோற்றப் பொலிவை வர்ணிக்கிறது.

ஈசான சிவாச்சார்ய யாமளாச்சார்ய பத்ததியிலிருந்து பிரம்மஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியரால் கும்பகோணம் ஸ்ரீ கோபாலவிலாச அச்சியந்திர சாலையில் 1929அம் ஆண்டில் அச்சிடப்பட்ட கிரந்த நூலில் ரேணுகாதேவி தியானம் பின்வருமாறு:

நாநாவர்ண விராஜிதாம் த்ரிநயனாம் பத்மாசனே சம்ஸ்திதாம்
பிம்போஷ்டீம் ரக்தவஸ்த்ராம் ம்ருகமத திலகாம் ரேணுகாம் மந்த்ரவீணாம்
கர்ணோத்யத் ரக்தபுஷ்பாம் கடினகுசபராம் துங்கநாசா சுகேசீம்
த்யாயேத் நூபுர மேகலா தடிலசத் பாதௌள கடிகஞ்சுகாம்
ஹஸ்தானி த்ருதமாயுதானி குசலம் காலாக்னி கோடித்யுதிம்

இங்கு கூறப்படும் தியானத்தில், நாநாவர்ணமுடையவளாகவும் சிவந்த வஸ்த்திரம் அணிந்து முக்கண்களுடனும் கஸ்தூரித் திலகத்துடனும் எடுப்பான நாசியும் கடினமான தனபாரமும் கொண்டவளாகவும் இடுப்பில் மேகலையும் செம்பஞ்சுக் குழம்பு பூசிய பாதங்களில் காற்சிலம்பும் அணிந்தவளாக வர்ணிக்கப்படுகிறாள்.

லலிதாகமத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட கைப்பிரதி ஒன்றில் காணப்படும் சீதளா கௌமாரி பிரதிஷ்டையில் சீதளா கௌமாரி தியானம் முக்கண்ணும், நான்கு கரமும் கொண்டதாகச் சொல்லப்பட்டிருப்பதோடு பாசம், டமருகமும் கூறப்படுகிறது. எனினும் ஏனைய இரு கரங்களில்

அபயவரதம் கூறப்படுவதும் மயில்வாகனம் கூறப்படுவதும் முரண்பட்ட உருவ அமைப்பாகும்.

ஆகம வழிபாட்டில் காணப்படும் கிராமியத் தொடர்பு

மிருகண்டு முனிவரால் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள மஹாமாரி அஷ்டோத்திர சதநாமாவளியில் 'வைதவ்ய ரூபிணீ' (விதவைக் கோலம்) என்ற நாமம் அவளது ரேணுகாதேவி வடிவத்துடன் ஒத்துப்போகிறது. 'கிராம சுகப்ரதா' (கிராமத்துக்கு நன்மையளிப்பவள்) என்பது கிராம தேவதையாக இருப்பதைக் காட்டுகிறது. அதே முனிவரால் சொல்லப்பட்ட சஹஸ்ர நாமாவளியில் மாரியம்மனின் 'மாம்சபட்சிணீ', 'சுராபான மோதினீ' என்ற நாமங்கள் அவளது கிராமிய வழிபாட்டு நிலைகளைக் காட்டுவனவாகவும் 'விப்ரபூஜிதி' (அந்தணர்களால் பூஜிக்கப்படுபவள்) என்பது அவளது உயர்நிலை வழிபாட்டைக் காட்டுவதாகவும் அமைகின்றன.

கிராமிய வழிபாட்டின் சிறப்புக்கள்

கிராமிய மரபில் மாரியம்மன் பெரிதும் முத்துமாரி என்றே அழைக்கப்படு கிறாள். அதைவிட மாரியாயி, மகமாயி, மாரியாத்தா முதலிய பெயர்களாலும் அன்போடு கூறப்படுகிறாள். ஆகம மரபில் போலவே இங்கும் நோயுடன் தொடர்புபடுவதை அவதானிக்கலாம்.

மாரி என்ற பெயருக்கேற்ற மழையோடும் இவள் தொடர்புபடு கிறாள். வெப்பு நோய்களைத் தீயவர்களுக்கு வழங்கி அவர்களைத் தண்டித்துத் திருத்திப் பின் மழையாகப் பொழிந்து குளிர்வித்து அரவணைத்து அருள்செய்யும் தாயாக இவளை மக்கள் கருதுகின்றார்கள். காளி, துர்க்கை முதலிய போர்த் தெய்வங்கள் போல உக்கிர மூர்த்தியாக இல்லாமல் சார்ந்த மூர்த்தமாகவே அவளைக் காண்கின்றனர். ஆகம மரபிலும் சாந்தா, சௌம்யா என்ற அடைமொழிகள் வழங்கப் பட்டிருப்பதை நோக்கலாம்.

பொதுவாகப் பழந்தமிழ் மக்கள் மாரியம்மனை மழை தரும் அருளன்னை யாகவும் பகைவரை அழிக்கும் ஆவேச அன்னையாகவும் இருவகைக் குணமுடைய வளாகப் போற்றினர்.

முதல் வகைக்கு உதாரணமாக:
"கலகலன்னு மழை பேய்க் கல்லும் நீரும் கலந்தோட
கணக்காய் நிக்கிற முத்தாளுக்கு கல்லோலை மின்னுது பாருங்கடி

மொடு மொடுன்னு மழை பேய முச்சந்தி நீரும் பாய்ந்தோட
முடுக்காய் நிக்கிற முத்தாளுக்கு முருகு மின்னுது பாருங்கடி."

என்ற நாட்டுப்பாடலையும், இரண்டாவது வகைக்கு உதாரணமாக:
"வீரியம் பேசி வந்த வீரர்களை வெற்றி கொண்ட
மாரியம்மாளிப்போது வந்திறங்க வேணுமம்மா..."

"பரிகாசம் செய்தவரைப் பல்லைப் பிடுங்கி வைப்பாய்..."
என்ற நாட்டுப்பாடலையும் எடுத்துக்காட்டலாம்.

பண்டைத் தமிழரிடையே மழைவளம் குறைந்த பிரதேச மக்கள் மழை வேண்டி மாரியை வழிபட்டனர். வரண்ட பிரதேசமாதலால் நீண்ட தூரம் சென்று நீரெடுத்து வந்ததன் சின்னமாகவே கரகமெடுத்தல் என்ற வழிபாட்டு முறை மாரியம்மனுடன் தொடர்புபடுகிறது.

தாம் முன்பு செய்த பாவங்களால் மழையின்மையும் வறுமையும் வருகின்றன என எண்ணிய மக்கள் தம்மை வருத்திப் பிராயச்சித்தம் செய்து வழிபட்டனர். அதனால்தான் கரகம், காவடி, அலகுகுத்தல், தீ மிதித்தல் போன்ற வழிபாட்டு முறையில் ஏற்பட்டன. இவ்வேளையில் அன்னையின் இரக்கத்தைத் தூண்டுதற்காகப் பாடல்கள் பாடப் பட்டன.

"ஒன்றாங் கரகமடி - கன்னி
ஓகோ என் தாயே
ஓடியாந்து பூசை வாங்கு இப்போ தாயே
ரண்டாங் கரகமடி - கன்னி
ஓகோ என் தாயே
ரண கரகம் பொன்னாலே இப்போ தாயே"

இன்னொருவிதமாக வேண்டுதல் பாடல்கள் பாடப்பட்டன.
சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கு
முகத்தினில் முத்தையம்மா முன்னதாய் நீயிறக்கு
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கு
தோளினில் முத்தையம்மா துரந்திரி நீயிறக்கு

உடல் முழுதும் கொப்புளங்கள் போட்டிருக்கும் அம்மன் நோய் எனப்படும் வெப்பு நோய்களுக்கு இன்றுவரை வேறு மருந்துகள் இன்றி மாரியம்மன் கோவில் மடத்திலே தங்கியிருந்து மேற்கண்ட பாடல்களைப்

பாடி நோயை மாற்றுவது வழக்கமாய் உள்ளது. வேப்பிலையை அரைத்து மருந்தாகப் பூசுவதும் உண்டு.

மாரியம்மனுக்கு நேர்த்தி வைத்து நோய் தீர்ந்ததும் நேர்த்திக்கடன் தீர்த்தல் மிகப்பரவலாகக் கிராமிய மக்களிடையே காணப்படுவதாகும். நேர்த்திக் கடன் தீர்த்தல் முன்குறித்தவாறு காவடி. தீமிதித்தல் போன்ற வையாகவும் இருப்பதுண்டு. பொங்கல், குளிர்த்தி முதலியனவாகவும் அமைவதுண்டு. பொங்கல் பொங்கி மடைபரவுதலும் நீர்மோர், நீர்ச்சாதம் என்பன தயாரித்தலும் படைத்தலும் பொதுவாகக் கிராம மக்களிடையே வழங்கும் மரபாகும்.

கும்மியடித்தல், காவடியாடுதல் போன்றனவும், பறைமுழங்கு தலும் பல இடங்களில் நடைமுறையில் உள்ளன. மஞ்சள் நீராடுதல் சேவல் பலியிடல் என்பனவும் தமிழ் நாட்டில் சில இடங்களில் உண்டு.

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு

இலங்கையின் மலையகப்பகுதியில் மாரியம்மன் வழிபாடு மிகப்பரவலாக உண்டு. இவற்றில் நகர்ப்புறக் கோவில்கள் சிலவற்றைத் தவிர ஏனைய கிராமப்புறக் கோயில்கள் யாவும் ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளையே கொண்டுள்ளன.

இங்கு நடைபெறும் வழிபாடுகளில் முதல் நாளன்று கரகம் பாலித்து அம்மனை அலங்கரித்துக் கோவிலுக்குக் கொண்டு செல்வர். இரண்டாம் நாளன்று மாலையில் தேர்த் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவின்போது முனியாண்டி என்ற தெய்வத்தினை முன்னால் எடுத்துச் செல்லும் வழக்கம் உண்டு. மூன்றாம் நாள் தீமிதிப்பு, அன்னதானம் என்பவையும், இறுதி நாள் நீர்வெட்டு, மஞ்சள் நீராடுதல் என்பனவும் இடம்பெறும். காவடிகளும் இடம்பெறும். திருவிழா நடைபெற்று எட்டு நாட்கள் கோயில் பூட்டப்பெற்றிருக்கும்.

மாரியம்மன் திருவிழாவின் போது பெண்கள் கும்மி, கரகம் என்பன ஆடுவதுண்டு. அப்போது பல பாடல்கள் பாடப்படும். உதாரணமாக ஒரு பாடல்:

தங்கக் குடமெடுத்து முத்துமாரி
தண்ணிக்கே போகையிலே முத்துமாரி
தங்கச் சிறு தாலி முத்துமாரி
தலையே மறைக்குதம்மா
பொன்னு குடமெடுத்து முத்துமாரி

பொய்கைக்கே போகையிலே முத்துமாரி
பொட்டு சிறுதாலி முத்துமாரி
மறைக்குதம்மா
ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது
மாரிகடன் தீர்த்தவருக்கு மனக்கவலை தீருமம்மா

என்ற நாட்டார் பாடலடிகளின்படி மக்கள் நம்பிக்கையோடு நேர்த்திக் கடன் செய்வர். அம்மன் சந்நிதானத்திலிருக்கும் சூலாயுதத்தில் மஞ்சள் துணியில் பணத்தை முடிந்து கட்டினால் வேண்டுதல் பலிக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

மலையகப்பகுதியின் நகர்ப்புறக் கோவில்களில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் ஆகியன குறிப்பிடத்தக்கன.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் முற்றிலும் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்டு நித்திய நைமித்தியகங்கள் சிறப்பாக நடைபெறும் பாரிய ஒரு ஆலயமாகும். ஈழத்தின் மிகப்பெரிய ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். பஞ்சரதங்கள் பவனிவரும் புகழ்பெற்ற இவ்வாலயத்தில் சிவப்பிராமண குலத்தில் வந்த சிவாச்சாரிய மரபினரே நித்திய, நிமித்திகங்கள் செய்து வருகின்றனர். ஒரு சிவாலயம் போலவே இங்கு யாவும் நடைபெறுகிறது. ஆனால் இங்கு காத்தவராயனுக்கு தனியான ஒரு பரிவாரசந்நிதி இருப்பதுடன் மதுரைவீரன், கருப்பண்ண சாமி, முதலிய சிறுதெய்வங்களுக்கும் சந்நிதிகள் இருப்பதும் பூஜை வழிபாடுகள் நடைபெறுவதும் வியப்பானதே!

நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன் கோவிலும் சிவாகம விதிமுறைப்படியே அமைக்கப்பட்டிருக்கிறது. நித்திய பூஜைகள் சைவக்குருமாராலும் நைமித்திகங்கள் அந்தண சிவாச்சாரியார்களாலும் நிகழ்த்தப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் நித்திய பூஜைகளின்போதும் சிவாச்சாரியார்கள் மந்திரங்களை உச்சரிக்கச் சைவக் குருமார் கிரியை செய்வது வித்தியாசமான ஒரு நடைமுறையாகும்.

தலைநகரில் மாரியம்மன் வழிபாடு

இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகரிலும் ஆங்காங்கே மாரியம்மன் கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவில் குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பில் மாரியம்மன் வழிபாடு

மட்டக்களப்புப் பகுதியில் பெரும்பாலும் மாரியம்மன் கோயில்களில் வீரசைவ மரபினர் பூஜைசெய்வர். பூசாரிகள் எனப்படும் கட்டாடிமார் சடங்குகளைச் செய்வர். உடுக்கு அடித்து மாரியம்மன் காவியம், மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் தவநிலை, மாரியம்மன் உற்பத்தி போன்ற பாடல்கள் பாடி உரு ஆடுதல் உண்டு. பொதுவாக ஆனிப் பூரணையில் விசேஷ விழாக்கள் நடைபெறுவது உண்டு.

ஆலயத்தின் எதிரே பெரிய பந்தலிட்டு யாகசாலை அமைத்துக் கழுமரத்தில் கழுவடிக்கிடா எனப்படும் தலைப் பலிக்கடா கட்டப்படும். நான்கு வாசல்களிலும் ஒவ்வோர் ஆடும் கோழியும் கட்டப்பட்டிருக்கும். இவை பலியிடப்படுகின்றன. இவ்வழக்கம் காலகதியில் நிறுத்தப்பட்டு பள்ளயம், சர்க்கரையழுது என்பன படைக்கப்படுகின்றன.

கொத்துகுளம் மாரியம்மன் கோயில், கோட்டைமுனை புன்னையம்பதி மகா மாரியம்மன் கோயில், வெல்லாவெளி முத்து மாரியம்மன் கோயில் என்பன குறிப்பிடத்தக்கன.

யாழ்ப்பாணத்து மரபுகள்

யாழ்ப்பாணத்து மாரியம்மன் கோயில்கள் பலவற்றிலும் முன்னர் பலியிடும் வழக்கமும் மச்சம், மாமிசம், குடிவகை போன்றன படைக்கப்படும் வழக்கமும் இருந்திருக்கின்றன. பின்னர் படிப்படியாக நிறுத்தப்பட்டு பொங்கல், மடை பரவுதல் என மாற்றம் பெற்றிருக்கிறது.

இன்று சிவாகம முறைப்படி ஆலயம் அமைத்து பிரதிஷ்டை நடாத்தப்பட்ட மாரியம்மன் கோயில்களில்கூட மஹோற்சவம் ஒருபுறம் நிகழும் அதேவேளை நீரக்கஞ்சியும் பொங்கலும் குளிர்த்தியும் நடைபெறுவதைக் காணலாம்.

மாரியம்மன் மகனாகிய காத்தவராயனை முதன்மைப்படுத்திக் காத்தவராயன் கூத்து யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் நிலவுகிறது. மாரியம்மன் கோயில் வீதிகளில் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக இக்கூத்தினை மேடையேற்றும் வழக்கமும் உண்டு. இதனை வெறும் நாடகமாகக் கருதாமல் ஒரு புனிதமான வழிபாடாகவே கருதிப் பழகும் காலத்திலிருந்து மேடையேற்றப்படும் காலம்வரை பயபக்தியுடன் இதில் ஈடுபடுவார்கள். (விரதமிருத்தல் அல்லது சுத்த போசனத்துடனிருத்தல் முதலியன இவர்களிடம் காணப்படும்.)

யாழ்ப்பாணத்து மாரியம்மன் கோவில்கள்

யாழ். குடாநாட்டில் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட மாரியம்மன் கோயில்கள் பற்றிய தகவல்கள் கிட்டுகின்றன. [இலங்கையில் சக்திவழிபாடு பற்றி ஆராய்ந்த மாரிமுத்து வேதநாதன் அவர்களின் ஆய்வேட்டில் சுமார் இருபது மாரியம்மன் கோயில்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.] இலங்கை அரசின் யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சைவத் திருக்கோயில்கள் பற்றிய நூலில் சுமார் முப்பது வரையான மாரியம்மன் கோயில்கள் கூறப்படுகின்றன.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றையுடைய வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மிகப் பிரமாண்டமான கோயிலாகும். அகன்ற பெரிய வீதிகளையும் இராஜகோபுரத்தையும் கொண்டு விளங்கும் இவ்வாலயத்தில் மூலஸ்தானத் திலே மாரியம்மன் கம்பீரமாகக் காட்சி தருகின்றாள்.

விநாயகர், சுப்பிரமணியர் முதலிய பரிவார தெய்வங்கள் யாவும் இருப்பதோடு இங்கு காத்தவராயருக்கென்று தனியான சந்நிதி ஒன்றும் இருக்கிறது. [வேறு எங்கும் காணப்பட முடியாத தனித்துவம் வாய்ந்த ஓரம்சமாக இங்கு இருசக்திகளுடன் சில விக்கிரகமாகக் காத்தவராயன் காணப்படுகிறார். உள்வீதியில் அக்கினித்திசையில் மேற்கு முகமாக இவரது சந்நிதி காணப்படுகிறது.]

ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்ட இத்திருவுருவத்தில் கருப்பாசி, முத்தாசி என அழைக்கப்படும் இரு துணைவியரையும் இருபுறமும் அணைத்தபடி காத்தவராயன் காணப்படுகிறார். இதனருகிலேயே குதிரைமீதமர்ந்தவாறு தனியே காத்தவராயர் மட்டும் தாம்ர விக்கிரகமாக உற்சவர் என்ற வகையில் காணப்படுகிறார்.

வல்வெட்டித்துறை சிவன் கோயிலுக்கும் முந்திய வரலாற்றை யுடைய இக்கோயிலில் நித்திய நைமித்தியங்களைச் சைவக்குருமாரே நடாத்தி வருகின்றனர். சிவன்கோயில் மஹோற்சவம் ஆரம்பிப்பதற்கு முன் மாரியம்மன் உற்சவம் எனச் சிறப்பான ஒரு விழாவை நடாத்துகிறார்கள்.

வடமராட்சியிலுள்ள மிகப்பெரிய ஆலயங்களுள் ஒன்றான அல்வாய் கோவிலந்தை முத்துமாரியம்மன் கோயில் நீண்டகால வரலாற்றையுடையது. வன்னி மன்னர் காலத்ததாகிய மரபுவழிக் கதையின்படி பலியிடுதலை ஆதாரமாகக் கொண்டு இவ்வாலயம் ஆரம்பமாயிருக்கிறது. மாயக்கை என்ற இடத்தில் பெருவெள்ளம் பாய்ந்து

வருகையில் ஒரு தெய்வம் அவ்வெள்ளத்தினூடு கைநீட்டிப் பலி கேட்டது என்பர். அக்கம்மா என்று இத்தெய்வத்தைக் கூறுவர்.

வீரமாப்பாணர் என்றும் நில உடைமையாளர் பரம்பரையில் வள்ளிநாயகி என்னும் பெண்ணால் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட வெண்கலச் சிலையொன்றை வேம்பும், இலந்தையும் நிறைந்த நிலத்தில் வைத்துப் பூசித்ததாக வரலாறு கூறும். படிப்படியாக வளர்த்த இவ்வாலயத்தினுள் ஒரு கல்வடிவில் காத்தவராயசுவாமி வழிபடப் பட்டார். அதற்குப் பலி கொடுப்பதும், குடிவகைகள் படைப்பதும் முற்காலத்தில் நடந்து வந்துள்ளது.

பின்னர் காத்தவராயருக்கென வெளிவீதியிலே கிழக்குத் திசையில் ஆலயத்துக்கு முன்பாக மேற்கு நோக்கிய சந்நிதியொன்று தனியாக அமைக்கப்பட்டது. படிப்படியாக பலியிடும் வழக்கம் அகற்றப்பட்டு விட்டது. இவ்வாலயத்தில் மரபுவழிப்பட்ட கிராமிய வழிபாடுகளான கரகம், காவடி, பால்செம்பு, கற்பூரச்சட்டி எடுத்தல் என்பனவும் நீர்க்கஞ்சி வார்த்தல் முதலியனவும் சிறப்பாக இன்றும் நடைபெற்று வருகின்றன. காத்தவராயன் சந்நிதி இருக்கும் இலுப்பை மரத்தில் இழைகட்டுதலும் காணப்படுகிறது. காத்தவராயன் கூத்து நிகழ்த்தப்படுவதும் உண்டு.

மேலைப்புலோலி, தம்பசிட்டி, சொக்கன்கலட்டி எனப்படும் வாணக் குடியிருப்புப் பகுதியிலே இருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலும், பண்டாரியம்மன் கோயிலும் அருகருகே அமைந்துள்ள இரு மாரியம்மன் கோயில்கள். ஒன்றிற்குப் போட்டியாக மற்றது அமைக்கப் பட்டது. வாணக்குடியிருப்பு மாரியம்மன் கோயிலில் காத்தவராய னுக்கெனத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. பண்டாரியம்மன் கோயிலில் அப்படி ஒரு சந்நிதி முன்னர் இருந்து பின்னர் நீக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக கொடித்தம்பத்தருகில் காத்தவராயர் சின்னமாகக் கழுமரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இதேபோன்ற கழுமரம் திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயத்திலும் வேறுசில இடங்களிலும் உள்ளது.)

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் அருட்சிறப்பு மிகுந்த தலமாகும். இங்கு சித்திரை மாதம் நடைபெறும் பொங்கல் உற்சவமும் தடைவெட்டுதலும் பழைமை தழுவிய மரபுகளாகும். காத்தவராயன் கூத்தும் இவ்வாலயச் சூழலில் நடாத்தப்படுவதுண்டு. சித்திரைப் பொங்கல் நாளில் நாயகவழுந்து ஏற்றுதல் சிறப்பான ஒரு நிகழ்ச்சியாகும். பொங்கலுக்கு வந்த யாவரும் தயாராகக் காத்திருக்கப்

பரம்பரையாக உரிமையுடைய ஒரு குடும்பத்தவர் முதலில் தங்கள் பொங்கற் பானையைக் குருவின் மூலம் அடுப்பிலேற்றிய பின்னரே (இதுவே நாயகவழுந்து) ஏனைய பானைகள் அடுப்பிலேறும்.]

திருநெல்வேலியிலும், வல்வெட்டித்துறை போலச் சிவன்கோயிலின் அருகே முத்துமாரிஅம்மன் கோயில் உள்ளது. தலவிருட்சமாகக் கொன்றை, வேம்பு, பலா என்பன உள்ளன. இங்கும் சைவக்குருமாரே நித்திய நைமித்திகங்களைச் செய்கின்றனர்.

காத்தவராயருக்கு இங்கு தனிமண்டபமொன்றுண்டு. வைகாசி விசாகப் பொங்கலின்போது நாயகவழுந்து ஏற்றிப் பொங்கலிட்டுக் காத்தவராயர் மண்டபத்தில் படைக்கப்படுகிறது.[அன்றுமாலை தீ மிதிப்பு நிகழ்கிறது. பங்குனித்திங்களில் நீர்மோர் வார்க்கப்படும். ஆனியில் மஹோற்சவமும், மாசியில் லட்சார்ச்சனையும் ஆகமவழிக் கிரியைகளுக்கு எடுத்துக்காட்டு.]

தீவுப்பகுதியிலும் மாரியம்மன் கோயில்கள் பல உள்ளன. இவற்றுள் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில், புளியங்கூடல் முத்துமாரி அம்மன் கோயில் முதலியன மிக முக்கியமானவையாகும்.[பலநூற்றாண்டு வரலாற்றைக் குறிக்கும் கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன. ஒல்லாந்தர் காலத் தோம்புகள் மூலம் 1875 இல் கருவறை உருவாக்கம் பெற்றமை பற்றிய செய்தியை அறிய முடிகிறது. கச்சேரிக் குறிப்புகள் இங்கு முன்பு மிருகபலி இருந்தமையைக் காட்டுகின்றன.]

[சிவமணம் கமழும்]காரைநகர்ப் பகுதியில் மாரியம்மன் ஆலயங்கள் மூன்று சிறப்புடன் விளங்குகின்றன. ஈழத்துச் சிதம்பரம் எனப் புகழப்படும் காரைநகர் சிவன் கோயிலின் சுற்றாடலில் மணற்காடு முத்துமாரியம்மன் கோயில், வலந்தலை மடத்துக்கரை முத்து மாரியம்மன், பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரியம்மன் ஆகிய ஆலயங்கள் அமைந்துள்ளன.

அளவெட்டி - தவளகிரி முத்துமாரி அம்மன், தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் முதலிய மிகப் பிரபலமான ஆலயங்களும் இன்னும் பல ஆலயங்களும் குடாநாட்டின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன.

பாரதியாரும் மாரியம்மனும்

மாரியம்மன் என்ற கிராமியத் தெய்வம் மக்கள் மத்தியில் தனியான ஓரிடத்தைப் பெற்றிருப்பதனால் சுப்பிரமணிய பாரதியார் மாரியம்மன் பற்றிய இரு பாடல்கள் மூலமாகப் பண்பாட்டுணர்வைப் புலப்படுத்துகின்றார்.

மணி வெளுக்கச் சாணையுண்டு
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை
எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி

என்று ஒரு பாடலிலும் (முத்துமாரி)

தேடியுன்னைச் சரணடைந்தேன்
தேசமுத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய்
கேட்ட வரந் தருவாய்

என்று இன்னொரு பாடலிலும் (தேசமுத்துமாரி) அவர் வேண்டுகிறார். இவ்வாறு எல்லா வகைகளிலும் மாரியம்மன் வழிபாடு சிறந்தோங்கி விளங்கக் காணலாம்.

கோப்பாய் சிவம் எழுதிய
'அருள் வழங்கும் மாரியம்மன்' என்ற நூலின் சுருக்கம்

சக்தி மந்திரங்கள்

சக்தி வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. இவ்வழிபாடானது பொது மக்களிடையே அன்னை வழிபாடு, அம்மன் வழிபாடு, அம்மை வழிபாடு, ஈஸ்வரன் வழிபாடு, தாய் தெய்வ வழிபாடு எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றன. புராதன நாக வழிபாடு, சக்தி வழிபாடாகத் திகழும். மிகத் தொன்மை வாய்ந்த நாகத் திருவுருவை உலகில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயக் கருவறைக்குள்ளேயே கண்டு தொழ முடிகின்றது. தேவீ பாகவதத்தில் ஸ்ரீமனஸாதேவியின் மறு பெயர்களாக "நாகமாதா", நாகேஸ்வரி, "நாகபூஜிதா", "நாகவாகினி", "நாகசயனி" ஆகிய நாமங்கள் இடம் பெற்றிருப்பதை நோக்கும் போது நயினாதீவில் சாக்த நூல்கள் கூறும் ஸ்ரீ மனஸாதேவி வழிபாடு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். சக்தியை வைதீக மரபிலும், நாத்திரிக முறையிலும், ஆகமநெறியிலும் வழிபடுவது தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. அத்தகைய வழிபாடுகள் நிகழும்போது அந்தச் சக்திக்கேயுரிய மந்திரங்களையும் கூறி வழிபடுதல் மரபாகும். சக்தி வழிபாட்டில் இடம்பெறும் பிரதான மந்திரங்கள் மட்டுமே இக்கட்டு ரையில் இடம் பெறுகின்றது.

மந்திரம் - விளக்கம்

தன்னை ஜபிப்பதனால் எது சாதகனைக் காப்பாற்றுமோ அதுவே மந்திரம் எனப்படும். மந்திரத்திற்கான விளக்கத்தை தொல்காப்பியம் "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்று வரையறை செய்துள்ளது. அம்பிகையை ஆராதனை செய்கின்றபோது அந்தந்த சக்திகளுக்கேயுரிய மந்திரங்களையே கூறித் தொழுவது மரபாகும். அம்பிகை மந்திரமாகவும் எல்லா மந்திரங்களின் வடிவமாகவும் விளங்குவதனை அம்பிகையின் நாமங்களே புலப் படுத்துகின்றது. சக்தியின் ஒவ்வொரு வடிவத்திற்கும் தனித்தனி மந்திரங்களெனத் தேவீ மந்திரங்கள் பலவாகக் காணப்படுகின்றன.

மந்திரம், தந்திரம், யந்திரம் என்ற மூன்றுவகையான அம்பிகை வழிபாட்டு முறைகளிலும் மந்திர ஜபம் முக்கியமானதாக இடம் பெறுகின்றது. மந்திரங்களிலும் பலவகை உள்ளன. ஓர் அரங்கள் உள்ளவை கர்த்தரி மந்திரம் எனவும், நான்கு முதல் ஒன்பது அரங்கள் உள்ளவை பீஜ மந்திரம் எனவும், பத்து முதல் இருபது அரங்கள் உள்ளவை சாதாரண மந்திரங்கள் எனவும், இவைகளுக்கு மேற்பட்டவை மபலா மந்திரம் எனவும் நித்தியா தந்திரம் குறிப்பிடுகின்றது.

மந்திரத்தின் பொருள் தெரியர்விட்டாலும் அதனை உச்சரிக்கின்ற அளவுக்கு அது உச்சரிப்பவர்களைப் பக்குவப்படுத்துகின்றது. இந்துக்கள் இதையே மந்திரசக்தி என்கிறார்கள். எந்த மந்திரத்தை ஜபித்தாலும் மனம் ஒருநிலைப்பட்டு அந்தக் கரணம் சுத்தியடைகின்றது. மூல மந்திரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுவது ஜபம் என்றும், பல மந்திரங்களைக் கொண்ட சுலோகங்களைச் சொல்வது ஜபம் என்றும் பல மந்திரங்களைக் கொண்ட சுலோகங்களைச் சொல்வது பிரார்த்தனை என்றும் கூறுவர்.

மந்திரங்களுக்கு முன்னும் பின்னும் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தைச் சொல்ல வேண்டும் என்றும், முதலில் சொல்லா விட்டால் மந்திரம் பொங்கி விடும் என்றும் காளிகாபுராணம் குறிப்பிடுகின்றது."ஓம்" என்ற பிரணவ மந்திரம் ஸ்ரீ வித்யோபாசனையில் முதுகெலும்பு போன்று விளங்குகின்றது. மந்திரம் இல்லாமல் யந்திரமும் இல்லை, தந்திரமும் இல்லை எனலாம். சக்திக்கேயுரிய மந்திரங்கள் பலவாகக் காணப்படினும் முக்கியமான சாக்த மந்திரங்கள் சில மட்டும் இங்கு இடம் பெறுகின்றது.

பஞ்சதசாக்ஷரீ மந்திரம்

அம்பிகை ரோதனையான வித்தியோபாசனையில் பிரதான இடத்தினை வகிக்கின்ற சிறப்புமிக்க மந்திரம் இதுவாகும். இது பதினைந்து பீஜாக்ஷாங்களுடன் கூடியிருந்தால் பஞ்சதசாரீ மந்திரம் என அழைக்கப் படுகின்றது. இம் மந்திரம் பின்வருமாறு அமைகின்றது.

"க-ஏ-ஈ-ல-ஹ்ரீம்
ஹ-ஸ-க-ஹ-ல-ஹ்ரீம்
ஸ-க-ல-ஹ்ரீம்"

இதிலுள்ள க, ஹ என்ற இரு எழுத்துக்கள் சிவாம்சமுள்ளவையாகவும், ஏ, ல, ஸ, என்ற அதிலுள்ள சக்தியம்சம் பெற்றவையாகவும் ஹ்ரீம் என்பது சிவ சக்தியம்சம் கொண்டதாகவும் விளங்குகின்றன. இம் மந்திரத்தில் உள்ள க-ஏ-ஈ-ல-ஹ்ரீம் என்ற ஐந்து அட்சரங்களும் வாக்பவகூடமென்றும் ஹ-ஸ-க-ஹ-ல-ஹ்ரீம் என்ற ஆறு அட்சரங்களும் காமராஜ கூடமென்றும், ஸ-க-ல-ஹ்ரீம் என்ற நான்கு அட்சரங்களும் சக்திகூடமென்றும் கூறப்படு கின்றன. அட்சரங்களின் தொகுதியினையே கூடமென்றும் குறிப்பிடுவர். இம்மந்திரத்திலுள்ள ஒவ்வொரு அட்சரத்திற்கும் இருபது நாமங்களாக முந்நூறு நாமங்கள் கொண்ட லலிதாத்ரீநதீ விளங்குகின்றது.

ஸ்ரீ வித்யோபாசகர்கள் வாக்பவ கூடத்தைத் தேவியின் முகமாகவும், மத்தியிலுள்ள காமராஜ கூடத்தை கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள பாகமாகவும், சக்தி கூடத்தை இடுப்புக்குக்கீழ் உள்ள பாகமாகவும் நினைத்து தியானிப்பர். இவ் வகையில் தேவியின் சூக்கும உடம்பாக இம் மந்திரம் விளங்குகின்றது. இம் மந்திர எழுத்துக்களின் உள்ளடக்கமாகவே

தேவியின் ஸ்ரீ சக்கரம் திகழ்கின்றது. இம் மந்திரமே தமிழ் மந்திரம் எனப்படும் திருமந்திரத்தில்,

"ககராதி யோரைந்துந் காணிய பொன்மை
அகராதி யோராறத்ரமே போலும்
சகராதி யோர் நான்குந் தான்சுத்தவெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே"

என வருகின்றது.

ஸ்ரீ ஷோடசாக்ஷரீ மஹா மந்திரம்

தேவிக்கு ஸ்ரீ ஷோடசாக்ஷரீ வித்யா என்று ஒரு நாமம் உண்டு. பதினாறு அக்ஷரங்களோடு கூடியது ஷோடசாக்ஷரீயை ஸ்ரீவித்யா என வழங்குவர். பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தின் இறுதியில் ஸ்ரீம் என்ற பீஜாக்ஷரமும்சேர்ந்து கொள்ளும்போது அது ஸ்ரீ ஷோடசாக்ஷரீ மந்திரம் எனப்படு கின்றது. "உயிரைக் கொடுத்தாலும் ஷோடசாக்ஷரீயைக் கொடுக்காதே" என்ற சொற்பிரயோகமானது பதினாறு பீஜாக்ஷரங்களைக் கொண்ட அம்மந்திரத்தின் பெருமையை விளக்குகின்றது. பஞ் சதசாக்ஷரீயின் மூன்று கூடங்களையும், மூன்று எழுத்துக்களாகக் கணக்கிட்டு அதனுடன் மேலும் பதின்மூன்று எழுத்துக்களையும் சேர்க்கும் போது அதனைப் பராஷோசீ என்பர். இது கீழ்க் கண்டவாறு அமை கின்றது.

"ஸ்ரீ - ஹ்ரீம்-க்லீம் - ஐம் - ஸௌ:
ஓம் - ஹ்ரீம் - ஸ்ரீம் - கஏஈலஹ்ரீம்
ஹஸகஹலஹ்ரீம் - ஸகலஹ்ரீம் - ஸௌ:
ஐம் - க்லீம் - ஸ்ரீம்"
காயத்ரீ மந்திரம்.

ஸ்ரீவித்யோபாசனையில் காயத்ரீ மந்திரம் பிரதான இடம் பெறுகின்றது. "காயத்ரீ என்பது ஸந்தியாவந்தன காலத்தில் ஜெபிக்கப்பட வேண்டிய ஒரு வேதமந்திரம் ஆகும். காயத்ரீ என்ற சொல்லுக்கு; தன்னைப் பாடுபவனைக் காப்பாற்றுவது என்று அர்த்தம். வாக்குரூப மான காயத்ரீயே வேதங்களின் தாய் என்று மகாபாரதம் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி காயத்ரீ மந்திரங்கள் இருப்பினும் ஸ்ரீ வித்யோ பாசனையில் பிரம்மகாயத்ரீ அல்லது சூரியகாயத்ரீ எனப்படும் கீழ்வரும் மந்திரம் முக்கிய இடம் வகிக்கின்றது. "

"ஓம் பூர்புவஸ்ஸுவ:
தத் ஸவி துர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்"

"எவர் நமது அறிவைத் தூண்டுகின்றாரோ அந்த சுடர்க்கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக" என்பது இதன் பொருளாகும்.

நவாக்ஷரீ மந்திரம்

நவாக்ஷரீ மந்திரமானது "ஐம் (வாக்பவம்), ஹ்ரீம் (சம்பு வனிதா), க்லீம் (காமபீஜம்) என்னும் மூன்று பீஜங்களாலும் "சாமுண்டாயை " என்னும் நான்கெழுத்துப் பதத்தாலும் "விச்ச" என்னும் இரண்டெழுத்துப் பதத்தாலும் கூடியதாகும். இவ்வகையில், "ஐம் - ஹ்ரீம் - கலீம் - சாமுண்டாயை விச்சே" என்பது நவாக்ஷரீ மந்திரமாகும். இந்த ஐம் - ஹரீம் - க்லீம் - சா-மும்-ட-யை-வி-ச்சே என்ற ஒன்பதும் முறையே சந்திர காந்தி நிறம், சூரியாகந்தி நிறம், அக்கினி நிறம், உருக்கிய தங்கம் போன்ற நிறம், சிவப்பு, நீலம், கறுப்பு, வெண்மை, புகை நிறம் ஆகிய நிறங்களை உடையனவாகக் கருதப்படுகின்றன. இம் மந்திரம் ஜெபிப்பவர்களுக்கு கற்பக விருட்சம் போன்றதெனக் கூறப்படுகின்றது. தேவீமாஹாத்திய பாராயணத்திற்கு முன்னும், பின்னும் இம் மந்திர ஜபம் அவசியமாகும். இவ் வகையில் சாக்த கிரியை மரபில் இம் மந்திரம் பிரதான இடத்தினைப் பெறுகின்றதெனலாம்.

பாலா மந்திரம்

பாலா மந்திரம் "ஐம் - க்லீம் -ஸௌ" என மூன்று எழுத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. இதன் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு கூடமாகும். முதல் எழுத்தான "ஐம்" வாக்பவகூடமென்றும், இரண்டாம் எழுத்தான க்லீம் காமராஜ கூடம் என்றும், மூன்றாம் எழுத்தான "ஸௌ" சக்தி கூடம் என்றும் கூறப்படுகின்றன. பஞ்சதசாக்ஷரீயின் கூடங்களுக்கும், பாலாவின் கூடங்களுக்கும் பெருமையில் ஏற்றத்தாழ்வின்மையால் இம்மந் திரத்தை லகுஸ்ரீவித்யை என்பர். ஸ்ரீ வித்யை தீக்கை பெற விரும்புவோர் பாலா மந்திர தீக்கையை முதலில் பெற்றுப் பின் பஞ்சதசாக்ஷரீ தீக்கையைப் பெறுவர். பாலா என்ற நாமம் தேவி திரிபுரசுந்தரியாக விளங்குவதைக் குறிக்கின்றது.

ஐம்-க்லீம்-ஸௌ: ஸௌ: ஸௌ: - க்லீம் - ஐம் என்பது த்ரிபுரஸுந்தரி மந்திரமாகும். தேவீபாகவதத்தில் துளஸ் தேவி, ஸாவித்திரிதேவி, மகாலக்ஷ்மி, ஸ்வாஹாதேவி, ஸ்வதாதேவி, தக்ஷிணா தேவி, டீதேவி, மங்கள சண்டிகை, மனஸாதேவி, சுரபிதேவி, ராதிகாதேவி ஆகிய சக்திக்குரிய மந்திரங்கள் கூறப்படுகின்றன. அவை கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

துளஸீதேவி மந்திரம்

"ஸ்ரீம் (லக்ஷ்மீபீஜம்) ஹ்ம் (மாயபீஜம்)
க்லீம் (காமபீஜம்) - ஐம் (வாணிபீஜம்)
ப்ருந்தாவன்யை ஸ்வாஹா

மகாலக்ஷ்மி மந்திரம்
ஸ்ரீம் - ஹ்ரீம் - க்லீம் - ஐம் - கமலாவாஸின்யை ஸ்வாஹா
மகாலக்ஷ்மி மந்திரம்
ஸ்ரீம் - ஹ்ரீம் - க்லீம் - ஐம் - கமலவாஸின்யை ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் - ஹ்ரீம் - ஐம் - மஹாலக்ஷ்மியை
ஸ்வாஹாதேவி மந்திரம்
ஓம் - ஹ்ரீம் - ஸ்ரீம்
ஸ்வதாதேவி மந்திரம்
ஓம் - ஹ்ரீம் - ஸ்ரீம் - க்லீம் - ஸ்வதா தேவ்யை ஸ்வாஹா
தக்ஷிணாதேவி மந்திரம்
ஓம் - ஸ்ரீம் - க்லீம் - ஹ்ரீம் தக்ஷிணாயை ஸ்வாஹா
மங்கள சண்டிகை மந்திரம்
ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஸர்வபூஜ்யே தேவி மங்கள சண்டிகே ஹும்
ஹும்பட் ஸ்ரீவாஹா
மனஸாதேவி மந்திரம்
ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஐம் மனஸா தேவீயை ஸ்வாஹா
சுரபிதேவி மந்திரம்
ஓம் ஸுரப்யை நம
ராதிகாதேவி மந்திரம்
ஸ்ரீராதாயை ஸ்வாஹா
சப்தமாதாக்களின் மந்திரங்கள்
பிராஹ்மி
ரிக்யஜுர்சாம அதர்வ
கமண்டலு கூர்சடாரினி நாமோநம
மகேஸ்வரி
தேவி பரசுதாரினி ஸ்வேதரூபினி
மகேஸ்வரி நமோநம
கௌமாரி
சக்தி தாரணி மயூரவாஹினி
குக்குட டவஜினி குமகும் வர்ணினி
கௌமாரி நமோ நம
வைஷ்ணவி
சங்க சக்ரதாரிணி கருட
வாகினி வைஷ்ணவி நமோநம
வாராஹி
ஹமுசல தாரணி தம்ஸ்திணினி
சுகர்மணி சிம்வாஹினி
வாராஹி நமோநம
இந்திராணி வஜ்ரதாரணி கஜவாஹினி ஸ்யாம
வர்ணினி நாமோ நம
சாமுண்டா
கபாலதாரிணி நிலாம்பவர்னினி
பிரேதவாஹினி ஹும்காரினி நமோநம"

இவ்வாறாக அம்பிகை ஆராதனையில் இடம்பெறும் மந்திரங்கள் பலவாகக் காணப்படுவது சக்தி வழிபாட்டின் தனிச்சிறப்பாகவுள்ளது.

பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

மஹாமேரு யந்திரத்தில் தேவிஉபாசனை

மஹாமேரு யந்திர பூஜை செய்ய விரும்பும் ஆசார்யர்கள் முதலில் பஞ்ச தசாட்சரீ தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும். ஸ்ரீசக்கரபூஜைக்குத் தேவையான உபகரணங்கள் கலசம், வலம்புரிச்சங்கு விசேஷார்க்ய பாத்திரம் ஆத்மபாத்திரம், குருபாத்ரம், அறுகம்புல்லு, துளசி, வில்வம், பூக்கள், வாசனைப் பூக்களைச் சேகரித்துக கொண்டு பூஜை ஆரம்பிக்க வேண்டும். அம்பிகையின் நவாவரண தர்ப்பணத்திற்குப் பின்வரும் திரவியங்களைச் சேர்த்து பாலில் அமிர்தம் தயாரிக்கவேண்டும். பாலில் ஏலக்காய் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கோரோசனை, கஸ்தூரி, சர்க்கரை, பேரீச்சம்பழம், தேன், பாலில் தயாரிக்கப்பட்ட இந்த அமிர்தத்தை ஆசார்யனே முதலில் சிறிது உட்கொள்ளவேண்டும். தான் வேறு; அம்பிகை வேறு என்று இல்லாத அத்வைத தாற்பர்யத்தை அது உணர்த்துகிறது. மொத்தம் 100 தேவிகள் ஸ்ரீ சக்கரத்தில் அடியிலிருந்து நுனிவரை சான்னித்யமாக இருப்பார்கள். தர்ப்பணபூஜைகள் அடியி லிருந்து ஆரம்பிக்கின்றன. உச்சியில் காமேஸ்வரர் என்று அழைக்கப்படும் சிவனின் மடியில் உல்லாசமாக அமர்ந்திருப்பாள் அம்பிகை. அந்த இடம் தான் ஒன்பதாவது ஆவரணம் பிந்துஸ்தானமாக அமைகிறது. ஆசார்யன் அடியிலிருந்து ஒவ்வொரு ஆவரணமாக அர்ச்சித்து அமிர்த தர்ப்பணமும் கொடுத்து உச்சியில் நவாவரணத்தில் ஆனந்தமாக வீற்றிருக்கும் அம்பிகையோடு ஒன்றி விடுகிறான். அதில் இரண்டு என்ற நிலை நீங்கி அதாவது அம்பிகை ஆத்மா என்ற தன்வத நிலை நீங்கி அத்வைத நிலைக்குத் தன்னைக் கொண்டு வருகிறாள். ஸ்ரீ சக்கர மஹாமேரு யந்திரத்தை அடியிலிருந்து நுனிவரை உற்றுநோக்குவோம்.

1. முதல் ஆவரணம் பூ புரம் என்று பெயர் மூன்று சதுரங்கள் கொண்டது. இதற்கு தரைலோகமோஹனம் என்று பெயர்.
2. இரண்டாவது ஆவரணம் 16 இதழ் கமலம், இதற்கு சர்வஆசா பரிபூரகம் என்று பெயர்.
3. மூன்றாவது ஆவரணம் எட்டு இதழ்களை உடையது. இதன் பெயர் சர்வசம் க்ஷோபண சக்கரம்
4. நான்காவது ஆவரணம் பதினான்கு முக்கோணங்களை உடையது. இதற்கு சர்வ சௌபாக்கியசக்கரம் என்று பெயர்.
5. ஐந்தாவது ஆவரணம் பத்து முக்கோணங்களை உடையது. இதற்கு சர்வார்த்த சாதகசக்கரம் என்று பெயர்.

6. ஆறாவது ஆவரணமும் பத்து முக்கோணங்களையுடையது இதற்கு சர்வரட்சாகர சக்கரம் என்று பெயர்.
7. ஏழாவது ஆவரணம் எட்டு கோணங்களையுடையது. இதற்கு சர்வரோகஹரசக்கரம் என்று பெயர்.
8. எட்டாவது ஆவரணம் முக் கோணத் தையுடையது. இதற்கு சர்வ சித்தி பிரத சக்கரம் என்று பெயர்.
9. ஒன்பதாவது ஆவரணம் ஸ்ரீ சக்கரத் தின் உச்சியிலுள்ள வட்டவடிவ மான பிந்து சக்கரம் இதற்கு சர்வா னந்த மய சக்கரம் என்று பெயர்.


இந்த ஒன்பது ஆவரண தேவதை கள் தவிர ஆரம்பத்தி லேயே விநாயகர், சூரியன், மஹா விஷ்ணு, சிவன் இவர்கள் முதலில் ஆராதனை செய்யப்படு கிறார்கள். நவாவரண பூஜை நிறை வெய்தியவு டன்

ஸ்ரீ வித்யாலட்சுமியம்பா 15 பேர்
ஸ்ரீ வித்யா கோசாம்பா 5 பேர்
ஸ்ரீ வித்யா கல்பலதாம்பா 5 பேர்
ஸ்ரீ வித்யா ரத்னாம்பா 5 பேர்


மொத்தம் 25 அம்பிகை கட்குப் பூஜை தர்ப்பணம் அளிக்கப் படுகிறது. இதற்கு மேல் பௌத்தம், வைஷ்ணவம், ஸௌரம், சைவம், சாக்தம் முதலிய சமயதேவதைகள் ஆராதிக்கப்படு கிறார்கள். இதைத் தொடர்ந்து ஆறு ஆதாரங்களிலும் கணபதி, பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஜீவாத்மா, பரமாத்மா என விளங்கும் சகல தேவதைகளும் பராசக்தியின் ஸ்வரூபமே என உணர்த் தும் ஆம்னாய சமஷ்டி பூஜையும் நடைபெறுகிறது.

மஹாமேரு யந்திர பூஜை ஆரம் பத்திலேயே பரமேஷ்டிகுரு, பரமகுரு, ஸ்ரீகுரு, ஸ்வ குரு என்று குருமார்களுக்கு விசேஷ பூஜை நடைபெறுகிறது. ஸ்ரீ சக்கர பூஜை நடைபெறு கிறது. ஸ்ரீ சக்கர பூஜையின் தாற்பர்யம் அம்பிகை யைத் தன்னுடைய ஹிருதயத்தில் முதலில் ஆராதித்துப் பின் ஸ்ரீ சக்கரத்தில் விஸ்தாரமாக பூஜை செய்து பூர்த்தியில் அந்த அம்பிகையைத் தன்னுடைய ஹிருதய கமலத்திற்குக் கொண்டு வந்து அங்கு எழுந்தருளச் செய்வதே யாகும். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த மஹாமேரு ஸ்ரீ சக்கர ஆராதனையைச் செய்வதும் அதைத் துளசிப்பதும் இம்மை மறுமை இரண்டிற்குமே ஆனந்த இன்பத்தைத் தருவதாகும்.

❋ ❋ ❋



விநாயகர் ஆலயம்



சீதேவி, பூதேவி சகிதம்
மஹாவிஷ்ணு




வள்ளி தெய்வானை சகிதம்
முருகன்




வைரவர் ஆலயம்



மகாலஷ்மி ஆலயம்



சரஸ்வதி ஆலயம்



சண்டேஸ்வரி ஆலயம்



சந்தனம் சாத்திய
மூலஸ்தான அம்மன்




உற்சவ மூர்த்தி (சின்ன அம்பாள்)



மூலமூர்த்தி



மதுரை மீனாட்சி



காமாட்சி அம்மன்




விசாலாட்சி அம்மன்



காமாட்சி அம்மன்



மூலஸ்தான விமானம்



வீதியுலா வரும்
அம்மன்



வசந்த மண்டபத்தில்
எழுந்தருளி அம்மன்



காவடி எடுக்கும் நிகழ்வு

அம்பிகை வழிபாட்டின் மகத்துவம்

பரம்பொருளைத் தாயாக வழிபடும் முறையானது மிகவும் தொன்மையானது. இயற்கைச் சக்திகளைத் தெய்வீக நிலையில் போற்றி அவற்றுக்கு உருவங்கொடுத்து வழிபட்ட தன்மையில் சக்தி வழிபாட்டின் தொடக்கமாகக் கொள்ளலாம். இறைவன் நூல் எனத் திருமூலரால் போற்றப்டும் வேதங்களில் இடம்பெறும் தேவி சூக்தம், ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம் போன்றவை அம்பிகையின் மகத்துவத்தைக் கூறுவன. உபநிடதங்களில் ஒன்றாகிய கேன உபநிடதம் சக்தியைப் பரம் பொருளாகப் போற்றுகின்றது. புராணங்களில் சக்தியின் மகத்துவம் பலபடக் கூறப்பட்டுள்ளது. தேவி பாகவதம், ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம், ஸ்ரீதேவி மகாத்மியம் போன்றவை அம்பிகையின் அருட்கோலங்களையும் வழிபாட்டுட்சிறப்புக்களையும் விதந்தோதுகின்றன. ஆதிசங்கரரின் சௌந்தர்யலகரி, அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதி அன்னை பராசக்தியைச் சிறப்பாகப் போற்றுகின்றன.

அம்பிகையை உலகமாதாவாகப் போற்றுகின்றது ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் அவளுக்குரிய திருநாமங்களுள் 'சத்ய பிரசாதணி' என்ற நாமம் மகத்துவமிக்கது. வேண்டுவார் வேண்டுவனவற்றை வழிபட்ட மாத்திரத்தே உடன் வழங்கி அருள்பவள் அம்பிகை என்பது இதன்பொருள். இப் பிரபஞ்சத்தின் அனைத்துக்கும் மேலானவளாக விளங்கும் அம்பிகை ஆதிபராசக்தியாகவும் ஸ்ரீ திரிபுரசுந்தரியாகவும் ஆராதிக்கப்படு கின்றாள். அம்பிகை சிவனோடு இணைந்து சிவசக்தி ஐக்கிய ரூபிணியாக விளங்குபவள். அர்த்த நாரீசுவர வடிவம் சிவனும் சக்தியும் ஒன்றிணைந்து ஆன்மாக்களுக்கு அருள் நல்கும் நிலையைக் காட்டி நிற்கின்றது. சோமாஸ்கந்த வடிவிலும் இறைவன் சக்தியுடன் விளங்கும் நிலையில் உள்ளாள். இறைவனும் இறைவியும் இணைந்து விளங்கும் இத்திருக்கோலத்தை அருளாளர் தமது இறைவணக்கப் பாடல்களில் போற்றியுள்ளனர்.

அம்பிகையின் புகழ்பாடும் ஸ்ரீலலிதா சகஸ்ர நாமத்தில் வரும் நாமம் இங்கு குறிப்பிடப்பாலது. சம்சார பங்க நிர்மக்னசமுத்தரண பண்டிதாயை என்ற நாமத்தில் சம்சாரமாகிய சேற்றில் மூழ்கியவர்களைக் கரையேற்றி விடுவதில் திறமைவாய்ந்தவள். இதனால்தான் 'அம்பிகையே சரணம்' என ஒரு கடிணப்பொழுதாவது நினைப்பவர்கள் எல்லையற்றதும்

ஆழத்தை அளவிட முடியாததுமான சம்சார சாகரத்திற்கு உள்ளாவதில்லை என்பது அம்பிகை வழிபாட்டின் மகிமைக் குச் சிறந்த சான்று. அம்பிகையைத் தனது பக்தர்கள் அனைவரினது இருதயத் தாமரையில் இருப்பவள் என லலிதா அஷ்டோத்தர நாமாவளி போற்றுகின்றது. ஸமஸ்த ஹ்ருதயாம் போஜநிலயாயை நமோநம மேலும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தில் 'அஜ்ஞானத் வாந்த தீபிகா' என்ற நாமத்தில் அஞ்ஞான மாகிய இருட்டைப் போக்கும் தீபம் போன்று விளங்குபவள் என்பதால் அடியார்கள் அறியாமையிலிருந்து விடுபட அவள் துணைநிற்பவள் என்பது அவளது மகத்துவத்தினைக் காட்டுகின்றது. அம்பிகை கருணை மிகுந்தவளாய் இருப்பவள் என்பது இதன்வழி புலப்படுகின்றது. அன்பர்களது உள்ளத்தில் நீங்காது குடியிருந்து அவர்கள் நன்மைய டைய வேண்டுமென்று கருதுவது தேவியின் கருணையாகும். அவளது தீபத்தினால் கிட்டும் ஒளியினால் ஒருவனுக்கு விவேகம் கிட்டுகின் றது. தங்கு தடையற்ற ஒருமுகப் பட்ட தியானத்திலிருந்து உதிக்கும் நிறை காட்சியே இத்தீபத்தின் ஒளிப்பிளம்பாகும். இதுவே பக்தர் உள்ளத்தில் ஏற்றிவைக்கப்பட்டிருக் கும் ஞானதீப மாகும். இதனால் அவன் அம்பிகையின் அருட் காட்சியை உணரும் வாய்ப்பைப் பெறுகின்றான்.

அம்பிகையை அவளுக் குரிய தோத்திரங்கள் மூலம் பாராய ணம் செய்து வழிபடுவது நற்பலன்களைத் தருவனவாகும். அடியார்களது பாவங்களை இந்தத் தோத்திர பாராயணம் அழிக்க வல்லதாகும். இருளையகற்றும் சூரியனைப் போன்று இந்தப் பாராயணமும் பக்தர்களது இரு தயத்திலுள்ள அஞ்ஞான மென்னும் இருளை அடியோடு அகற்றுவ தாகும். அத்துடன் கற்பகவிருட்சம் போன்று அடியார்கள் விரும்பும் அனைத்து குறைவில்லாது கொடு த்து அவர்களது வறுமைப் பிணியை யகற்ற வல்லதாகும். எனவே அம்பிகையைத் தோத்திரங்கள் மூலம் பக்தியுடன் வழிபடுமிடத்து விபத்து, இருளாகிய அறியாமை, வறுமை, மரணபயம் முதலிய இன்னல்களிலிருந்து விடுபட்டு ஆயுள், ஆரோக்கியம், தனம், தான்யம், கீர்த்தி முதலிய நற்பயன் களும் அனைத்து அடியார்களுக்கும் கிடைப்பதாகும்.

பக்திமூலம் அம்பிகையை உபாகித்தலே மிகச் சிறந்த வழிபாடாகும். இதற்கு ஆதாரமாக அமைபவையே தோத்திரங்கள் என்றழைக்கப்படும் தெய்வீகப் பா மாலைகள் ஆகும். அவை காலந் தோறும் எழுந்து அம்பிகையின் புகழை இவ்வுலகில் பரப்புகின்றன. இப்பாமாலைகள் தம்முள் கொண்டுவிளங்கும் செய்யுட்களின் தொகைக்கேற்ப பஞ்சரத்தினம், அஷ்டகம், சதகம் எனப் பல்வேறு வகையில் அமைவன. இத்தகைய தோத்திர வரிசையில் ஆதிசங் கரரால்

பாடியதாகக் கொள்ள லலிதா பஞ்சரத்தினம் குறிப்பிடற் பாலது. பரம்பிரம்மமகிஷியாக விளங்கும் அன்னையாகிய லலிதா மகாதிரிபுர சுந்தரி இரக்கமுடையவள். அறிவுபூர்வமான அனைத்திற்கும் லட்சியமாகவும் ஆண், பெண், அலி என்ற லிங்க வேறுபாடு அற்றதாயும் பிறவிப் பெருங்கடலில் உழல்பவர் களுக்குப் படகு போன்று காப்பாற்று வதாயும் இருப்பதால் பரம்பொருள் லலிதா எனும் பெயரால் போற்றப்படு கின்றது. அம்பிகை அழகுமிகு கோலங் களை ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், லலிதா திரிசதீ, லலிதா அஷ்டோத்தர சத நாமாவளி முதலியவை நன்கு சித்தரிக் கின்றன. இந்நூல்களின் வரிசையில் லலிதா பஞ்சரத்தினமும் சிறப்புப் பெறகின்றது. பஞ்சரத்தினம் ஐந்து பாடல்களில் தெய்வீகப் பெருமை களைக் கூறும். ஆறாவது செய்யுளில் இதனைப் பாராயணம் செய்வதன் பலன்கள் கூறப்படுகின்றது. ஐந்து மணி களாலான மாலை போன்று விளங்கு வதால் இது ஐந்து செய்யுட்களைக் கொண்ட பாமாலை எனப் போற்றப் படுகின்றது. லலிதா பஞ்சரத்தினம் அளவிற் சிறிதாயினும் உன்னதமான சமய தத்துவக் கருத்துக்களும் கவிதை நயமும் இசைநயமும் கொண்டுள்ளது. இதன் முதற் செய்யுளில் அம்பிகையைக் காலையில் வழிபடுவது போன்று பக்தன் தியானிக்கும் பாங்கில் அம் பிகையின் அழகுக் கோலம் சித்தரிக்கப் படுகின்றது. அம்பிகையின் தாமரையை யொத்த மலர்ந்த திருமுகம், கொவ்வைக் கனிபோன்ற அதரம், முத்துப்பதித்த மூக்குத்தியணிந்த மூக்கு, காதள வோடிய கண், மணிகள் பதித்த காதணிகள், புன்னகை, கஸ்தூரி திலகத்துடன் கூடிய நெற்றி சிறப்புடன் வர்ணிக்கப்படுகிறாள். அன்னையின் பேரழகு தேசாதி பாதமாக வர்ணிக்கப் படுகின்றது. இரண்டாவது செய்யுளி லும் அம்பிகையின் திருத்தோற்றம் வர்ணிக்கப்படுகின்றது. நெற்றியில் திரு நீற்றுச் சிறப்பு, அவளது திருக்கரங்களில் உள்ள பொருட்கள், ஆயுதங்கள் பக்தனின் கவனத்திற்குரியவை யாகின்றன. கரும்பு, வில், புஷ்பம், பாணம் முதலியன குறிப்பிடப்பாலன. அவளது உடலில் உள்ள அணி கலன் களும் வர்ணிக்கப்படுகின்றன. அவளது ஆயுதங்கள் ஆன்மாக்களைப் பற்றியிருக் கும் மலர்கள் பாவங்கள் ஆகியவற்றை அழித்து அருள் பாலிப்பன. மூன்றவாது பாடல் அம்பிகையின் திருவடிச் சிறப் புப் பற்றி வர்ணிக்கின்றது. அம்பிகை யின் திருவடிகளைச் சரண் அடை வதனால் பக்தன் அதிக வரம் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றான். நான் காவது பாடலில் அம்பிகையின் மகத்து வம் போற்றப்படுகின்றது. மங்கல வடிவினன் சிவனது பிரிய பத்தினி, கருவறைக் களஞ்சியம், பிரபஞ்சத்தின் அகத்தினதும் பாதுகாப்பு, சகல வித்தை களுக்கும் தலைவி எனப்பல்வேறு நிலையில் அம்பிகை போற்றப்படு கின்றாள். ஐந்தாவது செய்யுளில் அம்பிகையின் திருநாமங்கள் கூறப்படு கின்றன. ஆறாவது செய்யுளில்

இத்தோத்திரப் பயன் கூறப்படுகின்றது. மங்களத்தைத் தருவது, கல்வி, செல்வம், பரந்த நன்மை எல்லையற்ற கீர்த்தி போன்ற நற்பலன்களை அம்பிகை வாரி வழங்குவாள் என ஆசிரியர் அம்பிகையைப் போற்றித் துதிக் கின்றார்.

இத்தகைய அன்னையின் அருளும் வடிவத்தை அபிராமிப் பட்டரும் சிறப்புறக் கூறுகின்றார். அம்பிகை சொல்லும் பொருளு மென நடமாடும் துணைவராகிய சிவபிரானுடன் பொருந்தி நிற்கும் நிலையை அழகுறப் பாடுகின்றார். அத்தகைய நிலையில் அவளது பாதங்களை வணங்க வேண்டும். அப்பாதங்களைத் தொழுவதால் அழியாத அரசபோகமும் முத்தி நெறியும் கைகூடும்.



சொல்லும் பொருளும் என
நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே
நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவநெறியும்
சிவயோகமும் சித்திக்குமே



சொல்லும் பொருளுமென நிற்கும் இறைவனுடன் இணைந்து நிற்கும் அம்பிகையின் வடிவைக் கண்டு தொழுவதால் அழியாத அரசபோகமும் கிடைக்கும். அந்த அநுபவத்தில் ஏற்படும் தவநெறி உண்டாகுமு. அந்த நெறியின் விளைவாக முத்தியும் கிடைத்து விடும் என்று அபிராமிப்பட்டர் போற்றுகிறார். அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் அன்னை யின் பேரழகைப் பல்வேறு நிலை களில் போற்றித் துதித்து, அவளை உண்மையுடன் மனத்திலே துதிக் கும் அடியவர்களுக்கு நோயின்மை, கல்வி, தனம், தானியம், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், வலி, துணிவு வாழ்நாள், வெற்றி, நல்லூழ், நுகர்ச்சி எனப்பட்ட பதினாறு பேறுகளை அவள் கொடுத்து அருள் புரிவாள் எனக் கூறுகிறார்.



சகல செல்வங்களும் தரும் இமயகிரிராச
தனயை! மாதேவி நின்னைச்
சத்யமாய் நித்திய முள்ளத்தில் துதிக்கும்
உத்தமருக் கிரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்வி, தன தானியம்

அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள் வெற்றி
ஆசிநல் லூழ் நுகர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகிர்தருண சாலி! பரிபாலி! அனுகூலி!
திரிசூலி! மங்கள விசாலி!
மகவுநான் நீ தாய் அளிக்கொணாதோ
மகிமை வளர் திருக்கூட லூரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவகாமி
மகிழ்வாமி! அபிராமி உமையே!

அபிராமி அன்னை ஸ்ரீ மகாமாரி என்றும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் என்றும் பல்வேறு தெய்வீக வடிவங்களில் ஆலயங்கள் தோறும் அடியவர்களால் பக்திபூர்வமாய் வழிபடப்பட்டு வருகின்றமை அம்பிகையின் மகத்துவத்திற்குச் சான்றாக அமைகின்றன.

மகாகவி பாரதி அம்பிகையை முத்துமாரியாகப் போற்றிக் கூறுமிடத்து,

" தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரந் தருவாய்
பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாமங் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாம் தீர்ப்பாய்

நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

எனப் பாடுகின்றார். அச் சிந்தனை வழி நாமும் தோத்திரங்கள் வழி அம்பிகையை வழிபட்டு நலம் பெறுவோமாக!

பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

❋ ❋ ❋

ஆலயங்களில் உள்ள மரங்களும் அவற்றின் சிறப்பும்

வில்வம்

திரிதளம் திரிகுணாகரம் திரிநேத்ரம்
சதிரயாயுஷம்
திரிஜன்ம பாப சம்ஹாரம் ஏக வல்லம்
சிவார்ப்பணம்!

சம்சாரத்தை அஸ்வத்த விருட்சம் என்று கீதை வருணிக்கிறது. ஆனால், வில்வ மரம் சம்சாரத்தை அகற்றி முக்தியைத் தரும் மரமாகும். ஒரு வில்வமரத்தில் மூன்று தளங்கள் இருக்கின்றன. அவை, மூன்று குணவடிவமானவை. பரமசிவனின் மூன்று கண் வடிவமானவை. மூன்று ஆயுள் வடிவமானவை. இத்தகைய ஒரு வில்வத்தை சிவார்ப்பணம் செய் என்கிறது சாஸ்திரம். துளசியை ஒவ்வொரு தளமாக அர்ச்சிக்கலாம். ஆனால், வில்வத்தை மும்மூன்று இலையுள்ளதாகவேதான் அர்ச்சிக்க வேண்டும்.

வில்வம் சிவனுக்குமட்டுமன்றி லட்சுமிக்கும் மிகப் பிரியமானது. வில்வமரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள் என்று சொல்லப்படுகிறது. "சௌபாக்கிய சஞ்சீவினி" யில் லட்சுமி வில்வக்காட்டில் வாசம் செய்வதாகக் காணப்படுகிறது.

பாற்கடலில் இருந்து உண்டாகிய லட்சுமியின், கரத்திலிருந்து வில்வம் உண்டானதென்று வாமன புராணம் கூறுகின்றது. இதனால் இதற்கு ஸ்ரீ விருட்சம் என்று பெயர். வில்வத்தால் அர்ச்சிக்கப்படுவதை லட்சுமி விரும்புகிறாள். இது வேதமானது.

பத்திரங்களுள் வில்வம் சிவஸ்ரூபம். இவ்வில்வமரத்தில் உள்ள முட்கள் சக்திஸ்வரூபம், கிளைகள் வேதம். வேர் பதினோறு கோடி ருத்திரர்கள். வில்வம், கிளுவை, மாவிலங்கை, விளா, வெண்நொச்சி, இவை பஞ்ச வில்வமாகும். வில்வம், கிளுவை, மாவிலங்கையும் மூன்று இலைகள் கொண்டவை.

காளிதாசன் தன் தேவி ஸ்தோத்திரத்தில் வில்வ மகிமையை

வர்ணிக்கிறார். "சண்டி கே! உன் பூஜைக்காக வில்வம் பறிக்கும்போது எவருடைய கை வில்வமுள் பட்டு சிவந்ததோ அவர்கள் அரசர்களால் வணங்கப்படும் சக்ரவர்த்தியாவார். அவரது கை கால்களில் சங்கு சக்ர பத்ம ரேகைகள் இருக்கும்."

வில்வத்தை அதிகாலையில் பறிக்க வேண்டும். இது மரமாக இருப்பதால் ஏறித்தான் பறிக்க வேண்டும். தில்லை நடராஜனை வழிபடும் ஒரு பக்தர் இப்படி அதிகாலையில் வில்வம் பறித்து வந்து சிவபெருமானைப் பூஜித்து வந்தார். இரவில் பனி காரணமாக மரத்தின் அடிப்பாகம் எல்லாம் நனைந்திருக்கும். மரம் ஏறினால் வழுக்கும். இப்படி வழுக்கி விழுந்து இவர் அவஸ்தைப்பட்டார். சிவபெருமானைக் குறித்து தவம் இருந்தார். அவரும் பிரசன்னமானார். இப்பக்தர் என்ன வரம் கேட்டார் தெரியுமா? "உனக்காக வில்வம் பறிக்கப்போனால் வழுக்கிவிடுகிறது. இப்படி வழுக்காமல் இருக்க நகங்கள் உடைய புலிக்காலை எனக்குக்கொடு" என்று வரம் கேட்டார். இவரே புலிக்கால் முனி என்ற வியாக்ரபாதர்.

அரச மரம் (Bo tree sacred Fig)

கீதையில் பகவான் கிருஷ்ணர் சொல்கிறார் "மரங்களில் நான் அரசமரம்" என்று அத்தனை சிறப்பு வாய்ந்த இம்மரத்தின் கட்டைகளை யாகங்களில் பயன்படுத்துவது மிகச் சிறந்ததாகும். விநாயகப் பெருமானை மனதில் நினைத்து 108 முறை அவர் நாமம் கூறி அரச இலையால் அர்ச்சித்தால் நினைத்த காரியம் கை கூடும். புத்திர பாக்கியம் வேண்டி, மங்கையரும் இம்மரத்தைத் தங்கள் இஷ்ட தெய்வம் போல் நினைத்து வலம் வருவது யாவரும் அறிந்ததே.

வன்னி (Prosopis)

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
வாடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல்
அணிந்தது என் உளமே புகுந்த அதனால்
- திருஞானசம்பந்தர், கோளறு திருப்பதிகம்

சிவபெருமான் தன் முடிமேல் அணிந்த வன்னி இலையின் சிறப்பை மேற்கண்ட பாடல் கூறுகிறது. சமஸ்கிருத மொழியில் வன்னியென்றால் நெருப்பு என்று பொருள்படும். ஒரு வன்னிக்கட்டையோடு இன்னொரு

வன்னிக்கட்டையை உரசினால் தீப்பொறி கிளம்புவதனால் இம்மரம் தன்னுள் தீயை அடக்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தீப்பொறியிலிருந்து கிளம்பும் அக்கினியானது யாகம் மற்றும் ஹோமங் களுக்குப் பயன்படுத்துவது சாலச்சிறந்தது. சிவபெருமான் மற்றும் விநாயகப் பெருமான் வழிபாட்டிற்கு வன்னி மிகவும் உயர்ந்தது. இது தவிர கந்தசஷ்டி காலங்களில் சண்முகருக்கு அர்ச்சிக்கப்படுகிறது. வன்னி இலையால் சனீஸ்வரரை பூஜித்தால் சகல செல்வங்களும் கூடும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

வேப்பிலை (Neem)

மருத்துவ குணம் நிறைந்த வேப்பமரம் கோயிலில் மட்டுமல்லாது வீடுகளிலும் பெரும் பயனுள்ள மரமாக விளங்குகிறது. வேப்பங்காற்று சுவாசத்திற்கு உகந்தது. அதன் இலைகளோ மிகச் சிறந்த கிருமி நாசினி ஆகும். சக்தி வழிபாட்டில் வேப்பிலை மிக முக்கிய பங்கை வகிக்கிறது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி"

என்ற பெரியோர் வாக்கிற்கேற்ப வேப்பங்குச்சியால் பல் துலக்கினால் பல் உறுதியாக இருக்கும் என்பது திண்ணம்.

கொன்றை (Indian Laburnum)

"பொன்னார் மேனியனே புலித்தோலை
அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை
அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே"

- சுந்தரர், தேவாரம்

சரஞ்சரமாக மஞ்சள் நிறத்தில் பூத்துக் குலுங்கும் கொன்றை மலர் சிவபெரு மானுக்கு மிகவும் உகந்தது. இப்பூவின் வடிவமே சிவபெருமானின் முகவடிவம்போல் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. வியாழக்கிழமைகளில் இப்பூவை குரு மற்றும் தட்சணாமூர்த்தி வழிபாட்டிற்குப் பயன்படுத்துவது சிறந்ததாகும்.

நாகலிங்க மரம் (Cannon ball tree)

சிவபூஜைக்கு மிகச்சிறந்த பூவாக நாகலிங்கப்பூ திகழுகின்றது. தோற்றத்தில் ஐந்து சிரசோடு நாகமொன்று இருப்பது போலவும், இப்பூ

காட்சி தருவதால் நாகலிங்கம் என்று பெயர் பெற்றது. அரச மரத்தடியில் அமர்ந்து ஆசி வழங்கும் பிள்ளையார் போல நாகலிங்க மரத்தடியிலும் பிள்ளையாரை வைத்து வழிபடுவது வழக்கத்தில் உள்ளது.

செண்பகம் (Magnolia Champaca)

"வருந்திவா னோர்கள்வந் தடையமா நஞ்சுதான்
அருந்திஆர் அமுதவர்க் கருள் செய்தான்
அமருமூர் செருந்திப் பூ மாதவிப் பந்தர்வண்
செண்பகம் திருந்திநீள் வளர்பொழில்
தென்குடித் திட்டையே"

- திருஞானசம்பந்தர், தேவாரம்

முருகப்பெருமானுக்கு உகந்த பூவாக செண்பகப் பூவைச் சொல்லலாம். நறுமணத்தோடு மஞ்சள் மற்றும் வெள்ளை நிறங்களில் இப்பூக்களைக் காணலாம். இதன் இலை, பூ, விதை, வேர், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையவை. காய்ந்த செண்பக மொட்டு யாகங்களுக்குப் பயன்படும்.

நெல்லி (Indian Gooseberry)

காய், இலை, குச்சி ஆகிய நெல்லி மரத்து அனைத்துப் பகுதிகளுமே பூஜைக்கு மட்டுமின்றி பல நோய்களைத் தீர்க்கும் சிறந்த நிவாரணியாக அமைகிறது. ஒரு ஏழைப் பிராமணர் தன்னிடமுள்ள ஒரே நெல்லிக்கனியை ஆதிசங்கரரிடம் தானமாக வழங்க மனம் பூரித்துப்போன ஆதிசங்கரர் மஹாலட்சுமியை நினைத்துத் துதிபாட திருமகள் அருளால் தங்க நெல்லிக்கனிகளாகக் கொட்டியது. இது ஆதி சங்கரரின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு முக்கிய சம்பவமாகும்.

விளாம்பழம் (Wood Apple, Elephant)

ஆலயங்களில் இருக்கவேண்டிய முக்கிய மரங்களுள், விளாமரமும் ஒன்றாகும். விளாம்பழம் கணபதி ஹோமத்திற்கும் பஞ்சாமிருதம் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. பல சத்துகள் நிறைந்த இப்பழ மரம் நம் ஆலயத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பலாமரம் (Jackfruit)

முக்கனிகளில் ஒன்றான பலா மிகவும் சுவை மிகுந்த பழமாகும். பஞ்சாமிருதத்தில் பலாப் பழத்தின் சுவையே தனிச் சுவைதான். இம்மரத்தின் குச்சிகள் ஹோமங்களுக்கும் ஆலய மரவேலைகளுக்கும் பலா மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மாமரம் (Mango tree)

அனைத்து மங்கல காரியங்களிலும் மாவிலைத் தோரணத்தை நாம் வாசற்காலில் கட்டுவது வழக்கமாகும். இம்மரத்தின் ஒவ்வொரு பகுதியும் ஆலய வழிபாட்டிற்குப் பயனுள்ளதாக அமைகிறது. இலை தோரணம் மற்றும் கும்ப அலங்காரத்திற்கும், குச்சிகள் ஹோமங்களுக்கும், மாம்பழங்கள் இறை வழிபாட்டிற்கும் பயன்படுகின்றன. முருகன் ஆலயங்களில் மாமரம் தனிச் சிறப்பைப் பெறுகிறது. போரின் இறுதிக் கட்டத்தில் சூரபத்மன் மாமரமாக உருவெடுக்கின்றான். இந்த அசுரனை வீழ்த்த முருகப்பெருமான் தனது வேல் ஆயுதத்தால் மாமரத்தை இரண்டாகப் பிளக்க, ஒன்று மயிலாகவும் மற்றொன்று சேவலாகவும் மாறுகிறது என்று கந்தபுராணம் கூறுகிறது.

கல்யாண முருங்கை (Coral tree)

தன் பெயரிலேயே "கல்யாணம்" என்ற சொல்லைத் தாங்கி நிற்கும் இம்மரம், இந்துத் திருமணங்களில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. இம்மரத்தை இந்திரனுக்கு சமமாகவே திருமணங்களில் வைக்கிறார்கள். இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் இருப்பதுபோல் இம்மரத்தில் உள்ள முட்களை உடைத்தால் அவை கண்களைப்போல் காட்சிதரும். உடல் எடையைக் குறைக்க கல்யாண முருங்கை இலைகளைக் காலையில் உண்பது நல்ல பலனைத் தரும்.

தென்னை மரம் (Coconut)

ஒரு தென்னை மரத்தில் பயனில்லாத பாகமே இல்லை. அவற்றின் முக்கிய பயன்பாடுகள் கீழ்வருமாறு.

தேங்காய் - பூசைகளுக்கும் சமையலுக்கும் பயன்படுகிறது.
இளநீர் - அபிஷேகம், பருகும் நீர்
தென்னம்பூ - கேரள மக்களின் சமய சடங்குகளில் முக்கிய இடம் பெறுகிறது.
தென்னங் குருத்து - தோரணம்
தென்னங்கீற்று - பந்தல் அலங்கரிப்பு, கூரைகள் அமைக்க, துடைப் பங்கள் செய்ய
மரத்துண்டு - பாலம், கட்டுமாணப் பணிகளுக்குப் பயன்படுகிறது.

வாழை (Banana tree)

அனைத்து இந்து சமயச் சடங்குகளிலும் வாழை மரம் முக்கிய பங்கை வகிக்கிறது. வாழையைப் போல் குலம் தழைத்து வாழவேண்டும்

என்று பெரியோர்கள் வாழ்த்துவதுமுண்டு. இலை, பூ, பழம், தண்டு என்று ஒரு வாழைமரத்தின் அத்தனை பாகங்களும் பயனுள்ளவையாகும்.

மாதுளம் (Pomegranate)

"ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு வார்க்கு ஒரு தீங்கில்லையே"

- அபிராமி அந்தாதி

மாதுளம் பழம் மட்டுமின்றி இதன் இலையும் இறைவழிபாட்டிற்கு உகந்தது. விநாயகர் விரதப் பூஜையில் பயன்படுத்தப்படும் இருபத்தொரு இலைகளில் மாதுளை இலையும் ஒன்றாகும். பல சத்து நிறைந்த மாதுளைச் செடிகளை மனைகளில் நட்டுவைப்பது சிறந்ததென வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

பவளமல்லி (Night - flowering Jasmine)

இப்பூவை பூலோக பாரிஜாதம் என்றும் அழைப்பர். பூஜைக்கு உகந்த பூவாக இருப்பினும் கலைமகள் சரஸ்வதிக்கு மட்டும் இப்பூவை வைத்து வழிபடுதல் கூடாது என்று ஆகமங்கள் கூறுகின்றன. இரவில் மலர்ந்து விடியலில் உதிரும் இப்பூவிற்கு ஒரு புராண வரலாறும் உண்டு. இந்திரன் தோட்டத்திலிருந்து பகவான் கிருஷ்ணர், இந்திரன் அறியாவண்ணம் இச்செடியை எடுத்து வந்ததால் இந்திரனின் சாபமாக இரவில் பூத்து விடியுமுன்னே உதிர்ந்தும் விடுகிறது.

செவ்வரளி

செவ்வரளியால் துர்க்கை மற்றும் பைரவரை அர்ச்சிப்பது சிறப்பு. சிவப்பு நிறம் மட்டுமின்றி இளஞ்சிவப்பு, வெள்ளை மற்றும் மஞ்சள் நிறங்களிலும் இப்பூக்களைக் காணலாம்.

எறுக்கம் (Crown Flower)

இம்மலர் இரண்டு வர்ணங்களில் இருப்பினும் வெள்ளை எறுக்கம் மட்டுமே பூஜைக்குப் பயன்படும். விநாயகருக்கு ஏற்ற பூவாக இருப்பினும் பெருமாளுக்கு இப்பூவால் அர்ச்சிக்கக்கூடாது. எறுக்கம் வேரால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை பெரும்பாலான இல்லங்களில் நாம் காணலாம். எறுக்கன் வேரு மட்டுமன்றி எறுக்கம் தண்டில் இருந்து

உரித்தெடுக்கப்படும் நாரைத் திரித்து உருவாக்கப்படும் கயிற்றை சிறு பிள்ளைகளின் இடுப்பில் அணிவிப்பதும் வழக்கத்தில் உள்ளது.

நந்தியாவட்டை (Crape Jasmine)

வெண்மை நிறத்தில் பூக்கும் இம்மலர் கண் நோய்க்கு சிறந்த நிவாரணியாகும். சிவபெருமானுக்கு முக்கியமாக சிவராத்திரி அன்று நடாத்தப்படும் பூஜையில் இம்மலர் முக்கிய பங்கை வகிக்கிறது. எனவே பெரும்பாலான கோவில்களில் இம்மலர்ச் செடிகளைக் காணலாம்.

தாமரை (Lotus - Nelumbo nucifora)

தாமரை என்றால் நம் நினைவுக்கு வருவது திருமகள்தான். சேற்றில் முளைத்த செந்தாமரைபோல் நம் மனமும் சற்றும் மாசு அன்றி இறைவனையே சதா நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வை விளக்கத்தான் நமது ஆலய அமைப்பில் தாமரை முக்கிய இடம்பெற்றுள்ளது. தாமரை பூஜைக்குப் பயன்படுவதுமட்டுமன்றி அதன் தண்டின் நாரில் இருந்து திரிக்கப்படும் திரி விளக்கேற்றவும், அதன் கிழங்கு பல நோய்களுக்கு மருந்தாகவும் அமைகிறது.

தும்பை (Leucos Aspera)

உருவத்தில் மிகச் சிறியதாக இருப்பினும் வெள்ளை நிறத்தில் பூக்கும் தும்பை மலர்கள் விநாயகர் வழிபாட்டிற்கு மிகச் சிறந்தவை. அது மட்டுமன்றி கேரளமாநிலத்தில் ஓணம் பண்டிகையன்று பெண்கள் கோலங்களில் இம்மலர்களைத் தூவுவதும் வழக்கம். பகவான் கிருஷ்ணருக்கும் தும்பை மலர் ஏற்றதாகும்.

துளசி (Holy basil)

மகாவிஷ்ணு வழிபாட்டில் துளசி முதலிடத்தைப் பெறுகிறது. மருத்துவ குணம் வாய்ந்த இத்துளசியை ஒவ்வொரு வீடுகளிலும் "துளசி அம்மா" என்று மாடத்தில் வைத்து வழிபடுவதும் உண்டு. நாளுக்கொரு துளசி இலையை உட்கொண்டு வந்தால் ஜலதோஷம் மிக விரைவில் குணமடையும். அத்துணை சிறப்பு வாய்ந்த துளசியை விநாயகர் சதுர்த்தியன்று மட்டுமே விநாயகருக்கு வைத்து வழிபடலாம். மற்ற நாள்களில் விநாயகருக்கு துளசி வழிபாடு கூடாது.

கார்த்திகை மாதம் சுக்ல பட்சம் துவாதசி அன்று துளசி பூஜை செய்வது சிறப்பு.

அறுகம்புல் (Bermuda Grass)

அறுகம் புல் என்றாலே விநாயகப் பெருமானின் ஞாபகம்தான் நமக்கு வருகிறது. பிள்ளையார் சுழிபோட்டு மங்கல காரியங்களைத் தொடங்குவதுபோல, மஞ்சளோடு சேர்ந்த அறுகம்புல் இல்லாத சுபகாரியங்களே இல்லை எனலாம். பிரதோஷகாலங்களில் அறுகம்புல்லை நந்தி பகவானுக்கு சாற்றுவது சிறந்தது. ஆனால், சக்தி வழிபாட்டிற்கு அறுகம் புல் ஏற்றதல்ல. வழிபாட்டிற்கு மட்டுமன்றி அறுகம்புல் சாறும் உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்த மூலிகைப் பானமாகத் திகழ்கிறது.

நித்தியகல்யாணி

இந்த பூச்செடி இல்லாத இந்து சமயத்தவர்களின் வீடுகளே இல்லை எனலாம். கோயில்களிலும் வீடுகளிலும் பூஜைக்கு மிக எளிதில் கிடைக்கக்கூடியதாக நம் நாட்டில் இப்பூ விளங்குகிறது.

சிவஶ்ரீ வ. உமாசுதக் குருக்கள்
பிரதமகுரு,
மயிலணி கந்தசுவாமி கோவில்

❋ ❋ ❋

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னும் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தாந்தன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே.

பகவத்கீதையில் காணப்படும் இந்து வாழ்வியலின் அறநெறி விழுமியங்கள்

உலகினைத் தாங்குவதும் நிலை நிறுத்துவதும் எதுவோ அதுவே தர்மம் என வேதங்களால் சிறப்பிக்கப்படும். அறமானது இந்துமதம் எனும் விசாலமான கட்டிடத்தை தாங்கி நிற்கும் தூண் என்றே கூறலாம். இந்துமதம் ஒரு வாழ்வியல் நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலுக்குத் தடையாக இருப்பவை. பற்றும், சுயநலமும் உலகப்பற்றை விடவேண்டுமானால் கற்பனை கடந்த சோதியான நம் பரம்பொருள் மீது பற்றுவைக்க வேண்டும். அப்போதுதான் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். இந்து திருநூல் வரிசையில் சிறப்பிடம் பெறுவது பகவத்கீதையாகும். இது பிரஸ்தான திரயங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. அதாவது இந்துதர்மத்தின் ஆதார நூல்களாக உபநிடதம், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் எனும் மூன்று பிரஸ்தான திரயங்களும் கருதப்படுகின்றன. இவற்றுள் பகவத்கீதை இதிகாசங்களுள் ஒன்றாகிய மகாபாரதத்தில் 25-42 வரையுள்ள பதினெட்டு அத்தியாயங்களில் அமைந்துள்ளன. அந்த வகையில் இப்பகவத்கீதையானது பல்வேறு அறப்பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

கீதையின் காலத்தைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. மகாபாரதம் எழுதியவராலேதான் அதன் ஒரு பகுதியாக அமையும் கீதை எழுதப்பட்டது எனப்பலர் குறிப்பிடுகின்றனர். எனவே கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 4 நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட நூல் எனக் கொள்ளப்பட்ட இதிகாச காலத்திற்குரியது கீதை என்பது பொதுவான கருத்து. மேலும் கீதை உபதேசிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை நோக்கும்போது மகாபாரதப் போரிலே துரியோதனன் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்வதற்கு வந்த அருச்சுனன் எதித் தரப்பில் நின்ற தனது உறவினர் களையும் குருமார்களையும் நண்பர்களையும் கண்டு; இவர்களை யெல்லாம் கொல்ல வேண்டும் என கலக்கம் அடைகிறான். இந்நிலையிலே அருச்சுனனுக்கு ஏற்பட்ட கலக்கத்தைத் தெளிவித்து துக்கத்தை நீக்குவதற்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவால் உபதேசிக்கப்பட்ட போதனையே கீதையாகும். இங்கு கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் என நான்கு யோகங்கள் சிறப்பானவை. யோகம் என்பதற்குப் பலவித விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. மனதின் பண்பாடு யோகம் என்று கொள்ளப்படுகின்றது. ஆகவே மனம் தளர்ச்சியடைவோருக்கும் துயருறுவோருக்கும் யோகம் இல்லை என்பதும்

கருதப்படுகின்றது. இன்னோர் இடத்தில் செயலில் திறமை வாய்க்கப் பெற்றிருப்பது யோகம் என்றும்; நாம் வலியத் தேடிக்கொண்ட வருத்தங் களிலிருந்து விடுபடுவது யோகம் என்றும் கொள்ளப்படுகிறது. இக்கீதையானது கடமை புரியும். மக்களுக்கு வழிகாட்டியாகவும் இருள்நீக்கும் அறிவொளி யாகவும் மனக்கவலைக்கு மருந்தாகவும் சாதி, சமய பொது நீதியாகவும் ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவும் சிறந்த நூலாகவும் அமைகிறது.

அந்தவகையில் இக்கீதையில் கூறப்படும் நான்கு யோகங்களையும் படிமுறை வரிசையில் பார்த்தால் அவற்றினை அரும்பு, பிஞ்சு, காய், கனி என்று வகைப்படுத்தலாம். இந்த நான்கினையும் நுணுகி ஆராய்வதன் மூலம் அவற்றிடையே எந்தவித வேற்றுமைகளையும் காணமுடியாதிருக்கின்றது. வாழ்க்கை என்னும் ரதத்திற்கு நான்கு குதிரைகள் பூட்டப்படுகின்றன. ஒரு ரதம் விரைந்து ஓடுவதற்கு நான்கு குதிரைகளும் சேர்ந்து உழைக்க வேண்டும் . அதே போல வாழ்க்கை என்னும் ரதம் நன்றாக செயற்பட வேண்டுமானால் இந்த நான்கு யோகங்களும் ஒரே காலத்தில் செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் வாழக்கையின் இறுதி இலட்சியம் நிறைவேறுகின்றது.

பாவம் கர்மமாகவும் புண்ணியம் தர்மமாகவும் மாறுகின்றதெனில் கர்மமா? தர்மமா? என்பதே மகாபாரத்தில் போராட்டமாகவும் பகவத்கீதையின் யோதனையாகவும் அமைய வேண்டியதாயிற்று. அதனால் கர்மம், தர்மம் இரண்டிலுமே பற்றுவிட்டவன் பற்றற்ற தருமவானின் இருப்பிடத்திலே விடுதலை அடைவான் என்பதும் இந்து தர்மத்தின் உயர் இலட்சியமாயிற்று. ஆதலால் கடமையைச் செய் பற்றுவைக்காதே என்று கீதை உபதேசித்தது.

கீதையின் முதலாவது அத்தியாயம் முழுவதும் வாழ்க்கை யினுடைய தத்துவம் போதிக்கப்படுகிறது. இங்கு மனிட சரீரமே குருஷேத்திரம். ஏனெனில் அது ஒவ்வொரு ஜீவனுக்கும் தர்ம ஷேத்திரம் ஆகின்றது. அவரவர் வினையை நல்வினையாக்குவதற்கு உரிய இடமே உடலாகும். இங்கு பாண்டவர்கள் நல்லியல்புக்கு எடுத்துக் காட்டாகவும் கௌரவர்கள் தீய இயல்புக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றனர். எனினும் இரு பிரிவினரும் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பிரபஞ்ச வாழ்க்கை ஒரு முடிவில்லாப் போராட்டம் இங்கு எதனைப் பெற வேண்டுமானாலும் உயிர்கள் அதன் பொருட்டுப் போராடியே ஆக வேண்டும். போர் புரியத் தெரியாதவர்களுக்கு இவ்வுலகிலும் வேறெவ்வுலகிலும் எதுவுமே அகப்படாது என்றும் உயரிய

நெறியினைக் கீதை புகட்டுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு பொருளில் தேவை ஏற்படுமிடத்து அதைப் பொறுத்தவரை போராட்டமே நடைபெறுகின்றது. இது உலக நியதியாகும். இதேபோன்று யுத்தமாக உள்ள வாழ்க்கையை மனிதன் எத்தகைய பாங்குடன் பிரவேசிக்க வேண்டும் என கீதை விளக்குகின்றது. இவ்வகையில் வாழ்க்கை எனும் போராட்டத்திற்கு மனிதன் தகுதியுடையவன் ஆக வேண்டும் என கீதையின் உபதேசமாகும். வாழ்க்கை எனும் போராட்டத்திற்கு மனிதன் தகுதியுடையவன் ஆக வேண்டும் என்பதனாலேயே இந்நூல் போர்க்களத்தில் உபதேசிக்கப்படுகிறது.

வலிமை படைத்தவனே வாழ்விற்குரியவன் எனக் கீதை புகட்டுகிறது. அதாவது இம்மை, மறுமை இரண்டிற்கும் உறுதுணையாக இருப்பது வலிமை ஆகும். இவ்வலிமையே உயிரை வளர்க்கின்றது மெலிவு உயிரைத் தேய்க்கிறது. எனவே ஒருவன் ஆன்ம போதத்தைப் பெறுவதற்கு வலிமை அவசியமாகும் என்பதைக் கீதை தெளிவாக்குகிறது. கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கி; உனக்குக் கடமை செய்வதில் மட்டுமே உரிமை உண்டு. காரியத்தின் முடிவும் பயனும் உன் உரிமை அன்று, பலனிலே பற்று வைத்து எச்செயலும் செய்யாதே எனக் குறிப்பிடுகின்றார். கர்ம யோகியைப் பொறுத்தவரை செயலை ஒரு கருவியாகக் கொள்ளாமல் அதனை முடிவான பயனாகக் கொள்ள வேண்டும் எனச் சிறந்தவொரு அறப்பண்பினை கீதை கூறி நிற்கின்றது. அதாவது உயிர்கள் எதைப் பெற நினைத்தாலும் அதற்காக போராட வேண்டி இருக்கிறது. ஒரு உயிரை எதிர்த்து இன்னொரு உயிர் போராடித்தான் வாழ வேண்டும் என்பது வாழ்க்கை நியதி. ஆனால் அந்தப் போராட்டம் சத்தியமும் தர்மமும் கொண்டதாக இருக்க வேண்டும் எனத் தெளிவுபடுத்துகிறார். போராட்டத் தில் தோற்றுப் போகும் இனங்கள் காலப்போக்கில் அழிந்து போகின்றன. இது போலவே போராடத் தெரியாத மனிதனும் உலக வாழ்க்கைக்குப் பொருத்தமில்லாதவன் ஆகிவிடுகின்றான் எந்த ஜீவராசியும் எல்லாவற்றி லும் போராடி வெற்றி பெற முடிவதில்லை. ஆனால் போராடுவது வாழ்க்கையில் தவிர்க்க முடியாதது ஒன்று போராட்ட மில்லாமல் முன்னேற்றமில்லை. ஆகவே வாழ்க்கையில் இந்தப் பேருண்மையை கீதையூடாக பகவான் காட்டுகிறார்.

அடுத்து, பாண்டவர்கள் நல்லியல்பின் பிரதிநிதியாகவும் துரியோதனன் முதலியோரைத் தீய இயல்புகளின் பிரதிநிதியாகவும் சித்தரிக்கப்படுவதுடன் பாண்டவர் ஐவர் என்பது நல்லியல்பு எண்ணிக்கையில் குறைவு என்பதையும் துரியோதனன் முதலியோர்

நூறுபேர் என்பதிலிருந்து கேடு உடையவன் எண்ணிக்கையில் அதிகம் என்பது தெளிவுறுகின்றது. மேலும் துரியோதனனும் அருச்சுனனும் கிருஷ்ணரிடம் உதவி கோரிச் சென்றபொழுது அங்கு நிகழ்ந்த சம்பவங்களில் பல உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. இருவருக்கும் உதவி புரிவதாக கிருஷ்ண பரமாத்மா வாக்களித்திருந்தார். ஆனால் அவர்கள் பெற்ற உதவிகளோ பெரிய வித்தியாசம் காணப்பட்டது. அருச்சுனன் வெற்றிதோல்வி பற்றி சிந்திக்கவில்லை. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்று நினைத்து பகவானைத் தன் பக்கம் இருக்குமாறு வேண்டி நிற்க துரியோதனனோ உண்மை நிலையை உணராமல் படைப்பலத்தால் வெற்றிபெற முடியுமென நினைத்து படைகளைக் கேட்கிறான். அடுத்து ஒரு செயலை செய்யும்போது அதன் வெற்றி தோல்விகளைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. கீதையில் அருச்சுனன் நிலையும் அதுதான் துரியோதனன் தான் புரிந்த அதர்மங்களை முறியடிக்க குருஷேத்திர போர்க்களத்திற்கு வந்தான். வந்தபிறகு தனது செயலில் உலகியல் விளைவைப் பற்றி எண்ணிப் போர் புரியத் தயக்கம் காட்டுகிறான். இவ்வாறு நடைமுறை வாழ்க்கையை சீர்ப்படுத்தவல்ல கருத்துக்களைக் கூறும் கீதை இந்நிலை ஏற்படக்கூடாது என்றுதான் "கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே." எனத் தெளிவாகக் கூறுகின்றது.

மேலும் இக்கீதை அறம் பற்றிய தனது சிந்தனையில் ஆன்மாவின் இலக்கணம் பற்றிக் கூறியுள்ளது. ஆன்மா அழிவற்றது. உடல் அழியக்கூடியது. நித்தியமாய் அழிவற்றதாய் அளப்பரியதாய் உள்ள ஆன்மாவின் இவ்வுடல்கள் யாவும் அழியும் தன்மையுடையவை. பிறத்தல், இறத்தல், வளர்தல, மாறுதல், தேய்தல், மாய்தல் என ஆறுவித பாபவிகாரங்கள் உடலுக்குண்டு. ஆனால் ஆன்மாவுக்கு இத்தகைய விகாரம் இல்லை எனப் பலவாறாகக் கீதை கூறுகின்றது. பிறப்பு பற்றியும் கீதை தெளிவாகக் கூறுகிறது. எவ்வாறு ஒரு மனிதன் பழுதடைந்த ஆடைகளைக் களைந்துவிட்டு வேறு புதிய ஆடைகளை அணிந்து கொள்கிறானோ அவ்வாறே தேகத்தை உடைய ஆன்மாவானது பழைய சரீரங்களை நீக்கிவிட்டுப் புதியனவற்றைப் பெற்றுக் கொள்கிறது. இவ்வாறு புதிய பிறப்புக்கு ஏதுவாக அமைவன வினைகளேயாம். இக்கருத்து அருச்சுனனது மனதைத் திருப்திப் படுத்த கிருஷ்ணனால் கூறப்படுகின்றது. ஒருவன் நான் கொல்கிறேன் என எண்ணுவதும், கொல்லப்படுகிறேன் என எண்ணுவதும் இரண்டும் அறியாமையே ஆகும். உயிரானது கொல்வதுமில்லை கொல்லப்படுவதுமில்லை. இது பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பாற்பட்டது என்றும் நிலையான பொருள்

இது மரணம் அடைவதில்லை எனக் கீதை கூறுகின்றது. பிறந்தவன் இறப்பதும் இறப்பவன் பிறப்பதும் உறுதியெனின் விலக்க முடியாத இவ்விடயத்தில் மக்கள் வருந்துவது பொருத்தமாகாது. ஒருவன் முத்தியடையும் வரை இந்நிலை தொடரும் பற்றுக்கு ஆளாகியிருக்கும் வரை பிறப்பதும் இறப்பதும் இயல்பு என்பதும், வினையடியின்படி வருகின்ற மரணத்தை தடுக்க யாருக்கும் இயலாது என்பதும் உணர்த்தப்பட்டு பற்றற்று இருத்தல் வேண்டும் எனும் சிறந்த அறப்பண்பைத் தெளிவுறுத்துகிறது.

நடுவுநிலமை என்ற அறப்பண்பினையும் இக்கீதை கூறுகின்றது. அதாவது உள்ளத்தில் நடுவுநிலையோடு நிற்கும் ஞானிகள் வினைப்பயனை விட்டொழித்து பிறவித்தளை நீக்கி கேடில்லாத பெருநிலையை அடைகின்றனர். மனதில் எழுகின்ற ஆசைகளை அகற்றி ஆத்ம திருப்தி அடைந்திருப்பவன் ஸ்திதப் பிரக்ஞன் என்று கீதை குறிப்பிடுகின்றது. நன்மையும் தீமையும் கலுந்துள்ளது. உலகம் பற்றுடையார்க்கு அது இன்ப துன்பத்தை விளைவிக்கிறது. பற்றற்ற ஞானி அத்தகைய விளைவுகளுக்கு ஆட்படுவதில்லை. எவன் பற்றற்றவனாய் நன்மை சேரும்போது மகிழ்ச்சி அடையாமலும் கேடு வரும்போது துயரடையாமலும் இருக்கின்றானோ அவனுடைய அறிவு உறுதி பெறுகின்றது என்பது கீதையின் போதனையாகும்.

மேலும் பற்றின்மை பற்றிக் கூறும்போது பற்றை அறுத்து ஆசைகளை அடக்கி ஆன்மாவில் திருப்தி அடைபவன் இன்பத்தில் பெருமையடையாது துன்பத்தில் மனம் உடையாது ஐம்புலன்களை அடக்கி ஆளும் வீரனாகின்றான். இதுவே கீதை காட்டும் நிறை ஞானியின் இலட்சணமாகும்.

கீதையின் 3ஆவது யோகம் கர்மயோகம். செயலைச் செய்து கொண்டே அதன் பலனில் பற்று வைக்காது இருத்தலைக் குறிக்கின்றது. சுயநலம் அற்றநிலையில் புரியும் கருமம் கடவுளை அடையும் மார்க்கம் என கீதை கூறுகிறது. இந்நிலையில் நிறைஞானி அடைவதும் ஒரே விதமான பரிபூரண முக்தியாகும். ஒரு செயலை செய்யும்போது அதன் பலனில் பற்று வைப்பது மனித இயல்பு. பலனில் பற்று இல்லாவிட்டால் செயலூக்கம் ஏற்படாதே என்ற வினா இங்கு எழும் இதற்கு கண்ணன் கூறும் விளக்கம் எந்த ஒரு செயலுக்கும் பலன் ஒன்று இருந்தே தீரும். பலனை எதிர்பாராதே என்பது விளைவு மட்டுமே என எதிர்பார்க்காது இருப்பதும் ஆகும்.

இங்கு கிருஷ்ணன் கூறுவதாவது "எல்லாக் கருமங்களையும் எனது கருவியாகக் கொண்டு செய்வாயாக, பலனை எனக்கே அர்ப்பணித்து விட்டு என்னை சரணடைவாயாக நான் சகல பாவங்களில் இருந்தும் உன்னை விடுவிக்கிறேன்" இது அருச்சுனனுக்கு மட்டுமன்றி சகல மனிதர்களுக்கும் கண்ணன் இடும் கட்டளையாகும். இவ்வாறு ஈஸ்வர அர்ப்பணமாக செயல்களை செய்யும்போது எமது மனச்சுமைகள் இறக்கி வைக்கப்படுகின்றன. இது நடைமுறையில் மனிதர் வாழ்வில் காணக்கூடிய ஒரு அம்சமாகும். இவ்வாறு கீதை சாங்கியம், கர்மம், பக்தி என்பவற்றைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது.

மேலும் கீதை பற்றின்மை பற்றிக் கூறும்போது ஒருவன் தனக்குரிய கடமைகள் அனைத்தும் பற்றுப் பகையின்றி திறம்படச் செய்தலே மேலானது எனவும், செய்யும் செயலின் பயனில் பற்று வைக்காது அந்தப் பற்றையே துறந்து விடு. உன் செயலைத் துறவாதே. சும்மா இருந்து விடாதே எனவும் கற்பிக்கின்றது. எந்த நிலையில் வாழ்பவனும் தன் ஸ்வதர்மத்தை செவ்வனே பூரணமாகச் செய்து அதாவது சமநிலையினின்று தன் கர்மத்தைச் செய்து கொண்டே சென்றால் அவன் தன் வாழ்வின் இலக்கான வீட்டின்பத்தை இயல்பான நெறியிற் சென்று பெறுப வராகிறான். இதனைக் கண்ணபிரான் ஒருவன் பிறனொருவனது தொழிலைத் திறம்படச் செய்தலை விட; தன் கடமையைச் சீருடன் செய்வது மேன்மையுடையது என்று குறிப்பிடுகின்றார். எல்லாச் செயல்களையும் இறைவனுக்கென்று சமர்ப்பித்துவிட்டு பற்றுதலின்றி எவன் தொழில் செய்கிறானோ அவனைப் பாவம் தீண்டுவதில்லை ஒருவனுக்குப் பற்றின்மை ஏற்படும்போது அவனுக்கு ஏனையோரில் பொறாமையும் சஞ்சலமும் கொள்ள வழியில்லை. தன் செயல்களுக்கு இடையூறாக நிற்கும் எண்ணத்தால் அவன் பிற உயிர்களுடன் முரண்பட மாட்டான். சமுதாயத்தில் ஒட்டுமொத்த நலனுக்காக தனிமனிதன் தன்னை முழுமையாக ஒப்படைக்க வேண்டும் என்பதே கீதையின் சாராம்சம்.

அடுத்து கீதை துறவி எனும் சிறந்த அறப்பண்பையும் கூறி நிற்கின்றது. அதாவது துறவு என்பது உள்ளத்தில் ஆசாபாசங்களைத் துறத்தலையே அது முக்கியமாகக் சுட்டுகின்றது என்பதைக் கீதைக் கண்ணன் விளக்கியுள்ளார். அதாவது அருச்சுனன் தன் வர்ணத்திற்கேற்ப அவன் அனுட்டித்து வந்த சத்திரிய தர்மத்தையே கடைப்பிடித்து வாழ்ந்து கொண்டு நாட்டைத் துறந்து காட்டில் போய் தவம் செய்து பெறும்

பயனை நாட்டில் இருந்து கொண்டே அடைவிக்க வல்ல புதுவழியைக் கண்ண பரமாத்மா அறிமுகம் செய்தார்.

ஆன்ம ஈடேற்றத்தை அடைய விரும்புவோனுக்கு முக்கியமான சாதனம் அவனது சொந்த மனமே ஆகும். "தன்னைத் தானே வென்றவன் தனக்குத் தானே நண்பன் தன்னைத்தான் ஆளாதவன். தனக்குத் தானே பகைவன் என்று கீதை குறிப்பிடும். இங்கு உள்ளப் பகையே பகை புறப்பகையன்று என்ற இக்கருத்து மானிட வாழ்க்கையில் இன்றியமையாது சிந்திக்கத் தக்கது. மேலும் பிறருக்குத் தீங்கு இழைக்கும் பொருட்டு அவரை வெறுத்துக் கொண்டும் பகைத்துக் கொண்டும் இருப்பவர்கள் இறுதியில் தாமே அழிந்து விடுவார்கள்.

மேலும் இப் பகவத்கீதை சந்நியாசநூலன்று அதாவது வீடு, மனைவி, மக்கள் சுற்றத்தைத் துறந்து விட்டு சந்நியாச நெறியில் செல்லும்படி கீதை கூறவில்லை. அது கடமையையே வற்புறுத்துகின்றது. இவ்வகையில் ஒவ்வொருவரும் தங்களுக்கு வாழ்வில் இயல்பாக அமைந்துள்ள கடமையைச் சரிவரச் செய்வதே வாழ்க்கையின் மிக உயர்ந்த தர்மம் என்ற கொள்கையை அழுத்தமாக உபதேசிக்கிறது. இத்தகைய கடமையைச் செய்ய முடியாமல் நிலைகுலைத்து போன மிகப் பெரிய வீரனான அருச்சுனனுக்கு இந்த தர்மத்தை மிகத் தெளிவாக அது வலியுறுத்துகின்றது. "அருச்சுனா சத்திரியனான நீ உன் கடமையாகிய போரைச் செய்" என்று கிருஷ்ணபரமாத்மா கூறுகின்றார். இது எமக்கு வாழ்க்கைப் போரை நடாத்தும் பண்பினை அறிவிக்கின்றது. நாம் வாழ்க்கையில் பல தடவைகள் சோம்பலாலும் கோழைத்தனத்தாலும் கடமைகளிலிருந்து விலகி எம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். மேலும் அர்ச்சுனா! எழுந்திரு இந்த மனத் தளர்ச்சியை பலவீனத்தை ஒழி - எழுந்து நின்று போர்புரி" என்று கண்ணபிரான் அருச்சுனனுக்கு கூறும் இவ்வார்த்தை மிகவும் கருத்து நிறைந்ததாகும். கடமைகளைச் செய்து வாழ்வதற்குரியது. துறப்பதற்கல்ல என்பது அதன் தொனிப்பொருள்.

தர்மம் பற்றி கூறும்போது தர்மஷேத்திரமாகிய குருஷேத்திரத் திலே தர்மம் என்ற சொல்லிலே ஆரம்பித்த கீதையானது எவனும் தன் ஸ்வதர்மத்தோடு மாறுபடாத கர்மத்தைச் செய்யும்படியே புகட்டுகிறது. இதனை "நான் கர்மத்திற்கு மாறுபாடாக காலமாக இருக்கிறேன்" என்று கீதாசரியர் கூறியுள்ளார். இங்கு அவர் லௌகீக சுகங்களை அனுபவிக்க விரும்புவோனுக்கும் தர்மத்தை அனுசரித்தே நீ மட்டாகச் சுகங்களை அனுபவி என்றே விளக்குகிறார்.

பகவத்கீதை ஒருவன் ஆன்மீக மேம்பாடடை விரும்பின் பிறப்பு, இறப்பு என்ற பெருங்கடலில் மூழ்காது தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். ஆத்மீக மேம்பாட்டிற்குத் தியானம் ஒரு சிறந்த சாதனையாக கீதை குறிப்பிடுகின்றது. மனதை தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி இறைவனிடத்தில் முத்தி நிறைவு பெறுகின்ற சாந்தி எய்துகிறான். இறைவனை அடைந்தவருக்கு மறுபிறப்பில்லை என்பது கீதையின் போதனை .அனைத்துத் தர்மங்களையும் இறைவனுக்கென்றே அர்ப்பணஞ் செய்து அவனைச் சரணடைதல் வேண்டும். அவ்வாறாயின் இறைவன் அனைத்து பாவங்களிலிருந்தும் எம்மை ஈடேற்றுவான் என்ற உபதேசம் ஆத்மீக விழுமியச் செந்நெறிக்கு மிகவும் உறுதுணையாக அமைவதாகும்.

ஒருவன் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்பதில் தெளிவுடையவனாக இருத்தல் வேண்டும். பிரார்த்தனை, பக்தி, தியானம், தொண்டு முதலியன எதுவுமின்றி உலக இன்ப துன்பங்களால் அல்லற்பட்டு ஒரு இலட்சியமின்றி வாழ்வது உண்மையான ஒரு இந்துவுக்குரிய வாழ்வாகாது. எனவே தான் எப்படியும் வாழ்ந்தால் போதும் என்றிருக்காமல் இப்படி வாழ்ந்து பார் நீ என்னை அடைவாய் என்று கண்ணன் கூறுகின்றான்.

"எவ்வுயிர்க்கும் வகையின்றி நட்புடையவனாய்
கருணை உள்ளத்தவனாய் நான் எனது அற்றவனாய்
இன்பதுன்பத்தை ஒரு நிலையாய் கொள்பவனாய்
பொறுமையும் என்றும் உவகையுமுள்ளவனாய்
யோக நாடியாய் அடங்கிய உள்ளத்தனாய் திட
உறுதியனாய் என்னில் மனம் புத்தி ஒப்பித்தவனாய்
என்பக்தன் எவன் உளன் அவன் எனக்கு பிரியன்"

என்றும்

"எவனால் உலகு துன்புறுவதில்லை" உலகால் எவன் அச்சம், சினம், உவகை மனக் கிளர்வுகளின்றும் விடுபட்டவனோ அவன் எனக்குப் பிரியன்" எனவும் அசுரக் குணத்தவர் பற்றிக் கூறுகையில் பகட்டு, செருக்கு, அகங்காரம், சினம், கொடுமை, அறியாமை, தூய்மையேனும் ஒழுக்கமேனும், வாய்மையேனும் காணப்படாமை எல்லாம் அசுர இயற்கைக்குப் பிறந்த வனுக்கு இயல்பாகின்றன என்றும் கீதை குறிப்பிடுகின்றது. எனவே மனிதன் இவ்வசுர குணங்களைத் தவிர்த்து சிறந்த ஒழுக்க நெறியிலும், நன்னடத்தையும், குணநலத்திலும் திளைக்க வேண்டும் என்பது புலப்படுகிறது. இவ்வாறு இறைவன் விரும்புகிறவர்களின் குணநலன்களையும் அசுரகுண நலன்களையும் அதனால் ஏற்படும் தீமைகளையும் காட்டி நிற்கும் கீதை இவ்வசுர

குணங்களிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை.

அதாவது ஆமை தன் அவயங்களை உள் இழுத்துக் கொள்வதைப் போல் எப்புறத்தும் விஷபதார்த்தங்களின்று புலன்களை ஒருவன் மீட்க வல்லவனாயின் அவனறிவே நிலை கொண்டது. அதாவது எங்கெங்கு மனம் சஞ்சலமாய் உறுதியின்றி உழலுகிறதோ அங்கங்கே அதை அதை மனிதன் அல்லல்படுவதற்கு முக்கிய காரணம் அவனது மனமாகும். எனவே அதை அடக்கிவிட்டால் அசுரகுணங்கள் அவனை அண்டாது என்கின்றது கீதை இந்துமதம் காட்டும் நன்னெறியில் நின்று வாழ்க்கையில் வெற்றியடைய உனக்குள் இருந்து உழலும் உன்னைச் சிறைப்படுத்திக் கொள் என்பது கீதையின் ஆணித்தரமான போதனையாகும்.



கீதையில் குறிப்பிடப்படும் வர்ணதர்மம் முக்கியமான இடத்தைப் பிடிக்கின்றது. அதாவது "நான்கு வர்ணத்தையும் நான் தான் வகுத்துள்ளேன்" எனக் கீதையில் கண்ணன் குறிப்பிடுகின்றார். உயிர்களின் மானிடனின் அறிவுநிலையை ஆராய்ந்து அதற்கேற்ப அவர்களுக்குத் தொழில் முறைகளை வகுத்தளித்ததாகக் கண்ணபிரான் மொழிகின்றார். அதாவது வர்ணாச்சிரம தர்மம் என்பது வலிந்து மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்றல்ல மக்களின் அளவு இயல்புகளுக்கேற்ப யாருக்கு எந்தெந்த விதமான தொழில்முறை பொருத்தமாக இருக்குமோ அவ்வாறே வகுக்கப்பட்டது என்பது கிருஷ்ணனின் அருள் மொழி கீதை தரும் விளக்கப்படி பார்க்கின்றபோது அறிவு, ஆற்றல், சிந்தனை, செயல்முறை போன்றவற்றில் இன்ன இயல்பு கொண்டவன். இந்தத் தொழிலைச் செய்வது சிறப்பாக இருக்கும் என்பதுதான் வர்ணாச்சிரம நெறிமுறை ஆகும். சஞ்சலமான மனிதனின் இயல்புநிலையை மாற்றி மனதை ஒருமுகப்படுத்தி தன்வசமாக்கி அதாவது மனத்தை அடக்கினாலன்றி புலன்வழி தோன்றும் இச்சைகளை ஒடுக்கி தீவிரமான கல்வி சாஸ்திர பயிற்சிமூலம் உயர்ந்த ஞானத்தைப் பெறுகிறான். வேதசாஸ்திர நெறிமுறைகளை கற்றல், கற்பித்தல் மக்களின் ஆன்மீக நெறி வளர உதவுதல் மக்கள் இறைவனை வழிபட உதவுதல் போன்ற செயல் முறைகளை பிராமணன் மேற்கொள்ள வேண்டிய தொழில்முறை எனக் கீதை கூறுகின்றது.

அதாவது இன்னின்ன தகுதிகள் தொழில் முறைகளைச் செய்வோன் இன்னின்ன வருணத்தான் என்று தான் கீதையில் விளக்கம் தரப்படுகின்றது தவிர இன்ன வகுப்பில் பிறந்தால் அவன் பிறந்த வருணத்தான் ஆகிவிடுவான் என்று கீதையில் கூறப்படவில்லை. அதுமட்டுமன்றி எந்த

வர்ணத்தான் உயர்ந்தவன் எவன் நடுத்தரமானவன், தாழ்ந்தவன் என்ற பேதங்கள் எல்லாம் கற்பிக்கப்படவில்லை. அந்தவகையில் கீதையில் வருணம் பற்றிய கருத்துக்கள் பல இடங்களில் வந்துள்ளன. அதாவது போரினை புரியும்படி கூறும்போது "இந்தப் போரை புரிவதனால் வர்ணக் குழப்பம் உண்டாகும் படி குலக்கேடர் செய்யும் இக்குற்றங்களால் ஜாதி தர்மங்களும் தொன்றுதொட்டுள்ள குல தர்மங்களும் எடுபட்டும் போகின்றன எனவும் "அகக்கரணத்தை அடக்குதல், புறக்கரணத்தை தயடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆஸ்திகம் இயல்பிலேயே பிராமண தர்மங்களாகும். சூரத்தன்மை ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறைமை இவை இயற்கையிலே தோன்றும் சத்திரிய தர்மங்களாகும்.

உழவு, பசுகாத்தல், வணிகம் இவை இயற்கையிலே பிறக்கும் வைசிய கருமங்களாகும் எனவும் கொண்டு புரிதல் சூத்திரனுக்கு அவனியற்கையில் ஏற்பட்ட தொழில் எனவும் குலதர்மத்தை இழந்தவர்கள் நரகத்தில் நெடிது வாழ்கின்றனர் எனவும் கீதையில் குறிப்பிடுகின்றது.

"பாவிகளென்னைப் பணிவாராயினும் பிற்பட்ட மாதரேனும்
வைசியரேனும் சூத்திரரேனும் பரகதி அடைவர்

அப்படியிருக்க தூய்மையார்ந்த அந்தணரும் ராஜரிஷிகளும் எனக்கு அன்பராயின் என்ன?" என்கிறார். மேலும் "குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களை சமைத்தேன் செயற்கையற்றவனும் அழிவற்றவனுமாகிய நானே சமைத்தேன்" என நான்கு வர்ணங்களை தானே சமைத்ததாக கூறுவது கழகத்தின் தொழில்சார் வளர்ச்சிக்கான அத்திவார மாகவே கொள்ளவேண்டும்.

அந்தவகையில் நீ வாழ வேண்டியவன். உன் வாழ்க்கைக்கு ஒரு நோக்கு உண்டு அதுதான் சமூகத்துக்கு நீ ஆற்ற வேண்டிய பணி. அந்தப்பணியைப் புரியும்பொழுது பந்தபாசங்களால் மயக்கமடையாதே கோழைத்தனத்தால் வாழ்க்கையை விட்டு விலகியோட முயலாதே இது கண்ணன் கீதையில் காட்டிய வழி.

"மேலோன் எதனைச் செய்கின்றானோ அதையே மற்ற மனிதன் பின்பற்றுவார். அவன் எதனைப் பிரமாண மாக்குகிறானோ அதையே உலகம் அனுசரிக்கிறது. பற்றுள்ளவராய் பாமரர் கர்மம் செய்வது போல் பண்டிதர் பற்றில்லாதவராய் பாரினில் பெருநெறி புகட்டுதற் பொருட்டு கர்மம் செய்ய வேண்டும். ஞானியானவள் கர்மப் பற்றுள்ள

அஞ்ஞானிகளிடத்து மனக்கலத்தை உண்டு பண்ணலாகாது எல்லா கர்மங்களிலும் தானே ஈடுபட்டுக் கொண்டு மற்றவர்களையும் ஈடுபடுத்த வேண்டும் பிரகிருதியின் குணங்களால் யாண்டும் கர்மங்கள் செய்யப்படுகின்றன. அகங்காரத்தால் மோகமடைந்தவன் நான் கர்த்தா என்று நினைக்கிறான். குணகர்மத்தின் தத்துவ ஞானியோ குணங்களில் பிரவர்த்திக்கின்றனவென்று அறிந்து பற்று வைப்பதில்லை. பிரகிருதியின் குணங்களால் மோகமடைந்து குணங்களின் தொழில்களில் பற்றுவைக்கின்றன. மந்த புத்தியினரை தெளிந்த அறிவுடை யோர் கலங்கும்படி செய்யலாகாது. தொழில் தர்மங்களை யெல்லாம் கற்பித்து சித்தத்தை சைதன்னியத்தில் வைத்து ஆசையையும் மமகாரத்தையும் அன்றி மனக் கொதிப்பின்றிப் போர் புரிவாயாக" ஸ்ரீ கிருஷ்ணரது இக்கோட் பாட்டை எம்மனிதர் சிரத்தையுடன் பொறாமைப்படாது பின்பற்று கிறார்களோ அவர்கள் கூட இரு வினையினின்று விடுபடுகின்றார்கள். நன்கியற்றப்படும் பரதர்மத்தைவிட குணமிலாத் தன் தர்மம் மேலானது. சுயதர்மத்தில் இறப்பது மேல் பிறர் தர்மம் பயன் தருவதாயினும் தாமதமாகும். ஒருவன் எப்படி வாழ வேண்டும். எப்படி வாழக் கூடாது என்பதற்கான பல்வேறு அறவிழுமியங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கீதை உயர்வானதொரு ஆன்மீக விழுமியத்தின் திறவு கோலாகும் என்பதில் ஐயமில்லை.

கலாநிதி கலைவாணி இராமநாதன்
ஓய்வுநிலைப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

❋ ❋ ❋

கடந்துநினின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணம்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க்கு அப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே.

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந்துஆர்ந்துஇருந் தான்அருள்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே.

சைவாலயங்களும் திருமுறைகளும்

வேதசிவாகம விதிப்படி அமைக்கப்பெற்று பூசை வழிபாடுகள் நிகழும் சைவாலயங்களில் தமிழ்த்திருமுறைகளுக்குக் கண்ணியமான இடம் உள்ளது. திராவிடப் பிரகாசிகை எனும் தமிழ் இலக்கிய வரலாற்றுநூல் எழுதிய சபாபதி நாவலர் அவர்கள் புத்தம் சமணம் முதலிய புறச் சமயத்தாக்கங்களால் சைவசமயமும் வேதசிவாகம விளக்கங்களும் குறைந்தும் அழிந்தும் இருந்த காலத்தில் திருமுறை ஆசிரியர்கள் அவதரித்து வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்கச் செய்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் தமிழ்த் திருமுறைகளே வேதநெறிக்கும் சைவத் திறத்திற்கும் காரணமாக விளங்குகின்றன. அத்துடன் பசுகரணம் சிவகரணமாகப் பெற்ற சிவத்துவம் மிக்க அருளாளர்களால் அருளைப்பெற்ற சிறப்பும் திருமுறைகட்கு உண்டு. இதனால் வேதசிவாகம விதிப்படி பூசை திருவிழாக்கள் நிகழ்ந்தாலும் அங்கு திருமுறைகள் ஓதப்படாவிடில் திருவருள் வெளிப்பாடு சிறப்புறாது என்ற கருத்தை வலியுறுத்தியிருக் கிறார். திருமுறைகளைப் பாராயணம் செய்வதை நியமமாகக் கொண்டவர் அவற்றால் தாம் அடைந்த நன்மைகளைப் பிறர்க்குக் காண்பித்து தம்மை அடுத்தவர்களையும் திருமுறைப் பாராயணத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இவ்வுண்மை களை அகத்தியர் தேவாரத்திரட்டு எனும் நூல் வரலாற்றாலும் இந்நூலை உரை எழுதி வெளியிட்ட கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியாரின் வெளியீட்டுரையாலும் பிறபல செய்திகளாலும் அறியலாம்.

இப்படிப் பல பெருமைகளுக்கு இருப்பிடமானதும் செந்தமிழிலே இருப்பதால் தமிழ் மக்களால் விளங்கி மகிழ வாய்ப்புமிக்கதுமான திருமுறைகள் நம் சைவாலய வழிபாட்டில் கண்ணியமாக இடம் பெற்று நம் ஆலயவழிபாட்டை நிறைவுறச் செய்வது தமிழ் மக்களும் தமிழ் அபிமானிகளும் பெருமைப்படத் தக்க விடயமாகும்.

வேதசிவாகம நெறிப்படி வழிபாடு நிகழும்போது தோத்திரம் செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில் தமிழ்த்திருமுறைகட்கு சிறப்பிடம் உள்ளது. வாய்ப்புக்குத் தக்கபடி தேவாரம் புராணம் என்றே - தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருப்புராணம் என்றோ, இவற்றுடன் திருப்புகழ் அபிராமி அந்தாதி போன்வற்றையும் சேர்த்தோ ஓதும் வழக்கம் உள்ளது. ஆலயங்களில் பூசைத் திருவிழாச் சமயங்களில்

திருமுறைகளை ஓதுவதற்கென நியமிக்கப்பெற்றவர்களை "ஓதுவார்" என்பர். இவர்கள் தமிழ் இலக்கண இலக்கிய அறிவு - பண்பயிற்சி சமயதீட்சைப் பேறு விசேடதீட்சைப் பேறு உடையராய் சுத்தபோசன நியமம் தவறாதவராய் இருப்பர். இந்த வழக்கம் தமிழ் இராசாக்கள் காலத்தில் எங்கும் படிமுறையில் இருந்தது. தமிழ் நாட்டில் பல ஆலயங்களில் பூசைக்கென பூசகர் இருப்பது போல், திருமுறை ஓதவென ஓதுபவர்களும் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டைச் சில வருடத்துக்கும் கலைஞர் கருணாநிதி சட்ட மாக்கியிருக்கிறார்.

நம் நாட்டில் பெரும்பாலான ஆலயங்களில் வழிபாட்டுக்கென வந்த ஒருவர் பூசை வேளைகளில் திருமுறை ஓதுவது வழக்கமாக உள்ளது. இப்படி ஒரு வழக்கத்தைத் தவறு என்று கூறலாகாது. ஆனால் திருமுறைப் பயிற்சி விளக்கம் பண்அறிவு என்பன இல்லாதவர் ஓதுவது என்பது திருமுறைகளையே அவமதிப்பதாயும் திருமுறை ஓதுவதால் அடையத்தக்க இறையருளைப் பெற உதவாத செயலாகவும் அமைந்து விடும்.

பூசை வேளைகளில் திருவிழாக்களின் கொடியேற்ற நிகழ்வுகளில் - சுவாமிவலம் வரும் போது வடகிழக்கில் திருமுறை ஓதும் வழக்கம் உண்டு. இப்படியான நிகழ்வுகளில் வழிபடுவோர் வேறு பராக்காக இருக்கும் நிலை பல இடங்களில் உள்ளது. இது வருந்தத்தக்கது. யாழ். கொட்டடி வில்லூன்றிப்பிள்ளையார் ஆலய நிர்வாகத்தில் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் உள்ளார். அவர் அந்த ஆலயத்தில் "பூசை அங்கமாகத் திருமுறை ஓதும் போது அனைவரும் அதில் வணக்கத்துடன் ஈடுபட வேண்டும்" என்ற கருத்தைப் பல இடங்களில் பகிரங்கப்படுத்தியிருக்கிறார்.

நம் யாழ்ப்பாணச் சைவ ஆலயங்களைப் பொறுத்த மட்டில் மார்கழித் திருவெம்பாவைக் காலம் மட்டும் தமிழ்த் திருமுறைகட்கு - அதாவது திருவெம்பாவை ஓதுவது சிரத்தையுடன் பேணப்படுகின்றது. இந்தநிலை விருத்தியடையவேண்டும்.

கொடியேற்றத் திருவிழா நிகழும் ஆலயங்களில் தீர்த்தத் திருவிழாவன்று சுண்ண மிடிக்கும் நிகழ்வில் திருப்பொற்சுண்ணம் ஓதும் வழக்கம் உண்டு. கொடியேற்றம் போல் இந் நிகழ்வில் எல்லோரும் கலந்து கொள்ளாமையால் இது பலருக்குத் தெரியா மலுள்ளது.

திருமுறைகளைத்திருமுறை ஆசிரியர்கள் எந்த நாள்களில் பாடியிருப்பர் என்பதை அறிய வாய்ப்பில்லை. ஓரிரு பதிகங்களைப் பாடி

நாள்களை ஆராய்ந்தறிய வாய்ப்பு உள்ளது. இப்படி வாய்ப்பு உள்ளவற்றில் திருவெம்பாப்பதிகம் சிறப்பிடம் பெற்றுள்ளது. சிவபெருமானாலே எழுதப்பெற்றதென்ற காரணத்தாலும் திருவெம்பாவை பாடப்பெற்ற காலம் இதுதான் எனத் தீர்மானிக்கும் வாய்ப்பிருக்கும் காரணத்தாலும் திருவெம்பாவைக் காலத்தில் பூசைவேளைகளில் திருவெம்பாவையை மட்டும் தான் ஓத வேண்டும் என நம் சைவப்பெரியோர் நியமித்துப் பலகாலம் அதனைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். இக் காலத்தில் பலர் இப்படியான வழக்கத்தையும் காரணத்தையும் அதனைப் பின்பற்றுவதன் சிறப்பையும் அறியாதகாரணத்தால் திருவெம்பாவைக் காலத்தில் திருவெம்பாவை தவிர்ந்த திருவாசகப்பாடல்களையும் பிற திருமுறை களையும் ஓத முற்படுகின்றனர். சைவப்பெரியார்கள் பலகாலமாகப் பின்பற்றிவந்த வழக்கத்தைப் பேணுவது அவசியம்.

பூசைவேளையில் திருவெம்பாவைத் தவிர வேறெதையும் ஓதலாகாது என்பதைப் பின்பற்றும் அக்கறையில் திருவெம்பாவைக் காலத்தில் மரணக்கிரியைவேளையில் சுண்ணமிடிக்கும் போது திருவெம்பாவைப் பாடல்களை ஓதிய - ஓதும் அக்கறையை அறிவதும் பின்பற்றுவதும் அவசியம்.

ஆலயங்களில் பூசை அங்கமாகத்திருமுறை ஓதுபவர் திருமுறைகளின் பொருளை அறிந்தவராகவும் இயன்ற அளவு பண் தெரிந்தவராகவும் இருப்பதுடன் சுத்தபோசன நியமம் உடையவராய் இருத்தல் அவசியம். எங்கள் சைவசமயம் போசனக்கட்டுப் பாட்டில் கொண்டிருந்த அக்கறை காரணமாக புலால் விலக்கிய உணவைத் தாவர போசனம் என்னாது சைவபோசனம் என்று வழங்குவதன் அழகைக் கவனிக்க வேண்டும். இக்காலத்தில் இது சாத்தியமில்லை என்றாலும் இப்பெருமையைப் பேண விரும்புவது நன்று.

ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் கொடியேற்றத்தின் போதும் கொடியேற்ற மன்றும், கொடி இறக்கத்தன்றும் சுற்றுப்பலி போடும் ஒன்பது இடங்களிலும் திருமுறை ஓதும் முறை உள்ளது. இதேபோல் திருவிழாக்காலங்களில் யாக தரிசன வேளையில் நிகழும் பூசையிலும் திருமுறை ஓதுவர். இப்படியான சந்தர்ப்பங்களுக்கு உரிய திருமுறை களைத் தெரிந்தெடுத்து ஓதுவது அவசியம்.

யாக தரிசன வேளைகளில் ஏதாவது ஒரு தேவாரம் புராணம் ஓதும் வழக்கம் உள்ளது. ஆனால் யாகதரிசனப் பூசையில் பஞ்சாட்சரம் வரும் தேவாரத்தை ஓத வேண்டும் என்பர். இதனைத் திருக்கேதீச்சரத்தில்

அவதானிக்கக் கூடியதாக உள்ளது. திருக்கேதீச்சர த்தில் பெரும்பாலும் தமிழ் நாட்டில் இருந்து தகுதியான ஓதுவார்கள் அழைக்கப் பெறும் வசதியும் உள்ளது.

விசேடபூசை வசந்தமண்டப பூசை போன்றவற்றில் பூசை முடிவில் வேதத்தாலும் வடமொழித் தோத்திரங்களாலும் தமிழ் வேதம் எனப்படும் திருமுறைகளாலும் துதித்தல் மரபும் முறையும் அவசியமுமாம். பூசை ஆரம்பம் முதல் ஒவ்வொரு கிரியைகட்கும் வேதமந்திரம் ஆகமமந்திரம் என்பன உபயோகிக்கப்படுகின்றன. அபிஷேகம் அலங்காரம் நிவேதனம் தீபாராதனை போன்றவற்றிற்கு இன்ன வேதங்களையும் ஆகம மந்திரங்களையும் பயன்படுத்த வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. வேத ஆகமங் களிலும் திருமுறைகளிலும் மிகுந்த பயிற்சியும் புலமையும் உடைய பல குருமார் வேத ஆகம மந்திரங்களுடன் பொருத்தமான திருமுறைப் பாடல்களையும் கிரியைகளில் பயன்படுத்திய பல சந்தர்ப்பங்கள் வாக்குமூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக அபிஷேகசமயத்தில் ருத்திரம் என்னும் வேத தத்து வத்தையும் பதமந்திரங்கள் எனப்படும் ஆகம மந்திரத்தையும் ருத்திரத்தின் அமைப்பில் விளங்கும் திருநாவுக்கரசரின் நின்ற திருத்தாண்டகத்தையும் உப்யோகித்திருக்கின்றனர். இப்படி உபயோகித்தவர் வேதாகமங்களிலும் ஆலயக் கிரியை முதலியவற்றிலும் பயிற்சியும் தேர்ச்சியும் அநுபவமும் மிக்கவர்கள்.

பூசை வேளையில் துதிசெய்யும் சமயத்தில் வேதம் ஆகமம் திருமுறை எனப்படும் தமிழ் வேதங்களை ஓதுவது அனைவரும் அறிந்தது. இக்காலத்தில் இப்படி ஓதப் பலர் விரும்புவதும் முன்னீடு செல்வாக்கு முதலியன மிக்கவர் பங்குகொள்வதும் பல இடங்களில் நிகழ்கின்றது.

திருமுறையில் ஈடுபாடு தேர்ச்சி விளக்கம் உடையவர்கள் இப்படி யான வேளை களில் பங்கேற்பது நன்று. கொடியேற்றம் கொடி இறக்கம் ஆகிய விழாக்களில் கொடித் தம்பத்தடியில் இருமுறையும் வீதியில் ஒன்பது இடங்களிலும் பண்ணை முன்னிட்டு திருமுறை ஓதப்படுகின்றது.

கொடித்தம்பத்தடியில் இடம்பெறும் இருமுறைகளிலும் கோவிலில் உள்ள பிரதான மூர்த்தி அவரின் வாகனம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஓதப்படுவதால் அந்த இரு பண்களும் கோவிலுக்குக் கோவில் வேறுபடும் ஏனைய ஒன்பது இடங்களிலும் எல்லாக் கோவில்களிலும் ஒரே பண்கள் இடம்பெறும். அதாவது கோயில் வாயில் - எட்டுத்திக்கு என்பவற்றில் பிரமதேவரும் இந்திரன் அக்கினி யமன் நிருதி, வருணன், சாயு,

குபேரன், ஈசானன் ஆகிய தேவர்களை மகிழ்விக்கும் முறையில் அவரவர்க்கு உரிய பண்களே இடம்பெறும். இவற்றில் மாதிரிக்கு ஒன்று பார்ப்போம்.

பிரமசந்திக்கு உரிய பண்: மேகராகம்

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐமேலுந்தி
அமைந்தபோதாக அஞ்சேல் என்றருள்செய்வான் அமருங்கோயில்
வலம் வந்தமடவார்கள் நடமாடமுழவு அதிர மழை என்று அஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே

திருச்சிற்றம்பலம்

இந்திரசந்தி – (கிழக்கு) **பண் காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

பாடிளம் பூதத்திருனானும் பவளச்செவ்வாய் வண்ணத் தானும்
கூடிளமென்முலையாளைக் கூடிய கோலத்தினானும்
ஓடிளவென்பிறையானும் ஒளிதிகழ்சூலத்தினானும்
ஆடிளம் பாம்பசைத்தானும் ஆரூரமருந்த அம்மானே.

திருச்சிற்றம்பலம்

அக்கினிசந்தி (தென்கிழக்கு) **பண் கொல்லி**

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில்நல்ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

திருச்சிற்றம்பலம்

யமசந்தி (தெற்கு) **பண் கௌசிகம்**

திருச்சிற்றம்பலம்

உதையும் கூற்றுக்கு ஒல்காவிதிக்கு
வதையும் செய்தமைந்தன் இடமாம்
சிதையும் தூதும் தேனும் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத் துறையே

திருச்சிற்றம்பலம்

நிருதி சந்தி (தென்மேற்கு) பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்
நத்தார்படை ஞானன்பசு எறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச்சரத் தானே.
திருச்சிற்றம்பலம்

வருணசந்தி (மேற்கு) பண்: சீதாமரம்

திருச்சிற்றம்பலம்
கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புன்னானார்க்கு அனாயன்இடம் புள்ளிருக்குவேளூரே.
திருச்சிற்றம்பலம்

சாயுசந்தி (வடமேற்கு) பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்
அந்தணாளன் உன் அடைக்கலம்புகுத அவனைக்காப்பது காரணமாக
வந்தகாலன்தன் ஆருயிர்அதனை வவ்வினாய்க்கு உன்தன்
வண்ணமைகண்டு அடியேன்
எந்தைநீ எனை நமன்தமர் நலியின் இவன் மற்று என்னடியான்
எனவிலக்கும்
சிந்தையால் வந்து உன்திருவடி அடைந்தேன் செழும்பொழில்
திருப்புன்கூர் உளானே.
திருச்சிற்றம்பலம்

குபேரசந்தி (வடக்கு) பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்
கறுத்தான்கனலால் மதில் மூன்றையும்வேவ
செறுத்தான் திகழுங் கடல் நஞ்சு அமுதாக
அறுத்தான் அயன்தன் சிரம் ஐந்திலும் ஒன்றை
பொறுத்தான் இடம் பூம்புகலிந்நகர் தானே.
திருச்சிற்றம்பலம்

ஈசானசந்தி (வடகிழக்கு) பண்: சாலாபாணி (சாதாரி)

திருச்சிற்றம்பலம்

இளமதி நுதலியோடு இன்னம்பா மேவிய
வளமதி வளர் சடையீரே
வளமதி வளர் சடையீர் உமை வாழ்த்துவார்
உளமதி மிக உடையோரே.

திருச்சிற்றம்பலம்

மனிதன் மிருகத்தன்மைகளை ஒதுக்கி மனிதத் தன்மைகளை விருத்தி செய்து பின் தெய்வத் தன்மை அடைய வேண்டும் என்ற கோட்பாட்டை அறிவுடைய அனைவரும் ஆதரிப்பர். இரக்கம், பொறுமை, பிறர்நலம் பேணல் முதலிய மனிதத் தன்மைகளை விருத்தி செய்து அன்பு, பரோபகாரம், தியாகம் முதலிய தெய்வத்தன்மைகளை விருத்தி செய்ய இறைவனை அறிதல் உணர்தல் அநுபவித்தல் என்பன அவசியம். இறைவனை அறிதல் உணர்தல் அநுபவித்தல் என்பவற்றும் ஆலயவழிபாடும் திருமுறைப் பாரா யணமும் தனித்தனி உதவிசெய்யும் மணிக்கணக்காக திருமுறைகளுடன் ஈடுபடும் நிலை ஒவ்வொருவருக்கும் அமைய ஆலயவழிபாட்டில் திருமுறைகளைக் கொண்டு துதிப்பதும் திருமுறைகளை சிந்திப்பதும் வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

பண்டிதர் பொன்னம்பலவாணர்
பிள்ளையார் தேவஸ்தானம்,
பொன்னாலை.

❋ ❋ ❋

அருள் தரும் சக்தி

அகில உலகத்தையும் ஈர்த்து அகில உலகம் எங்கும் பரந்து நிற்கின்ற இந்து நாகரீக மரபில் பன்மையில் இருந்து ஒருமையை நாடிச் செல்லும் பண்பாட்டில் சக்தி வழிபாட்டில் சக்தி தத்துவம் முதன்மை பெறுகிறது.

"சக்தி பீட நாயகியாகப் போற்றி வாழ்க்கையில் இருக்கக் கூடிய எல்லாவித வியாதிகளையும் தோற்கடித்து அருள் பாலிப்பவள். மாரியம்மன் சிவ வழிபாடு, பெருமாள் வழிபாடு செய்பவர்கள் கூட மகாமாரி அம்மனை வழிபட்டே ஆகவேண்டும். சக்திகளுக்கெல்லாம் சக்தி அளிப்பவள் பராசக்தி. அந்த பராசக்தியில் அம்சமாக விளங்குபவள் மகாமாரியம்பாள்.

சக்திபீட நாயகி வருஷப்புலம் மகாமாரி அம்பாளுக்கு புனரா வர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா மங்களகரமாக நிறைவு கொண்ட நிகழ்வைக் கண்டு அடியார்கள் பேரானந்தத்தில் மூழ்கினர். இத்திருமங்கள விழாவினை நேரில் கண்டு தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்காத பக்தர்கள் அனைவரும் பயனடை யுமாறு முக்கிய நிகழ்வுகளின் படங்களும், தத்துவங்கள் சிறப்பு மிக்க சமயக் கருத்துக்கள் வரலாறுகள் ஆலய சம்மந்தமான ஆய்வுகளின் பெறுபேறுகள் சமயப் பெரியார்களின் விளக்கங்கள் கட்டுரைத் தொகுப்புக்கள் ஊரின் வரலாற்றுச் சிறப்புக்கள் சேர்ந்து எம் பெருமாட்டியின் கும்பாபிஷேக மலர் பெயரால் வெளிவருவதில் பேரானந்தம் அடைந்து ஆசி கூறி திருவருள் நிறையப் பிரார்த்திக்கின்றேன்.

மகாமாரி அம்பாளிற்கு நாம் எடுக்கும் விழாக்கள் எல்லாம் சிறப்பும் மேன்மையும் வாய்ந்தவை என்பதை யாவரும் அறிந்து இப் பெரும் கைங்கரியங்களை இனிதே நிறைவுற எல்லா வகையிலும் ஒத்துழைத்த அடியார்கள் அனைவரும் மனிதப்பிறவி எடுத்ததற்கு அர்த்தம் காட்டி நிற்பவர்கள். இனிவரும் எதிர்கால சந்ததியினரிற்குப் பயன்படுமாறு இந்த கும்பாபிஷேக மலரைப் பேணி வைத்திருக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

இறை பக்தியை வளர்த்துக் கொள்ளவே ஆலய வழிபாடு அமைகிறது. இவ்வழி பாட்டின் முக்கிய அம்சம் மனத்தூய்மையே பணிவு, அன்பு,

வாய்மை போன்ற சிறந்த பண்புகளின் அடிப்படையில் அமைந்த சமயமே இன்று எமக்குத் தேவை இதை வளர்க்கப் பாடுபடுவோமாக.

சிந்தையி னுள்ளே திரியும் சிவசக்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தணள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்த மோடாதிய தாம் வண்ணத் தாளே!

(திருமந்திரம் 1138)

பரம் பொருளிலிருந்து பிரிவுபடாமல் பழமும் சுவையுமாக நெருப்பும் சூடுமாக விளங்கும் பராசக்தியே திருவருட்சக்தி அதுவே மாயையாகிய திரோதான சக்தியும் அதுவே ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து வேதங்கள் போற்றும் இயற்கை சக்திகளாகவும் ஆகமங்கள் பூஜிக்கும் அருள் வடிவத் திருவுருவங்களாகவும் புராணங்கள் புகழும் வீர சக்தியாகவும் பாமரமக்கள் வழிபடும் கிராமியத் தேவதைகளாகவும் விளங்கும் பெருமைக்குரியது.

"ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்கும்
நின்றாய் அனைத்தையும் நீக்கி நிற்பாள்
என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயில்கின்ற பெம்மானும்
என் ஐயனுமே"

(அபிராமி அந்தாதி)

மிக உயர்ந்த நிலையில் பிரிவற்ற ஒருமையே சர்வம் சக்தி மயம்.

ஸர்வஸ்வரூபி ஸர்வேமீ ஸர்வ சக்தி ஸமன்விதே
ஐஸ்வர்யம் ஆயுராரோகியம் மங்களம் தேஹி மேசிவே

எல்லா வடிவங்களை எடுப்பவளே எல்லாவற்றிற்கும் தலைவியே எல்லாவிதமான சக்திகளையும் உடையவளே எனக்கு சகல ஐஸ்வரியங் களையும் ஆயுளையும் ஆரோக் கியத்தையும் மங்களத்தையும் தருவாயாக.

சுபமஸ்து

ஸ்ரீ வாகீசவாரிதி கணேசசபாபதிக்குருக்கள்
வருஷப்புல மகாமாரி தேவஸ்தானம்.

❋ ❋ ❋

சுன்னாகம் முதல் தமிழ் இராச்சியம்

உலகினில் சிவவழிபாடு அனாதியாக இருந்த சான்றுகள் பல இருப்பதாக விஞ்ஞானிகளும், அறிஞர் பெருமக்களும், இறையருள் பெற்ற ஞானிகளும் ஒத்த கருத்தையும் ஒரே முடிவையும் தெரிவித்து சிவவழிபாட்டின் தொன்மையை நன்கு புலப்படுத்தி உள்ளமை யாவரும் அறிந்ததே. மன்னர்களும் தர்மசிந்தையுடைய பெரியார்களும் குருமார்களும் அவ்வப்போது சிவாலயங்களையும் அதைச்சூழ ஏனைய ஆலயங்களையும் அமைத்து வழிபாடுகளை ஏற்படுத்தி மக்களை நெறிப்படுத்தி அன்பும் பரிவும் தர்மமும் சமூக ஒற்றுமையும் அமைதியும் மகிழ்ச்சியும் உடையவர்களாக வாழ வழிசெய்து பெருமை பெற்றார்கள். அந்தவகையில் எமது இலங்கையிலும் பல சைவ ஆலயங்கள் புராதனமாக அமையப்பெற்று திருமூலரால் சிவபூமி என புகழப்படுவது எமக்குப் பெருமைக்குரியதாகும்.

வடபகுதியில் யாழ்ப்பாணம் மற்றும் சூழஉள்ள பல கிராமங்களிலும் பல தொன்மையான ஆலயங்களும் அவை பற்றியதான வரலாறு "புராணங்கள்" "கர்ணபரம்பரை தகவல்கள்" என நிறையவே உள்ளன. தமிழர்களின் வரலாற்று ஆய்வுநூல்களான "யாழ்ப்பாண வைபவமாலை" "யாழ்ப்பாண சரிதம்" கைலாயபுராணம் "கந்தரோடை வரலாறு" சரசோதிமாலை" "வையாபுரிபாடல்" ஆகியவற்றின் ஆதாரங்களுடன் பல அறிஞர்களால் தமிழர்களின் முதல் "அரசு" "அரசர்வம்சம்" "கதிரமலைராச்சியமே" எனவும் அந்த "கதிரமலை ராச்சியத்தின் சிறப்புகள் பற்றியும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆராய்ச்சி நூல்களாகவும் கட்டுரை களாகவும் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளும் எமக்கு பல அறியவேண்டியதும் சுவையானதுமான பூர்வீகக் கதைகளைத் தெரிவிக்கின்றன.

"இந்தியாவின் வடக்கே புனித கங்கை நதிக்கரையில் அமைந்துள்ள வாரணாசிப்பதியில் அமர்ந்தருள் பாலித்து வரும் விசாலாட்சி அம்பாள் சமேத விசுவநாதப் பெருமான் திருவருளுடன் ஒரு மன்னன் காசி மாநகரை சிறப்புடன ஆட்சி செய்து வந்தான். அவனது மூத்த மகன் உக்கிரராஜசிங்கன் என்பவன் தீயசினேகிதர்களின் தகாத பழக்கங்களாலும் வசதிமிக்க சூழலாலும் துர்நடத்தையாளனாக மாறிவிட்டான். மகனின் இந்த நிலையை நினைந்து மிக மனம் வருந்தி கவலையும் கோபமும்

அடைந்த மன்னன் மகனை நாட்டைவிட்டு வெளியேறும் படி உத்தர விட்டான். தீயவன் ஆனாலும் மகன்மீது உள்ள தாய்ப் பாசத்தினால் மகாராணியானவள் ஒரு கப்பலில் ஏராளமான செல்வங்களையும் பல வேலை யாட்களையும் மகனுடன் ஏற்றி எங்கேயாவது போய் வாழும்படி அனுப்பிவைத்தாள். உக்கிரராஜசிங்கன் கடலில் பிரயாணம் செய்கையில் தனக்கு ஏற்பட்ட நிலையை எண்ணி அழுது மனந்தேறி தன்னுடைய எதிர்கால நன்மைபற்றி யோசித்தான். ஆதனால் திருந்தியவனாக இலங்கையின் வடக்கே உள்ள ஒரு பகுதியை வந்தடைந்தான் அங்கு உயரமாகவும் பல வளங்களுடனும் நிறைந்த ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அதற்கு "கதிரமலை" எனப் பெயரிட்டு ஆட்சி செய்து வந்தான். அது "கதிரமலைராச்சியம்" என சிறப்புடன் விளங்கலாயிற்று. அக்காலம் இந்தியாவிலே பிறவியிலே கீரிமுகம் அமைந்த முனிவர் ஒருவர் நகுலமுனி என்னும் பெயருடன் இருந்தார். அவர் அங்குள்ள தீர்த்தங்களில் எல்லாம் நீராடி தன்குறை தீராததால் இலங்கையில் கீரிமலை எனப்படும் கடல் சூழ்ந்த பகுதியில் உள்ள தீர்த்தத்தின் பெருமை அறிந்த நகுலமுனிவர் இங்கு வந்து கடலிலும் கேணியிலும் தீர்த்தமாடி அங்கு சிவன் அம்பாளை வணங்கி தனது கீரிமுகம் மாறி இயல்பான தோற்றம் பெற்றார்.

இந்த அதிசயம் உலகெங்கும் பரவியதுடன் தீர்த்தம் நகுலதீர்த்தம் எனவும், சுவாமி பெயர் நகுலேஸ்வரர் ஆகவும், தலம் நகுலேஸ்வரமாகவும் பிரசித்தமாயிற்று. இவ்வாறே சோழநாட்டின் இளவரசி குதிரைமுகம் அமைந்தவளாய் மாருதப்புரவீக வல்லி என்னும் பெயருடன் இருந்தாள். தனது தோற்றத்தால் வெட்கமும் கவலையும் அடைந்த இளவரசி நகுல முனிவரின் உருவ விமோசனத்தையும் நகுல தீர்த்தத்தின் பெருமையையும் அறிந்து தானும் உய்வு பெற வேண்டி இங்கு கீரிமலை வந்து உரியபடி தீர்த்தமாடி சிவனை வழிபட்டாள். அவளது கடுமையான வழிபாட்டின் பயனாக அவளது முகம் மாறி இயல்பானதாகியது. இந்த மாருதப்புரவீகவல்லி என்பவளே மாவிட்டபுரம் கோவிலை இந்திய சிற்பிகளை வரவழைத்து அமைத்ததுடன் அதற்குரிய பூஜைகளைக் குறையின்றி செய்வதற்காக தீட்சிதர்வம்சத்து குருமார்களையும் வரவழைத்து முருகன் பணிகளைச் செய்தனள். அத்துடன் இந்தியாவில் இருந்து முருகன் வள்ளி தெய்வயானை சிலைகளையும் வரச்செய்தான். அந்த முருகன் (காங்கேசன்) வந்து இறங்கிய துறையே காங்கேசன்துறையாகியது. குதிரைமுகம் மாறியதும் மிக அழகான தோற்றம் பெற்றதும் முருகன் கோவில் திருப்பணிகள் நடைபெறும் சிறப்பும் ஆகிய இப்புதினங்கள் எங்கும் பரவின. அப்போது கதிரமலை மன்னரான உக்கிரராஜசிங்கனும் இவைகளை கேள்வியுற்றுப் பார்க்க ஆவல்பட்டான். ஆனால் இளவரசி மிகப் பாதுகாப்புடன் இருப்பதையம்

அங்கு ஆண்கள் போகமுடியாதென்பதையும் தூதுவர் மூலம் அறிந்து தான் தனியே ஒரு அழகான பெண்வேடம் பூண்டு தந்திரமாக உள்ளே புகுந்தான். அங்கு அவளின் அழகில் மயங்கிய உக்கிரராஜசிங்கனும் தன்னைத் திருமணம் செய்யுமாறு சம்மதம் கேட்டான். மாருதப்புரவீக வல்லியும் தான் எடுத்துக்கொண்ட திருப்பணிவேலைகள் பூர்த்தியடைந்ததும் யோசிப்பதாகக் கூற, மன்னனும் தானும் பல உதவிகளைச் செய்து ஆலய வேலைகளை விரைவில் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் நிறைவேற்றி மகிழ்ந்தனர்.

பின்னர் ஒரு நல்ல நாளில் உக்கிரராஜசிங்கன் மாருதப்புரவீக வல்லியை ஒரு குதிரையில் ஏற்றிக்கொண்டு ஒரு ஜாமப்பொழுது களியுமுன் கதிரமலையில் உள்ள அரண்மனைக்குக் கூட்டி வந்து விவாகம் செய்து மகிழ்ந்திருந்தான். பின்னர் கதிர மலைராச்சியம் இயற்கையின் தாக்கங் களினால் பாதிக்கப்பட்டு செங்கடகல நகருக்கு மாற்றமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் சுன்னாகத்திற்கு வெள்ளியங்கிரி சுன்னைநகர் என பெயர்வர; கதிரமலை (கதிர் - ஒளி) என்னும் பெயரும் முதல் தமிழ் இராச்சியம் என்னும் சிறப்பும் சுன்னாகம் வாழ் மக்கள் அனைவருக்கும் பெருமையாகும் எனப் போற்றி வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் திருவருளால் கல்வியும் ஒழுக்கமும் ஒற்றுமையும் பெற்று வாழ்வோமாக.

சுபம்

நா. சர்வேஸ்வரக் குருக்கள்

❋ ❋ ❋

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பார்ச்
சென்றனன் தானிருந் தான்உணர்ந் தெட்டே.

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ"

காற்றும் சிலரை நீக்கி வீசுமோ (கபிலர் அகவல்) திருக்குறளில் கடவுள் வாழ்த்தை அடுத்து வருவது வான் சிறப்பு. அளவெட்டி மௌன தவமுனிவர் எனப் போற்றப்படும் பொ. கைலாசபதி அவர்கள் பாயிரம் எதிர் நிறை நிறையாக முழு நூலுக்கும் சுருக்கமாய் அமைந்துள்ளது என்பார்.

அறத்துப்பாலின் சுருக்கம் : நாலாவது அறன் வலியுறுத்தல்
பொருட் பாலின் சுருக்கம் : மூன்றாவது நீத்தார் பெருமை
காமத்துப் பாற் சுருக்கம் : இரண்டாவது வான் சிறப்பு. வான் சிறப்பு முழுவதும் திருவருளின் இறக்கத்தை மழையில் வைத்து உவமை முகத்தால் விளக்கியுள்ளார் வள்ளுவர்.

நம்மிடையே புகழ் மிக்க விஞ்ஞான கணிதப் பட்டதாரி ஒருவர் சொல்வாராம்

"வானத்திலிருந்து துளி விழா விட்டால்
பசும்புல் தலையை காண முடியாது என்பதைச் சொல்ல
ஒரு வள்ளுவர் வேண்டும்"

தமிழுக்கு உயிர் அகம், புறம் என்பன. கபிலர் பாரியின் கொடை மகிமையை புறத்தே நின்று பார்த்துச் சுவைத்தார்; அதில் மனதைப் பறிகொடுத்தார். கவிதை கொப்பளித்து வருகின்றது.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு; ஈண்டு உலகு புரப்பதுவே"

(புறநானூறு பாடல் - 107)

மாரி உலகின் அனைத்து உயிர்களையும் மகிழ்விக்கப் பெய்கிறது. அதே போலத் திருவருள் சகல உயிர்களையும் வாழ்விக்கின்றது.

மாரி அன்னையும் அனைவரையும் பிள்ளைகளாகக் கருதி வாழ வைக்கின்றாள். அன்னையும் மாரியும் ஒன்றே.

நயினை நாகபூஷணி அம்பாள் திருக்கோயிலின் பரம்பரை அர்ச்சகர்கள் வழிவந்தவர் சுவாமி நாதக் குருக்கள் (ஊரில் சின்னத்துரைக் குருக்கள் என அழைப்பர்) அவர் மலாயா சென்று திரும்பியபோது முன்னேஸ்வரத்தில் தங்கினார். அங்கு ஸ்ரீசக்கர பூசையுடன் முப்பரிமாணமுள்ள மகாமேருசக்கர பூசையும் நடப்பதை அவதானித்தார். அதற்குரிய சாக்த தீட்சை பெற்று அம்முறையை நயினாதீவு அம்பாள் ஆலயத்திலும் முறைப்படி தொடக்கினார். அவரை நான் 1943 இல் கரம்பன் முருக மூர்த்தி கோவில் கும்பாபிஷேகத்தில் நாரந்தனை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கின் போது பழகும் பாக்கியம் பெற்றேன். 'சிவ நெறிப் பிரகாசம்' என்ற நூல் என் கையில் இருந்தது. ஆசிரியனாய், பண்டிதமணியின் மாணவனாய். இருந்த காலம் அது.

குருக்கள் ஐயா பூசை இடைவெளியில் சற்று ஆறுதலாயிருந்த போது மகாமாரி அம்பாள் பற்றிய பேச்சு வந்தது. அவர் அதைக் கிராம தேவதை எனத் தள்ளிவைக்க முடியாது. அது வைதிய (வேத) நெறிக்குட்பட்ட தெய்வமே எனக் கூறினார்.

பின்னர் சகஸ்ர (1008) நாமங்கள் அடங்கிய சிவ தோத்திரங்களும் தனித்தனியே அச்சடித்த பிரதிகளும் கிடைத்தன. 108 மந்திரங்களைக் கூறி மலர் இட்டு வணங்கும் வழக்கம் உண்டாயிற்று. 108 மந்திரங்கள் என்ற தலைப்பில் மனோன்மணி சக்தியை நம : என முடிக்கும் துதிகளைச் சொல்லும்போது

"க்ஷிப்ரமார்யை நம:

மகா மார்யை நம: ரணப்பிரியாயை நம: என்ற மூன்று பெயர்கள் என்னைக் கவர்ந்தன.

மகாமாரித்தாயை சிங்க வாகனத்துடன் வழிபடுகின்றோம். தீய சக்திகள் தேவர், மனிதர் யாவர்க்கும் இடுக்கண் செய்பவர்கள்; அசுரர்கள் என நாம் நோக்குகின்றோம். அவை தவத்தால் வலிமை கூறும் போது அவர்களை உதறித் தள்ளுபவள் தாய். வடமொழி அகராதி 'க்ஷிப்ர' என்ற சொல்லுக்கு விரைந்து வில் வளை (அம்பு விடு) முதலிய பொருளைத் தருகின்றது. க்ஷப் = எறி அவளது சூலத்தால் குதித்தூர எறிய வாகனமாகிய சிங்கம் அவ்வசுரனை நெஞ்சைப் பிளந்து உதிரம் குடிக்கிறது. நல்லோர் ,

தேவர் துயரத்தையும் தூர எறிந்து விடுகிற ாள் அன்னை. அணைக்கும் கையே அடிக்கும்.

"சக்தி தான் பலவோ என்னில் தான் ஒன்றே அனேகமாக,
வைத்திடும் காரியம் தான் மந்திரி ஆதிக்கு எல்லாம்,
உய்த்திடும் ஒருவன் சக்தி போல் அரசனுடையதாகி
அரசனுடையதாகிப் புத்தி முத்திகளை எல்லாம் புரிந்தவன் நினைந்தவாறாம்."

சக்திகள் பலவோ என்று கேட்கிறீர்களா? சக்தி ஒன்றே. பிரமாவுடன் சேர்ந்து அவனைத் தாண்டி படைத்தற் தொழிலைச் செய்யும் போது சனனி (உயிர்களைப் பிறப்பிப்பவள் தாய்) என்றும் காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் விஷ்ணு, உருத்திரர்களின் சக்திகள் எனத் தனித்தனிப் பெயர்களையும் ஐந்தொழில்களையும் சக்தி செய்வாள். இப்படி எண்ணில்லாத உருவங்களில் இறை சக்தியே காரியங்களைச் செய்கிறது.

இதற்கு உவமை கூறுகிறார்: மந்திரி, சேனாதிபதி, பாடி காவலன் (பொலிஸ்காரன்) எல்லாரும் அரசன் ஏவலையே செய்கின்றனர். சேவை செய்வோர் பல்லாயினும் இட்ட கட்டளைகளுக்கு மூலம் அரசனது ஆட்சி அதிகாரமும் எம் சிற்றறிவுக்கு சக்திகளின் எண்ணிக்கை கூடத் தெரியாது. திருவெம்பாவையில் சிருஷ்டி தொடங்கும்போது ஒரு சக்தி மற்றொரு சக்தியை எழுப்புவதாக ஒன்பது சக்திகளின் பேர்களை உரையாசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை (அண்ணாமலைப் பல்கலைக்கழக போதனாசிரியர்) தந்துள்ளார். மனோன்மணி, சர்வ பூதமணி, பலப் பிரதமணி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேஷ்டை, வாமை.

பராக்கிய தந்திரம் என்ற சைவ ஆகமத்திலே (அத்தியாயம் 2 சுலோகம் 42) "சக்தி பேதங்கள் கிரியை (செயற்பாடு) வேறுபாட்டால் ஏற்படுவன வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ, காளீ, கலவிகரணி, பராபலவிகரணி, பலப் ரதினீதிமணி, மனோன்மணி என வருகிறது. இதனை மிருகேந்திர ஆகமத்திலும் எடுத்துக் காட்டுகிறார். சற்று எழுத்து வேறுபாட்டுடன் எடுத்துக்காட்டி யுள்ளார். பராக்கிய தந்திரத்தில் வரும் பெயர்கள் வேதத்தில் வரும் வாம தேவ மந்திரத்தின் அம்சங்களைக் கொண்டு எடுக்கப்பட்டன என்கிறார். பராக்கிய தந்திர மொழி பெயர்ப்பாளரான டொமினிக் கடடால் (பக் 18) சிவதீட்சை பெற்றவர்கள்

சிவனுக்குரிய பஞ்சப் பிரம மந்திரங்களுள் ஒன்று வாம தேவம் என அறிவர். இவை தைத்திரீய ஆரண்யகம். பிரபா கடம் 10 இல் வருகின்றன.

சிற்றறிவும் சிறு தொழிலும் உள்ள அற்ப பிராணிகளாகிய நாம்,
"ஆட் பாலவர்க்கு அருளும் வண்ணமும்
ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டாம்"

என்ற சம்பந்தப் பெருமான் வாக்கை மறந்து விட்டோம். மந்திரங்களின் மகத்துவம் என்ன? மன் + த்ரம் = நினைப்பவரை காப்பது என்ற பொருள் கருத்தற்றதா? நாம் மொழி பெயர்த்து ஆக்குவதற்கு மூல மந்திர சக்தி - ஆன்மீக அசைவு (vibration) ஏற்பட முடியுமா? நாங்கள் மந்திர திருஷ்டாக்களாகப் பார்ப்பர் .(திருஸ் = பார்) சுருதி கேட்போராக உயர்ந்தால் மட்டுமே எமக்கு மாரி யார்? கௌரி யார்? புவனேஸ்வரி யார்? என்பது விளங்கும்! விளங்கும் !! குருடும் குருடும் விழுந்தவாறே (திருமூலர்)

ஆ. சபாரத்தினம்
நாரந்தனையூர்

❋ ❋ ❋

போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கும் நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாம்
கூற்றகைத் தானையான் கூறுகின் றேனே.

சக்தி வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள்

சக்தியின் வியாபகம்

இந்து சமயத்தின் அறுவகைச் சமயப் பிரிவுகளில் சாக்தமும் ஒன்றாகும். சாக்தர்கள் சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடுகிறார்கள். சாக்த தத்துவத்தில் தாய் முதலிடம் பெறுகிறாள். சக்தியைப் பெண்ணாகக் கொள்வது சாக்த நெறி. சாக்தர்கள் உலகத்தை மேலாகக் கொண்டு அதனூடு சக்தியின் வியாபத்தை எங்கும் எல்லாவற்றிலும் காண்கின்றனர். சக்திதான் தெய்வத்திற்கு எல்லாம் தெய்வம் சக்தியில்லாமல் சிவ தத்துவம் ஒன்றையும் இயக்கமாட்டாது என்று சாக்தர்கள் கருதுகிறார்கள். இவர்கள் சக்தியைத் தனித் தெய்வமாக வழிபடுகிறார்கள். சக்தியின் திரு விளையாடலை அணுமுதல் அண்டம் வரை பரக்கக் காணலாம். ஆற்றலுக்குரியவன் இறைவன் என்றால் அந்த ஆற்றலின் இயக்கத்துக்கு சக்தி என்ற பெயர் வழங்கப்படுகிறது. சக்தியின் பிரபாலத்தை உயர்த்திப்பேசுபவர்கள் சக்தியாய் சிவமாய் என்றும், சக்தியை உடையவன் சிவன் என்றும் அவன் சக்தி தரன் என்றும் கூறுவர். சக்தியை வழிபடுபவர்கள் சக்திமான்கள் ஆவார்கள் என்பது சாக்தர்களின் நம்பிக்கை ஆகும். சக்தியின்றிச் சிவம் அசையவும் முடியாது எனச் சௌந்தர்யல வளரியில் சங்கராச்சாரியாரும் குறிப்பிடு கின்றார். சர்வம் சக்தி மயம் என்பது சாக்தர்களின் கோட்பாடாகும்.

சிந்துவெளியில் சக்தி வழிபாடு

இந்துப் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழ்வது சிந்துவெளி நாகரிகமாகும். இந்துக்களிடம் நிலவியது போல வேறெந்த நாட்டிலும் தாய்த் தெய்வ வழிபாடு பழமையாகவும் ஆழமாகவும் நிலைத்து நிற்கவில்லை என்பது சேர் ஜோன் மார்ஷல் போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்தாகும். இங்கு கிடைக்கப் பெற்ற தேவியின் வடிவங்கள் கோரவடிவமாகவும், சாந்தவடிவமாகவும் காணப்பட்டன. அமைதியான முகத்தோற்றம் உடைய பெண் உருவங்களை இன்றைய இந்து மதத்தில் வழிபடப்படுகின்ற கௌரி, கல்யாணி, வடிவாம்பிகை ஆகிய தெய்வங்களோடும், அச்சமூட்டும் வடிவத்தில் காணப்படும் பெண் உருவங்களை துர்க்கை, காளி, நீலி ஆகிய தெய்வங்களோடும் குறிப்பிட்டு ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

மனிதனின் வாழ்விற்குத் தேவையான எல்லாவற்றையும் வழங்கிய தரையைத் தாயாக உருவகித்து வணங்கிய ஆரம்ப நிலையை சிந்துவெளியிலே காணமுடிகிறது. இன்று கிராமங்கள் தோறும் வழிபடுகின்ற கிராம தேவதைகள் எல்லாம் தரைப்பெண் வணக்கத்தின் வழிவந்தவையே என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். மொஹஞ் சதாரோவில் கண்டெடுக்கப் பெற்ற ஒரு முத்திரையின் மத்தியில் தலைவிரிகோலமாக காட்சி தரும் பெண் தெய்வம் சித்தரிக்கப் பட்டுள்ளது. இம் முத்திரையின் மேல் இருக்கும் உருவம் துர்க்கை எனவும், இவ் ஏழு பெண் உருவங்களும் சப்தமாதிருகைகள் (ஏழு கன்னியர்) எனவும் அறிஞர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. உலகத் தோற்றத்தின் நாயகியாகச் சக்தி சித்தரிக்கப்பட்டுள்ளதைச் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினை ஒன்று விளக்குகிறது. ஒரு பெண்ணின் வயிற்றில் கொடி போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் கிளைகளில் ஆறுகள் மலைகள் என்பவற்றை உருவகித்து தரப்பட்ட உருவம் உலகத்தின் சிருஷ்டி கர்த்தா சக்தி தெய்வம் என்பதை விளக்கி நிற்கிறது. உலகம் யாவற்றிலும் தாயாகவும் வளம் சுரக்கும் அன்னையாகவும் சக்தி தெய்வம் வழிபடப்பட்டதை இவ் உருவம் உணர்த்துகிறது.

வேதங்களில் அம்பிகை வழிபாடு

இருக்கு வேதத்தில் உஷை, இராத்திரி, சந்தியா, சரஸ்வதி, அதிதி, பருதுவி முதலிய பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டன. இவர்களில் உணவு தனிப்பெரும் பெண் தெய்வமாக வேதங்களில் சித்தரிக்கப் படுகிறாள். உதய காலத்தைக் குறிக்கும் பெண் தெய்வமாகப் போற்றப் படுகிறாள். இவளை வழிபடுகிறவர்களுக்கு செல்வம், குழந்தைகள், பாதுகாப்பு, நீண்ட வாழ்வு, புகழ், பெருமை என்பவற்றையெல்லாம் வழங்குவாள் என இருக்கு வேதம் குறிப்பிடுகிறது. இருக்கு வேதத்தில் உஷை இருபது பாடல்களில் போற்றப்படுகிறாள். சூரியனுக்கு முன் தோன்றுவதனால் அவனது தாய் என்றும், அவன் இவளைப் பின் தொடர்வதால் அவனது மனைவி என்றும் கூறப்படும் நம்பிக்கைகள் வேத காலத்தில் காணப்பட்டன. இருள் ஆகிய அரக்கனைத் துரத்துபவள் உஷை என்றும் வேத காலத்து மக்கள் நம்பினர்.

இருக்கு வேதத்தில் இராத்திரியும் பெண் தெய்வமாக போற்றப் பட்டாள். இவள் தோன்றும்போது விண் மீன்களும் தோற்றம் பெறும். இருக்கு வேத கால மக்கள் கொடிய விலங்குகள், கள்வர்களின் பயம் போக்க இராத்திரியை வழிபட்டனர்.

நாள்தோறும் ஓதப்படும் காயத்திரி மந்திரத்தில் காயத்திரி சூரியனுக்கு ஒளி தருவதாகக் கூறப்படுகிறது. "அன்னையே உன்னை வழிபடுவோருக்கு நீ வரங்களை வழங்குகிறாய். வேதங்களும் உலகங்களும் உன்னையே மூலமாகக் கொண்டு தோற்றம் பெற்றன. எனது சிந்தையிலே

ஒளிந்து எனது வணக்கத்தினை ஏற்பாய் நீயே விவேகம், நீயே பொறுமையின் ஆற்றல், நீயே வல்லமை, நீயே ஒளி, நீயே தெய்வங்களின் வல்லமையாகுவாய் என்பது காயத்திரி மந்திரம் கூறும் வழிபாடாகும்.

துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூவரும் ஒன்றிணைந்து பேருருவம் தாங்கி நிற்கும் சண்டிகை என்பாளை அக்கினியில் வழிபடுவது சண்டியாகம் எனப்படும். வேத வேத்யா வேத ஜனனி, யக்ஞபிரியா, யக்ஞரூபா, திரயீ எனப் பல பெயர்களில் வேதங்களில் அம்பிகை அழைக்கப்படுகிறாள். ஓடுகின்ற நதிகளை சரஸ்வதியாக உருவகித்து வேதகால ரிஷிகள் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள். தேவி சூக்தம், துர்க்கா சூக்தம் ஆகியவற்றில் சக்தி வழிபாடு கூறப்பட்டுள்ளது.

தேவி சூக்தம், துர்க்கா சூக்தம் ஆகியவற்றில் சக்தி வழிபாடு கூறப்பட்டுள்ளது. வாஜதுனேய சம்ஹிரையில் அம்பிகா என்றும், தைத்திரீய அருண்யகம் முண்டக உபநிடதம் என்பவபற்றில் துர்க்கா, கார்த்தியாயினி, கன்னியாகுமரி எனவும் அம்பாள் அழைக்கப்படுவதைக் காணலாம். கேன உபநிடதம் சக்தியை முழுமுதற் தெய்வமாகக் குறிப்பிடுகிறது. "அம்பாள் அழகு மிக்க உமாவாக பரப் பிரம்மம் பற்றிய ஞானத்தை இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அறிவுறுத்தும் மேலான சக்தியாகக் காணப்படுகிறாள்" எனக் கேன உபநிடதம் கூறுகிறது.

ஆன்மாக்களின் இயக்கத்தின் அடிப்படை மூலமே சக்தி தெய்வம். தான் என்பது சாக்தர்களின் நம்பிக்கையாகும். தேவி ஒருத்தியே முதலில் இருந்தாள். அவளே சகலதையும் படைத்தாள். அவளிடமிருந்தே மும்மூர்த்திகளும் உண்டாயினர். பற்பல வித்தைகளாக விளங்குபவளும் அவளே. ஓம் என்ற சொல்லின் உட்பொருளும் அவளே. அகமும், புறமும் ஆனந்தமுற ஒளியைப் பரப்பிக்கொண்டு தேசம், காலம், பொருள் ஆகியவற்றாலே பாதிக்கப்படாமல் மகா திரிபுர சுந்தரி என்று புகழ்பெற்ற ஞான வடிவமாக இருப்பவளும் அண்டை சக்தியே என்று தேவி உபநிடதம் கூறுகிறது.

ஆகம வழிபாடும் கிராமிய வழிபாடும்

ஆகம வழிபாடு

தாய்த் தெய்வ வழிபாடு உயரிய மட்டத்தில் ஆகம விதிமுறைகளுக் கேற்ப நடைபெறகிறது. இவ் வழிபாட்டில் ஸ்ரீ சக்கர பூசை முதலிடம் பெறுகிறது. அம்பிகையை நவசக்திகளாகப் பாவனை பண்ணி நடைபெறும் நவசக்தி அர்ச்சனை சக்தி வழிபாட்டில் மிகவும் சிறப்பான அம்சமாகும். சாக்த ஆகமங்கள் முறைப்படி அம்பிகையை வழிபடும்

அடியவர்கள் அனுசரிக்க வேண்டிய ஆறு கடமைகளாகப் பின்வருவன கூறப்பட்டுள்ளன.

1. நாடோறும் நீராடல் 2. சந்தியா வந்தனம், 3. ஹோமம், 4. ஜபம், 5. தேவி ஆராதனை 6. சக்தி பூஜை.

ஸ்ரீ வித்யா உபாசனை

ஸ்ரீ வித்தையில் மந்திரம், யந்திரம், தந்திரம் ஆகிய மூன்றும் இணைந்து காணப்படுகின்றன. யந்திரம் மந்திரத்திலுள்ள கருத்தை உருவகப்படுத்திக் கூற அதில் உள்ளத்தை நிலை நிறுத்திச் செய்யப்படும் புறநிலைப் பூசைகளும் மானசீகப் பூசைகளும் அஷ்டாங்க யோகம் நியாசம் போன்ற ஏனைய கிரியைகளும் தந்திரத்தில் அடங்குகின்றன. ஸ்ரீ லலிதாம்பிகையே ஸ்ரீ வித்யா உபாசனையின்படி ஆராதிக்கப்படும் தெய்வம் ஆவாள்.

கிராமிய வழிபாடு

ஆகம விதிமுறைகளை அனுசரியாது. கிராமிய மட்டத்தில் நாட்டார் வழிபாடாகவும் அம்பிகையை வழிபடும் மரபும் உள்ளது. நாட்டார் வழிபாட்டில் காளி, மாரிஅம்மன், நீலி போன்றன செல்வாக்குள்ள தெய்வங்கள் ஆகும். இவை நோய் நொடிகளில் இருந்து மக்களைக் காக்கும் தெய்வங்களாக வணங்கப்பட்டு வருகின்றன. கிராமிய வழிபாட்டில் வழிபடுவோனுக்கும் இறைவனுக்குமிடையில் தரகர்கள் இல்லை. வழிபடுவோன் தானே நேரடியாகப் பொங்கி மடை பரவி உணர்வு பூர்வமாக இறைவனை வழிபடுகின்றான். வழிபடும் அடியவர்களில் சக்தி தெய்வம் வெளிப்பட்டு நிற்கும் என்ற நம்பிக்கை கிராமிய வழிபாட்டில் மக்களிடம் காணப்படுகிறது. இவ்வாறு அம்பிகை வெளிப்பட்டு நிற்கும் அடியார்கள் கூறும் வாக்குகளை மக்கள் அருள் வாக்குகளாகவே ஏற்றுக்கொள்கின்றனர்.

வாமசார வழிபாட்டு முறை (பஞ்சமகார பூசை)

வாமசார வழிபாட்டு நெறி பெரும்பாலும் வட இந்தியாவிலே நிலவி வருகிறது. இவ் வழிபாட்டில் வைதிக நெறிக்குப் புறம்பான பல அம்சங்கள் இடம் பெறுகின்றன. இதிலே பரிசமகாரர்கள் எனக் குறிப்பிடப்படும் ஐவகை இன்பங்களைத் துய்த்தல் அவசியம் எனக் கருதப்படுகிறது.

1. மத்ஸ்யம் (மீன்) 2. மத்யம் (மது) 3. மாமிசம் (ஊன் உணவு) 4. முத்திரை (கைவிரல்கள் மூலம் காட்டும் இரகசிய மொழி) 5. மைதுனம் (பெண் உறவு) என்பனவாகும்.

இந்த வழிபாட்டு முறையினால் ஒழுக்கக் கேடுகள் பல தோற்றம் பெற்றன. இத்தகைய பஞ்சமகார நெறி நாளடைவில் தவிர்க்கப்பட்டு மதுவுக்குப் பதிலாக இளநீரும் மாமிசத்திற்குப் பதிலாக இஞ்சியும் கொள்ளப்படுகின்றன. சக்தியின் அருளை வேண்டிப் பஞ்சமகார நெறியைப் பின்பற்றும் சாக்தர்கள் மதுபானமாகிய கள்ளை அருந்துகின்றார்கள். இதனால் இவர்கள் வேண்டிப் பெற்ற அருள் சக்தியும் முற்றாக அழிந்துவிடும். ஆக்கபூர்வமான அருள் தருகின்ற சிவஞானத்தை உள்ளத்துள்ளே உணர்ந்தால் பேரானந்தத்தைப் பெறலாம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்
சக்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சக்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சக்திய ஞான ஆனந்தத்தில் சார்தயே

இதிகாச புராணங்களில் சக்தி வழிபாடு

இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரத்தில் துர்க்கையைத் துதிக்கும் பல தோத்திரங்கள் வருகின்றன. பாண்டவர்கள் வனவாசத்தை முடித்து அஞ்ஞாதவாசம் போவதற்கு முன்பு தங்களுடைய ஆயுதங்களைத் துர்க்கை அம்பாள் கோயிலின் வன்னிமரப் பொந்தில் பாதுகாப்பிற்காக வைத்துச் சென்றார்கள் என மகாபாரதம் கூறுகிறது. அஞ்ஞாதவாசம் முடிந்த பின்பு பாண்டவர்கள் துர்க்கை கோயிலில் வழிபாடுகள் பூசைகள் செய்த பின்பே ஆயுதங்களை மீண்டும் எடுத்துக் கொண்டார்கள்.

புராணங்களின் எழுச்சியே சக்தி வழிபாட்டை வட இந்தியாவில் நிலை நிறுத்தியது. சக்தியின் அருட்செயல்களை அடிப்படையாகக் கொண்டு உருவமும் நாமமும் கொடுத்து சக்தி வழிபடப்பட்டாள். சக்தியைப் பற்றிக் கூற வந்த சாக்த புராணங்கள் அவளது வயதுகளையும் தொழிற்பாடுகளையும் வகைப்படுத்திப் பெயர்களைக் கூறுகின்றது. சிறுபிள்ளைப் பருவத்தைச் சாந்திகா எனவும் ஏழு வயதுப் பருவத்தை சண்டிகா எனவும், எட்டு வயதுப் பருவத்தை சாம்பவி எனவும் பத்து வயதுப் பருவத்தைக் கௌரி எனவும் புராணங்கள் கூறுகின்றன. மார்க்கண்டேய புராணத்தில் தேவியின் மகத்துவம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. "மங்கலமாக உள்ள யாவற்றிலும் மங்கலமாக விளங்குபவளே! எல்லா நன்மைகளையும் வழங்குபவளே! எல்லா விருப் பங்களையும் நிறைவேற்றுபவளே! அன்பர்கள் அடைக்கலம் புகுவதற்கு உரியவளே! மூன்று திருக்கண்களை உடையவளே! கௌரி தேவியே தேவரீருக்கு வணக்கம் என மார்க்கண்டேய புராணம் அம்பிகையின் அருட் பிரபாவத்தை எடுத்து விளக்குகிறது.

பிற்காலத்தில் புராணங்களில் ஆண் தெய்வ வணக்க முறையோடு சக்தி வணக்கம் இணைத்துக் கூறப்பட்டது. பிரமன் மனைவியைப் பிராமி எனவும், விஷ்ணுவின் மனைவியை வைஷ்ணவி எனவும் குமரன் மனைவியைக் கௌமாரி எனவும், இந்திரன் மனைவியை இந்திராணி எனவும், பரமேஸ்வரனின் மனைவியைப் பரமேஸ்வரி எனவும் யமனின் மனைவியைச் சாமுண்டி எனவும் பல்வேறு வடிவங்களில் உருவகப் படுத்தியுள்ளார்கள். சக்தியின் பல்வேறு வடிவங்களைச் சங்கரர் மூன்றாக வகுத்தார். உலக இயக்கத்திற்கும் தொழிற்பாட்டிற்கும் நாயகியாகத் துர்க்கையையும் உலகத் தொழிற்பாட்டின் மூலாதாரமாக செல்வத்திற்கு நாயகியாக இலட்சுமியையும் உலகியல் வாழ்க்கையின் ஈடேற்றத்துக்கு உரியவளாக அறிவு விருத்திக்கு நாயகியாக சரஸ்வதியையும் சங்கரர் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தில் சக்தி வழிபாடு

சங்க இலக்கியத்திலும் மணிமேகலை சிலப்பதிகாரத்திலும் தாய்த் தெய்வத்தைப் பற்றிய குறிப்புகள் நிறையக் காணப்படுகின்றன. பழந்தமிழரின் தாய்த் தெய்வமாக கொற்றவை வழிபடப்பட்டாள். எல்லா உயிர்களுக்கும் அன்னையாகத் திகழும் தாய்த் தெய்வத்தை மோடி என்று தமிழில் அழைத்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தமிழ் வேதமாகத் திகழ்கின்ற தேவாரத்தில் "போகமார்மோடி", "கடற்கோடியின் மோடி" எனக் காளியை அழைத்ததைக் காணக் கூடியதாக உள்ளது. சங்க இலக்கியத்தில் தாய்த் தெய்வத்தைக் காட்டில் உறைபவளாகவே கூறப்பட்டுள்ளது. காட்டில் வாழும் தாய்த் தெய்வத்தை பற்றி மணி மேகலை கலித்தொகை முதலிய நூல்களும் கூறியுள்ளன. மணிமேகலையில் சக்தி தெய்வம் "காடமர் செல்வி" எனவும் கலித்தொகையில் அந்தத் தாய்த் தெய்வமே "பெருங்காட்டுக் கொற்றி" எனவும் அழைக்கப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. திருமுருகாற்றுப் படையில் "வெற்றி வேற்கொற்றவை சிறுவ" என்று முருகன் வர்ணிக்கப்படுகின்றான். சோழர் காலத்தில் சக்தி கோயில்கள் திருமுற்றம் என அழைக்கப்பட்டது. தமிழர்களின் தெய்வமாகிய கொற்றவையுடன் துர்க்கை பிற்காலத்தில் ஒன்றாக்கப்பட்டு வணங்கப்பட்டாள். சக்தி தெய்வம் பண்டைய தமிழர்களால் "பழையோள்", முதியோள்" என்றெல்லாம் அழைக்கப் பட்டாள். நாயன்மார்கள் இவளை முதுகோதை என்றும் அழைக்கிறார்கள்.

சோழ அரசர்கள் அம்பிகையை நிதம்ப சூதனி என்ற பெயரில் வழிபட்டார்கள். இவள் அரசர்களுக்கு வீரத்தையும், வெற்றியையும், அரச பதவியையும் தருபவள் என்றும் கருதினர். பாண்டியர்கள் மீனாட்சியைப் பாண்டிய அரசைத் தோற்றுவித்த தலைவி என்று வழிபட்டனர். மதுரை

மீனாட்சி அம்மன் ஆலய ஓவியம் ஒன்றில் அங்கையற் கண்ணியான மீனாட்சியை வணங்கி செங்கோலைத் தேவியிடமிருந்து திருமலை நாயக்கர் பெற்றதாகக் காட்டப்பட்டுள்ளது. மீன் தனது கண் பார்வையினால் நீரில் கிடைக்கும் தன் சினைகளைப் பொரிக்க வைத்து வெளிப்படச் செய்து பாதுகாப்பது போல தனது அருள் நிறைந்த கண் பார்வையினால் அங்கையற்கண்ணி உலகில் உள்ள உயிர்களைப் பாதுகாக்கின்றாள்.

ஈழத்தில் சக்தி வழிபாடு

இலங்கையில் வாழ்ந்த பூர்வீக மக்களின் வழிபாடாகிய நாகயக்ஷ வழிபாட்டிற் பெண் தெய்வங்களாக நாகினி, யக்ஷி ஆகியவை வணங்கப்பட்டன என்பதை வரலாறுகளில் இருந்து அறிய முடிகிறது. நம் நாட்டில் கிடைத்த சுடுமண் பெண் தெய்வ உருவங்களும் லிங்க வழிபாடு பற்றிய சான்றுகளும் தாய்த் தெய்வம் சக்தியாகவும் அரு உருவ நிலையில் லிங்க வழிபாட்டுடன் சேர்ந்தும் வழிபடப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்துப் பிராமியக் கல்வெட்டுக்களில் துர்க்கை பற்றிய குறிப்புகள் உண்டு. இதே காலத்தைச் சேர்ந்த இலட்சுமி உருவம் பொறித்த நாணயங்களும் காணப்படுகின்றன.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வீர வழிபாட்டின் ஓரம்சமாகிய கண்ணகி வழிபாடு ஈழத்திற் புகுந்து இங்கு நிலவிய சக்தி வழிபாட்டுடன் தன்னை இணைத்துக் கொண்டது. சேரன் செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு கோயில் அமைக்கப்பட்ட விழாவிலே கலந்து கொண்ட இலங்கை வேந்தனாகிய கஜபாகு மன்னன் ஈழத்தில் பத்தினித் தெய்வ வழிபாட்டை அறிமுகம் செய்து வைத்தான்.

சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும். யாழ்ப்பாணத்தின் வட பால் அமைந்த நாகர் கோயிலில் சிவ வழிபாட்டுடன் நாகவழிபாடு இணைந் திருப்பது போல நயினாதீவில் சக்தி வழிபாட்டுடன் நாகவழிபாடு இணைந்துள்ளது.

அம்பிகையின் திருவருள் பெற்ற அருளாளர்கள்

தயைப் பிரகாஜினியாக இருக்கும் அம்பிகையின் திருவருளைப் பெற்றதினால் ஆடு, மாடு மேய்க்கும் இடையனாக இருந்தவன் மகாகவி காளிதாசனாக மாறினான். உலகம் போற்றும் உத்தம புருஷராகவும் சிறந்த சக்தி உபாசகராகவும் திகழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் அம்பிகையின் அருளைப் பெற்ற அருளாளர் ஆவார். மேற்கு வங்காள மாநிலத்து

தட்சிணேஸ்வரத்துக் காளி அம்பாளின் திருவருளை இராமகிருஷ்ணர் முழுமையாகப் பெற்றிருந்தார். மகாராஷ்டிர வாசியாகிய பாஷ்கராயர் சாக்த மதத்தைப் பரப்பிய மகான்களில் முதலிடம் பெறுகிறார். இவர் சோழ நாட்டு மன்னர்களின் குருவாகவும் இருந்தார்.

அம்பாளின் அருட்பிரபாவங்களை பக்திச் சுவை சொட்டச் சொட்டக் கூறும் சிறப்பு மிக்க தமிழ்ப் பிரபந்தங்களாக கம்பன் அருளிய சரஸ்வதி அந்தாதியும் குமரகுருபரர் அருளிய மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழும், அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதியும் காணப்படுகின்றன. புரட்சிக்கவி மகாகவி பாரதியாரும் சக்தி உபாசகராகவே காணப்பட்டார்.

மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், கேரளத்திலே பகவதியாகவும், சிருங்கேரியிலே சாரதா ஆகவும், மைசூரியே சாமுண்டி ஆகவும், அசாமிலே கர்மாக்யா எனவும், மகாராஷ்டிரத்திலே பவானி என்றும் அம்பாள் வழிபடப்படுகிறாள். மூவுலகிலும் சிறந்த பேரழகியாக லலிதா மகாதிரிபுரசுந்தரி என அம்பாள் அடியவர்கள் அனைவராலும் போற்றப்படுகிறாள். அம்பிகையை நாள்தோறும் தியானிப்பவர்கள் தியானிக்கப்படும் பொருளாகவே மாறிவிடுவார்கள் என்பதனை "தியானத் யாத்துரு தேய ரூபா" என லலிதா சகஸ்ர நாமம் குறிப்பிடுகிறது.

சிவசக்தி இணைப்பு

சிவனும் சக்தியும் சேர்ந்த சமயக் கோட்பாட்டுத் தத்துவம் தலையெடுத்ததும் சக்தி வழிபாடு தலைவழிபாடாக நின்று நிலைக்க முடியவில்லை. ஆரம்பத்தில் தனியாக முக்கியத்துவம் பெற்ற தாய்மைத் தத்துவம் காலகதியில் ஆண்மைத் தத்துவத்துடன் கலந்து விட்டது. சிவனும் சக்தியும் ஒன்றாக இணைந்ததை சிவனின் கல்யாணசுந்தர மூர்த்தமும், இவை குடும்பம் ஆகியதை சோமஸ்கந்த மூர்த்தமும் எடுத்து இயம்புகின்றன. ஏனைய மதப் பிரிவுகளாகிய காணாபத்யம், கௌமாரம் ஆகிய இரண்டிற்கும் முதல்வர்களான கணபதி, முருகன் என்பவர்களின் தாயாகவும், விஷ்ணுவினுடைய சகோதரியாகவும் சக்தி புராணங்களில் சித்தரிக்கப்படுகிறாள். பாரத நாட்டில் சாக்தம் என்ற தனி மதப்பிரிவு வழக்கொழிந்து பிறமதங்களோடு இணைந்து காணப்பட்டாலும் சக்தி இன்றும் சிறப்புடன் அனைத்து இந்து சமய மக்களாலும் வழிபடப்பட்டே வருகிறார்கள்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்
(ஓய்வு நிலை - உதவிப் பணிப்பாளர்)
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

❋ ❋ ❋

வாழ்வு மிகுத்து வரும்

உலகின் வினையகற்றி ஆள்பவர் நம் விநாயகர்
நம் சைவத்தில் கணபதி வணக்கமே முதல் வணக்கமாம்,
எக்காரியம் செய்யப்புகுவாரும்,
விநாயகரை வணங்கியே,
நம் வினைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பது சைவமரபு.
முப்புரம் எரிக்க இரதமேறிய சிவனார்,
கணபதியைக் கைதொழாமற் புறப்பட்டதால்
அவர் இரதத்தின் அச்சு முறிந்ததாய்ப் புராணம் உரைக்கும்.
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
பின்னர் கணபதியை வழிபட்ட பின்பே,
சிவனார் முப்புரம் எரித்தனராம்.
சைவத்தின் மூல தெய்வமாகிய,
சிவனாலும் வழிபடப்படும் தகுதி
நம் கணதிபதிக்குரியது.

முப்பத்தாறு தத்துவங்களில்
முதல் ஐந்தாய் அமைந்த,
நாதம், விந்து, ஈஸ்வரம், சதாசிவம், சுத்தவித்தை எனும்
ஐந்து தத்துவங்களும் சிவ தத்துவங்களாம்.
இவற்றுள் நாதம் சிவத்தையும்
விந்து சக்தியையும் குறிப்பன.
இந் நாதவிந்துவினுடைய சேர்க்கையே பிரணவமாம்.
இப்பிரணவத்தின் வடிவமே நம் கணபதி வடிவமாம்.

மூல தத்துவங்கள் இரண்டினதும்,
இணைப்பால் அமைந்ததாற்றான்,
முதல் வணக்கம் கணபதிக்குரியதாயிற்று.

நாத தத்துவத்திற்குக் குறியீடு --
விந்து தத்துவத்தின் குறியீடு 0
இவ்விரு குறியீடுகளும் சேர வருவதே,
(உ) உகரமாம்.

அதனாலேயே,
அப்பிரணவ வடிவான கணபதியைக் குறிக்க,
பிள்ளையார் சுழி எனும் பெயரில் உகரம் இடப்படுகின்றது.

இங்ஙனம் தத்துவ நிலையில் உயர்ந்து நின்று,
முதல் வணக்கம் பெற்றுப் போற்றப்படும் கணபதி,
எளியார்க்கு எளியாராயும் நிற்கின்றார்.
கணபதியை எவரும் எங்கும் எப்படியும் தொழலாம்.
கிரியைகளை வகை செய்யும் நம் ஆகமங்களும்,
கணபதி வழிபாட்டிற்கான கட்டுப்பாடுகளை விதித்தில.
சாதாரண மரத்தின் கீழும்,
கணபதியை ஸ்தாபிக்க முடியுமாம்.
ஆச்சாரம் முதலானவை அனுட்டிக்கப்படாமலும்,
கணபதி வணக்கத்தை இயற்ற அனுமதியுண்டு.

இவ் உலகப் பொருட்களை,
உயிரில் பொருள், உயிருள் பொருள் என,
இரு வகையாகப் பிரிக்கலாம்.
இவையே சடம், சித்து எனப்படுகின்றன.
உயிர்ப்பொருட்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.
அப்பிரிப்புக்கு அவற்றின் அறிவே அளவுகோலாம்.
ஓரறிவிலிருந்து ஆறறிவுவரை பிரிவுபட்டதால்,
உயிர்ப் பொருட்களின் வகை ஆறாயிற்று.
இவ் அறுவகை உயிர்களுள்,
ஆறறிவு பெற்ற மனிதன் முதல் நிலையையும்,
ஓரறிவு பெற்ற தாவரங்கள் கடைநிலையையும் பெறுகின்றன.
அவ் ஓரறிவு பெற்ற தாவரங்களுள்,
மிகத் தாழ்ந்தது புல்லாம்.
உயிர் இல் பொருட்களாகிய சடப்பொருட்களுள்,
மிக இழிவாய்க் கருதப்படுவது மலமேயாம்.

உயிர், சடப்பொருட்களில்,
இழிநிலையுற்றவைகளான புல்லையும், மலத்தையும் சேர்த்தே,
கணபதியை ஆவாகனம் செய்யமுடியும்.
பசுவின் மலத்தையும், அறுகம்புல்லையும் ஒன்று சேர்த்து,

கணபதி என வழிபடுவது நம் வழக்கம்.
நம் கணபதியின் எளிமை நிலைக்கு
இவ்வழிபாடு தக்க சான்றாகின்றது.
இதனால்,
சமூகத்தின் மிகக் கீழ் நிலையுற்ற ஒருவரும் கூட,
நம் கணபதியை எளிமை பட வழிபடலாம் எனும் உண்மை அறிகின்றோம்.

உயிர்வினும் உயர்ந்து நின்றும்,
தாழ்வினும் தாழ்ந்து நின்றும்,
அருள் செய்யும் ஐங்கரன் தன் கருணை மிகப் பெரிதாம்.
வேழ முகத்து விநாயகனை,
மனம், மொழி, மெய்களால் வணங்க,
வாழ்வு மிகுத்து வருமாம்.

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

❋ ❋ ❋

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென்று ஏத்திடும் நாதனை நாள்தொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின்று உன்னியான் போற்றிசெய் வேனே.

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத்து என்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

வருஷப்புலம் அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் பதிகம்

கணபதி காப்பு

சீர்பெருகு வருஷப்புலம் சிறப்புடனே கோயில் கொண்ட
பேர் விளங்கு மகாமாரி அம்மன் பேரினிலே பதிகம் பாட
ஆர்வமுடன் அடிபணிந்தேன் ஆனைமுகத்தோனே அருள்வாய்
பார்புகழ யாம் வாழப் பாதமலர் பற்றினனே!

நற்றமிழ்ப் பாமாலை

வருஷப்புலம் அமர்ந்து நல்ல வளமான வாழ்வுதந்து
பெருமையுடன் வீற்றிருக்கும் எங்கள் மகாமாரித்தாயே!
அருமையாய் உனைப்பாடி ஆனந்தமாய் நாமிருக்க
வருக என்றே வரவேற்றோம் திருவருள் தந்திடுவாயம்மா!

ஓங்கார ரூபியாய் உள்ளத்திலே நல்ல ஒளிவிளக்காய்
பாங்காக நீ இருந்தே பரிசுத்த நல்லொளி பரப்பியே
ஈங்கோரிடர் வந்து எமையென்றும் வருத்திடாமல்
நீங்கிடவே செய்திடுவாய் வருஷப்புல நாயகியே! தாயே!

சிந்தனை செய்தோம் தாயே! சிவகாமசுந்தரி நீயே!
வந்தனை செய்தே நாளும் வருஷப்புலம் வலம் வந்தோம்
உந்தனை வணங்கிடவே பந்தவினை பறந்தோடிடுமே!
கந்தனைப் பயந்த மகாமாரியே! கைதொழுதோம் காப்பாயே!

தொல்லை வினை தீர்த்துத் தொழுமடியார் பாவமெல்லாம்
இல்லை யெனவே செய்திடும் எங்கள் மகாமாரியம்மா!
கல்லைப்போன்ற மனமும் கசிந்துருகக் காட்சி தந்தே
பல்லைக் காட்டி நிற்கின்றோம் பதமலர் தருவாய் தாயே!

கருவாய்க் கிடந்துந்தன் கழல் பணிந்தோம் அம்மா!
உருவே வரச் செய்து தினம் உன் நாமம் உச்சரித்தோம்
மருவாய் வந்து எங்கள் மலபந்தம் அறுத்தாள் வாய்!
தருவாய் உன் மலர்ப்பாதம் வருஷப்புலம் அமர்ந்தவளே!

மாணிக்கம் போன்றவளே! மரகதவல்லி ஸ்ரீ மகாமாரி!
பேணிக் காத்திடவே வரும் பிரம்மாண்ட நாயகியே!
நாணிக்குறுகி நின்றே நம்பியுந்தன் பதம் பணிந்தோம்
காணிக்கை உனக்களித்தே கைதொழுதோம் சரணமம்மா!

உன்னையே சதமென்று நாம் எண்ணியே வந்தோமம்மா!
நின்னையே கதியென்று நித்தமும் போற்றியே நின்றோம்
பொன்னையே பெரிதென்று நம்பி பொய் வாழ்க்கை வாழ்ந்தோம்
அன்னையே சரணம் அம்மா! ஆதிபராசக்தி சரணம் தாயே!

சித்தி தருவாய் என்றே சிறப்புடன் வழிபட்டு நின்றோம்
சக்தி அம்பாளே! சர்வலோக நாயகியே! மகாமாரித் தாயே!
பக்தியுடன் பதம் பணிந்தோம் பாதபங்கஜ மலரடி சரணம்
முத்திப் பேறளிப்பாய் அம்மா! மூவுலகுந் தொழுதேவியே தாயே!

கண்ணையிமை காப்பதுபோல் காத்தருளும் மகாமாரியம்மா!
மண்ணையுண்ட வாயான் கண்ணன் வணங்கிடும் தாயே
பெண்ணையிடப்பாகம் வைத்த பெருமான் மகிழும் தாயே
விண்ணைத்தொடும் இராஜகோபுர வருஷப்புலநாயகியே சரணம்!

வருஷப்புலம் உறையும் வரதாரணியே மகாமாரித்தாயே
ஒருமுறை கடைக்கண்பார் ஓங்கார நாயகியே சிவசங்கரியே
திருமுறையோதி நாம் தினமும் உன் திருவடி தொழுதோம்
தருகநின்மலரடி எமக்கே தாயே நின்தாள் சரணம்! சரணம்!!

ஆக்கம்:
"தெய்வத் தமிழ்ச் சுடர்"
"கலாபூஷணம்" இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

❋ ❋ ❋

அண்டங்கள் அனைத்தும் அம்மையின் ஆட்சி

"யாது மாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்
ஆதி சக்தி தாயே என்மீது
அருள் புரிந்து காப்பாய்"

என்று அம்பிகையைக் காளியாக வழிபட்ட பாரதியார் "எங்கு காணினும் சக்தியெட ஏழு கடல் அவள் வண்ணமெடா" என்று எங்கும் எதிலும் நீக்கமற வியாபித்திருக்கும் சக்தியை எமக்குச் சுட்டிக் காட்டுகின்றார். இவ்வாறு ஞானிகள் யோகிகள், சைவசித்தாந்திகள் பக்தர்கள் சக்தியை வழிபட்ட சான்றோர் பலராவர். அவர்கள் அண்டங்கள் அனைத்தும் அவளது ஆட்சிக்குட்பட்டது என்பதை உணர்வர்.

இவ்வுண்மையைத் திருவருட் பயன் "தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்று கூறுகின்றது. பரமகம்சதாசன்

"எங்கும் நிறைந்த சக்தி - புவி
யாவும் படைத்த சக்தி
அண்டம் கடந்த சக்தி
அணுவுக்கு அணுவான சக்தி
பிண்டங் கடந்த சக்தி
புவி பேணி வளர்க்கும் சக்தி" என இயற்கையில் இறை சக்தி உறைந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

அண்டசராசரங்களில் ஆட்சி

அலைபாயுங் கடல், வானுயர்ந்த மலைகள், எல்லையில்லா ஆகாயம், சுட்டெரிக்குந் தீ இவை எங்கிருந்து வந்தவை. இவற்றின் தோற்றம் என்ன? சூரியன், சந்திரன், கோள்கள் இவற்றின் இயக்கம் எதனால் நடைபெறுகின்றன. மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள் அனைத்து உயிரினங்களும் எதனால் இயங்குகின்றன என்பதை உற்றுநோக்குவோமானால் அங்கே விடையும் இருக்கிறது.

மலரில் மணமாகவும், மணியில் ஒலியாகவும், வீசுங் காற்றாகவும், ஒளிரும் சந்திர சூரியர்களாகவும், எம்மைத்தாங்கும் நிலமாகவும், நீராகவும், நெருப்பாகவும் இருப்பவள் சக்தியே. பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலானது எமது உடல். ஒருகணம் வீசுங் காற்று நின்று விட்டால் உயிர் இவ்வுடலை

விட்டு விடும். இதேபோல், நீர் நெருப்பு, ஆகாயம், நிலம் யாவும் உயிர்களுக்கு ஆதாரமாக உள்ளவை. இத்தகைய உயிர்களைத் தோற்று வித்தவளும் காத்து வருபவளும் அன்னை பராசக்தியே" அவளது அரசாட்சி அண்ட சராசரங்கள் அனைத்திலும் நிலை பெறுகின்றது.

ஐந்தொழில் புரியும் அன்னை

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் ஐந்தொழில் புரிகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களின் நோக்கம் ஆன்மகோடிகளுக்குப் பேரின்பம் கொடுத்தலே. இந்த நடனத்திற்கு ஆதாரமாக இருப்பவள் சக்தி. இதனை "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்" என்றும் "சக்திபின்னமிலான்" என்னும் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. சிவமும் சக்தியும் ஒன்றையொன்று பிரிப்பறியாதவை. சிவம் சக்தியின் துணை கொண்டே பஞ்ச கிருத்தியங்களை நடாத்துகின்றது. இதனை அழகாக

"கொடு கொட்டி ஆடுங்கால்
கொண்ட சீர்தவோளோ" என்றும்

பண்டரங்கம் ஆடுங்கால்
பாணி தருவாளோ" என்றும்

சங்க இலக்கிய நூலாகிய கலித்தொகைக் கடவுள் வாழ்த்துக் கூறும். கொடு கொட்டி முப்புரங்களை எரித்தபோது சிவனாடிய கூத்து, பாண்டரங்க மென்பது போரில் வெற்றி பெற்றதற்காகச் சிவனாடிய கூத்து ஆகும். இக் கூத்து ஆடிய போது உமை தாளம் இசைத்ததாகக் கூறப்படுகின்றது.

அருட்சக்தியின் செயல்

அன்பு கோடிகள் மலத்தினாற் கட்டுண்டு உலகில் உழலுகின்றன. அவை நம்மை வந்தடையுமாறு இறைவன் அருள் புரிகின்றான். உயிர்களுடன் இரண்டறக் கலந்து ஒன்றாய், வேறாய், உடலாய் நின்று நன்னருட் சக்தியின் துணைகொண்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்து ஆன்மாக்களை உய்விக்கின்றான். இவ்வாறு இறைவனோடு நீங்காது நின்று தொழில் புரியும் சக்தியை திரோதான சக்தியென்றும், அருட்சக்தி யென்றும் கூறப்படும். ஆன்மாக்களின் வினைக்கேற்ப தனு, கரண, புவன, போகங்கள் கொடுத்து வினைப்பயனைத் துய்ப்பித்தபின், புலம் பரிபாகப்பட்ட நிலையில் அருட்சக்தி ஆன்மாவை இறைவனுடன் சேர்க்கும். ஆன்மா பேரின்பம் அடையும் அம்மையாகிய சக்தியின்றிச் சிவம் பிரபஞ்சத்தை ஆக்கவோ அழிக்கவோ இயலாது. இதனைச் சிவஞானபோதம்

"வித்துண்ட மூலம் முளையாதாதாரமாய்
அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால்" என்கிறது.

விதையானது நிலத்தில் பொருந்தியவிடத்தே முளைக்குமாறு போலச் சிவம் சக்தியின் துணை கொண்டே ஐந்தொழில்களைப் புரியும். சிவம் அறிவுப்பொருள். சக்தி சடப்பொருள். இவை இணைபிரியாது உலகெங்கும் வியாபித்திருக்கின்றன. உலக சராசரங்கள் அனைத்திலும் திவ்விய வடிவமாக இருப்பது சக்தியே, பெண்ணினம் முழுவதும் சக்தி சொரூபமே.

அன்னையின் திருநாமங்கள்

தொழில் வேறுபாட்டால் சக்தியானது பல்வேறு நாமங்களைப் பொருந்தும், உமை, காளி, பார்வதி, மகேஸ்வரி, அம்பிகை, காயத்திரி, சாவித்திரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, வலாம்பிகை, முத்துமாரி, இலக்குமி, துர்க்கை, சரஸ்வதி என்னும் நாமங்களைத் தாங்குபவளும் ஆதிபராசக்தியே. ஆன்மாக்களுக்கு முத்திப் பேற்றை அருளுபவளும் அவளே. காஞ்சியில் ஏகாம்பரநாத சுவாமியின் இடப்பாகத்தில் காமாட்சி என்றும், தில்லைக்கூத்தன் பாகத்தே சிவகாமசுந்தரி என்றும், சோமசுந்தரப் பெருமான் திருமருங்கில் மதுரை மீனாட்சியென்றும் அழைக்கப்படு கின்றாள். வீரத்தைத் தருவதில் துர்க்கை என்றும், செல்வத்தைத் தருவதால் இலக்குமி என்றும், கலைகளைத் தருவதால் சரஸ்வதியென்றும் அழைக்கப்படுவாள்.

தாயன்பு

அல்லற்பட்டு காலங்காலமாகத் துன்பப்படும் ஆன்மாக்களுக்குப் பிறப்பில்லாப் பேரானந்த வாழ்வைக் கொடுக்கிறாள் அன்னை. தாயன்புக்கு இணையானது உலகில் வேறு ஒன்றும் இல்லை. பிள்ளைகளுக் காகத் தன்னைத் தியாகம் செய்பவள் தாய். ஆன்மாக்களுக்காகத் தன்னருளைக் கொடுப்பவள் உலக மாதாவாகிய அன்னையே. உயிர்கள் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டாள். மக்கள் துயர் துடைக்கவும், அறியாமையைப் போக்கி அருள் கொடுக்கவும், தீமைகளை அழிக்கவும் அன்னை பராசக்தி அவதரிக்கிறாள்.

சக்தியை வழிபட்ட சான்றோர்

சக்தியை வழிபட்டு ஆன்மபலம் பெற்றோர் பலர். ஆதிசங்கரர், அபிராமிப்பட்டர், குமரகுருபரர், கம்பர், காளமேகப்புலவர், பாரதியார் எனப் பலரைக் குறிப்பிடலாம். ஆதிசங்கரர் பிச்சை ஏற்கச் செல்கிறார். வறுமையில் மூழ்கிப் போய் இருந்த அந்த வீட்டுப்பெண் ஒன்றுங்கிடைக் காமையால் நெல்லிவற்றல் ஒன்றை சங்கரருக்கு மனமுவந்து அளித்தாள். அவளது வீட்டு வறுமை போக்க அம்பிகையை வேண்டினார். ஆதிசங்கரர்

அம்பிகையின் அருளால் அவள்வீட்டு வறுமை தீர கனக மழை பொழிந்தது. அம்பிகையின் கருணை வெள்ளத்தில் நனைந்தார் ஆதிசங்கரர். இதன் பேறாகக் கிடைத்தது கனகதார தோத்திரமானவை. திருக்கடவூரில் எழுந்தருளி இருக்கும் அம்பிகைக்கு அபிராமி என்று பெயர். அபிராமியிடம் அளவிலாத பக்தி கொண்டவர் அபிராமிப்பட்டர். அடிக்கடி அபிராமியின் அருளினால் மூழ்கிப் போய் விடுவார். இந்த நிலையில் அமாவாசையைப் பௌர்ணமி என்ற போது அரச தண்டனைக்கு ஆளாக்கப்பட்டார். பட்டர் அரிகண்டத்தில் ஏற்றப் பட்டார். கீழே எண்ணெய் பெரிய அண்டாவில் கொதித்துக் கொண்டு இருந்தது. பட்டர் வாக்குத் தப்பினால் கயிறுகள் அறுக்கப்பட்டு எண்ணெய்க் கிடங்கில் வீழ்த்தப்படுவார். அபிராமிப்பட்டர் மரண வாயிலில் நின்று அம்பிகையை நினைத்துருகி அபிராமி அந்தாதியைப் பாடத் தொடங்கினார். எழுபத்தொன்பதாவது பாடல் பாடி முடியும் நேரம் அன்னை அபிராமி சோதி சொரூபிணியாகக் காட்சி கொடுத்தாள். சூரியன் மறையும்வேளை அம்பிகை திருத்தோட்டைக் கழற்றி வானத்தில் வீசி எறிந்தாள். வானத்தில் பூரண சந்திரன் உதயத்தை காட்டி நின்றது. அருள் வெள்ளத்தில் மூழ்கிய பட்டர் அந்தாதி நூறுபாடலையும் பாடி முடித்தார். எல்லோரும் ஆனந்தபரவச முற்றனர். அன்னையின் அருளாட்சியை மன்னனும் மக்களும் உணர்ந்தனர். மன்னன் பட்டரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். சைவ உலகிற்கு அபிராமி அந்தாதி கிடைத்தது.

குமரகுருபரர் பிறப்பிலேயே ஊமையாக அவதரித்தவர். முருகனருளினால் பேசுந்திறமை பெற்றவர். சகலகலாவல்லி மாலையைப் பாடியவர். பாதுஷா மன்னனிடம் பேசுவதற்கு இந்துஸ்தான மொழி தெரியாத இவர் கலைமகளை வேண்டித் துதித்தார். கலைமகள் அருளினாலே அம்மொழியைப் பேசும் ஆற்றல் பெற்றார். மன்னனிடம் பேசும் வாய்ப்பும் பெற்றார். இதன் பேறாகவே சகலகலாவல்லி மாலையைப் பாடித் தந்துள்ளார். நவராத்திரி காலங்களில் சைவமக்கள் எல்லோரும் சகலகலாவல்லி மாலை பாடிப் பரவசமாவர். மதுரை மீனாட்சியம்மனே இவர் பாடிய பிள்ளைத் தமிழை நேரிலே வந்து கேட்டு இன்புற்றாள். கம்பர், காளமேகப்புலவர், ஒட்டகக்கூத்தர் முதலிய புலவர்கள் அம்மையின் அதாவது கலைமகள் கடாட்சத்திற்குட் பட்டவர்கள். அதனாலேதான் கம்பர் கவிச்சக்கரவர்த்தி என்று அழைக்கப் பட்டனர். காளமேகம் மழை பொழிவதுபோல் கவிபாடும் ஆற்றலைப் பெற்றார்.

மீனாட்சியின் அவதாரம்

மலயத்துவச பாண்டியன் நீதி தவறாது ஆட்சி செய்து வந்தான். அவனது மனைவியின் பெயர் காஞ்சனமாலை. புத்திர பாக்கியம்

இன்மையால் இருவரும் கவலையுற்றனர். தனதருமங்கள் செய்தனர். மன்னன் புத்திரகாமேட்டியாகம் ஒன்றை அகத்திய முனிவர் தலைமையில் செய்தான். யாகாக்கினியில் இருந்து மூன்று வயதுடைய பெண் குழந்தை ஒன்று தோன்றி வந்து காஞ்சனமாலையின் மடியில் இருந்தது. குழந்தையை மன்னனும் அரசியும் முத்தமிட்டனர். பெண் குழந்தையாயிற்றே அதிலும் யாவரும் கேலி செய்யும் படியாக மூன்று தனங்களுடன் தோன்றியுள்ளாளே என்று மன்னன் கவலை கொண்டான். அப்பொழுது அசரீரி ஒன்று கேட்டது. "மன்னா கவலையை மறப்பாய். இவள் வீரமகா சக்தி. இவளுக்குத் தடாதகை என்று நாமம் சூட்டுவாய். கணவன் வரும் பொழுது இவளது தனம் ஒன்று மறையும் என்ற அசரீரி வாக்கால் மன்னன் மனம் மகிழ்ந்தான். குழந்தை வளர்ந்தது. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் வில்வித்தை வானவித்தை யாவும் கற்றுத் தேறினாள். பகைவரை வென்றாள். மலயத்துவசன் பட்டாபிடேகம் செய்வித்தான். அகத்தியர் மணிமுடி சூட்டினார். மேலும் இவளுக்கு இன்றிலிருந்து பட்டாபிஷேகத்திருநாமம் மீனாட்சி என வழங்கட்டும் என்று ஆசீர்வதித்தார் அகத்தியர். பாண்டியர் குலவிளக்காய் மணப்பருவம் எய்தினாள் மீனாட்சி. மீனாட்சி போர்க்கோலம் பூண்டு சர்வ லோகங்களையும் அடிக்கீழ்ப்படுத்திளாள். இறுதியில் கைலைமலையை முற்றுகையிட்டபோது காவலுக்கு நின்று எதிர்த்த படைகள் மாண்டுபோயின. யாவற்றையும் கேட்ட பரம சிவன் மீனாட்சி நிற்குமிடம் வருதலும் அவளது தனம் மறைந்தது. மீனாட்சி நாணமுற்று நின்றாள். கைலாசபதியாகிய சிவபெருமான் பிராட்டியை நோக்கிச் சோமவாரத்தில் சுபலக்கினத்தில் திருமணம் செய்ய வருவோ மென்று கூறிச் சென்றார். திருமண ஏற்பாடுகள் நடந்தன. கைலாயபதி சுந்தரேசன் மீனாட்சி திருமணம் நடைபெற்றது. மதுரை மீனாட்சியாகிய அன்னை அண்டங்கள் முழுவதையும் ஆட்சி செய்து வருகிறாள்.

நவராத்திரி நாயகிகள்

அண்டங்கள் அனைத்தும் அவளது ஆட்சிக்குட்பட்டது என்பதை நவராத்திரி விரதமும் எடுத்துணர்த்தும் ஒன்பது இரவுகளில் உமையம்மையை, துர்க்கையாக, இலக்குமியாக சரஸ்வதியாக வழிபடுகின்றோம். வீரமின்றியோ பொருளின்றியோ, கல்வி அறிவு ஞானம் இன்றியோ நாம் இவ்வுலகில் வாழ முடியாது. இவற்றைத் தருபவள் சக்தியே. சக்திக்கு ஆற்றல் என்றும் பெயர். ஆற்றல் இல்லாத ஒன்று இவ்வுலகில் வாழ முடியாது. எமக்குப் பேசுந்திறன், பார்க்குந்திறன், கேட்குந்திறன் முதலியவற்றைத் தருபவள் அவளே. இதனால் அன்னை பராசக்தியின் அருளை வேண்டி நவராத்திரி கால வழிபாடு அமைகின்றது. எமது அடிப்படைத் தேவைகளுக்காக வழிபடும் அம்பிகையைப் பற்றி நாமறிவது அவசியம்.

துர்க்கை அவதாரமும் வழிபாடும்

மகிஷாசுரன் தேவர்களை அடிமைப்படுத்தினான். அவனது கொடுங் கோலாட்சியில் தேவர்கள் துன்பமடைந்தனர். அவன் ஆசை மேலீட்டால் பிரம்மாவை நோக்கித் தவம் இருந்தான். மனம் மகிழ்ந்த பிரம்மா அவன் முன் தோன்றினார். பிரம்மாவிடம் சாகாவரம் தரும்படி மகிஷன் வேண்டினான். பிறப்பும் இறப்பும் இயற்கையானது. நீ வேறு வரம் கேள் என்றார் பிரம்மா. மகிஷன் பெண்ணினாலன்றி எனக்கு மரணம் நேரக்கூடாது என்று வரம் வேண்டிக் கொண்டான். வரம் பெற்ற மகிஷனின் அட்டகாசம் மூவுலகிலும் இடியென முழங்கியது. தர்மம் அழிந்தது. அராஜகம் தலை தூக்கியது. மக்கள் துன்புற்றனர். தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். துயரங்களைப் போக்கத் துர்க்கையாகச் சாமுண்டேஸ்வரி தோன்றி மகிஷனை அழிப்பாள் என்று சிவபெருமான் கூறியதைக் கேட்டு யாவரும் மகிழ்ந்தனர். பரமேஸ்வரன் நெற்றிக் கண்ணிலிருந்து சர்வ சக்தியாம் துர்க்கையாய்த் தோற்றுவித்தார். ஆதி சக்தி சிம்மவாகனத்தில் ஆயிரம் ஆயுதங்களைத் தாங்கிச் சாமுண்டியாகப் புறப்பட்டாள். மகிஷனைத் துவசம் செய்தாள். தேவர்கள் மகிழ்ந்தனர். நாமங்களில் பலவாகிச் சக்தியில் ஒன்றாகி அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி எம்மைத் துன்பத்தினின்றும் காத்து வருகின்றான். முரண்பாடு களையும், சண்டித்தனங்களையும், போட்டி பொறாமைகளையும் அழிக்கும் துர்க்கையை நாம் நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாட்களிலும் வழிபடுகின்றோம். அடுத்த மூன்று இரவுகளிலும் ஆதி சக்தியின் திவ்விய அம்சமான மகாலட்சுமியைப் பொருள் வேண்டி வழிபடுகின்றோம். பொருளற்றவரை உலகம் மதிக்காது. நல்ல கல்வியைப் பெறவும் அறவாழ்வு வாழவும், பொருட் செல்வம் இன்றியமையாதது. இக்காலங்களில் ஆதி சங்கரர் அருளில் கனகதாரா தோத்திரத்தைப் பாடி மகாலட்சுமியின் கடாட்சம் பெறலாம். அருளும் பொருளும் மனித வாழ்விற்கு இன்றியமையாதது போல் அறிவும் இன்றியமையாதது. இதனாலேதான் ஔவையார். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றும், "ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது" என்றும் பாடினார். கல்வியினால் ஒருவன் இருமை இன்பங்களையும் அடைகின்றான். அதனால் நவராத்திரி இறுதி மூன்று நாட்களிலும் சரஸ்வதியை வழிபடுகின்றோம். அண்டங்கள் அனைத்திலும் சிருஷ்டி கர்த்தாவாக இருந்து ஆட்சி செய்யும் ஆதி சக்தியை வழிபட்டு உய்வோமாக.

ஆதி சக்தியே வருஷப்புல மகா மாரியம்மனாகவும் இருந்து எம்மைக் காத்து வருகின்றாள். ஆதலின் அம்மையின் ஆட்சிக்கும் ஆணைக்குமுட்பட்ட நாம் அவளை மெய்யன்போடு வழிபட வேண்டும்.

கலாபூஷணம் பண்டிதர் வை. கணேசபிள்ளை
இணுவில்.

❋ ❋ ❋

அகத்தியர் தேவாரத்திரட்டு

சிவாலய முனிவர் தினந்தோறும் அடங்கன் முறையை பக்தியோடு பாராயணம் செய்து வந்தார். அடங்கன் முறை என்பது முதல் ஏழு திருமுறைகளையும் குறிக்கின்றது. திருஞான சம்பத்த மூர்த்திநாயனார் அருளிச் செய்த தேவாரங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரங்கள் ஏழாம் திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பியால் வகுக்குக்கப் பட்டுள்ளன.

ஞானக் குழந்தையாகிய சம்பந்தரின் கொஞ்சு தமிழ் பாடல்களை திருக்கடைக்காப்பு எனவும், தாண்டக வேந்தராகிய அப்பரின் கெஞ்சு தமிழ் பாடல்களை தேவாரம் எனவும், தம்பிரான் தோழராகிய சுந்தரரின் மிஞ்சு தமிழ் பாடல்களை திருப்பாட்டு எனவும் கூறுகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த அடங்கன் முறையிலுள்ள தேவாரங்களைப் பாடி முத்தியடையலாம் என அறிந்த சிவாலய முனிவர் தினமும் ஓதத் தொடங்கினார். ஆனால் தேவாரங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், தினமும் முழுவதையும் பாட முடியவில்லை. சிவாலய முனிவர் மிகவும் மன வேதனையுடன் ஆலயத்திற்குச் சென்று தனது குறையை சிவபெருமானிடம் தெரிவித்தார். "சிவாலய முனிவனே, நீ பொதிகை மலையில் இருக்கும் அகத்திய முனிவனிடம் செல்க. உனது மனக்குறை அகலும்" என அசரீரி கேட்டது.

சிவனின் கட்டளைப்படியே, சிவாலய முனிவர் பொதிய மலைக்குச் சென்று அகத்திய முனிவரைத் தரிசித்து, தனது மனக்குமுறலை வெளியிட்டார். அகத்திய முனிவர் அடங்கன் முறையில் உள்ள இருபத்தி ஐந்து பதிகங்களைத் திரட்டி, சிவாலய முனிவரிடம் கொடுத்தார். அதுவே அகத்தியர் தேவாரத் திரட்டு என அழைக்கப்படுகின்றது. இருபத்தி ஐந்து பதிகங்களையும் தினசரி பாராயணம் செய்து வந்தால், அடங்கன் முறை முழுவதையும் பாடிய பயன் கிடைக்கும் என அகத்திய முனிவர் கூறினார். சிவாலய முனிவரும் அவ்வாறே இருபத்தி ஐந்து பதிகங்களையும் தினசரி ஓதி வீடு பேற்றை அடைந்தார்.

மூவர் தமிழின் முழு நிலையாயும், அடி நிலையாயும், அமைந்த பொருட் கூறுகளாக குருவருள், வெண்ணீறு, அஞ்செழுத்து உண்மை,

கோயில் திறம், சிவனுருவம், திருவடி, அர்ச்சனை, அடிமை என்பவை அமைந்துள்ளன என அகத்தியர் தேவாரத் திரட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"குருவருளும் வெண்ணீறு எழுத்தஞ்சும் கோயில்
அரனுருவும் என் தலை மேலாக்கும் திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க் கென்று
இட்டார் அகத்தியனார் எட்டு."

குருவருள்

குருவருள் என்ற தலைப்பின் கீழ் மூன்று பதிகங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் முதன் முதலில் திருப்பிரமபுரத்தில் பாடிய "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் நட்டபாடை பண்ணில் அமைந்த முதலாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் முதன்முதலில் திருவதிகை வீரட்டானத்தில் பாடிய "கூற்றாயினவாறு" என்று தொடங்கும் கொல்லி பண்ணில் அமைந்த நான்காம் திருமுறைப் பதிகமும், சுந்தர மூர்த்தி நாயனார் முதன்முதலில் திருவெண்ணெய் நல்லூரில் பாடிய "பித்தாபிறை சூடி" என்று தொடங்கும் இந் தளம் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் குருவருள் என்ற தலைப்பில் உள்ளன.

வெண்ணீறு

குருவருள் பெற்ற ஆன்மா முதல்வனம் பராசத்தியின் விளக்கு முற்றுச் சிவயோக நிட்டையில் அழுந்தி நிற்கும் நிலை திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாலவாயில் பாடிய "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் காந்தார பண்ணில் அமைந்த இரண்டாம் திருமுறைப் பதிகம் வெண்ணீறு என்ற தலைப்பில் உள்ளது.

அஞ்செழுத்து உண்மை

திருவருளின் வியாபகத்தில் அழுந்தி நிட்டை கூடிய நிலை கைவரும் வண்ணம் பஞ்சாக்கரத்தை உரிய முறையில் ஓதிச் சிவோகம் பாவனை செய்யும் அநுபூதி நிலையே அஞ்செழுத்து உண்மை ஆகும். அஞ்செழுத்து உண்மை என்ற தலைப்பின் கீழ் நான்கு பதிகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய பஞ்சாக்கர திருப்பதிகமாகிய "துஞ்சலுந்துஞ்சல்" என்று தொடங்கும் காந்தார பஞ்சமம் பண்ணில் அமைந்த மூன்றாம் திருமுறைப் பதிகமும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய நமச்சிவாய திருப்பதிகமாகிய "காதலாகிக் கசிந்து" என்று தொடங்கும் கௌசிகம் பண்ணில் அமைந்த மூன்றாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் பாடிய

நமச்சிவாய திருப்பதிகமாகிய "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் காந்தார பஞ்சமம் பண்ணில் அமைந்த நான்காம் திருமுறைப் பதிகமும், சுந்தர மூர்த்தி நாயனார் பாடிய நமச்சிவாய திருப்பதிகமாகிய "மற்றுப் பற்றென" என்று தொடங்கும் பழம்பஞ்சுரம் பண்ணில் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் அஞ்செழுத்து உண்மை என்ற தலைப்பில் உள்ளன.

கோயில் திறம்

ஆலயங்கள் தோறும் வழிபட்டு திரிகரணங்களையும் ஒரு வழிப் படுத்தல் கோயில் திறம் ஆகும். கோயில் திறம் என்ற தலைப்பின் கீழ் மூன்று பதிகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய திருப்பதிகக் கோவையாகிய "ஆரூர் தில்லை" என்று தொடங்கும் இத்தளம் பண்ணில் அமைந்த இரண்டாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருசேத்திரக்கோவையாகிய "தில்லைச் சிற்றம்பலமும்" என்று தொடங்கும் திருத்தாண்டகமாகிய ஆறாந் திருமுறைப் பதிகமும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஊர்த் தொகையாகிய "காட்டூர்க் கடலே" என்று தொடங்கும் பழம்பஞ்சுரம் பண்ணில் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் கோயில் திறம் என்ற தலைப்பில் உள்ளன.

சிவனுருவம்

பரையின் வியாபகமும் பஞ்சாச்சர செபமும் பெற்று, ஆலய வழிபாட்டில் தலைப்பட்டு நிற்கின்ற ஆன்மா, அகக்கண்ணினாலே சிவத்தின் திருவடியைத் தரிசித்து, ஆனந்தமுற்று நிற்கும் அநுபூதி நிலையே சிவனுருவம் ஆகும். சிவனுருவம் என்ற தலைப்பில் கீழ் ஐந்து பதிகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பிரம புரத்தில் பாடிய திருவெழு கூற்றிருக்கை எனப்படும். "ஓருரு வாயினை" என்று தொடங்கும் வியாழக்குறிஞ்சி பண்ணில் அமைந்த முதலாம் திருமுறைப் பதிகமும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கடவூர் மயானத்தில் பாடிய "வாரிய மறை யார்" என்று தொடங்கும் காந்தார பண்ணில் அமைந்த இரண்டாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் பாடிய கோயில் திருப்பதிகமாகிய "பாளையுடை" என்று தொடங்கும் கொல்லி பண்ணில் அமைந்த நான்காம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் திருப்பூ வணத்தில் பாடிய "வடியேறு" என்று தொடங்கும் திருத்தாண்டகமாகிய ஆறாந்திருமுறைப் பதிகமும், சுந்தர மூர்த்தி நாயனார் திருக்கடவூர் மயானத்தில் பாடிய "மருவார் கொன்றை" என்று தொடங்கும் பழம்பஞ்சுரம் பண்ணில் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் சிவனுருவம் என்ற தலைப்பில் உள்ளன.

திருவடிகள்

திருவடி காண்போம் சார்வோம், சேர்வோம், துயர் கெடுவோம் என்று பாடியருளிய அருமை திருவடி வழிபாடு ஆகும். திருவடி என்ற தலைப்பின் கீழ் மூன்று பதிகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாழ்கொளிபுத்தூரில் பாடிய "பொடியுடை மார்பினர்" என்று தொடங்கும் தக்கராக பண்ணில் அமைந்த முதலாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் திருவதிகை வீரட்டானத் தில் பாடிய "அரவணையான்" என்று தொடங்கும் திருவடி திருத்தாண்டக மாகிய ஆறாந்திருமுறைப் பதிகமும், சுந்தர மூர்த்தி நாயனார் திருப்புன் கூரில் பாடிய "அந்தணாளன் உன்" என்று தொடங்கும் தக்கேசி பண்ணில் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் திருவடி என்ற தலைப்பில் உள்ளன.

அர்ச்சனை

அர்ச்னை என்ற தலைப்பின் கீழ் மூன்று பதிகங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பூந்தராயின் பாடிய "பந்துசேர் விரலாள்" என்று தொடங்கும் காந்தாரபஞ்சமம் பண்ணில் அமைந்த மூன்றாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் திருக்கைலாயத்தில் பாடிய "வேற்றாகி விண்ணாகி" என்று தொடங்கும் போற்றி திருத்தாண்டகமாகிய ஆறாந்திருமுறைப் பதிகமும், சுந்தர மூர்த்தி நாயனார் திருக்கழுக்குன்றத்தில் பாடிய "கொன்று செய்த" என்று தொடங்கும் நட்டபாடை பண்ணில் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் அர்ச்சனை என்ற தலைப்பில் உள்ளன.

அடிமை

அடிமை என்ற தலைப்பின் கீழ் மூன்று பதிகங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய கோளாறு பதிகமான "வேயுறுதோளி பங்கன்" என்று தொடங்கும் பியந்தைக் காந்தாரம் பண்ணில் அமைந்த இரண்டாம் திருமுறைப் பதிகமும், திருநாவுக்கரசு நாயனார் திருவாரூரில் பாடிய "குலம் பலம்" என்று தொடங்கும் கொல்லி பண்ணில் அமைந்த ஏழாம் திருமுறைப் பதிகமும் அடிமை என்ற தலைப்பில் உள்ளன.

நாமும் தினசரி அகத்தியர் தேவாரத் திரட்டிலுள்ள இருபத்தி ஐந்து பதிகங்களையும் பக்தியோடு பாராயணம் செய்து, நற்கதி அடைவோம்.

மாதுமை கோணேஸ்வரன்
தரம் 11
ஸ்ட்ரத் பீல்ட் உயர்தர பெண்கள் பாடசாலை
அவுஸ்திரேலியா.

❋ ❋ ❋

சக்தியும் சிவமுமாய தன்மை
"ஒருமையின் இருமை"

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்"

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து தூண்களால் தாங்கப்பெற்றதே சால்பு என வள்ளுவர் உணர்த்தினார். இச்சால்புடையோனே சான்றோன் எனப் போற்றப்பட்டான். சான்றோனிடம் மேற்கூறப்பட்ட ஐந்து பண்பும் ஒருங்கமைந்திருக்கும்.

இது போன்றே மெய்ப்பொருளாராய்ச்சி (தத்துவ ஆராய்ச்சி), முத்தி நிலை (ஆன்மா அடைய வேண்டிய உயர்நிலை), முத்தியடைதற் குரிய நெறிமுறைகள், அந்நெறி முறைகளில் நின்று நிரூபித்துக் காட்டிய தலைவர்கள் ஆகிய நான்கு தூண்களால் தாங்கப்பெறும் ஒரு மண்டபம் போன்றதே சமயம்.

இவை நான்கினுள் ஏதாவது ஒரு உறுப்புக் குறைந்தாலும் அது முழுத்தன்மையு டைய சமயம் ஆகாது. இவை நான்கும் செம்மையாகப் பொருந்திய சமயக் கொள்கைதான் உலகமாறுதலுக்கு ஈடுகொடுத்து உயிர்ப்போடு நின்று உயிர்வருக்கங் களுக்கு உதவமுடியும். சைவசமயம் இவை நான்கும் பொருந்திய செம்மையுடையது. பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் என்பன சைவ சமயச் சார்பில் எழுந்த மெய்ப்பொருள் நூல்களாகும்.

பதி - பசு - பாசம் எனப் பொருள்களை மூன்றாகப் பகுத்து அந்நூல்கள் ஆய்கின்றன. பதி என்பது இறைவனையும், பசு என்பது ஆன்மாவையும் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றினையும் குறிக்கும்.

இவற்றுள் பாசம் என்பதனை உலகம் என மொழிபெயர்த்தல் பொருந்தாது. பாசப்பொருள் மூன்றினுள் ஒன்றாகிய மாயையினை உலகம் எனக் கூறில் ஒருவாறு பொருந்தும். ஏனைய கன்மமும், ஆணவமும், உலகம் என்னும் சொல்லில் அடங்கா. இதனாலேயே பாசம் என்பதனை தாளை எனச் சான்றோர் மொழி பெயர்த்துள்ளனர்.

விஞ்ஞானிகள் சில கணித விதிகளை ஆதாரமாகக் கொண்டு தாங்கள் கண்ட புதுமைகளை நிரூபிப்பது போலத் தத்துவஞானிகளும் தருக்க முடிபுகளை (அளவைகளை) ஆதாரமாக வைத்துக் கொண்டு தங்கள் தத்துவக் கொள்கைகளை நிரூபிக்கின்றனர். இச்செல்நெறிக்கேற்பச் சைவசமயமும் சில அடிப்படைகளையும் அளவைகளையும் பின்பற்றித் தனது கொள்கையை நிரூபிக்கின்றது.

"உள்ளது போகாது; இல்லது வாராது" என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு பதி - பச - பாசம் என்ற முப்பொருட்கும் பொது இயல்பு - சிறப்பியல்பு என இருவகை இயல்புகளை விளக்குகின்றது. காண்டல் - கருதல் - உரை என்ற மூன்றினுள் ஏனைய அளவைகள் எல்லாம் அடங்கிவிடும் என்ற நியாயம் பற்றி இம் மூன்று அளவைகளைத் தான் சித்தாந்த நூல்கள் சிறப்பாகக் கொள்கின்றன.

உலகம், உயிர், கடவுள் என்ற முப்பொருள்களும் கலந்திருக்கும் கலப்புநிலை மிக நுண்மையானதாகவும் பல்லாயிரவருள் ஒருவர் கூட எளிதில் உணரமுடியாததாகவும் இருத்தலால் சமய வாதிகள் பலரும் மயங்கித் தத்தம் சமயக் கொள்கைகளே அமைவதாக அரற்றி மலைந்தனர். இந்திய நாட்டில் வழங்கும் சமயக் கொள்கைகளில் பெரும்பாலானவை பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட இருபத்து நான்கு தத்துவங்களைத்தான் ஒப்புக்கொள்கின்றன.

ஆயின் சைவசித்தாந்தமோ அவ்விருபத்து நான்கினையும் ஒப்புக்கொண்டு அவற்றின்மேலும் பன்னிரண்டு தத்துவங்கள் இப்பிரபஞ்ச வெளியைத் தாங்கி நடத்துகின்றன என நிரூபிக்கின்றது. காஷ்மீர சைவமும், சாக்தேயமும் சைவ சித்தாந்தம் போலவே முப்பத்தாறு தத்துவங்களையும் பற்றிப் பேசுகின்றன.

மாயாகாரியமும் சடமுமான இப்பிரபஞ்சமே இன்னும் முற்றிலும் உணரமுடியாத நிலையில் இருக்குமானால், இதைவிட நுணுக்கமான ஆன்மா உண்மையையோ, அல்லது கடவுள் உண்மையையோ எளிதில் உணர முடியுமா?

விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் ஜன்ஸ்டீன் "தெய்வசக்தி உலகத்தை ஒழுங்குபெற நிருவகித்து வருவதால்தான் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்ய முடிகின்றது" எ னக் கூறியுள்ளமை சிந்திக்கத் தக்கது. மேனாட்டுப் பேரறிஞர்கள் எல்லாம் இப்போது

"நானார்? என்னுள்ளம் ஆர்?" என்ற ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். "ஆன்மா" என்பது எது? அது அணுக்கூட்டங்களில் சேர்ந்த ஒருவகை அணுவா? அல்லது வேறு பொருளா? என்று சிந்தித்து வருகின்றனர்.

யூரேனியம் என்ற உலோக அணு சிதைந்து கொண்டே வரும் நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு உலகம் ஒரு காலத்தில் தோன்றியதுதான் எனவும், ஒரு காலத்தில் அழிவுறும் எனவும் முடிவுகட்டுகின்றனர். இருப்பினும் சடப்பொருள் வேறு சித்துப்பொருள் வேறு என்ற முடிபினை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளாதவரை அவர்களுக்கு உண்மைபுலப்பட வழியே இல்லை எனலாம். "அணுவின் ஆற்றலைக் கண்டுபிடித்த டாக்டர் ஜன்ஸ்டினும் அந்த அணுக்கூட்டங் களைச் சேர்ந்த ஓர் அணுத்தான்" என்று எந்தவிஞ்ஞானியாவது கூற முற்படுவாரா? அவர் உடம்பினுள் தங்கியிருந்த "அறிவாற்றல் எது" என்று சிந்தித்து ஆராய்ந்தால் உண்மை புலப்பட்டுவிடும்.

விஞ்ஞான முடிபுகளைச் சைவசித்தாந்தம் ஒத்துக் கொள்வதோடு அவற்றிற்கும் மேற்பட்ட உண்மைகளையும் புலப்படுத்துகின்றது. ஒரு சாரார் நம்பிக்கை மாத்திரத்தால் கடவுளை ஒப்புக்கொண்டு கடவுளுக்கு உருவமில்லை என்றும், கடவுள் அறியப்படாதவர் எனவும் கூறுகின்றனர். இவர்கள் ஒருவாற்றானும் கடவுளைக் காணா தவர்களே. பிறிதொருசாரார் கடவுளும் ஆன்மாவைப் போலவே பிறப்பு இறப்பு, விருப்பு வெறுப்பு, இன்ப துன்பங்கட்கு ஆளாதல் கூடும் எனவும்; அது அவனது எளிவந்த தன்மையைக் காட்டுவதெனவும் கூறுவர். சர்வல்லமையுடைய இறைவன் அவதிக்கும், இகழ்ச்சிக்கும், ஆளாகாமலே எளிவந்த செயல்கள் செய்தல் கூடும் என்பதையும்; முற்றுணர்வு, முடிவிலாற்றல், வரம்பிலின்பம் முதலிய இறைமைக் குணங்கட்கு மாறாக ஒருபோதும் இறைவன் அவதியுறமாட்டான் என்பதையும் அவர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

மற்றொருசாரார் பரப்பிரமமே (கடவுள்) ஈசுரனாகவும், ஆன்மாவாகவும், பிரபஞ்சமாகவும் மயங்கி உணர்ந்து பின்னர் விசாரத்தால் தானே பிரமம் எனத் தெளிந்து கொள்ளும் என்பர். "சத்து, சித்து, ஆனந்தம்" மயமான பிரமம் மயங்கும் என்பது அதன் தன்மைக்கு விரோதம். மயங்கியது உண்மையானால் அது பரப்பிரம்மம் அன்று. தவிரவும் சித்துப் பொருளிலிருந்து சடப்பொருள் உற்பத்தியாகும் என்பதும், முற்றறிவுடைய பொருள் மயங்கித் தெளியும் என்பதும் காண்டல், அனுமானம் ஆகிய அளவைகளுக்கு ஒவ்வாத விதண்டாவாதமாகும்.

சைவசித்தாந்த திருநெறிச் செல்வர்கள் இறைவனை நேரே கண்டும், இறைவனாலேயே உணர்த்தப்பெற்றும் உண்மை அநுபூதி பெற்றவர்களாதலாலே அவர்கள் கூற்று மதியூகத்திற்கும், அனுபவத்திற்கும் ஒத்துவருகின்றது.

எல்லாவற்றையும் கடந்த நிலையும்; எல்லாவற்றிலும் கலந்துள்ள நிலையும்; ஐந்தொழில் இயற்றவும், மெய்யன்பர்களுக்குக் காட்சி கொடுத்துத் தேற்றவும் உருவத்திருமேனி கொள்ளும் நிலையும்; என மூவகை நிலையும் இறைவனுக்கு உள என்பது அவர்கள் கண்டு உணர்த்திய உண்மையாகும்.

இறைவனுக்கு அருவம், உருவம், அருவுருவம் என மூவகைத் திருமேனிகளையும் குறிப்பிடுவது சைவசித்தாந்தம். இறைவன் எடுக்கும் திருமேனி ஞானசரீரம் ஆகும். அது மாயையின் காரியம்போல் மறைதலைச் செய்யாது. "பிறவாயாக்கைப் பெரியோன்" என்ற தொடரில் பிறவாயாக்கை என்பது ஞானசரீரத்தைக் குறிப்பதாகும். எஞ்ஞான்றும் இறைவன் தனக்கே உரித்தான எண்குணங்களுக்கு மாறுபட்ட நிலையை அடைய மாட்டான் என்பதே சைவ சமயத்தின் சிறந்த கோட்பாடாகும்.

இது ஒழிய இறைவன் சிவம் சக்தி என ஒருமையில் இருமையாய் அமைந்திருப்பன் எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது. சூரியனும் கிரணமும் போல இதனைத் தெளிந்து கொள்ளலாம். அதாவது சூரிய கிரணம் தன்னையும், உலகத்தையும், தன் முதலாகிய சூரியனையும் காட்டி நிற்பது போல சிவசக்தியும் உயிர் உலகங்களையும், தன்முதலாகிய சிவத்தையும் காட்டி நிற்கும் என்பதாகும்.

சக்தி என்பது வல்லமை. அது ஒரு குணம் ஆகும். சிவம் என்பது வல்லமை என்ற குணத்தைப் பண்பாக உடைய முதற்பொருள் ஆகும். ஒளியாய், ஒலியாய், உருவாய் வரும் தன்மையுடையது சிவசக்தி.

"அத்தனுடன் ஆருயிர்கள் கூட அணைவிக்கும் சக்தி" என நமது முன்னோர்கள் சான்றோர்கள் கூறினர். இச் சிவசக்தி சிவத்திலிருந்தே தோன்றிச் சிவத்திலேயே ஒடுங்கும். ஆனால் சிவம் பிறிதொன்றில் இருந்து தோன்றாது. எப்போதும் முழுமுதலாகவே இருக்கும். இறைவன் சக்தியின் வாயிலாகவே அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்துள்ளான்.

"மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் நீயல்லால் ஆரெமக்குப் பாரினிலே"

"சக்தியுஞ் சிவமுமாய தன்மை இவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா வானும் பெண்ணுமுயர் குணகுணியுமாக
வைத்தன னவளால் வந்த வாக்கமில் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீடலிங்கத்தினியல்பு மோரார்"

மு. திருஞானசம்பந்தபிள்ளை
ஓய்வு நிலை அதிபர்,
தலைவர் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்,
வருகை விரிவுரையாளர், முதுகலைமாணி கற்கைநெறி
யாழ். பல்கலைக்கழகம்.

❋ ❋ ❋

சிவனொடுஒக் கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடுஒப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறு அறியேனே.


கும்பாபிஷேக நிகழ்வின் போது







கும்பாபிஷேக நிகழ்வின் போது



அம்மனுக்கு குடமுழுக்கு செய்யும் போது



கும்பங்கள் வீதியுலா வரும் காட்சி



மூலஸ்தான கலச கும்ப அபிஷேகக் காட்சி



இராஜகோபுர கலச அபிஷேகம்



வசந்தமண்டப தூபி அபிஷேகம்

கும்பாபிஷேகம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று... கோபுர தரிசனம் கோடி புண்ணியம்... புனருத்தாரணம் பூர்வ புண்ணியம்.... கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றெல்லாம் நம் முன்னோர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். அத்தகைய புகழ் வாய்ந்த புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களுக்குப் புத்துயிரூட்டி புனருத்தாரணம் செய்து அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் காணும் கோயில்கள் மக்கள் பணியே மகேசன் பணி என்பார்கள். அந்த மகேசனுக்கே தொண்டு செய்யும் அன்பு உள்ளங்களை அவர்களின் அறப்பணிகளை இங்கே படம் பிடித்துக் காட்டுகின்றோம். இந்த இணையதளத்தின் மூலம் இதுவரை கும்பாபிஷேகம் கண்ட கோயில்களையும் கும்பாபிஷேகக் காட்சி களையும் எல்லோரும் கண்டு இன்புற்றிருக்க வரிசைப்படுத்தி வழங்குகின்றோம்.

ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும் என்பார்கள்... அப்படி எத்தனையோ நல்ல உள்ளங்கள் ஒன்று கூடி ஆலயங்களில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகங்களை செய்கின்றார்கள்.

குடமுழுக்கு அல்லது கும்பாபிஷேகம் ஒவ்வொரு இந்து கோவிலிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய ஒரு சடங்காகும். இதன் மூலம் உள்ளிருக்கும் கடவுள் சிலைகளுக்கு தெய்வீகத்தன்மை புதுப்பிக்கப்படுகின்றது. குடத்தில் நீர் நிரப்பி புனித ஆறுகளின் நீராக உருவகித்து மந்திரங்களால் தெய்வத் தன்மை ஏற்றப்பட்ட நீரினால் சிலைகளும் கோபுரத்தின் உச்சியிலிருக்கும் கலசங்களும் நீராட்டப்படுவதால் இது குடமுழுக்கு என்று அழைக்கப் படுகின்றது. கோபுர கலசங்களும் தெய்வத்தன்மை பெறுவதால் ஒருவர் கோவிலுக்குள் செல்லாமலே கோபுர தரிசனம் மூலமே கடவுளின் அருளைப் பெற இயலும் என்பது இறையாளர்களின் நம்பிக்கை.

கும்பம் என்றால் நிலை நிறுத்தல் என்று அர்த்தம். நம் கோவில் களில் உள்ள தெய்வத்திருமேனிகளுக்கு நித்தியமாக இறைசக்தியை நிலை நிறுத்தும் செயலே கும்பாபிஷேகம் ஆகும். கும்பத்தீர்த்தத்தில் யாகம் மற்றும் மந்திரம் மூலம் இறைசக்தியை உருவேற்றி அந்த கும்பத்தீர்த்தத்தை கலசங்களுக்கும் மற்றும் தெய்வத் திருமேனிகளுக்கும் அபிஷேகம் செய்வர்.

கும்பாபிஷேகம் செய்யும் போது கும்பத் தீர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து யாகத்தின் மூலம் மந்திரம் ஜெபித்து சக்தியை உருவேற்றி அந்தக் கும்பத் தீர்த்தத்தை இறை பிம்பத்திலும் கோபுர கலசங்களிலும் அபிஷேகம் செய்வர். கடவுளின் உடலாகக் கும்பத்தையும் அதன் மேல் சுற்றப்பட்ட நூல் 72000 நாடி நரம்புகளையும் உள்ளே ஊற்றப்பட்ட நீர் ரத்தமாகவும், அதனுள் போடப்பட்ட தங்கம் ஜீவனாகவும் மேலே வைக்கப்பட்ட தேங்காய் தலையாகவும், கும்பத்தின் கீழ் பரப்பப்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவித்து வஸ்திரம், சந்தனம், பூக்கள் ஆகியவற்றைக் கொண்டு அலங்காரம் செய்து யாக மேடையில் அமைப்பது வழக்கமாகும். சாதாரண கும்பமானது மந்திர சக்தியால் உயர்கலசமாக மாறுகிறது. கும்பாபிஷேகத்தால் ஆலயத்தில் இறைசக்தி பன்மடங்கு பெருகுகின்றது.

மேலும் இக்கும்பாபிஷேகம்

நூதன கும்பாபிஷேகம்: முற்றிலும் புதிதாகக் கட்டபட்ட கோவில்களுக்கு செய்யப்படுவது.

புனருத்தாரண கும்பாபிஷேகம் : பன்னிரெண்டு வருடத்திற்கு ஒரு முறை தேவையான புதுப்பித்தல்களைச் செய்து, செய்யும் கோவில்களுக்குச் செய்யப்படுவது இந்த கோவில்களுக்கு மட்டும் பாலாலயம் செய்யப்பட வேண்டும்.

ஜீரனோத்தாரண கும்பாபிஷேகம் : மிகவும் பழுதடைந்த சிதலமடைந்த கோவில்களை முற்றிலுமாகப் புதுப்பித்து செய்யப்படுவது.

கும்பாபிஷேகத்தின்போது யாகசாலை விமானம் உள்ள அனைத்து தெய்வங்களுக்கும் தனித்தனியாக அமைக்க வேண்டும். யாகசாலையில் வேதிகை (மேடை) அமைத்து மேடை மேல் மந்தார இலையைப் பரப்பி அதில் நெல், அரிசி, நவதானியம் மற்றும் நெற்பொரி ஆகியவற்றைப் பரப்பி அதற்கு மேல் பிரதான சுவாமிக்கும் எட்டுவிதமான முக்கிய தேவதைக்கும் சேர்த்து ஒன்பது கலசங்கள் அமைக்க வேண்டும். பரிவார தெய்வங்களுக்கு இருபத்து ஏழு கலசங்கள் அமைக்க வேண்டும்.

யகேஷ்வரர்க்கு இரண்டு கலசங்கள் அமைக்க வேண்டும். ஒரு கலசம் சோமனுக்கும் (சந்திரன்) அமைக்க வேண்டும். அதைச்சுற்றி பன்னிரெண்டு பாலிகளையும் அமைக்க வேண்டும். ஒரு கலசம் புண்ணிய வாசனத்திற்கு அமைக்க வேண்டும். ஆக சிவபெருமானுக்கு மொத்தம் நாற்பது கலசங்கள் விநாயகர் அம்மன் சுவாமிகளுக்கு மொத்தம் கலசங்கள் நாற்பத்து ஒன்பது சுப்ரமணியருக்கு மொத்த கலசங்கள் நாற்பத்து இரண்டு.

உதாரணத்திற்கு ஒரு கோவிலில் சிவன் பிரதான மூர்த்தியாகவும் மற்றும் விநாயகர் முருகர் தனித்தனி விமானங்களுடன் அமைந்து இருந்தால் மொத்த கலசங்களின் தேவை 123 (சிவன் - 40, விநாயகர் - 41, முருகர்- 42) ஆகமம் படி இதுவே சிறந்தது. இல்ல விட்டால் பிரதான மூர்த்திக்கு 40 கலசங்களும் மற்றத் தெய்வங்களுக்கு முறையே 11 கலசங்களும் சேர்த்து 62 கலசங்களும் அமைக்க வேண்டும்.

யாககுண்டங்கள்:

விநாயகர் - பஞ்சகோணம்
முருகர் - ஷட்கோணம்
சிவன் - விருத்தம்
அம்மன்- யோணி
பரிவாரம் - சதுரம்

சுவாமிக்கு குறைந்தபட்சம் ஒன்பது யாககுண்டங்கள் அமைக்கவேண்டும். அவை
பஞ்சபூதங்கள் - 5
சூரியன் - 1
சந்திரன் - 1
அக்னி - 1
சுவாமி (சிவன்) - 1

மற்ற யாகசாலைகளில் ஒன்பது யாககுண்டம் அமைக்க முடியாவிட்டால் ஒரு யாககுண்டம் அமைத்தால் போதுமானது.
காலங்களின் வகைகள்
12 காலம்
8 காலம்
6 காலம்
4 காலம்
2 காலம்

கால பூஜைகளில் இறை சக்தியை கும்பத்தீர்த்தத்தில் வேதமந்திரங்களையும், மஹாமூலமந்திரங்கள் மற்றும் காயத்திரி மந்திரங்களையும் ஓதி உருவேற்றும் கிரியைகள் ஆச்சாரியர்களால் செய்யப்படுகிறது. காலங்கள் அதிகமாக அதிகமாக உருவேற்றுதலும் அதிகமாகும்.

பொதுவான கிரியைகள்

விநாயகர் பூஜை
புண்ணியாக வாசனம்
பஞ்சகவ்ய பூஜை
கணபதி ஹோமம்
கஜபூஜை
விநாயகர் அனுக்ஞை
தேவதா அனுக்ஞை
மங்கல வாத்தியம்
வேத கோசங்கள் முழங்க கோயில் வலம் வருதல்
எஜமான விக்னேஷ்வர பூஜை
யஜமான சங்கல்பம்
தனபூஜை
கோ பூஜை
நவக்கிரக பூஜை



கும்பாபிஷேகம் செய்யும் போது கும்பத் தீர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து யாகத்தின்மூலம் மந்திரம் ஜெபித்து சக்தியை உருவேற்றி அந்தக் கும்பத் தீர்த்தத்தை இறை பிம்பத்திலும் கோபுர கலசங்களிலும் அபிஷேகம் செய்வர்.



கடவுளின் உடலாகக் கும்பத்தையும் அதன் மேல் சுற்றப்பட்ட நூல்72000 நாடி நரம்புகளையும், உள்ளே ஊற்றப்பட்ட நீர் ரத்தமாகவும் அதனுள் போடப்பட்ட தங்கம் ஜீவனாகவும் மேலே வைக்கப்பட்டட தேங்காய் தலையாகவும், கும்பதின் கீழ் பரப்பப்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவித்து வஸ்திரம், சந்தனம், பூக்கள் ஆகியவற்றைக் கொண்டு அலங்காரம் செய்து யாக மேடையில் அமைப்பது வழக்கமாகும்.



சாதாரண கும்பமானது மந்திர சக்தியால் உயர்கலசமாக மாறுகிறது கும்பாபிஷேகத்தால் ஆலயத்தில் இறைசக்தி பன்மடங்கு பெருகுகின்றது. கும்பாபிஷேகத்திற்கான விதிகளை வாமதேவர் என்கிற வடமொழி நூலாசிரியர் தான் எழுதிய வாமதேவபத்ததியில் சிவபெருமான் முருகனுக்குக் கூறும் விதமாக விவரித்து எழுதி இருக்கிறார் என்று கூறுகிறார்கள். கோயிலை வேத ஆகம சிற்ப சாஸ்திர முறைப்படி கருங்கற்களைக் கொண்டு கட்டி அதில் யந்திர ஸ்தாபனம் செய்து தெய்வத் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்கிறார்கள்.





கோயிலுக்கு கும்பாபிஷேகம் நான்கு விதமான நேரங்களில் தேவைப்படுகின்றன.

அவை

1) ஆவர்த்தம்
2) அநாவர்த்தம்
3) புனராவர்த்தம்
4) அந்தரிதம்

ஆவர்த்தம் என்பது புதிய கோயில் ஒன்றைக் கட்டி அங்கு புதிதாக இறைவனின் திருவுரவத்தை ஸ்தாபிதம் செய்யும் போது செய்யப்படு கின்றது.

அநாவர்த்தம் என்பது வெள்ளம், மழை, பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் சேதமடைந்த கோயில்களைப் புதுப்பித்து மறு பிரதிஷ்டை செய்வதாகும்.

புனராவர்த்தம் என்பது காலத்தால் சிதிலமடைந்த திருக் கோயில்களை புதுப்பித்து புனர்நிர்மாணம் செய்வதாகும்.

அந்தரிதம் என்பது மனிதர்களின் தீமைகளால் புனிதம் இழந்த கோயில்களை மீண்டும் புதுப்பித்துப் புனிதப்படுத்துவதாகும்.

முதலில் ஆகம சாஸ்திரப்படியும், சிற்ப சாஸ்திரப்படியும் முறையாகக் கல்லினால் வடிவமைத்த தெய்வத் திருவுருவங்களை தானிய வாசம், ஜல வாசம் செய்வார்கள். தங்கம், வெள்ளி அல்லது செம்புத் தகட்டில் மந்திரங்களை எழுதி, நாற்பத்தெட்டு நாட்கள் முறைப்படி வழிபாடுகள் செய்து அவற்றைத் தெய்வ சிலைகளைப் பிரதிஷ்டை செய்யும் இடத்தில் பதிய வைப்பார்கள். கல்லினாலும், மண்ணினாலும், உலோகங்களாலும் மனிதனால் உருவாக்கப்பட்ட தெய்வ உருவங்களுக்கு சத்தியை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் வேள்விமுறைகளில் மூன்று வழிமுறைகள் மிக முக்கியமானவை. அவற்றைப் பார்ப்போம்.

ஆவாஹனம்

ஆவாஹனம் என்றால் கும்பத்தில் உள்ள நீருக்குள் மூர்த்திகளை எழுந்தருளச் செய்தல் என்பது பொருள். கும்பத்தை முதலில் கோயிலில் உள்ள இறை விக்கிரகத்தின் அருகில் வைத்து தர்ப்பை, மாவிலை ஆகியவற்றைக் கொண்டு மந்திரங்கள் ஓதி, பிம்பத்தில் விளங்கும்

மூர்த்தியை கும்பத்தில் எழுந்தருளச் செய்வார்கள். பிறகு அந்தக் கும்பத்தை யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள். தர்ப்பையின் மூலம் கும்பத்தில் உள்ள தெய்வீக சக்தியைப் பிம்பத்திற்கு மீண்டும் செலுத்துவார்கள்.

யாகசாலையில் மந்திரம், கிரியை, தியானம் ஆகியவற்றுடன் யாகத்தில் அக்கினி வளர்த்து அரிய வகை மூலிகைகள் மற்றும் வேள்விக்கு உகந்த பொருட்களை அக்கினியில் சேர்த்து எழும் புகையுடன் வேத ஒலி, சிவாகம ஒலி, மறை ஒலி ஆகியவற்றுடன் முழுமையான பத்தியையும் சேர்த்து எங்கும் நிறைந்திருக்கின்ற இறையருள் சக்தியை தூண்டி விட்டு கும்பத்தில் விளங்கச் செய்வதாக ஐதிகம். அப்படிச் செய்யும் போது தான் கும்பம் தெய்வீக சக்தி பெறும்.

கடஸ்தாபனம்

கும்பாபிஷேகத்தில் மிக முக்கியமானது கடஸ்தாபனம். கலசம் நிறுவுதல் என்பது இதன் பொருள். தங்கம், வெள்ளி, தாமிரம், மண் ஆகிய ஏதாவது ஒன்றில் தான் வரையறுக்கப்பட்ட முறைகளில் கும்பங்கள் செய்யப்படும். இவ்வாறு அமைக்கப்பட்ட கும்பங்களை குறைகள் இல்லாமல் மந்திரித்து, அக்னியில் காட்டுவார்கள். சிவப்பு மண்ணை கும்பத்தின் மீது பூசி, நூல் சுற்றி ஆற்றுநீர் அல்லது ஊற்றுநீரால் நிரப்புவார்கள். கும்பத்தின் மேல் வாய்ப் பகுதியில் மாவிலைகளைச் செருகி தேங்காய் வைப்பார்கள். கும்பத்திற்குள் நவரத்தினம், தங்கம், வெள்ளி, நவதானியம் ஆகியவற்றைப் பரப்புவார்கள். எந்த மூர்த்திக்கு குடமுழுக்கு நடக்கிறதோ அந்தக் மூர்த்தியின் உடலாக அந்தக் கும்பம் கருதப்படும்.

அஷ்டபந்தனம்

கும்பாபிஷேகத்தை அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பீடத்தின் மீது வைக்கப்படும் தெய்வத் திருவுருவங்கள் உறுதியுடன் நிலைத்து நிற்க கொம்பரக்கு, சுக்கான்தான், குங்குலியம், கற்காவி, செம்பஞ்சு, ஜாதிலிங்கம், தேன்மெழுகு, எருமையின் வெண்ணெய் ஆகிய எட்டுவகை மருந்துகளை கலந்து சார்த்துவார்கள். அஷ்டம் என்றால் எட்டு என பொருள். இந்த எட்டுவகை மருந்துகளை சார்த்துவதற்கே அஷ்டபந்தனம் எனப் பெயர். கும்பாபி ஷேகத்தில் மிக முக்கியமானவை சொல்லப்படும் மந்திரங்கள். மந்திரம் என்பதற்கு 'சொல்பவனைக் காப்பது' என்று பொருள். அவற்றைச் சரியான உச்சரிப்புடன் மிகுந்த பக்தியுடன் சொல்வது மிக முக்கியம். அந்த மந்திரங்களைச் சொல்லி இறைசக்தியைத் தருவித்து ஒருங்கிணையச் செய்து ஒன்றாகக் குவியச் செய்து இறைவனின் கருவறையில் அதன் சக்தியை நிலை

பெறச் செய்தால்தான் அது இறைவனின் உறைவிடமாக மாறும். தெய்வ சக்திகள் உருவேற்றப்பட்ட கலச தீர்த்தங்களால் சிலைகளுக்கு அபிஷேகம் செய்து கருவறையில் யந்திரங்கள் பதித்து சிலைகளை பிரதிஷ்டை செய்வார்கள். கோபுரத்தின் மேலுள்ள கலசங்களுக்கும் உயிரூட்டப்பட்ட சத்தி வாய்ந்த கலச தீர்த்தங்களால் அபிஷேகம் செய்யப்படும். ஆகம விதிப்படியும் சாஸ்திர முறைப்படியும் தெய்வ விக்கிரகங்களின் சக்தியையும் கோபுர கலசத்தில் உருவேற்றிய சக்தியையும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊக்கப்படுத்தி மனித வாழ்க்கை மேம்படு வதற்காக நடைபெறுவதே மகா கும்பாபிஷேகம். மஹா கும்பாபிஷேகத் தன்று சென்று இறைவனை வணங்குவோருக்கு முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆசி வழங்குவார்கள் என்பது வழி வழியாக இருந்து வரும் நம்பிக்கை. கும்பாபிஷேகத்தன்று வணங்க முடியாதவர்கள் அதனைத் தொடர்ந்து நடைபெறும் 48 நாள் மண்டல பூஜையில் கலந்து கொண்டு கடவுளை வணங்கினாலும் கும்பாபி ஷேகத்தின் போது பெருகி இருக்கும் கூடுதல் சக்தியருளைப் பெறலாம் என்று சொல்லப்படுகிறது.

இப்படிப் பலமுறை கும்பாபிஷேகங்கள் செய்யப்பட்ட பழமை வாய்ந்த கோயில்க் கோபுரங்களைத் தரிசனம் செய்யும் போதும் அந்தக் கோயிலுக்குள் நுழையும் போதும் ஓர் அற்புதமான சக்தியால் தீண்டப்படுவதை ஆன்மிக அன்பர்கள் உணர்ந்திருக்கலாம். மேலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்வதற்கான அறிவியல் ரீதியான காரணமும் சிலரால் சொல்லப்படுகின்றது. நம்முடைய பழங்காலக் கோயில்களில் இடிதாங்கிகள் என்று தனியாக ஒன்று கிடையாது. சொல்லப்போனால் இடிதாங்கி கண்டுபிடிக்கப் பட்டதே பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் என்ற அறிஞரால் பதினெட்டாம் நூற்றாண்டில் தான். இடி மின்னல்கள் கோபுரத்தைத் தாக்கும் போது கோபுரங்கள் இடிந்து விழ வாய்ப்புக்கள் ஏராளமாக உள்ளன. அப்படி இருந்தும் நம் கோயில் கோபுரங்கள் பாதிக்கப்படாமல் இருந்திருக் கின்றன. அதற்குக் காரணம் இடி மின்னல்களில் இருந்து கோபுரத்தையும் கோயில்களையும் காக்க வேண்டி கோபுரங்களில் கும்பம் வைத்து அதில் வரகு முதலான நவதானியங்களைக் காற்றுப் புகாதபடி நிரப்பிவைத்து விடுவார்களாம். அப்படி வைக்கப்படும் கும்பமும் அதில் உள்ள தானியங்களும் இடி தாங்கியாக செயல்பட்டு இடி மின்னலை நீர்த்துப் போக வைத்து விடும் தன்மை உடையது என்கிறார்கள். ஆனால் அதன் சக்தி பன்னிரண்டு ஆண்டுகள் தானாம். அதன் பின் இடி மின்னலைத் தாங்கும் சக்தியை அந்தக் கும்பம் இழந்து விடுமாம். கோயில் புனரமைப்பின் போது கும்பமும் மாற்றப்படுவதால் இடி தாங்கியாக மீண்டும் அது செயல்பட ஆரம்பித்து விடும். இப்படி ஆன்மிகக்

காரணங்களோடு அறிவியல் காரணமும் கும்பாபிஷேகத்தின் பின்னணியில் உண்டு.

தெய்வ நல ஆற்றலை ஈர்த்துப் பரப்புவதற்கு உதவியாகக் கோபுரம் அமைக்கப்பட்டது. சைவ சித்தாந்த அணுகுமுறைப்படி கோயிலில் அமைக்கப்படும் விமானமும் கோபுரமும் தூலலிங்கம் எனும் நோக்கில் வழிபடப்படும் சிறப்பினையுடையவை. கோயிலுக்குள் சென்று முறைப்படி வழிபட இயலாதவர்களும் கூடக் கோயிற் கோபுரத்தைக் காண்கையில் தம்மை அறியாமலேயே கைகூப்பித் தொழும் வழக்கம் பலரிடம் உண்டு. இதன் நோக்கம் தத்துவச் சிறப்புடையது. கோயிற் கருவறையில் சுவாமியை வழிபடுங்காலத்தில் இறைவனது பெருமையும் மனிதன் தன் சிறுமையையும் உணர்ந்து அடக்கவுணர்வை வளர்த்துக் கொள்ள வாய்ப்பேற்படும்.

கோயில் கோபுர வாயில் உயர்ந்தும் அகன்றும் காணப்படும். கருவறையை நோக்கிச் செல்லுங்கால் இடைப்பட்ட எந்தக் கட்டட அமைப்பும் கோபுர வாயிலைவிடக் குறுகலாகவே அமைந்திருக்கும் கருவறை ஏனையவற்றைவிடக் குறுகலாக அமைந்திருப்பது ஆலய மரபு இதனால் குவிதல் என்பது மறைமுகமாக ஆலயம் உணர்த்தும் பாடமாக அமைகிறது. தாயுமானவர் வாக்கில் கூற வேண்டுமெனில் மனம் குவிய ஒரு தந்திரம் ஆலயத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினையாகிறது.

உயர்ந்த கோபுர வாயிலில் உள்ளே நிறுத்தப்பட்ட பக்கக் கால்களில் நடனச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பதைச் சில தளங்களில்க் காணலாம். எடுத்துக் காட்டாகச் சிதம்பரம் கோயிற்கோபுர வாயிலில் நடனச் சிற்பங்களைக் காணலாம். இராச கோபுரங்கள் தொடர்பான கட்டக்கலை நுண்குறிப்புகளை ஆராய்ச்சி நோக்கிலும் ஆகம நோக்கிலும் சிந்திபோம். கோபுர வாயிலைப் பொறுத்தவரையில் ஆலய மூலவர் எந்தத் திசையை நோக்கி அமைந்திருக்கிறாரோ அந்தத் திசையில் கோபுரம் கட்டப்பட வேண்டுவது ஆகம மரபாகும்.

பொதுவாக வீட்டிற்குள் நுழைய எப்படி வாசற்படி நேரே உதவியாக இருக்கிறதோ; அப்படியே ஆலயத்திற்கும் ராசகோபுரம் வாசல் போன்று உதவியாக இருப்பதே முறை. கோபுரத்திற்குச் சிறப்பளிக்க வேண்டுமென்பதற்காகவே ஆலய விமானத்திற்குக் குடமுழுக்கின்போது ஆராதனை புரியும்போது கோபுரத்திற்கும் ஆராதனை புரிவதாகும்.

கோபுரத்தையும் ஆலய மதிலையும் இணைத்துக் காண்பதால் ஆலயப் பெருமை தெரியும். கோபுரமும் மதிலும் இரட்டைப் பாதுகாப்பினை இந்தத் திருக்கோயிலுக்கு வழங்குகின்றன. நாம் பல நல்ல தீய கதிர் வீச்சுகள் நிறைந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மூலகங்களில் சக்திமாற்றம் ஏற்படும் போது கதிர்வீச்சுத் தோன்றுகின்றது. இதனை நாம் கண்களால் காண முடியாது. ஆனால் அதன் தாக்கங்களை எம்மால் உணர முடியும். நல்ல கதிர்வீச்சு சக்திகளை வெளிப்படுத்தும் வகையிலேயே ஆலயங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஆகம விதிப்படி கோயில் அமைக்கப்பெற்று அபிஷேகிக்கப்பட்டு காலம் தவறாது (12 வருடங்களுக்கு ஒரு முறை) கும்பாபிஷேகம் செய்யப்பெற்று வழிபாடு நடதுகொண்டிருக்கும் கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல் தங்கத்தால் அல்லது செம்பினால் செயய்ப்பட்ட கலசங்கள் தனது கூரிய முனை வழியாக ஆகாயத்தில் உள்ள உயிர் சக்தி என்று அழைக்கப்படும் பிராண சக்தியைக் கிரகித்து வெளிவீசுகின்றன. அந்த சக்தியை நம் உடல் பெறுவதால் புத்துணர்ச்சி புது உணர்வு உள்ளத் தூய்மை, ஆன்மீக ஈர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்பு சக்தி அடைகின்றோம்.

காலையில் கோபுர தரிசனம் - நோய் நீக்கும்
மதியம் கோபுரதரிசனம் - செல்வ வளம் பெருகும்
மாலையில் கோபுர தரிசனம் - பாவம் போக்கும்
இரவு கோபுர தரிசனம் - வீடுபேறு கிடைக்கும்

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது பழமொழி என்பதை விட அதை ஒரு வாழ்வியல் தத்துவமாய்க் கருதிட வேண்டும். ஆலய வழிபாட்டுக்குச் செல்ல இயலாதவர்கள் கூட தூரத்தே இருந்து கோபுரத்தை வணங்கிச் செல்வதை இன்றைக்கும் காண முடியும். கோபுரங்களை ஸ்தூல லிங்கமாகவும், இறைவனின் பாதங்களாகவும் பாவித்தனர். கோபுர வழிபாடு முழுமையான ஆலய வழிபாட்டுக்கு இணையானது என்ற நம்பிக்கை காலம் காலமாய் இருந்து வருகின்றது. சிற்ப சாஸ்திரத்தின் படி கோவில்களின் அமைப்பானது மனித உடலின் வடிவத்தில் அமைய வேண்டுமென வரையறுத்திருக்கின்றனர். இதனை "ஷேத்திரம் சரீர பிரஸ்தாரம்" என்பர்.

கோயிலின் உள்ளே இருக்கக்கூடிய இறைவனின் பிரதிபிம்பம் தான் கோபுரங்கள் உதாரணமாக ஒரு கோயிலுக்குள் கணபதி, முருகன், பெருமாள், அம்மன், கிருஷ்ணர், இராமர் போன்ற தெய்வங்களின்

விக்ரஹங்கள் உண்டு என்பது நாம் அறிந்த ஒன்றே! கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள், உடல் ஊனமுற்றோர் போன்றார் கோபுரத்தைத் தரிசித்தாலே போதும் உள்ளேயிருக்கக்கூடிய எல்லாத் தெய்வங்களின் பிரதிபிம்பம் தான் கோபுரம்.

நாம் தூரத்திலிருந்து பார்க்கும்போது கோபுரங்களும், கோபுர கலசங்களும் தான் நம் கண்ணுக்குத் தெரியும். மேலும் கோபுரத்தின் உள்ளேயிருந்து வரக்கூடிய காற்று நம் உடலை அழகாக வருடியும், மருத்துவ குணம் மிக்கதுமாக இருப்பது சிறப்பு ஆகவே கோபுரத்தைத் தரிசித்து கோடி புண்ணியம் பெறுவோம்!

ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று ஒரு எழுதாத சட்டம் இருந்ததாம். என்ன காரணம்? கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதில் இடம்பெற்றுள்ள தானியங்களும் உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சத்தியினை கலசங்களுக்குக் கொடுக்கின்றன. (நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள்) ஆகியவற்றை கலசங்களினுள் வைத்தார்கள். குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாக வைத்தார்கள் காரணம் ஆச்சரியமாக இருக்கிறது "வரகு" மின்னலைத் தாங்கும் அதீத ஆற்றலைப் பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகின்றது.

ஒரு இடத்தில் எது மிக உயரமாக உள்ளதோ அதுவே அந்த இடத்தின் இடி தாங்கி. அதுதான் முதலில் மின்னலின் தாக்கத்தை "ஏர்த்" ஆக்கும். எனவே ஊரின் உயர்ந்த கட்டிடமாகத் திகழும் இக் கோபுரம் மின்னல் தாக்கத்தில் இருந்தும் ஊரை பாதுகாத்துக் கொள்கின்றது.

கர்ப்பக்கிரக கோபுரத்தின் (ஸ்தூபி) மேல் வைக்கப்பட்டுள்ள கலசங்கள் அதே போல் பிராண சக்தியைக் கிரகித்து கலசத்தின் நேர் கீழே உள்ள இறை பீடத்திற்கு இடையறாது அனுப்பிக் கொண்டிருக்கிறது. இந்த சக்தி பீடத்தின் அடியில் உள்ள தங்கத்தாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட மந்திர சக்கரங்கள் யந்திரங்கள் தன்பால் இழுத்து தான் அமையப் பெற்றிருக்கும் தன்மைக்கு ஏற்ப பீடத்தின் மேல் தன் சக்தியை வெளிப்படுத்துகின்றது. சில குறியீடுகளும் யந்திர தகடுகளும் இந்த சக்தியை முழுவதும் ஈர்த்து விடுகின்றன.

இந்த பிராண சக்தியின் அளவை மேலை நாட்டு விஞ்ஞானி போவிஸ் கண்டு பிடித்துள்ளார். இதிலிருந்து வெளிப்படும் சக்தியை

(14,000 போவிஸ்) நம் உடலில் உள்ள உயிர் அணுக்கள் தாங்க இயலாது. எனவே தான் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை அந்த சக்தியைப் பிரித்து ஒன்பது முனைகள் வழியாக வேளியேறச் செய்கிறது.

அந்த சக்தி கர்ப்பக்கிரத்தின் வாயில் வழியாக வெளியே வருகின்றது. அங்கு இறவனை வணங்கி நிற்கும் நம் மீது படுகிறது. அப்போது தீப ஆராதனை காட்டப்படும் போதும் மந்திரங்கள் செபிக்கப்படும்போதும் அந்த சக்தி மேலும் தூண்டப்பெறுகின்றது. கைகளை இணைத்து மேலே உயர்த்தி வணங்கும் போது - கை விரல்கள் வழியே அந்த சக்தி நம் உடம்புக்குள் ஊடுருவுகிறது.

இதனால் ஆன்மீக உணர்வு சக்தி நம்மீது பரவி மனதில் உள்ள கவலைகள் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள் உடல் நோய்கள் அனைத்தையும் போக்கி ஆனந்தத்தைக் கொடுக்கிறது.

கர்ப்பக்கிரத்தில் கிழக்கு அல்லது வடக்குத் திசைகளில் நீர் செல்லும் பொருட்டு கோமுகியுடன் கூடிய ஓர் துவாரம் அமைக்கப் பட்டுள்ளது. இந்தத் துவாரத்தின் வழியே செல்கின்ற நீரிலும் கலந்து பிராண சக்தி வெளிப்படுகின்றது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சதுர வடிவத் தொட்டியில் விழும் நீரை, கோயிலை வலம் வரும் நாம் அந்த இடத்தில் வந்தவுடன் எடுத்து கண்ணிலும் சிரசிலும் ஒற்றிக் கொள்கிறோம். அந்த சில நிமிடங்களில் நம் மீதும் பிராணசக்தி பரவுகிறது. நாம் உள்ளத்தூய்மை, உடல் தூய்மை அடைகின்றோம். கோபுர தரிசனம், ஆலய தரிசனம் செய்து கோடி புண்ணியம் பெறுவோம்.

திருமதி தர்ப்பணா சுதர்சன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாசாரம்)
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

❋ ❋ ❋

ஆய கலைகள் அறுபத்து நான்கு

ஓர் அறிமுகக் குறிப்பு

"கலை" உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். இது "அழகார்ந்த செயற்றிறம்" என வரையறை செய்யப்படுகிறது. ஆயினும் கலையை வரையறை செய்துவிடல் முடியாது. ஒருவன், தன் பொறி கொண்டு உணரும் அழகுணர்வை எவ்வாறேனும் புறப்பொறி வாயிலாக வெளிப்படுத்தும்போது அதுவே கலையாகின்றது. அறிவு, ஊக்கம், செயற்றிறம் என்பவற்றை ஒருமுகப்படுத்தும் ஒரு வகைத் தத்துவத்தின் வெளிப்பாடே கலையாகும்.

"வினையாமை பாவையின் இயலி" என்கின்றது நற்றினை (352.1) இங்கு வினையென்பது செயற்றிறமே.

"கருத்தின் உறைவிடமாகவும் அழகின் இருப்பிடமாகவும் அமைந்து உள்ளதை உள்ளம் உணர்ந்தவாறு வெளிப்படுத்தி, உள்ளத்திற்கு உவகையூட்டுவதால்த்தான் கலை தன்னலரும் பழிபாவங்களும் நிறைந்த உலகைவிட்டு எம்மை அப்பால் அழைத்துச் செல்கின்றது என்பார் தாகூர். சிந்தனையிற் கிடந்த ஒரு கலைப்படைப்பை வெளிப்படுத்தும்போது சித்தமானது தான் கண்ட காட்சிகள், அனுபூதிகள், சாயல்கள் என்பவற்றில் எள்ளத்தனையும் நழுவ விடாமல் பார்த்துக்கொள்ளும்" "என்குரோசே" கூறுகின்றார். அந்த வகையில் கலை என்பது ஒரு யோகமாகவும் எடுத்தாளப்படுகிறது. காண்போன், காட்சிப்பொருள் எனும் பேதம் கடந்து இரண்டையும் ஒன்றாகக் காணும் சமாதிநிலை. இதுவே உன்னத கலையின் வெளிப்பாடும் ஆகும் என்கிறார் கலாயோகி ஆனந்தகுமாரசாமி. அதனால்தான் பௌத்தமும் "கலை ஒரு மனிதனின் உள்ளுணர் விலேயே உருவாகிறது. புறத்தே உள்ள பொருளில் அமைவதன்று" என்கிறது. உள்ளுணர்வு, புறத்தேயுள்ள பொருள் ஆகிய இரண்டும் கலையின் இரு கூறுகள் ஆகின்றன.

அதேவேளை கலை, மனதில் உறவுகளையும் வாழ்வின் குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற்காக சமுதாயத்திடம் காணலாகும். நுட்பமான கவர்ச்சியாற்றலுள்ள கருவியாக இராதா கமல் முகர்ஜியால் எடுத்தாளப்படுகின்றது.

ஆதலால் கலைஞன் சாதகனாக, மந்திரியாக, யோகியாக விளங்குகிறான். அவனுடைய அனுபவ வெளிப்பாடாக மட்டுமன்றிக்

கலையானது கலைஞனின் அனுபவத்துய்ப்பாகவும் அமைகின்றது. இக்கலையின் பயன் தான் என்ன என வினாவின், அது இன்பத்தையளிக்கின்றது. உலகியல் சிற்றின்பம் தொட்டு இறைவனைக் காணும் பேரின்பம் வரை கலையின் பயன் பரிமளிக்கின்றது என்பர். இந்தியக் கலைஞனைப் பொறுத்தவரை அவன் காணும் அழகுப் பொருள்களைப் புலப்படுத்துவதை விட உள்ளதை உணர்ந்தவாறு புலப்படுத்தவே கலையைக் கருவியாகப் பயன்படுத்துகின்றான். அந்நிலையில் கலை மக்களின் மனதைத் தூய நெறியில் செலுத்தும் ஆன்ம நலக் கருவியாகவே இந்துக்களால் நோக்கப்படுகிறது. ஆகவே கலை வாழ்க்கைக்கானதாக அமைகின்றது.

இராமாயணம், காதம்பரி, தசகுமார சரித்திரம், காமசூத்திரம், காவிய தரிசனம் என்பன ஆய கலைகள் அறுபத்து நான்கு எனச் சுட்டப்படுகின்றன. இதனை, "எண்ணென் கலையோர்" எனச் சிலப்பதிகாரமும், சமணம் "ஆடவர்கலைகள் 72 என்றும் மகளிர் கலைகள் 64 என்றும் எடுத்தாளுகின்றன. இவற்றுள் பாடல், ஆடல், இசைக் கருவிகள், ஓவியம், கவிதை போன்றவற்றை முக்கியமானவைகளாக வாத்சல்யாயனர் எடுத்துரைத்துள்ளார். மேலும் அதில் 65ஆவது கலையாக "புட்ப சுகடிசா" சுட்டப்படுகின்றது.

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உரு, பளிங்கு போல்வாள்; என்னுள்ளத்தின் உள்ளே
இருப்பள்; இங்கு வாராது இடர்"

எனக் கம்பன் சரஸ்வதியந்தாதியில் கூறிப்போந்தார்.

ஆயகலைகளைப் பட்டியற்படுத்துவதை விட அது பற்றி விரிவான ஆக்கங்கள் பெரிதும் வெளிவரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவற்றை இனி நோக்குவோம்.

1. எழுத்து இலக்கணம் (அக்ஷர இலக்கணம்)

குறித்த மொழியில் பயன்படும் எழுத்துக்கள் தொடர்பான இலக்கணம் ஆகும். பொதுவாக எழுத்துக்கள் தொடர்பான விபரங்கள் தனித்தனியான ஒவ்வொரு எழுத்தையும் பற்றிய விபரங்கள் சொல்லில் எழுத்துக்கள் பயன்படும் முறை, சொற்கள் இணையும் போது எழுத்துக்களில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் என்பன எழுத்திலக்கணம் கையாளும் விடங்களாக அமைகின்றன. இது அட்சர இலக்கணம் எனப்படும்.

தமிழில் இன்று கிடைக்கக் கூடியதாக உள்ள மிகப்பழைய

இலக்கண நூலான தொல்காப்பியம் அதன் மூன்று பெரும் பிரிவுகளில் ஒன்றான எழுத்ததிகாரத்தில் எழுத்தின் இலக்கணம் கூறுகின்றது இதுபோலவே பின்வந்த இலக்கண நூல்களும் எழுத்திலக்கணம் கூறுவதற்குத் தனியான பெரும் பிரிவு ஒன்றை ஒதுக்கியுள்ளன. எனினும் எழுத்திலக்கணத்தை வகை பிரித்துக் கூறும் முறையில் உட்பிரிவுகளின் எண்ணிக்கை அவற்றின் தலைப்புக்கள் என்பன இலக்கண நூல்களிடையே வேறுபட்டுக் காணப்படுகின்றன.

தொல்காப்பியம் அதன் எழுத்ததிகாரத்தை ஒன்பது உட்பிரிவு களாகப் பிரித்து எழுத்திலக்கணம் கூறுகிறது. நன்னூல் எழுத்திலக் கணத்தைப் பன்னிரெண்டு வகையாகப் பிரித்து அவற்றை ஐந்து இயல்களில் விளக்குகிறது. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய வீரசோழியம், நேமிநாதம் ஆகிய நூல்கள் எழுத்திலக்கணத்தை எவ்வித உட்பிரிவுகளும் அன்றி ஒரே இயலில் கூறியுள்ளன. இவ்வாறு தொல் காப்பிய எழுத்திலக்கணத்தில் சொல்லப்படுபவற்றை எழுத்தியல், பிறப்பியல், புணரியல் எனும் மூன்று பிரிவுகளுள் அடக்கலாம் என்று சி.வை. சண்முகம் கூறுகின்றார். நன்னூலின் எழுத்திலக்கண இயல்கள் எழுத்தியல், பதவியல், புணரியல் என்னும் மூன்று பிரிவுகளுக்குள் அடங்கும். இவ்வாறு பொதுமைப்படுத்திய பிரிவுகளுள் பல்வேறு நூல்கள் கூறும் எழுத்திலக்கணம் அடங்கும் முறையைக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை காட்டுகின்றது.

2. எழுத்தாற்றல் (லிபிதம்)

எழுத்து இலக்கணத்தின் நூலியற்றும் பண்பை இது சுட்டுகின்றது. எழுத்தாற்றல் பிறப்பிலேயே வரவேண்டும் என்றும் அதற்கு சரஸ்வதியின் அருட்கடாட்சம் வேண்டும் என்றும் நம்பப்பட்டது. கம்பன் கவிசிறக்க சரஸ்வதி உதவினாள் எனும் செவி வழிக்கதை இதற்கு உதாரணமாகிறது.

3. கணிதம்

இலக்கணங்களும், அதன் செய்முறைகளும் அத்துடன் உருவ அமைப்புக்களும் (shapes) மட்டுமல்லாது விஞ்ஞான ஆராய்ச்சிகளுடனும், அதன் பிரயோகங்களுடனும் தொடர்ச்சியாக வளர்ந்து வரும் ஒரு அறிவியல் சாதனமாகும். கணிதத்தின் தேவை எமது அறிவியல் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணியாகும். கலிலியோ "கணிதத்தின் உதவியால் நாம் இவ்வுலகத்தையே அறியலாம்" என்று கூறினார்.

எண்களை வைத்துக்கொண்டு உண்டாக்கப்பட்ட கணிப்பியலோ (arithmetic) வடிவங்களை வைத்துக்கொண்டு உண்டாக்கப்பட்ட வடிவியலோ இவைதான் கணிதவியல் என்று நினைப்போர் பலர். இன்னும்

சிலர் எண்களுக்குப் பதிலாக குறிப்பீடுகளை வழங்கி அவைகளையும் எண்கள் போல் கணிப்புக்கள் செய்யும் இயற்கணிதம் தான் கணிதத்தின் முக்கிய பாகம் என்பர். மற்றும் சிலர் வடிவங்களை அலசி ஆராயும் வடிவியல் வளர்ச்சி தான் கணிதத்தின் இயல்பு என்று கூறுவர் ஆனால் கணிதம் இதையெல்லாம் தாண்டிய ஒன்று.

கணிதம் (Mathematic) என்பது வணிகத்தில் எண்களுக்கு இடையான தொடர்பை அறிவதில் நிலத்தை அளப்பதில், அண்டவியல் நிகழ்வுகளை வருவதுரைப்பதில் மனிதனுக்கு இருந்த கணித்தலின் தேவைகள் காரணமாக எழுந்த ஓர் அறிவியல் பிரிவாகும். இந்த நான்கு தேவைகளும் பின்வரும் நான்கு பெரிய கணிதப் பிரிவுகளைப் பிரதிபடுத்துகின்றன.

அளவு (Quantity)	-	எண்கணிதம்
அமைப்பு (Structure)	-	இயற்கணிதம்
வெளி (Space)	-	வடிவவியல்
மாற்றம் (Change)	-	பகுவியல் (analysis) நுண்கணிதம்

"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என வள்ளுவர் கூறியுள்ளமை தமிழில் கணிதம் பெற்ற முதன்மையைத் தெளிவுறுத்தும் ஆலய அமைப்பு, கலை சார்ந்த அம்சங்கள், சோதிடம் போன்றவை கணிதவியல் அடிப்படையிலானவை.

4. மறைநூல் (வேதங்கள்)

பொதுவாக இன்று இந்து சமயம் என்று அறியப்படும் சமயத்திலுள்ள அடிப்படையான நூல்கள் சிலவாகும். காலத்தால் முற்பட்டதும் ஆகும். வேதம் என்னும் சொல் பிற மதத்தாரும் தங்கள் சமயத்தின் முதன்மையான நூல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். கி.மு. 5,000 ஆண்டுகளுக்கு முன்னரும் இந்துக்களின் வேதங்கள் இன்றிருப்பது போலவே இருந்தது என்று பண்டித பாலகங்காதர திலகர் நிரூபித்துள்ளதாக சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார்.

இந்து மதத்தில் வேதம் என்ற சொல் வித் என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. வித் என்றால் சமஸ்கிருதத்தில் அறிதல் என்று பொருளாகும். வேதங்கள் என்பதற்கு "உயர்வான அறிவு" என்றும் பொருள்படும்.

இந்து சமயத்துக்கு அடிப்படையானவை நான்கு வேதங்கள் ஆகும். இவை தமிழில் நான்மறை என்றும் கூறப்படும் சமஸ்கிருத

வேதங்கள் ரிக் வேதம், யசுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்பனவாகும். வேதங்கள் நான்கு என வகுத்தவர் வியாசர் வேதங்களை "சுருதி, மறை" எனவும் கூறுவர்.

வேதங்களுக்கு நான்கு பாகங்கள் உண்டு. அவையாவன:

1. சம்ஹிதை - தொகுப்பு; "மந்திரங்கள்" (கடவுளால் தரப்பட்டவை யாகக் கருதப்படும் பாடல்கள்)
2. பிரமாணம் எனப்படும் உரை அல்லது சடங்கு வழிமுறைகள்
3. ஆரண்யம் எனப்படும் காட்டில் வாழும் முனிவர்களின் உரைகள்
4. உபநிடதங்கள் (வேதங்களுக்கான தத்துவ உரைகள் / விளக்கங்கள்/ எதிர்ப்புக்கள்); இவை வேதத்தின் முடிவில் வருவன. வேத அந்தம் (முடிவு) என்னும் பொருளில் வேதாந்தம் எனப்படும்.

5. தொன்மம் (புராணம்)

வேதங்களில் உள்ள கருத்துக்களைத் தெளிவாகக் கூறுவதாகும். புராணம் என்ற சொல்லுக்கு பழமை வாய்ந்தது என்று பொருள். நெடுங்காலமாக செவி வழியாகவே கற்பிக்கப்பட்டு வந்த புராணங்கள் வேதவியாசர் என்பவரால் நூல்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இவற்றில் வேதவியாகரே தொகுத்த பதினெட்டுப் புராணங் கள் மகாபுராணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவையல்லாத உப புராணங்கள் பதினெட்டுப் புராணங்களாகக் கொள்ளப்படுகின்றன.

புராணம் என்கின்ற சமஸ்கிருத சொல்லானது புரா - நவ என்ற இரு வேர்களில் இருந்து பிறந்தது. இதன் பொருள் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் உள்ளது என்பர். புராதனம் என்ற சொல் புராணம் என்று வந்ததெனவும் கூறுவர். புராணத்திற்கு இணையாக ஆங்கிலத்தில் myth என்ற சொல் வழங்கப்படுகிறது.

இப்புராணங்களில் வேதத்தில் கூறப்பட்டுள்ளவைகளின் சாரங்கள் கதைகளின் வடிவில் ஸ்லோகங்களாக இயற்றப்பட்டுள்ளன. அவை பேரண்டங்களின் தோற்றம், அவற்றின் தோற்றம், அவற்றின் பிரளயம், மும்மூர்த்திகள் தோற்றம், மற்றும் அவர்களின் அவதாரங்கள் தேவர் - அரக்கர்களின் போர்கள் போன்ற பலவற்றினையும் விவரிக் கின்றன.

புராணம் என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் மணிமேகலையிலேயே முதன் முதலில் வருகிறது. சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதையில் வைணவவாதியைக் குறிப்பிடும்போது, காதல் கொண்டு கடல் வண்ண புராணம் ஓதினான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், புராணம்

என்ற சொல், தமிழ் மொழியில் மணிமேகலை தோன்றிய காலத்திலேயே வழங்கப் பெற்றுள்ளது என அறிய முடிகிறது. "புராணவித். புராணி போன்ற சொற்கள் ரிக் வேதத்திலும் அதர்வண வேதத்திலும் காணப்படுகின்றன. எனினும் இச்சொற்கள் புராணத்தைக் குறிக்கவில்லை பழமையானவன், பழமையைப் பரப்புகிறவன் என்ற பொருளிலேயே இச்சொற்கள் வழங்கியிருக்கின்றன. திருவாசகத்திலே மாணிக்கவாசகர் முதலில் பாடியது சிவபுராணம் அங்கே புராணம் என்பதில் இறைவனுடைய பழமையைச் சொல்கிறார்கள். ஆகவே புராணம் என்ற சொல்லுக்குப் பழமை என்பதே பொருள்.

6. இலக்கணம் (வியாகரணம்)

இலக்கியத்திற்கு இலக்கணம் எழுதப்பட்டது. சமஸ்கிருத மொழி இலக்கண நூல்கள் வியாகரணம் எனப்பட்டன. தமிழில் அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் உள்ளிட்ட பல இலக்கண நூல்கள் தோற்றம் பெற்றன.

7. நயனூல் (நீதி சாத்திரம்)

அறத்தை வலியுறுத்தும் நூல்கள் நீதி சாத்திரங்களாகும். வேதம் தொட்டு சமயம் சார்ந்து எழுந்த நூல்கள் யாவும் நீதி நூல்களாகவே எடுத்தாளப்படுகின்றன. காவியங்கள், இதிகாசங்கள் என்பவற்றின் முக்கிய கருப்பொருளாக நீதி விளங்குகின்றது. தமிழில் திருக்குறள், நாலடியார், மூதுரை, வாக்குண்டாம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உள்ளிட்ட பல அறநூல்கள் உள்ளன. சமஸ்கிருதத்தில் இதிகாசங்கள், புராணங்கள், அர்த்தசாஸ்திரங்கள், சுக்கிரநீதி, முதலியவற்றைச் சுட்டலாம். மனிதன் மனிதனாக வாழவும் தெய்வத்துடன் உறையவும் இவை வழிகோலுவதாக நம்பப்படுகின்றது.

8. கணியம் (சோதிடம்)

கோள்களின் நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தைக் கணிக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை ஆகும். உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்களில் கணிசமான தொகையினர் இதனை நம்புகின்றார்கள். கோள்கள் வான்வெளியில் அவற்றின் நகர்வுகளும் உலகில் வாழும் எல்லா உயிரினங்கள் மீதும் அவற்றின் செயற்பாடுகளிலும் மற்றும் பலவிதமான இயற்கை நிகழ்வுகளிலும் தாக்கத்தை உண்டாக்கு கின்றன என்னும் கருத்துருவே சோதிட நூலின் அடிப்படையாகும்.

ஜோசியம் என்ற சொல்லானது சமஸ்கிருத சொல்லான iyotis என்பதிலிருந்து பிறந்ததாகும். இந்திய சோதிடம் பொதுவாக இந்து

சோதிடம் என்றும் வேத சோதிடம் என்றும் அறியப்பெறுகிறது. குழந்தை பிறக்கும் நேரத்தினை அந்த நேரத்தில் நவகிரகங்களின் நிலையைக் கணக்கிட்டு எழுதுவது ஜாதகம் எனப்படுகிறது. நவக்கிரகங்களின் நிலையைக் கொண்டு குழந்தையின் ராசியும், நட்சத்திரமும் இலக்கணமும் குறிக்கப் பெறுகின்றன. இந்துக் காலக் கணிப்பு முறையால் உருவான பஞ்சாங்கம் என்ற கால அட்டவணை கொண்டு ஜாதகத்தின் பலன்கள் கணிக்கப் பெறுகின்றன. பஞ்சாங்கம் வாரம், திதி, கரணம், நட்சத்திரம், யோகம் என ஐந்து உறுப்புக்களைக் கொண்டதாகும். இந்து சமயத்தின் இதிகாசமான மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான சகாதேவன் காலக் கணிப்பு முறையில் சிறந்தவனாகக் கொண்டாடப் பெறுகிறார். இவர் குறித்துத் தந்த நாளில் யுத்தத்தினைத் தொடங்கினால் வெல்ல இயலும் என எதிரான கௌரவர்களே இவரிடம் வந்து நாள் குறித்துச் சென்றதாக மகாபாரதம் கூறுகின்றது.

9. அறநூல் (தர்ம சாஸ்திரம்)

அறத்தை வலியுறுத்தும் நூல்கள் நீதி சாஸ்திரங்களாகும். வேதம் தொட்டு சமயம் சார்ந்து எழுந்த நூல்கள் யாவும் நீதி நுல்களாகவே எடுத்தாளப்படுகின்றன. காவியங்கள், இதிகாசங்கள் என்பனவற்றின் முக்கிய கருப்பொருளாக நீதி விளங்குகின்றது. தமிழில் திருக்குறள், நாலடியார், மூதுரை, வாக்குண்டான், கொன்றை வேந்தன் உள்ளிட்ட பல அற நூல்கள் உள்ளன. சமஸ்கிருதத்தில் இதிகாசங்கள், புராணங்கள், அர்த்த சாஸ்திரம், சுக்கிர நீதி முதலியவற்றைச் சுட்டலாம். மனிதன் மனிதனாக வாழவும் தெய்வத்துடன் உறையவும் இவைவழி கோல்வதாக நம்பப்படுகின்றது.

10. ஓகநூல் (யோகா)

யோகம் என்ற சொல்லுக்கு இணைதல் அல்லது இணக்கமான இருத்தல் என்று அர்த்தமாகும். யோகம் என்பது இந்தியாவில் உள்ள ஆறு தத்துவ முறைகளில் முக்கியமான ஒன்றாகும். யோகத்தின் தோற்றம் விவாதத்திற்கு உட்பட்டு இருக்கின்றன. இது வேத காலத்திற்கு முன்பே தோன்றி இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. சிந்து சமவெளி நாகரிகத்தின் தளங்களில் உள்ள சில முத்திரைகள் ஒரு பொதுவான யோகா அல்லது தியான நிலைகளைப் புள்ளிவிவரங்கள் காட்டிச் சித்தரிக்கின்றன. இந்து தத்துவத்தின்படி, யோகம் என்பது ஜீவாத்மாவுடன் பரமாத்மா இணைதலுக்கான வழி எனப்படுகிறது. யோகத்தின் பாதையில் செல்பவர் யோகி எனப்படுகிறார்.

பதங்சலி மகரிஷி யோகாவைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தியுள்ளார். முறையான யோகசாஸ்திரத்தைக் கண்டுபிடித்த பெருமை

பதஞ்சலியையே சாரும் எனப் பெரும்பாலோர் கருதுகின்றனர். இவர் வழங்கிய பதஞ்சலி யோகசூத்திரத்திம் 185 சுருக்கமான சூத்திரங்களைக் கொண்டுள்ளது.

11. மந்திர நூல் (மந்திர சாஸ்திரம்)

அறிவியல் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பு, மனிதன் இயற்கையோட இணைந்து வாழ்ந்த காலத்தில் இயற்கையின் சீற்றத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சூழலில் இருந்தனர். அப்போது மனிதன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என்று நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் பலன்களைப் பெற முயற்சித்தான். பின்னர் அவ்வாற்றலைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செலுத்த வழிமுறைகளை மேற்கொண்டனர். இவ்வாறு கையகப்படுத்திய ஆற்றலை சில சூத்திரங்கள் அல்லது வாய்ப்பாட்டுக்களாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் பெறலாம் என்று நம்பினான். அதுவே மந்திரம் என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு அவர்களுடைய சூத்திரமும், சைகையும் முறையாக அமையும் போது, அவர்கள் தொடர்புகொள்ளப் போகும் சக்தி தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் என்று நம்பினான். இதற்குப் பலவிதமான சடங்குகளையும், வழிபாடுகளையும், கடுமையான உடல் வருத்தும் செயல்களையும் மேற்கொண்டனர். இது ஆதிகால மக்களின் தொழினுட்ப பற்றாக்குறையை போக்கத்தோன்றிய ஒரு கற்பனைத் தொழினுட்பம் என்று சொல்லலாம்.

12. நிமித்திக நூல் (சகுன சாஸ்திரம்)

ஒருவர் காலையில் தூக்கம் விட்டு எழுவதில் இருந்து சுபகாரியங்களை மேற்கொள்வது வரை சகுனம் பார்க்கப்படுகிறது. எவர் எப்பொருள் எதிர்ப்படுகிறதோ அதை வைத்து செல்லும் காரியம் வெற்றி பெறும் அல்லது தோல்வியுறும் எனக் கூறப்பட்டது. பல்லி சொல்லுதல், கண் துடித்தல், காகம் கரைதல் உள்ளிட்ட பலவற்றை உதாரண ங்களைச் சுட்டலாம்.

13. கம்மிய நூல் (சிற்ப சாஸ்திரம்)

ஒரு முப்பரிமாணக் கலைப்பொருள் ஆகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத் தன்மை கொண்ட பொருள்களுக்கு உருவம் கொடுப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. பொதுவாகச் சிற்பங்கள் செய்வதற்காகப் பயன்படும் பொருட்களுள், கற்கள், உலோகம், மரம், மண் என்பவை அடங்குகின்றன. கல், மரம் போன்றவற்றைப்

பயன்படுத்தும் போது, சிற்பங்கள் செதுக்குவதன் மூலம் செய்யப்படுகின்றன. வேறு பொருட்களில் செய்யும்போது ஓட்டுதல், உருக்கி வார்த்தல், அச்சுக்களில் அழுத்துதல், கைகளால் வடிவமைத்துச் சூளையில் சுடுதல் போன்ற பலவித செயல்முறைகள் கையாளப் படுகின்றன. சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பி எனப்படுகிறார். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிற்பக்கலை வளர்ந்து வருகிறது. மனித நாகரிகத்தையும் அதன் வளர்ச்சிக் கூறுகளையும் எடுத்துக் காட்டும் சான்றுகளில் சிற்பக் கலை இன்றியமையாத ஒன்றாக உள்ளது. நாடுகளின் தொன்மை வரலாற்றை அம்மக்கள் வளர்த்த சிற்பக்கலை வழியாகவே பெரிதும் அறிய முடிகின்றது. ஒருவர் தன் கண்களால் கண்ட உருவங்கள் அல்லது கற்பனை உருவங்களை வடிவமைத்துச் செய்வது சிற்பம் எனப்படும். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு என்பன சிற்பம் வடிக்க ஏற்றவையென பிங்கல நிகண்டு என்ற இலக்கியம் கூறுகின்றது. கல்லில், கருங்கல், மாக்கல், பளிங்குக்கல், சலவைக்கல் ஆகியவையும் உலோகங்களில் பொன், வெள்ளி, வெண்கலம், செப்பு ஆகியனவும் சிற்பம் செய்ய ஏற்றனவாகக் கருதப்பட்டன. வடிவம் முழுவதையும் முன்புறம், பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களை முழுவடிவச் சிற்பங்கள் என்றும், ஒரு புறம் மட்டும் காட்டும் சிற்பங்களை "புடைப்புச் சிற்பங்கள்" என்றும் வகைப்படுத்துவர்.

14. மருத்துவ நூல் (வைத்திய சாத்திரம்)

உடல், உளக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் கலை இது. இது சமயம் சார்ந்ததாக பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வருகின்றது. அதர்வ வேதமே இக்கலையின் மூலநூல், பின்பு சித்தர் மரபால் அது பெருவளர்ச்சி பெற்றது. ஈழத்திலும் பல மருத்துவ நூல்கள் ஆதிகாலம் தொட்டு நிலவித் தோன்றி வந்துள்ளன.

15. உறுப்பமைவு நூல் (உருவ சாத்திரம்)

ஒருவரின் உயரம், பருமன், நிறம் எனும் பல்வேறு கட்புலக் காட்சிக்கு உட்படும் விடயங்களை வைத்து அவரியல்பைக் கூறும் கலை இது.

16. மறவனப்பு (இதிகாசம்)

இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் என்பன இதிகாசங்கள் எனப்படு கின்றன. சிவரகசியம் இன்று கிடைத்தில. இவை தெய்வீகக் கதைகளாக அமையினும் வாழ்வியல் பற்றிய கருத்தியல்களாக அமைந்துள்ளன. கடவுள் அவதாரம் அல்லது பெரும் வீரர் நிகழ்த்திய அரும்பெரும் வீரச் செயல்களையும் நீதி நெறிகளையும் விவரிக்கும் புராண வரலாற்றில் இதி - ஹ - ஆஸ என்பதற்கு இப்படி உண்மையில் இருந்தது

என்று அர்த்தமாகும். இந்தியாவைப் பொறுத்தளவில் இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்கள் என்றழைக்கப்படுகின்றன.

நில உடமைச் சமுதாயம் ஒரு காலகட்டம் வரை இருந்து அடுத்த கட்டத்திற்கு மாறிச் செல்லும்போது அதன் பரிணாமங்கள், நிகழ்வுகள், மாறுதல்கள் அனைத்தும் வாய்மொழியாக ஒரு காலகட்டம் வரையிலும் குருவின் மூலமாக சீடர்களுக்குச் சொல்லி வைக்கப்பட்டு, செவி வழிச் செய்தியாக சில காலம் வரையிலும் இருந்து சமுதாய பரிணாம வளர்ச்சியைத் தனதாக்கிக் கொண்டு பல ஆயிரம் ஆண்டுகள் கால ஓட்டத்தையும், அதன் சமூக நியதிகளை இதிலிருந்து எடுத்து மேற்கோள்கள் காட்டிடவும் நீதி சொல்லவும், சமுதாய சட்டங்களாகவும் காலத்தைக் கடந்தும் தெளிவாகவும், எளிமையாகவும், சிக்கலான நெருடலான மனித குலச் சிந்தனைகளை உள்வாங்கி உயர்ந்து நிற்கிற வரலாற்றுப் பெட்டகமே இதிகாசமாகும்..

17. வனப்பு (காவியம்)

ஒருவரின் உடலுருவம் முழுவதிலும் தோன்றும் அழகு அதுபோல ஒரு நூல் முழுமையில் காணப்படும் அழகைத் தொல்காப்பியம் வனப்பியல் எனக் குறிப்பிட்டு இதனை எட்டு வகையாகப் பகுத்துக் காட்டுகிறது. அந்த வனப்புக்கள் இங்கு அகர வரிசையில் தரப்பட்டு விளக்கப்படுகின்றன. அம்மை, அழகு, இயையு, இழைபு, தொன்மை, தோல், புலன், விருந்து. காவியம் என இது சுட்டப்படுகிறது. காவியம் வனப்பைக் கொண்டுள்ள அதேவேளை அதற்குரிய தனிப்பண்புகளையும் கொண்டுள்ளது. இதனை தண்டியலங்காரத்தில் காணலாம்.

18. அணிநூல் (அலங்காரம்)

அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படிகளில் மிக மேலான இடத்தைப் பெற்றுள்ளது. இது ஸ்வரஸ்தான உறுதிப்பாட்டையும், லயஞான பலத்தையும் உண்டு பண்ணுவதுடன் ஸ்வரப்பிரத்தார முறைக்கும் வழி வகுக்கும் இவ்வுருப்படி ஸ்வரங்களினால் அலங்கரிக்கப் பட்டமையால் அலங்காரம் எனப்பட்டது. ஆரம்ப அப்பியாசகான உருப்படிகளாகிய ஸ்வர வரிசைகள், இரட்டை வரிசைகள், மேல்ஸ்தாயி வரிசைகளை அடுத்து இப்பாடம் அமைந்துள்ளது. இவ் அலங்காரங்களை மூன்று காலங்களிலும், ஸரிக, ரிகம, கமப போன்ற அடுக்கு வரிசைகளாக சதுஸ்ர நடையில் நன்கு பாடவும், வாத்தியங்களில் வாசிக்கவும் பயின்ற பின்னரே வர்ணம், கீர்த்தனை போன்ற பாடங்களைப் பாடவேண்டும்.
அலங்காரம் 7 வகையாக அமைகின்றன.

1. சதுஸ்ரஜாதி ஏக தாளம்
2. சதுஸ்ரஜாதி ரூபக தாளம்
3. சதுஸ்ரஜாதி திரிபுடை தாளம்
4. சதுஸ்ரஜாதி ஜம்மை தாளம்
5. சதுஸ்ரஜாதி மட்டிய தாளம்
6. சதுஸ்ரஜாதி அட தாளம்
7. சதுஸ்ரஜாதி துருவ தாளம்

19. மதுரமொழிவு (மதுர பாடணம்): இனியவை பேசுதல் அல்லது வசீகரித்தல்

இன்சொல் பேசுதல் பற்றி உரைக்கிறது. பணிவும் இன்சொல்லுமே ஒருவற்கு சிறந்த அணிகலன் என்கிறார் வள்ளுவர்.

20. நாடகம்

ஒருகலை அல்லது பலவகையின் நாட்டு + அகம் = நாடகம் அதாவது, நாட்டு மக்களின் அகத்தைப் பிரதிபலிக்கும் கலை. கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம். இவற்றை எழுதுபவர்கள் நாடகாசிரியர் என அறியப்படுவார்.

21. நடம் (நிருத்தம்)

பரத நாட்டியத்தில் சுத்த நடனம். இது உடல் அழகையும், உடலின் அழகிய அசைவுகளையும் தாளத்தின் மிக நுணுக்கமான அளவைகளையும், கைகள், விரல்களின் அழகான முத்திரைகளையும், பாதஜால வித்தை களையும் இசை அதன் தாள மெல்லின வல்லினங்களையும் உருவப் படுத்தும் ஒரு கலையாகும்.

22. ஒலிநுட்ப அறிவு (சத்தப் பிரமம்)

ஒலி சார்ந்த தொழில்நுட்பவியலை இது சுட்டி நிற்கின்றது.

23. யாழ் (வீணை)

ஒரு நரம்பு இசைக்கருவி மிக அழகிய இசைக் கருவியான இது மிகவும் பிரபலம் வாய்ந்தது. இந்திய இசையின் பல நுட்பங்களையும் தத்துவங்களையும் இந்தக் கருவியின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தலாம்.

24. குழல் (வேணு)

இது மூங்கில் துவாரமிட்டு செய்யப்படுவது. விஷ்ணுபுராணம் மகாபாரதம் போன்ற இலக்கியங்கள் கிருஸ்ணனுடன் தொடர்புபட்ட வாத்தியக் கருவியாக இதனைச் சுட்டுகின்றன. இது ஒரு துளை கருவி ஆகும்.

25. மதங்கம் (மிருதங்கம்) மத்தளம்

தென்னிந்தியாவில் பயன்படுத்தப்படும் ஒரு தாள வாத்தியமாகும். மிகப் பெரும்பாலான கர்நாடக இசை நிகழ்ச்சிகளில் சிறப்பாக வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளில் மிருதங்கம் முக்கிய இடம்பெறும். மிருதங்கம் தொன்மையான வரலாற்றைக் கொண்ட ஒரு இசைக்கருவி எனக் கருதப்படுகிறது. இதையொத்த இசைக்கருவி சிந்துவெளி நாகரீக காலத்திலும் புழக்கத்திலிருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

"மதங்கம்" என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் திரிபே "மிருதங்கம்" என்னும் வடமொழிச் சொல் எனக் கருதுகிறார்கள். தமிழின் "மெது" என்பதே "மிருது" எனத் திரிந்தது. பெரும்பாலும் பலாமரக் குற்றியைக் குடைந்து இக் கருவி செய்யப்படுகிறது. இது, அதன் வட்டவடிவ அளவிலும் சற்றுப் பெரிய விட்டமுள்ளதாகவும் அமைந்த ஒரு பொள் உருளை வடிவினதாக அமைந்துள்ளது. திறந்த இரண்டு முனைகளும் தோலினால் மூடப்பட்டிருக்கின்றன. இத் தோற்பகுதிகள் இரண்டும் தோலினால் செய்த வார்களினால் ஒன்றுடனொன்று இழுத்துப் பிணைக்கப்பட்டுள்ள வலது பக்கத் தோலில் "சோறு" என்று அழைக்கப் படும் ஒரு கரு நிறப் பதார்த்தம் நிரந்தரமாக ஒட்டப் பட்டிருக்கும் மறு பக்கத்தில் வாத்தியத்தை வாசிப்பதற்குச் சற்று முன்னர், மாவும் நீரும் கலந்த ஒரு கமவை தடவப்படும். நிகழ்ச்சி முடிவடைந்ததும் இது நிக்கப்படும்.

26. தாளம்

இசையில் கால அளவுகளை ஒழுங்கு முறையில் அமைப்பதற்குப் பயன்படுவது ஆகும். கர்நாடக இசையில் தாளங்கள் ஏழு வகைகளாக உள்ளன. இவற்றை சப்த தாளங்கள் என்றும் கூறுவர். சப்தம் என்பது வடமொழியில் ஏழு என்று பொருள்படும்.

"பாட்டின் கால அளவைச் சேர்த்து கையினாலாவது, வேறு கருவிகளினாலாவது தட்டுவது தாளமெனப்படும். இத்தாளத்தின் உற்பத்தியானது காலம், செய்கை, அளவு என்ற மூன்று முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. இம்மூன்றும் ஒன்று சேர்ந்து இருக்கும்போது தான் தாளத்தின் உற்பத்தி உண்டாகிறது. காலம் என்பது கணம், இலம் முதலியன. சேய்கை என்பது அடிக்கப்படும் இரண்டு பொருள்களின் சேர்க்கை. அளவென்பது செய்கைக்கு நடுவிலிருக்கும் இடைவெளியாகும்.

27. விற்பயிற்சி (அஸ்திரவித்தை)

அஸ்திரம் என்பது பொதுவில் கருவி அல்லது ஆயுதம் எனப்படினும் அது விற்பயிற்சியைச் சிறப்பாகச் சுட்டுகின்றது. "வில்லுக்கு

விஜயன்" என்கின்றது பாரதக் கதை. இராமாயணம் இராமனின் வில் கோதண்டம் என்கிறது. போர்க்கலையின் முக்கியமானது எதிரியை நெருங்காமல் இலக்குப் பார்த்துக் கொள்ளக்கூடியதுமான கருவி இது. ஏகலைவன் துரோணரை மானச குருவாகக் கொண்டு பெற்ற பயிற்சியும் விற்பயிற்சியே.

28. பொன் நோட்டம் (கனக பரீட்சை): பொன்மாற்றுப் பார்த்தல்

தங்கத்தை சரிவர அறிதலாக இது சுட்டப்படுகின்றது. பழங்காலம் தொட்டு இன்றுவரை பொருளாதார ரீதியில் தங்கம் பெறும் முதன்மையால் இது ஒரு கலையாகச் சுட்டப்படுகின்றது.

29. தேர்ப் பயிற்சி (ரதப் பயிற்சி)

பண்டைக் காலத்தில் அரசர்களின் படைகளில் வழிநடத்திச் சென்று போர் புரியப் பயன்படுத்திய ஒரு வாகனமே ரதம். மன்னர்கள் ரதத்தில் இருந்தே போர் புரிந்தனர். இதனால் இது ஒரு கலையாயிற்று. அர்ஜுனனின் சாரதியாக கிருஷ்ணன் ரதத்தில் இருந்து அருளிய உபதேசமே பகவக்கீதை.

30. யானையேற்றம் (கஜ பரீட்சை)

இந்திய உபகண்டத்தின் முக்கிய படைப்பிரிவு யானைப்படை, யானையில் ஏறுதல், அங்கிருந்து எதிரியுடன் போரிடல் என்பது ஒரு கலையாக எடுத்தாளப்படு கின்றது. சமஸ்கிருத இதிகாசங்களில் இருந்து சோழர்காலம் வரை முதன்மை பெற்ற கலை இது.

31. குதிரையேற்றம் (அசுவபரீட்சை)

இதுவும் போர்ப்படையே. விரைவுப்படை இது. நீண்ட தூரம் பயணம் செய்யவும், எதிரியிடையே புகுந்து தாக்கவும், ஈட்டியெறியவும் உகந்ததாக இது காணப்படுகின்றது. பண்டைய காலத்தில் பெண்களும் குதிரையேற்றம் பழகினர்.

குதிரையின் மீதேறி அதனைக் கட்டுப்படுத்தி ஓட்டுதலை முதன்மையாகச் சுட்டுகின்றது. குதிரையின் மீது இருந்துகொண்டு பிற செயல்களைச் செய்தல், குதிரையைப் பல வினோத செயற்பாடுகளைச் செய்வித்தல் போன்றவையும் குதிரையேற்றத்தில் அடங்கும் பழங்காலத் தில் பலதரப்பட்டோர் கற்றுப் பயன்படுத்தும் ஒரு திறனாகக் குதிரை யேற்றம் இருந்தது. குறிப்பாக குதிரைப்படை வீரர்கள் குதிரையேற்றம் கற்றனர். குதிரை போக்குவரத்து விலங்காகவும், வேளாண்மை செயற்பாடுகளுக்குப் பயன்பட்டது. இக்காலத்தில் குதிரையேற்றம் ஒரு ஒலிம்பிக் விளையாட்டாகவும் இருக்கிறது.

32. மணி நோட்டம் (ரத்தின பரீட்சை)

இதுவும் பொன்னோட்டம் போன்றதே. மாணிக்கம், நவரத்தினம், வைடூரியம் போன்ற மணிகளை அறியவும் தரம்பிரிக்கவும் இப் பயிற்சி உதவியது.

33. நிலத்து நூல் அல்லது மண்ணியல் (பூமி பரீட்சை)

இது புவியியல் சாஸ்திரமாகத் திகழ்கிறது. இயற்கை பற்றியதான அறிவு இது.

34. போர்ப் பயிற்சி (சங்கிராமவிலக்கணம்)

பண்டைக்காலம் தொட்டு வீரம் என்பது முதன்மை பெறுகின்றது. உணவு பெறலில் இருந்து மண், பெண், பொன் காத்தல் வரை போராட வேண்டியுள்ளதால் போர்ப் பயிற்சி யாவர்க்குமானதாய் இருந்தது. பின் நாட்டைக் காத்தல் அல்லது நாட்டைப் பிடித்தல் எனும் தளங்களில் குறித்த வீரர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி ஆயிற்று.

35. மல்லம் (மல்யுத்தம்)

ஆயுதங்களின்றிச் செய்யும் யுத்தம் இது. பீமன் மகாபாரத்தில் மல்யுத்த வீரனாகச் சுட்டப்படுகின்றான். நரசிம்மவர்மன் மல்யுத்தத்தில் இருந்து விளங்கியமையால் மாமல்லன் எனப்பட்டான்.

36. கவர்ச்சி (ஆகருடணம்)

ஆள் பாதி ஆடை பாதி என்பர். இது அலங்காரக்கலையுடன் தொடர்பு பட்டதாக எடுத்தாளப்படுகின்றது.

37. ஓட்டுகை (உச்சாடணம்)

இது மந்திரம், யோகம் ஆகியகலைகளுடன் தொடர்புபட்டது. உச்சாடணத்துக்கு சப்தப் பிரம்மம் உதவுகிறது.

38. நட்புப் பிரிப்பு (வித்துவ வேடனம்)

ஒத்த ஆற்றல் மிகுந்தவர்கள் தனித்தனியே பிரிந்து தொழில் செய்தல் அல்லது சேவை புரிதல் இது விளக்கப்படுகின்றது.

39. காமநூல் (மதனசாத்திரம்)

காதலையும் புணர்ச்சியையும் குறிக்கின்றது. உடலுறவின் முக்கியத்துவம், உடலுறவு கொள்ளும் முறை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கூறி அதனை ஒரு தவமாக, கலையாக எடுத்துரைக்கின்றது.

மயக்குநூல் (மோகனம்)

28ஆவது மேளகர்த்தா இராகமாகிய "பாண" என்றழைக்கப்படும் 5ஆவது சக்கரத்தின் 4ஆவது இராகமாகிய ஹரிகாம்போதியின் ஜன்னிய இராகம் ஆகும். எப்போதும் பாடக்கூடிய இவ்விராகம் சர்வ ஸ்வர கமக வரிக ரத்தின இராகம் ஆகும். சுபகரமான இவ்விராகம் விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும். இது காதல் சிருங்காரத்திற்கு முதன்மை சார்ந்து அழகியலுணர்வு சார்ந்ததாகவும் சுட்டப்படு கின்றது.

வசியம் (வசீகரணம்)

அதர்வ வேதமே வசியக்கலையின் முதன்னூல். ஒருவரை மயக்குதல் அல்லது வசீகரித்தல் எனப்படும். பிற்காலத்தில் இது ஒரு தீயகலையாகவும் சுட்டப்பட்டது.

இதளியம் (ரச்வாதம்)

கலைகளின் முக்கிய பண்பியற்கலையாக இது திகழ்கிறது. நவரசங்கள் நடனக்கலையின் முதன்மை பெறுகின்றன. அல் - கிமியா என்ற அராபிய வார்த்தையிலிருந்து பெறப்பட்ட Alchemy (இரவாதம்) என்பது அறிவியல் ஆய்வு, மறை பொருள் ஆய்வு போன்ற கலவையாக கிரீஸ், சைனா, எகிப்து மற்றும் அரேபியா போன்ற நாடுகளிலிருந்து பெற்றவை எனக்கருதலாம். அக்காலத்தில் உருவான இந்த ராசவாதக் கொள்கை, இறவாத்தன்மையை ராசவாதிகள் அருந்துவதற்குரிய நோய்களைத் தராத தன்மையையும், உலோகங்களை மாற்றும் நீர்மம் (Elixir of life) மற்றும் மதிப்புக்குறைந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றும் 'தத்துவஞானிகளின் கல்' (Philosopher's stone) ஆகியவற்றைக் கண்டறிவதிலும் செலுத்தப் பட்டன. அவையெல்லாம் நடைபெற முடியாத செயல்கள் என்பது இன்றைய நாளில் கருதினாலும், இரசவாதிகள் இந்த ஆய்வுகளை 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்தனர். இவற்றில் தத்துவக்கல் மற்றும் நோய் தீர்க்கும் உலோக மாற்றும் நீர்மம் ஆகியவற்றை முன்னோர்கள் கனவுகளில், ஒரு சில கருத்துக்கள் கண்டறியப்பட்டன.

இன்னிசைப் பயிற்சி (சங்கீத வித்தை)

இசைக் கலை பற்றியதாக அமைகின்றது. இன்று சாஸ்திரிகமானது, சாஸ்திரிகமற்றது என்று எடுத்தாளப்படுகின்றது.

பிறவுயிர் மொழியறிகை (மிருக பாஷை)

மனிதரல்லாத பிற உயிர்களின் மொழியினை அறியும் கலை எனப்படுகிறது.

மகிழுறுத்தர் (கவுத்துவ வாதம்)

பிறரை மகிழ்ச்சிப்படுத்தும் கலையாக இது எடுத்தாளப்படுகிறது.

நாடிப் பயிற்சி (நாடி சாத்திரம்)

நாடி பார்த்து நோய் நொடியும் அறிந்து வைத்தியம் செய்ததாகவும் இது அமைகிறது.

கலுழம் (காருடம்)

இது பற்றி எம்மால் அறியமுடியவில்லை.

இழுப்பறிகை (நட்டம்)

ஒரு செயலாயினும் அல்லது வணிகமாயினும் அதில் ஏற்படும் நட்டத்தை அறிதல் ஆகும்.

முஷ்டி (மறைத்ததை அறிதல்)

முடிவுள்ள பொருளை அறிதலாகும்.

வான்புகவு (ஆகாயப் பிரவேசம்)

நிலத்தினின்றும் மேலேழுதல் எனப்படும்.

வான் செலவு (ஆகாய கமனம்)

வானத்தில் ஊர்ந்து செல்லுதல் ஆகும்.

கூடுவிட்டுக் கூடுபாய்தல் (பரகாயப் பிரவேசம்)

இது கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்பதாகும். ஓர் உயிரற்ற உடலில் எம்முயிரைச் சென்றடையச் செய்வதும் அவ்வுயிரற்ற உடலினிற்கு உயிர் பெறச் செய்து நம் உடலினை உயிரற்ற நிலையினை ஏற்படுத்துவதற்கும் இக்கலை பயன்படுகின்றது. இக்கலையினை செய்து காட்டியவர்கள் சித்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உயிர் வேறு, உடல் வேறு தத்துவத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது. இக் கூடுவிட்டுக் கூடுபாய்தல் கலையினை ஆதி சங்கரர், அருணகிரிநாதர் போன்றவர்கள் நன்கு அறிந்திருந்தனர். அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாகவும் இக்கலை உள்ளது குறிப்பிடத்தக்கது.

தன்னுருக் கரத்தல் (அதிருசியம்)

இது தன்னுருகரத்தல் ஆகும்.

மாயச் செய்கை (இந்திர சாலம்)

இது செப்பிடு வித்தை அல்லது மாயவித்தை எனப்படும்

பெருமாயச் செய்கை (மகேந்திரசாலம்)

இதுவும் மாயவித்தை ஆயினும் மிகவும் கடினமான வித்தையாகும்.

அழற்கட்டு (அக்னித் தம்பனம்)

நெருப்பைச் சுடாமல் சுட்டல்

நீர்க்கட்டு (அக்கினித் தம்பம்)

ஜரஸ்தம்பம் நீருக்குள் மூழ்கி நெடுநேரம் இருத்தல், நீரில் நடத்தல்

வளிக்கட்டு (வாயுத்தம்பனம்)

மூச்சடக்கி இருத்தல்

கண்கட்டு (திருட்டித்தம்பனம்)

திட்டிஸ்தம்பம் எனப்படும் கண்ணை மூடியிருத்தல்

நாவுக்கட்டு (வாக்குத்தம்பனம்)

மௌனவிரதம் ஓம்புதல்

விந்துக் கட்டு (சுக்கிலத்தம்பனம்)

விந்தையடக்கல் உடலுறவு சார்ந்தவை இதுவாகும்.

புதையற்கட்டு (கனனத்தம்பனம்)

புதையலைப் பற்றியதாக அமைகின்ற கலையாகும்.

வா ட்கட்டு (கட்கத்தம்பனம்)

வாள் வித்தை சார்ந்தது.

சூனியம் (அவத்தைப் பிரயோகம்

இது ஒரு தீய கலையாக எடுத்தாளப்படுகிறது. இது அதர்வ லோகத்தில் உள்ளது.

அறுபத்து நான்கு கலைகளுள் கலுழம், அதிருச்சியம் உள்ளிட்ட சில கலைகளைப் பற்றி முழுத் தகவல்களையும் எம்மால் அறிய முடியவில்லை. கிடைத்தவற்றை ஓரளவு விளக்கியுள்ளோம். இவற்றுள் சில இன்று அருகிவிட்டன. அல்லது ஒரு கலைக்குள் பிறதொரு கலை நுழைந்து இரண்டும் ஒன்றாகிவிட்டது என்கின்ற நிலையை இன்று காணப்படு கின்றது.

தி. செல்வமனோகரன்
வருதைரு விரிவுரையாளர்,
இந்து மெய்யியல் - இந்துநாகரீத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

❋ ❋ ❋

சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு

வரலாற்றுப் பெருமையும் வாழ்வியற் தத்துவங்களும் நிறைந்த புனிதசமயம் சைவசமயம். காலத்தின் எல்லைக் கணிப்புக்கு முன்பாகவே கருத்தோடு வாழ்ந்த சமயமாகவே உலக அறிஞர்கள் இச்சமயத் தைப் போற்றுகிறார்கள். இச்சமயத்தின் கடவுட் கோட்பாட்டிலென்றாலென்ன வாழ்வியற் கோட்பாட்டில் என்றாலென்ன பெண்மைக்குக் கொடுக்கப்பட்ட முதன்மை தனித்துவமானதாக விளங்குகின்றது. மூலப் பரம்பொருளாகப் போற்றும் இச்சமயத்தின் தெய்வமாகிய சிவனது இடப்பாகத்தில் பெண்ணாகிய சக்தி வீற்றிருப்பதாகக் கடவுட் கோட்பாடும், வழிபாடும் காலங்காலமாக இருந்துவருகின்றது. வாழ்வியற் கோட்பாட்டிலும் பெண்ணை வாழ்க்கைத் துணை என இச் சமயத்தவர் போற்றிப் பேணி உள்ளனர். சைவத்தின் மேன்மைகளைக் காப்பதில் மங்கையர் மகத்தானவர்களாக விளங்கி உள்ளமைக்குச் சைவத்தின் பெயரால் எழுந்த வரலாற்று நூல்கள் சான்றாக விளங்குகின்றன. சைவத்தின் மேன்மைகளைச் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலமாக எழுந்த வரலாற்று நூல்களும், திருமுறைகளும், புராணங்களும், சைவசித்தாந்த தத்துவ நூல்களும் அகல விளக்கியுள்ளன.

சைவத் தமிழ்ப் பண்பாட்டில் பொதுவாக மங்கையர் எனும் சொல் மங்கலம் எனும் பெயர் அடியாகத் தோன்றியது என்பர். மங்கலம் என்பது நன்மை, இன்பம், மகிழ்ச்சி முதலிய பல பொருளைத் தருவது. இவை அனைத்தையும் உடையவரே மங்கையர் ஆவர். இதனால்தான் சைவத் தமிழ் பண்பாட்டு மரபில் "வீட்டுக்கு விளக்கேற்ற பெண் வேண்டும்" என்று ஆன்றோர்கள் சொல்லி வைத்தார்கள். பெண்கள் ஏற்றும் விளக்கானது சாதாரண விளக்கேற்றுதல் என்பது மட்டும் பொருளல்ல. இல்லத்திலுள்ள அனைவரதும் அறியாமை இருளை அகற்றி, அன்பு, பண்பு, பரிவு, பாசம், நேசம் ஆகிய அழுக்கற்ற ஆனந்த ஒளியை ஏற்றுபவள் பெண் என்பதே ஆன்றோர் வாக்கின் அகக் கருத்தாகும். இக்கருத்து நெறியில் வாழும் சமயம் சைவ சமயம்.

சைவ மரபில் பல நிலைகளிலும் பல பொருட்களிலும் இயற்கையோடு இணைத்து தெய்வமாக இன்றுவரை மதிக்கும் மரபு உண்டு. கங்கையை மாதா என்றும், நிலத்தைப் பூமாதேவி என்றும், உண்ணுகின்ற அன்னத்தை அன்னலக்சுமி என்றும் எத்தனையோ பல வார்த்தைகளினால் பெண்ணைச் சிவனோடு ஒன்றாய் ஒரே பொருளாய்ப் போற்றும் பண்பு சைவத் தமிழரின் உயர்தத்துவ மரபாகும். நான்மறையாகிய வேதம் முதல் சங்க இலக்கியச்சான்று ஈறாகத் தொன்மைச் சமய உண்மைகளை விளக்குகின்ற

வகையில் தாய்மை வழிபாட்டு மேன்மையினையும் பெண்மையின் பெருந்தன்மையினையும் போற்றத் தவறவில்லை. பெண்மையின் மேன்மை யினைப் போற்றிய சைவ மரபைப் பண்டைய நூல்கள் மாத்திரமன்றித் தொன்மைச் சான்றாக அமைந்த சிந்துவெளித் தொல் பொருள் ஆய்வுகளும் நிரூபிக்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சமயத்தில் பெண் எத்தகையளவு சிறப்பாக மதிக்கப்பட்டாளோ அத்தகையளவு அக்காலப் பெண்மணிகளும் சைவத்தின் உயர்பண்புகளைப் பேணுவதில், பேணிக்காப்பதில், வளர்ப்பதில் முன்னிலையில் நின்று உழைத்தமையை அறிய முடிகிறது. சைவ சமயத்தின் நீண்ட ஆயுள் அகன்று விரிவதற்கு அன்னையர் பலர் காலத்திற்குக்காலம் ஆற்றிய பங்களிப்பு அளப் பரியதாகும். சைவத் தமிழ்ப் பண்பாட்டில் பெண்ணை உயர்ந்த சக்தியாகக் கருதியதற்கு அமையப் பெண்மையின் பேரருட் பங்களிப்பு இன்றுவரை இச்சமயத்திற்கு உறுதுணையாக உள்ளது. அறச் சிந்தனைகளையும் ஆன்மீக நல்வாழ்வினையும் சைவத்தின் நெறியில் நின்று இவ் வையகத்திற்கு உரைத்த ஔவைத் தமிழ் மூதாட்டி இச் சமயத்தின் நெறி வளர ஆற்றிய பங்களிப்பு மிகவும் மகத்தானது. சைவத் தமிழரின் தலைமகளாகப் போற்றப்படும் ஔவை மூதாட்டி அன்று இச்சமயத்தின்பால் சைவத் தமிழ் வையகத்தை வாழ்வித்தது என்றால் மிகையாகாது. அவரது காலத்தை அறிஞர்கள் பல எல்லைகளை வைத்துக் கணித்தாலும் மூத்த தமிழ்ப் பெண்மணியாக நீண்ட காலம் வாழ்ந்தவராகக் கருதப்படுவது மரபாகவுள்ளது. அவர் சைவ சிந்தனையை இன்றும் இவ் உலகில் நிலைபெற ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

சங்க காலத்தில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் தமிழுக்கு அழகு செய்தார்கள். இவர்களில் பலரது பாடல்களுக் குள்ளே சைவப் பண்பாடு ஊறியுள்ளமையை அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். ஔவையார் ஊர் தோறும் சென்று குடிமக்களுக்கும் கோல் ஓச்சும் மன்னனுக்கும் சைவத் தமிழ்ப் பண்பை உறைய வைத்தமையை மறக்க இயலாது. நீலமணிமிடற்றொருவன் போல மின்னுக என்று அதிகமானை வாழ்த்துகிறார். "சிவாய நம என்று சிந்தித்து இருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்றும் இறைவனுக்கும் இறையடியவர்க்கும் உள்ள அரும்பெரும் உறவையும் அவனிக்கு அழகான பா வரியில் வெளிப்படுத்தியுள்ளார். கந்தப் பெருமானைச் சிந்தித்த ஔவை உலகில் பெரியது எது என்ற வேலனின் வினாவிற்கு,

இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்:
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

என்று சிவதொண்டர் மேன்மை யினைப் புகழ்ந்துரைத்து விளக்கியுள்ளார். ஔவையாரது பாடலுக்குள் சைவத் தத்துவக் கருத்துக்கள் பொதிந்து காணப்படுகின்றன. அவர் நல்வழிப் பாடல் ஒன்றில் சொன்ன பிறவித்தத்துவம் எக்காலத்திலும் தத்துவச் சிந்தனையாளர் முதல் சாதாரண மானிடர் வரை சிந்திக்க வைப்பன.

புண்ணியமாம் பாவம்போம் போன நாட் செய்தவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்

என அவர் கூறும் தத்துவச்சிந்தனை எக்காலத்திலும் எல்லோரையும் சிந்திக்க வைக்கக் கூடியது. எனவே சைவசமய வாழ்விற்கு அவரது பங்களிப்பு குறிப்பிடத் தக்கது. ஔவையாரின் காலமும் ஔவையார் ஒருவரா, இருவரா, பலரா என்ற இன்றைய ஆய்வாளரின் சிந்தனையும் பல்வேறு பட்டதாக இருந்தாலும் ஔவையார் சைவத் தமிழ் மகளே என்பதில் சந்தேகமில்லை.

காலத்திற்குக் காலம் சைவத்தமிழ் மகளிரிடத்தே உயர்நெறிப் பண்புகள் இயல்பாகவே நின்று நிலைத்து வந்தமையை அக்காலங்களில் எழுந்த நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. சங்க மருவிய காலத்தில் வாழ்ந்து முதன் முதலாகப் பதிகம் பாடிய பெண்மணியாக விளங்கும் காரைக்கால் அம்மையார் சைவசமயத்திற்கு ஆற்றிய பணி அற்புதமானது. அவரது பெருமைதனைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இவ் அம்மையார் இல்லறமாம் நல்லறத்தில் இணைந்து பெண்ணின் நல்லாளுக்குரிய சைவப்பண் பாட்டோடு வாழ்ந்தவர். உயர் பண்பாகிய விருந்தோம்பலைப் பெரிதெனக் கருதி சிவனடியார்களைப் பேணியவர். அவரது வாழ்வில் ஏற்பட்ட இறை சோதனை அவர் சைவத்திற்குப் பணியாற்றிய சாதனையாகியது. பெரும் செல்வக் குடியில் பிறந்திருந்தும் செல்வத்துட் செல்வமாக வளர்ந்திருந்தும் உலக இன்பங்களில் அவர் பற்று வைக்கவில்லை. சிறந்த கல்வி ஞானமுடைய அம்மையார் தன் கணவன் இன்னொரு பெண்ணோடு வாழ்கின்ற காட்சி கண்டு தன் வினைப்பயன் எனக்கருதித் தன் கணவனையும் அவன் ஏற்ற பெண்ணையும் அவன் பிள்ளையையும் வாழ்த்திவிட்டு இறைவனை நோக்கி இறவாத இன்ப அன்பு வேண்டினார். ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெரும் தெய்வமே "அம்மையே" என்று அழைக்கும் வரம் பெற்ற காரைக்கால் அம்மையாரின் பக்தியும் வாழ்வும் மெச்சத்தக்கது. அன்புருகப் பாடிப் பரவினார். அவரது திருப்பாடல்கள் சைவ சமய வளர்ச்சிக்கு அக்காலத்தில் பெரிதும் துணைபுரிந்தன. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி போன்ற அவரது படைப்புக்கள் அக்கால சமய வாழ்விற்குப் பெரிதும் உதவின.

பல்லவர் காலத்தில் சைவத்தமிழ் மகளிர் பலர் தோன்றி இச்சைவ சமய வாழ்வை மலரச் செய்துள்ளனர். சைவ சமயத்தின் புண்ணியக்கண் இரண்டெனப் போற்றப் படுகின்ற தவமுதல்வர் சம்பந்தரும், வாக்கினில் வல்ல வாகீசராகிய நாவுக்கரசரும் சைவப் பணியாற்ற அருந்துணை செய்தவர்கள் மங்கையர் இருவர். மங்கையர்க்கரசியாரும் மருள் நீக்கியாரைப் பிடித்த இருளை நீக்கி "நற்றுணையாவது நமச்சிவாய" என நற்றமிழ் பாடவைத்த நலநங்கை திலகவதி அம்மையார் ஆகிய இருவரும் அப்பெண்மணிகளாவர். இவர்கள் இருவரும் ஆற்றிய தெய்வீகப் பணி சைவசமய வரலாற்றில் பெரிதும் போற்றப்படுகின்றது. சமணமதத்தின் வலைக்குள் சைவ சமயத்தவர் அகப்பட்ட வேளை அகப்பட்டவர்களையும் மீட்டு அக்காலச் சந்ததி சைவநெறியில் தொடர்ந்து தழைத்தோங்க

தன்னலங்கருதாப் பணி செய்த மங்கையர்கள் இவர்கள். மேலும் அடியார் வரலாறு கூறும் பெரியபுராணம் மனை யறத்தின் வேராக நின்று மகத்தான சைவப் பணியாற்றிய இல்லறத்து நாயகிகளின் பெருமைகளை எடுத்துக் கூறியுள்ளது. திருநீல கண்டத்துக் குயவனார் எனும் அடியவர் புலன்கள் அடங்கும் மெய்யராகி அவரைப் பரம்பொருளே ஆட்கொள்ளும் அளவிற்கு வழி காட்டியவர் திருநீலகண்டரின் மனையாள். பரத்தையர் உறவினால் தன் கணவன் புருஷதர்மத்தை மீறியதன்மைகண்டு சத்திய வாக்கினைத் தன் கணவனிடம் பெற்று அற்புதப் புலனடக்கம் காட்டி இல்லறப் பணி செய்தவர். இந்நல்லாள் இவரது உயர் பக்தியால் திருநீலகண்டரது வாழ்வு புதுப் பொலிவு பெற்றது. இளமையைத் துறந்தும் இறைவன் மேற் சொன்ன வார்த்தையை நீல கண்டர் காத்தும் பெறுதற்குரிய பேறு அவர் பெற இப்பெண்மணியே காரணமாக இருந்தார். இவரது வாழ்வு சைவ உலகிற்கு வழிகாட்டியது. இல்லை என்று சொல்லாது வந்தவர்க்குப் பசியாற்ற முனைந்து பயன் பெற்றவர், இளையான் குடிமாறனாரின் இனிய பத்தினி. அவர் சைவ அடியார்களைப் பேணுவதிற் காட்டிய அக்கறை மகத்தானது. வாளால் மகவரிந்து விருந்து தருவேன் என வாக்குக் கொடுத்த சிறுத்தொண்டர்க்கு வாழ்க்கைத் துணையாய் நின்று தவத்தால் கிடைத்த அருமைந்தனாம் சீராள தேவனை அரிந்து உணவாக்கி அடியவர்க்கு அமுது கொடுக்க முனைந்த சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையின் பேரருட் திறன் சைவ வளர்ச்சிக்கு என்றும் போற்றுதற்குரிய தாய் அமைந்தது. உழவாரப் பணிசெய்த ஒப்புரவாளராம் அப்பர் சுவாமிகளுக்கும் அமுது கொடுக்கவேண்டும் என்பதற்காகப் பெற்ற மகவு பின்புறத்தில் பிணமாய்க் கிடக்கையிலும் விருந்து கொடுக்க வேதனை ஒதுக்கிச் செயற்பட்ட அப்பூதிஅடிகளின் பிரிய பத்தினியினது பெரும் பக்தியும் மகத்தானது. மேலும் செயற்கரிய செய்கை செய்த தீரன் எனப் போற்றப்பட்ட இயற்பகை நாயனாரின் இல்லாள் பணியும், குங்குலிய நாயனாரின் மனைவியின் மாண்பும், மானக்கஞ்சாரரின் மகன் செய்த தியாகமும், அமர் நீதி அடிகளின் அம்மையார் செய்த அரும் பணியும், சுந்தரர் மணந்த பரவையார் செய்த தெய்வீகக் கலைப்பணியும் சைவ வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தன. பெரியபுராணத்தில் வரும் பெண் அடிய வர்கள், அருளாளர்களின் பிரிய பத்தினிகள் திருநீற்றுப் பொலிவும், நீதகன்ற வாழ்வும் நிலைக்கப் பெரிதும் துணை செய்தவர்கள் என்றால் மிகையாகாது.

சோழர் காலத்தில் கங்கை முதல் கடாரம் வரை ஆண்ட பெரும் சோழச் சக்கரவர்த்திகளுக்குப் பெரிதும் துணை புரிந்து சமயம் வளர்த்தவர்களுள் பெண்களும் அடங்குவர். கண்டர் ஆதித்த சோழனின் மனைவியான செம்பியன் மாதேவியார் பல கோயில்களைக் கற்றழிக் கோயில்களாக ஆக்க அரும் பாடுபட்டார்கள் என அறிய முடிகின்றது. தஞ்சைப் பெரும் கோயில் எழுவதற்கு இராஜராஜசோழனுக்கு முதற் காரணமாக அமைந்தவர் சோழரின் சோதரி. சோழர் காலத்துள் பெண்கள் சமயப் பணியாற்றியமைக்குப் பல கல்வெட்டுச் சான்றாதாரங்கள் உண்டு.

கி.பி. 1240இல் திருவிடைமருதூர் மாளிகை மடத்தைச் சேர்ந்த ஈசானதேவர் எனும் துறவிக்குச் சிஷ்ஷையாகப் பெண் ஒருத்தி இருந்தாள் என்றும், அவள் சைவப் பணிகள் நிறைய ஆற்றியவள் என்றும், ஈசான தேவருக்கு பெருமடம் அமைத்து நிலங்களை எழுதுவித்தாள் என்றும், இக்காலத்தில் கல்வெட்டுச் சாசனம் கூறுவதாகத் தமிழ்க் கலை வரலாறு பற்றிய சென்னை சைவ சித்தாந்த மகாசமாசம் வெளியிட்ட கட்டுரை மலர் விளக்குகிறது. சோழர் காலத்தில் ஆலயங்கள் தோறும் ஆடல் பாடல்களில் மங்கையர்கள் கலந்துகொண்டு சைவத்தை வளர்த்தமையை தஞ்சைப் பெருங்கோயில் கல் வெட்டுக்கள் கூறுகின் றன. அக்காலத்தில் பாமர மக்களிடையே பக்தி உணர்ச்சியை வளர்க்க ஆலயத்தில் ஆடல், பாடல் மூலம் பணியாற்றிய பெண்களை பதியிலார் என்றும் தணிகையர் என்றும் அழைக்கப்பட்டதை அறியமுடிகின்றது. இக்காலத்தில் தேவ அடியார் என்ற பெயரில் பெண்கள் சமய வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். இவர்கள் ஆடல், பாடல்களோடு மட்டுமன்றி ஆலயங்களில் திருவலகிடல், திரு மெழுகிடல், படையல், கவரிவீசுதல் போன்ற பல பங்களிப்பை ஆற்றியுள்ளனர். அத்தோடு சமய வரலாற்றை வெளிக்காட்டுகின்ற நாடகங் களிலும் பெண்கள் பாத்திரங்களை ஏற்று நடித்து பங்களிப்பாற்றி உள்ளார்கள். நீண்ட காலமாக தமிழ் நாட்டில் சைவப் பெண்கள் அம்மானை, ஊசல், பொற்சுண்ணம், தெள்ளேணம் முதலிய ஆடல்களிலும், விளையாட்டுக் களிலும் சிவபெருமானின் புகழைப்பாடிக் கொண்டாடி சைவ மரபை வளர்த்தமையை சம்பந்தர், மாணிக்கவாசகரது பாடல் களினூடாக அறியமுடிகின்றது. திருவிளை யாடற் புராணத்தின் ஊடாக என்றோ வாழ்ந்த செம்மனச்செல்வி என்ற மூதாட்டி சிவன் மேல் பற்று வைத்து ஆற்றிய பணியினையும் அறிய முடிகின்றது.

சைவத்தமிழர் வரலாற்றில் தமிழகம் விஜயநகரப்பேரரசு ஆட்சிக்குட்பட்ட காலத் தில் பிறசமயமும், பல்வேறு மொழிகளும் இனங்களும் தமிழகத்தில் புகுந்து சைவ வளர்ச்சிக்குக் குந்தகங்கள் பலவற்றை ஏற்படுத்திய போதும் பாரம்பரிய சைவப் பண்பாட்டைப் பேணுவதில் இக்காலத்தில் பெண்கள் இல்லம் தோறும் ஆற்றிப்பேணிய சைவப்பண்பாடு என்றும் நன்றிக்குரியது. தெலுங்கர்களின் வழமைகள் தமிழகத்துக்குள் ஆட்சியோடு புகுந்த போதும் தெய்வீக சைவ வழமைகளை மாற்ற முடியாமல் போனமைக்கு தாய்க்குலத்தின் பங்களிப்பு முதன்மைக்காரணம் என்பதை ஆ.கி.பரந்தாம னார் எழுதிய மதுரை வரலாற்றைப் படிக்கும்போது விளங்க முடிகிறது. மதுரையில் 16ஆம் நூற்றாண்டில் மங்கம்மாள் என்னும் பெண்மணி ஆட்சியில் இருந்துள்ளார். இவரும் சைவ ஆலயங்களுக்கு இடை யூறு இன்றி பூசை வழிபாடு நடைபெற உதவியுள்ளார். பாண்டி நாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பு தடாதகைப் பிராட்டியார் செழியர்பிரான் திருமகளாய் முடிபுனைந்து செங்கோல் தாங்கி சைவம் காத்து பாண்டி நாட்டை ஆண்டதாக திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. இதற்குப்பின் பாண்டி நாட்டில் தெலுங்கர் காலத்திற்தான் பெண்மணி ஆட்சியில் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. மங்கம்மாவினது ஆட்சியின் போது அறப்பணிகள் பலவற்றை ஆரம்பித்து ஆன்மீகப்பணி செய்தார் என அறியமுடிகிறது. சைவ, வைணவ சமயங்களை ஏற்றவர்களாகப் பல

கோயில்களை கட்டுவிப்பதற்கு காரணமாக விளங்கியுள்ளார். இராமேஸ் வரத்திற்குச் செல்லும் பாதையில் அக்காலத் தில் பல சத்திரங்களையும், தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்துப் பராமரிக்க ஒழுங்கு செய்தார் என்பதை மதுரையில் எழுந்த தெம்மாங்குப்பாடல்கள் ஊடாக அறிய முடிகிறது. இவரது சைவப் பணிகளின் ஞாபகமாக மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பொற்றாமரைக்கோயில் மேற்குப் பக்கத்திலுள்ள சிறு கல்மண்டபத்தின் மேற் தளத்து உட்புறத்தே இவளது உருவம் அழகிய ஓவியமாக என்றோ வரையப் பட்டுள்ளது.

மங்கம்மாளுக்குப் பின் மதுரையை மீனாட்சி எனும் அரசி சிலகாலம் ஆட்சியி லிருந்து சமயப் பணிகளைச் செய்ததாகக் கூறப்படுகின்றது. எனினும் தமிழ் அரசுகள் ஆண்டகாலம் போல் இக்காலம் அமைய வில்லை. நாயக்கரது வருகைக்குப் பின் பெண்கள் வீட்டிற்கு வெளியே பொதுநிகழ்வு களில் கலந்து கொள்கின்ற தன்மை குறையத்தொடங்கியது. முஸ்லிம் படை யெடுப்புக்களும் அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ படையெடுப்புக்களும் சைவத் தமிழ் பாண்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்திய காலத்தில் எல்லாம் சமயப் பண்பைக் காத்து குடும்ப உறவுகளை சைவ ஒழுங்கில் பேணி திருமுறைகள், விரத அனுட்டானங்கள், வழிபாட்டு முறைகள், நடையுடை பாவனை தளர்ந்து விடாது காப்பாற்றிய பெருமை அக்காலப் பெண்களை முழுமையாகச் சாரும்.

இக்காலத்தில் ஆதீனங்கள், மடாலயங்கள், சமயப்பணிக்கு பெரிதும் பங் காற்றின. எனினும் இம் மடாதீனங்கள், ஆதீனங்களில் ஆடவர்கள், நைஷ்டிக பிரமச்சாரிகள், சந்நியாசிகள், பண்டாரங்கள் போன்றவர்களே அங்கம் வகித்தனர். பெண்கள் நிறுவன ரீதியாக சமயப் பணியாற்ற இக்காலம் பொருத்தமானதாக அமைய வில்லை. ஆலயங்களில் நடனமாடிய ஆடல் நங்கையரையும் தெய்வ அம்சமாக சமூகம் பேணத்தவறியது. ஆதலால் பெண்கள் மனையறத்தின் ஊடாகவே சைவமாண்பு களைக் காத்தமையை விளக்க முடிகிறது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இன்றுவரை தமிழகத்தில் நிறுவன ரீதியாக சமயப்பணிகளில் மங்கையர் பங்காற்றி சிறப்பித்து வருகின்றனர். சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜம் நீண்ட காலமாக சைவ மங்கையர் மகாநாடுகளை ஏற்படுத்தி சைவமகளிர் பணிகளை உற்சாகப் படுத்துகின்றது. பல சைவப் பெண்மணிகள் சொல் ஆற்றலையும், நூல்களின் ஆய்வு வெளியீடு களையும் வெளிக்காட்டிப் பணி புரிந்து வருகின்றார்கள்.

சிவபூமி எனப் போற்றப்படும் ஈழத் திருநாட்டில் சைவத் தமிழ் வரலாற்றில் காலத்துக்குக் காலம் பெண்கள் சைவப் பண்பாட்டைக் காப்பதில் பெரிதும் பங்கேற் றுள்ளனர். திருமுறைகளை இல்லந்தோறும் பூசை வழிபாட்டில் படித்து தம் சந்ததி அதைப்பேண காலம் காலமாக சைவப் பெண்கள் உதவியுள்ளனர். அந்நியப் படையெடுப்புக்களும் வெளியார் ஆட்சியும் நீண்ட காலமாக நிலவிய போதிலும் சைவப் பண்பாடு பேணுவதில் சைவ மகளிர் நற்பணி செய்துள்ளனர். உணவு, உடை, பாரம்பரியங்களைப் பறிபோகாமல் காத்து வந்த பண்பு ஈழப் பெண்களுக்கே உரியது. பஞ்ச

ஈச்சரங்கள் எல்லாம் இருந்து சிறப்புற்ற இச் சிவபூமியில் மகளிர் எத்தகைய மாண்புடன் விளங்கினர் என்பதற்கு இதிகாசம் கூறும் இலங்காபுரி மன்னன் இராவணனின் மனைவியாளின் திருநீற்றுப் பொலிவு, பண்பாடு - சான்றாக அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தன் ஆலயம் எழுவதற்கு பாரத நாட்டின் மன்னன் மகள் மாருதப்புரவீகவல்லி காரணமென வரலாறு கூறுகின்றது. அவளது முகம் புனிதம் பெற்றமையால் அவளது நேர்த்திக்காக மன்னன் ஆலயம் எழுப்பியதை அறிய முடிகிறது. இலங்கையில் 19ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே பெண்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னராகக் கல்வி அறிவை அகல வளர்க்கத் தொடங்கினர். குடும்பப் பாங்கையும் கணவனுக்கு நல்ல வாழ்க்கைத் துணையாக நிற்பதையும் இல்லத்தில் இனிது பேணிய பண்பாடு ஈழநாட்டுப் பெண்மணிகளுக்குரிய பண்பாடாகும். எனவே எழுத்தறிவில்லாத பெண்க ளிடத் தேயும் ஈழநாட்டில் பல திருமுறைகளைக் கேள்வி ஞானத்தில் பாராயணம் செய்யும் திறனும், புராணப் படிப்புக்களை அறியும் ஆர்வமும் இருந்து வந்தமையை அறிய முடிகிறது. ஈழநாட்டு சைவ சமயப் பணியை முன்னின்று உழைத்து கிராமம்தோறும் பணிசெய்த மாதரார் பணியினை வரலாற்றுப்படுத்தக் கூடிய நூல்கள் அக்காலத்தவர் ஆக்கத் தவறியுள்ளனர். சுமார் இருநூறு வருடங்களுக் குட்பட்ட வரலாற்றில் ஈழ நாட்டில் சைவத்தைப் பேணுவதில் உழைத்த சித்தர்கள், ஞானிகள் நிலையில் நின்றவர்களான சடையம்மா, சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், யாழ் பொன்னம்மா அம்மையார் (அன்ன சத்திரத்தடியம்மா) போன்றவர்களது சிவப்பணி, தவப்பணி பற்றிய வரலாறுகள் நூல் வடிவில் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. சில ஆலயங்களின் தல வரலாறுகளில் அத்தலங்களோடு தொடர்புடைய பெண்ணடியவர்கள் சிலர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஈழ நாட்டுச் சைவ வளர்ச்சியில் மலர்ச்சியை ஏற்படுத்தி சைவத் தமிழ்ப்பண்பாடு தழைத்தோங்க அரும்பாடு பட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். அப்பெருந்தகையின் வழிபாட்டிற்கு பின் ஊர் தோறும் சைவப் பாடசாலைகள் பல்கிப் பெருகின. ஆடவரும் பெண்களும் கல்வி நாட்டத்திலும் பக்தி நாட்டத்திலும் வளரத் தொடங்கினர். அவ்வளர்ச்சி சிறப்புப்பெற்ற காலத்தில் சைவ உயர்பண்பாட்டில் தோன்றிய உயர் கல்விமான் சேர் பொன் இராமநாதன் அவர்கள் மேலைத் தேய நாட்டில் அறிவியல் விடயமாக சென்றபோது அவர் ஆற்றலால் கவரப்பட்டு இலங்கை வந்தவர் செல்வி ஆர். எல். ஹரிசன் என்னும் அவுஸ்திரேலியப் பெண்மணி. இவர் இராமநாதனைத் தன் குருவாகவும், கணவனாகவும் பற்றி இந்நாட்டிற்கு வந்தார். பின் சைவசமயத்தின் ஞான வேட்கையில் அகப்பட்டு திருவாட்டி லீலாவதி இராமநாதன் என்ற நாமத்தோடு சைவதத்துவ நூல்கள் பலவற்றையும் கற்று ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதி சைவப் பணிசெய்தார். இவர் சைவப் பண்பாட்டு உடை, உணவு, சிவபூசை எனத் தன் வாழ்வை அமைத்து சைவப் பெண்கள் பண்பாட்டோடு கல்விகற்கக் கணவனால் உருவாக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியை உயர்நிலையில் வளர்க்கப்பாடுபட்டார். கல்விச்சாலைகள், சிவாலயங்கள் கட்ட கணவனுக்கு பேராதரவு காட்டியவர் இவ் அம்மையார். இவர்களது சிந்தனைகளில் எழுந்த சைவக் கல்லூரி, சைவ ஆசிரியர் கலாசாலை போன்றவற்றால் சைவப் பெண்கள் பலர் அறிவியல் மேன்மை பெற உதவியது.

இவர்களது முன் மாதிரியான பணிக் குப் பின் இலங்கையில் பல சைவ மகளிர் கல்லூரிகள் எழுந்தன. பல சைவப் பெண்கள் உயர் பதவிகளைப் பெறுகின்ற அறிஞர் ஆகினர். இத்தகைய நிலையில் சைவப் பெண்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும் பிலும் சைவ மங்கையர் கழகங்களை ஏற்படுத்தி நிறுவன ரீதியான பணிகளைச் செய்யத் தொடங்கினர். பெண்கள் கல்வி வளரத் தொடங்கிய இக்காலத்தில் குறிப்பாக 1925இல் தெல்லிப் பழையில் பிறந்த பெண்மணியாகிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இராமநாதன் கல்லூரி சைவ ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கற்றுத் தேறி பண்டித, சைவப் புலவர் போன்ற அக்கால உயர் பரீட்சைகளில் நற்சித்தி பெற்று சைவ சமயப்பணிக்காக அயராது உழைத்து தனக்கென வரலாற்றுச் சிறப்பை ஏற்படுத்திய தால் உலகம் போற்றும் சைவப் பெண் மணியாகத் திகழ்கின்றார். இவரது பேராற்றலை தமிழகத்திலுள்ள சைவா தீனங்கள் கௌரவித்துப் பல பட்டங்களை வழங்கியுள்ளது. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் ஆகிய நாடுகளெல்லாம் சென்று சைவப் பேருரைகளாற்றிப் பணி செய்துள்ளார். தெல்லியூர் துர்க்கை அம்பாள் ஆலய நிர்வாகத் தலைவராக இருந்து சைவத்தின் பேரால் பல பணிகளை ஆற்றி வரும் இவர் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற சைவப் பெண்கள் நிலையத்தைத் தோற்றுவித்துப் பேணி வருகின்றார். கோயில்கள் தோறும் சமயப் பிரசங்கங்களை ஆற்றிவரும் இவர் பல கட்டுரைகளையும் சைவ நூல்களையும் எழுதி வெளியிட்டார். ஈழத்திருநாட்டில் சைவம் வளர்க்கும் பெரும் பணியில் பெண்களில் சிலர் இல்லாளாக, கலைஞராக, ஆசிரியைகளாக, ஆய்வாளர்களாக சமயப் பிரசாரகராக, எழுத்தாளர்களாக, புராணப் படிப்பாளர் களாக, ஆலயத் தொண்டர்களாக பல்துறை ஆற்றி வருகின்றனர். இன்று புலம் பெயர்ந்து ஈழத்தவர் பல மேலைத்தேயநாடுகளில் வாழ்ந்த போதும் அங்கு சைவப் பாரம்பரியம் பேணி வளர்ப்பதில் மகளிர் நற்பணியாற்றி வருவது அறிய முடிகிறது.

மேலும் ஈழநாட்டுப் புராணப் படிப்பு வளர்ச்சியில் பெண்கள் இன்றும் பணி செய்வது குறிப்பிடத்தக்கது. "ஈழநாட்டு புராண படல செல்வாக்கு" என்ற இரா.வை.கனகரத்தினம் எம்.ஏ. விரிவுரை யாளரின் ஆய்வில் அவர் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. சத்தியதேவி துரைசிங்கம், திருமதி நா. பாக்கியம், திருமதி வசந்தா வைத்தியநாதன், திருமதி சி. பாலநாதன், திருமதி இராசையா, செல்வி புஷ்பா செல்வநாயகம் போன் றோரைக் குறிப்பிட்டுள்ளார். சைவப் பிரசார சொற்பொழிவுப் பணியில் திருமதி மங்கையற் கரசி திருச்சிற்றம்பலம். புலவர் சி. விசாலாட்சி போன்றவர்களினதும் பணியும் குறிப்பிடத் தக்கதாகும். எனவே சைவ சமய வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு அளப்பரியது என்பது புலனாகிறது.

செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

புனிதவதி - காரைக்காலம்மையார்

பதினொராந் திருமுறையில் திருவாலவாயுடையார் அருளிச் செய்த திருமுகப் பாசுரத்திற்கு அடுத்ததாக காரைக்காலம்மையார் அருளிச் செய்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய தோத்திரங்கள் நம்பியாண்டார் நம்பியவர்களால் தொகுக்கப்பெற்றுள்ளன.

காரைக்காலம்மையாருடைய வரலாறு சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. அவர் இளமைக் காலத்தில் இலக்கண இலக்கியங்களைக் கற்றதாகவோ, செய்யுள்பாடும் திறமுடையவராக இருந்ததாகவோ கூறப்படவில்லை. அடியார்களுக்கு அமுதளித்தல், வேண்டுவன கொடுத்தல் முதலிய திருத்தொண்டுகளில் ஈடுபட்டதாகவே கூறப்படுகிறது.

தென்இந்தியாவில் காரைக்கால் எனும் பதியில் வணிகர் குலத்தில் தனதத்தன் என்ற பெரும் செல்வந்தர் செய்த தவப்பயனாக ஒரு பெண் குழந்தை அவதரித்த வேளையில் புனிதவதி என நாமம் சூட்டி சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தனர். மங்கைப் பருவம் அடைந்ததும் நாகபட்டணத்து பெருவணிகனான பரமதத்தனுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தனர். புனிதவதியார் சிறுபிராயந்தொட்டே இறை அன்புடைய வராகவும், சிவனடியார்களைச் சிவனாகவே போற்றுபவராகவும் திகழ்ந்தார். இல்லற வாழ்வில் ஈடுபட்ட பொழுதும் இறைவன் பால் கொண்ட அன்பு மென்மேலும் ஓங்கி வளரலாயிற்று. ஆயினும் தலைவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து மனையறத்தின் மாண்பு வழுவாமல் ஒழுகினார்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் தனதத்தன் வணிக நிலையத்திற்கு வந்த இருமாங்கனிகளை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். பசியோடு வந்த அடியார்க்கு கறியமுது தயாராகாத நிலையில் கணவர் அனுப்பிய மாங்கனியில் ஒன்றுடன் அமுதாற்றி சிவனடியார் பசிபோக்கினார். வீடுவந்த கணவருக்கு உணவு பரிமாறியதும் இருந்த மாங்கனி ஒன்றையும் பரிமாறினார். அதன் சுவை மிகுதியால் மற்ற மாங்கனியையும் கொண்டு வரும்படி பணித்த பொழுது, செய்வதறியாது இறைவனிடம் வேண்டினார். அவர் கையில் மாங்கனி கிடைத்தது. இறையருளால்

மாங்கனி பெற்றதனை அறிந்த கணவன் நம் மனைவி புனிதவதியார் தெய்வத்தன்மை வாய்ந்த பெண் என்பதனை உணர்ந்து அங்கு அவரை விட்டகன்று வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து வாழ்ந்தார்.

கணவன் தம்மை விட்டகன்றதை உணர்ந்த புனிதவதியார், தம் அழகிய சதையுடன் கூடிய உடம்பை நீக்கி, எற்புடம்பு (எலும்புருவம்) தருமாறு இறைவனை வேண்டினார். இறைவனும் அவர் விரும்பிக் கேட்ட எற்புடம்பை அவருக்கு அருளினார்.

இவ்வாறு இறையருளைப் பெற்று மெய்யறிவு கைவரப் பெற்ற நிலையில் பக்தி உணர்வுடன் முதன் முதலாகப் பாடியது அற்புதத் திருவந்தாதி ஆகும். அந்தாதி என்பது முதற் செய்யுளின் அந்தம் அஃதாவது ஈற்றுச் சொல் அடுத்தசெய்யுளின் ஆதியாக (தொடக்கமாக) அமையுமாறு மாலைபோல் வரும் வண்ணம் பாடப்படும் பிரபந்தமாகும். இப்படியாக முதற் செய்யுளின் முதற் சொல் இறுதிச் செய்யுளின் ஈற்றுச் சொல்லாக அமையும். காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி நூற்றொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. அற்புதத் திருவந்தாதியின் முதலிரு பாடல்களும் நூற்றொராவது பாடலும் பின்வருமாறு

பிறந்து மொழிபயின்ற பின் னெல்லாம் காதல்
இறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டந்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பதிடர்.

இடர்களையாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாரும் எம் மனார்க்குக்
கன்பறா தென்னஞ் சவர்க்கு

இறுதி நூற்றொராவதுபாடல்

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக
கரைவினாற் காரைக்காற் பேய் சொல் - பரவுவார்
ஆராத அன்பினோ டுண்ணச் சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து

கரைவு - பேரன்பு (101)

இவ்வந்தாதியைப் பாடிப் பரவுவோர் சிவபிரானிடம் சேர்ந்து அப்பிரானைப் போற்றிப் பணிந்து வாழ்வார்களாக என முனைக்கின்றார்.

இவ்வந்தாதியின் இறப்பினை நோக்கியே சான்றோர் இவ்வந்தாதிக்கு அற்புதத் திருவந்தாதி என்று பெயர் தொகுத்துள்ளனர். ஓதுவதற்கு இனிமையும் எளிமையுமுடைய இவ்வந்தாதி பக்திச்சுவை ததும்ப பின்வந்த அந்தாதிப் பிரபந்தங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழும் சிறப்புடையது.

அடுத்து காரைக்காலம்மையார் அருளிச் செய்த திருவிரட்டை மணி மாலையாவது கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பா பின்னுமாக அந்தாதி தொடையில் பாடப்பெற்றதாகும். இந்த இரட்டை மணிமாலை என்னும் பிரபந்தத்தை முதன் முதலாகப் பாடியவர் அம்மையாரே எனக் கூறுவது சாலப்பொருந்தும்.

வாழ்க்கையில் துன்பங்கள் உண்டாகும் பொழுது உள்ளம் தளராது இறைவனையே போற்றுதல் வேண்டும். இறைவன் ஆணையின்றி இவ்வுலகில் எதுவும் நிகழாது மெய்யடியார்களைப் போற்றுவோரைக் கண்டு வினைகளெல்லாம் நீங்கி விடுகின்றன. திருவைந்தெழுத்தை ஓதினால் உய்திபெறலாம். இல்லாதான் செய்கைகளெல்லாம் இம் மணிமாலையில் கோர்க்கப்பெற்றுள்ளன.

இரட்டைமணிமாலையில் உள்ள இரு செய்யுள் பின்வருமாறு :

பிரானென்று தன்னைப்பன் னாள்பர வித்தொழுவாரிடர் கண்
டிரானென்ன நிற்கின்ற ஈசன்கண் டீரின் வண்டு ரிண்டிப்
பொரா நின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்து பொம் மென்றுறைவாய்
அரா றின் றிரைக் குஞ் சடைச் செம்பொன் நீள்முடி அந்தணனே

(பிரான் - தலைவன் இடர்கண்டு இரான் - துன்பங்களைப் பார்த்துக் கொண்டிராதவன். கொன்றைப் பொம்பர் - கொன்றைமாலை பொந்து (இலைலனே தலைவாண்று பலநாள் பரந்தொழும் அடியார் துன்பங்களைப் பார்த்துக்கொண்டி ராதவர் கொன்றை மாலை அணிந்து நீள்முடியுடன் நிகழும் இம் கருவப் பெருமாள் எனக் கூறுகிறார்.

அந்தணனைத் தஞ்ச மென் றாடபட்டார் ஆழாமே
வந்தனணிந்து காத்தளிக்கும் வல்லாளன் - கொந்தணைந்த
பொன்கண்டாற் பூனாதே கோள்தாகம் பூண்டாளே
கன்கண்டாய் நெஞ்சே இனி

எற்புடம்பு (பேய் வடிவம்) வேண்டிப் பெற்ற அம்மையார் பல தலங்களையும் தரிசித்து வடக்கே திருக்கைலாயமலைக்குச் சென்றார்.

திருக்கைலையிலே அம்மையார் தலையால் நடந்து வருவதைப் பார்த்து அதிசயித்த உமா தேவியார் இவ்வாறு நடந்து வரும் எற்புடம்பின் அன்பு என்னே எனச் சிவ பெருமான் வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்" என்று கூறினர் என்பர். தலையால் நடந்து அண்மித்த பொழுது "அம்மையே என இவன் அழைத்தார். அம்மையாரும் 'அப்பா' என்றழைத்து அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது சிவபெருமான் உனக்கு வேண்டுவது யாது என்று வினாவியபொழுது

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்

(பெரியபுராணம்)

அம்மையார் வேண்டுதலை ஒத்து, திருவாலங்காடு சென்று நம் நடனத்தைத் தரிசித்து பாடுவாயாக என இறைவன் பணித்தருள, அம்மையாரும் திருவாலங்காடு சென்றடைந்தார். அங்கு திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என இரு பதிகங்களைப் பாடினார். நட்டபாடைப் பண்ணில்

"கொங்கை திரங்கி நரம் பெழுந்து..." எனத் தொடங்கி
காட்டில் தாழ் சடை எட்டுத் திசையும் வீடு
"அங்கங் குளிர்ந்து அனலாடு மெய்கள்
அப்படைத்திரு ஆலங்காடே என நடனத்தைப் போற்றிப்பாடி, பதினேழாவது பாடலில்

அப்னை யணி திருவாலங் காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற் பேய்
செப்பாய் செந்தமிழ் பற்றும் வல்லார்
சிலகதி சேந்தன்பம் மெய்துவாரே என முடிக்கின்றார்.

இரண்டாம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இந்தளம் பண்ணில் அமைந்தது. "எட்டி இல்லன் ஈகை சூரை" எனத் தொடங்கும் பதிகம் பதிக முடிவில்

"சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல் வார் திருநட்டம்
ஆடும் சுரலம் சுரையல் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்காற்பேய் தன்
பாடல் பத்தும் பாடியாடப் பாலம் நாசமே"

என முடித்தார்.

அம்மையார் தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியம் என்ற ஒன்று தோன்ற முன்னோடியாகத் திகழ்கின்றார். திருவாலங்காட்டு

மூத்ததிருப்பதிகங்கள், பின்னர் தேவார முதலிகளால் தேவாரப் பதிகங்கள் பாடுவதற்கு வழி செய்துள்ளன.

புனிதவதியார் மிகப்பெரும் செல்வந்த வணிகக் குடும்பத்தில் பிறந்தவர்; மிக்க அழகானவர், ஆனால் சிறுவயது தொடக்கமே சிவனடியார்க்கு, திருவமுது அளித்தும், பொருள் , ஆடை அணிகளை மனமுவந்து அளித்தும், தன் செல்வத்தைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டார். எங்கள் சைவ சமயத்தில் சிவனடியார்க்கு உணவளித்தலை மாகேசுவர பூசை என வழிபாடாகவே பேணிவந்தனர். குருலிங்க சங்கம வழிபாட்டில் இது சங்கம வழிபாடாக போற்றப்படுகிறது. சிவனடியார்களை சிவனாகவே போற்றிய மன உணர்வை, சிவன் ஏற்றுக் கொண்டார் என்பதை "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே" எனக் கூறியதில் இருந்து காணலாம். சிவனால் "அம்மையே" என அழைக்கும் பெரும் பேறு பெற்றவர்.

இல்லற வாழ்க்கையில் இருந்த காலத்திலும் தனது இல்லறக் கடமைகளை வழுவாது செய்தவர். அதே நேரத்தில் தன் ஆன்மீக உணர்வையும் வளர்த்துக் கொண்டவர். அவர் சிறுவயது முதல் இறைவன் மீது கொண்ட அன்பு, முதிர்ச்சி பெற்று இறைவனால் ஆட்கொள்ளும் நிலைக்கு உயர்த்தியது. பெண்கள் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் அம்மையாரை நாம் எல்லோரும் வாழ்த்தி வணங்குவோமாக.

திருமதி கமலாதேவி பொன்னம்பலம் B.A (Geog) M.A.
முன்னாள் விரிவுரையாளர் - ஆசிரிய கலாசாலை (Hindu Civil)
கோப்பாய்.

❋ ❋ ❋

தாயே மகா சக்தி

இப்பிரபஞ்சம் இயங்குவதற்கு, இதனை இயக்குவதற்கு ஓர் சக்திதேவை. சக்தி உண்டு என்ற கொள்கையை இன்றைய நவீன விஞ்ஞானமும் அன்றே எமது மெஞ்ஞானமும் ஏற்றே நிற்கின்றன. எங்கள் மெஞ்ஞானம் (சைவம், சாக்ததம்) இப்படிப்பட்ட அச்சக்திக்கு பெண்ணுருக்கொடுத்து அவளைக் கொற்றவை, ஆதிசக்தி, பார்வதி, உமை, மாரி, மகாமாரி அம்பிகை, துர்க்கை, நாகபூஷணி, ஆதிபராசக்தி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி எனப் பல பெயர்களில் பல உருவங்கள் கொடுத்து ஏற்றிப் போற்றி ஆலயங்கள் அமைத்து வழிபட வழிகாட்டி நிற்கின்றது. அதனால் தான் அடியேனையும்

முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில் காணும் தெய்வம் அம்மா
தன்னைத் தியாகம் செய்து எம்மைப் பேணும் தெய்வம் அம்மா...

என்றும்

அன்பு வடிவினள் அன்னை எங்கள் ஆதிபராசக்தி அன்னை
மாவில் இனிப்பவள் அன்னை என்னைப் பாட வைத்தவள் தன்னை

என்றும் பாடவைத்தவள் இத்தாய்.

ஆம்; தாயின்றித் தரணியில்லை அனைத்து ஜீவராசிகளின் உருவாக்கத்திற்கும் தாய்தான் மூலவள். தாய்வேறு தெய்வம் வேறு அல்ல என்றும் எமது சித்தர்கள் காட்டியுள்ளனர்.

திரை கடலோடி திரவியந்தேடி மாமனை, பொன்பொருள், சுற்றம் சூழ பெருஞ் செல்வந்தராகத் திகழ்ந்தவர்தான் திருவெண்காடர் என்ற பட்டணத்துச் செட்டி. மகனாக வந்த மருதவாணரின் போதனை யான காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்ற அருமந் திரத்தால் பொன்னைப் பொருளை மனைவியை மனையை ஊரை அனைத்தையும் துறந்தார். பாலுந்தேனும் சோறும் பழரசமும் சுவைத்து பஞ்சணையில் படுத்துழன்றவர். அனைத்தையும் துறந்தவரால் பெற்ற தாயைத் துறக்க முடியவில்லை. துறவியானாலும் சிவபக்தர் சிவன் வேறு, தாயன்பு வேறல்ல, தாய் வேறல்ல, அவளும் தெய்வமே. அவளின் அந்திம நேரத்தில் ஓடோடி வந்து மயானத்திலே பச்சை வாழைத் தண்டின்மேல் தாயின் திருவுடலைக் கிடத்தி அன்னையிட்டதீ அடிவயிற்றிலே... என்று தாயைத்

தீபமாக்கி தெய்வமாக்கி உலகிற்குக் காட்டிய ஓர் ஒப்பற்ற துறவி பட்டினத் தடிகள் தாய் தந்த உடல் தாயைப் போற்றுவதற்கு ஓர் ஊடகம் என எம் வருங்காலச் சந்ததிக்குக் காட்டிய சித்தர் முத்தர்.

நான்காவது வயதில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந் தவர்தான் எங்கள் ஆதி சங்கரர். துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்திலே வேத சாஸ்த்திர நூல்களை அள்ளி எடுத்து கற்றுத் தெளிந்தவர். உலக வாழ்க்கையில் உறுபொருள் எதுவுமில்லை, துறவு வாழ்க்கையே தூய்மையானது, உண்மைக்கு இட்டுச் செல்லும் என்று உணர்ந்தவர். தாம் துறவு பூணுவதற்கு அன்னையிடம் அனுமதிக்காக யாசித்து நின்று செய்தியை அறிய முடிகிறது. அன்று அந்தத் தாய் அனுமதியளிக் காதிருந்தால் இன்று எம் ஆன்மீகப் பொக்கிஷம் ஆதி சங்கரரை இவ்வுலகு இழந்திருக்கும்.

தாயிடம் சங்கரர் தாயே நான் அனைத்தையுந் துறந்து துறவு வாழ்க் கையை மேற்கொள்ளப் போகின்றேன் ஆனால், உனக்கு ஈமக்கடனை மட்டும் செய்யும் உரிமையை எனக்குத் தந்திடம்மா என்று கெஞ்சி நின்ற செய்தியையும் அறிய முடிகிறது. துறவு வாழ்க்கையின் பொழுது அவரது அருட்பணிகள், அறப்பணிகள், எம்மவர்களுக்கு எம்மதத்தின் பால் ஈர்ப்பை ஏற்படுத்தின. விழுமியங்களை விதைந்துரைத்தார். எழுதினார், மடங்கள், அறச்சாலைகள் அமைத்தார். இன்று எம்மவரால் ஏற்றிப் போற்றும் சாரதா பீடத்தை அமைத்தார். இங்கிருக்கும் காலையிற்தான் அவருக்கு தாயின் இறுதி நாட்களின் தெய்வீக அழைப்பு ஏற்பட்டது. ஓடோடிச் சென்றார். தாயாரின் ஈமக்கிரியைகளைச் செய்யுங் காலம் நெருங்கியதை உணர்ந்தார். அன்னை தன் துறவியான மகனைக் கண்டார். உள்ளம் நெகிழ்ந்தார். துவழ்ந்தார். சான்றோனாகக் கண்ட மகனால் உள்ளம் மகிழ்ந்தது. அன்னையின் அருளாசி ஆதிசங்கரரை மேலும் வலுவூட்டியது. சில ஆசாட பூதிகள் சுவாமி, தாங்கள் இப்படியான கிரியைகள் செய்வது அழகல்ல என்று தாயின் பணிக்குத் தடை போட்டார்கள். நானோ துறவியானாலும் என் தாயின் பணி தெய்வத்தின் பணியல்லவா. மூடர்களே தாய் வேறு தெய்வம் வேறு அல்ல என்று துறவுக்கே நவீனத்துவத்தையூட்டி தாயின் சிதைக்கு எரியூட்டி தாய் தெய்வமே எனத் தரணிக்குக் காட்டிய தீரத்துறவி எங்கள் ஆதி சங்கரர் எனவும் அறிய முடிகிறது.

இவரது சௌந்தர்யலகரியில் 75ஆவது பாடலிலே உமையின் திருமுலைப்பாலை அருந்தியமையாற் தான் உமாசுதனாகிய திருஞான

சம்பந்தர் தமிழ் வேதமான திருமுறைகளைத் தந்தாரென்றும் தாயின் பெருமையைக் காட்டுகின்றார்.

இத் தாயின் சிறப்பில் இன்றும் தரணியில் மறைந்தும் மறையாமல் பிரகாசிக்கும் பெரியார்கள் சித்தர்கள், கவிஞர்கள், நிலைத்து நிற்கிறார்கள். பிறவியிலேயே ஊமையான குமர குருபரரைப் பேச வைத்துப் பாடவைத்து அவரது பாடல்களை எம்மைப் பாடவைத்திருப்பவளும் தாயே . எந்த ஓர் சக்தி ஆலயங்களிலும் அம்பாளை அர்ச்சிக்கும் ஓர் வழிபாட்டு நூலாக அனைவரும் ஏற்றுக்கொண்டு ஏற்றிப் போற்றிப் பாடிப் பரவிடும் நூல் அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதி இவரின் அற்புத வரலாறு அனைவரும் அறிந்ததே. அதனை எம் வருங்காலச் சந்ததிக்கு கும்பாபிஷேக மலரூட்டாகத் தர வைக்கிறாள் என் தாய் மகாமாரி. மிகச் சுருக்கமாக....

திருக்கடவூர்ப்பதி அபிராமி அம்பிகையின் அர்ச்சகர் அமிர்தலிங்க ஐயர். இவருக்கு அம்பிகையின் அருளாலே ஓர் ஆண்மகவு. அவருக்கு சுப்பிரமணியம் எனப் பெயரிட்டு பாலூட்டிச் சீராட்டி படிப்பூட்டி வளர்த்துவருங்காலை; தந்தையோடு சுப்பிரமணியனும் தாய் அபிராமி யின் பூசைகளில் பங்கேற்று பணி செய்து வரலானான். தான் கற்ற நூல்களின் பயனாய் அன்னை அபிராமியை ஏனையோர் காண்பது போல வெறுங் கற் சிலையாகக் கண்டானில்லை. அவள் மீதுள்ள அன்பின் நிமிர்த்தத்தினால் அவளோடு பேசவும் செய்வான். இப்போ இளைஞனாகிய சுப்பிரமணியன் ஏனைய அவனையொத்த இளைஞர்களைப் போல தன்னை அழகுபடுத்தி இளமையின் சின்னத் தனங்களிலீடுபடாது, அன்னை அபிராமி மீது காதல் கொண்டு முழுநேரச சக்தி உபாசகனாகி அவளுக்குப் பூசை செய்து நிட்டையிலிருந்து வரலானான். அதே வேளை ஆலயத்திற்கு வரும் தாய்க்குலத்தாரை சாட்சாத் அபிராமியாகவே கருதி வணங்கி அள வளாவவுஞ் செய்தான். இதனைச் சந்தேகித்த பாவையர் இவனது செய்கைகளில் காமுகத்தனம் தெரிவதாகத் தந்தையாரிடமும், மன்னனிட மும் முறையிட்டனர். கேள்வியுற்ற தந்தை துடித்தார். மகனைக் கண்டித்தார். அன்று ஆலய தரிசனத்திற்காக வந்த மன்னன் நிட்டை யிலிருந்த சுப்பிரமணியனைக் கண்டான். பார்த்தான். பரட்டைத் தலை திரண்ட வாட்டசாட்டமானதேகம். நிட்டையிலிருப்பதாகப் பாசாங்கு செய்கிறான் என நினைத்தான். சுப்பிரமணியா சுப்பிரமணியா... அடே சுப்பிரமணியா என அதட்டினான். சுப்பிரமணியன் விழித்தான். இன்று என்ன திதி என்றான் மன்னன். சுப்பிரமணியன் உடனே பௌர்ணமி என்றான். அன்று உண்மையில் தை அமாவாசை. அம்பிகையின் பூரணச் சந்திரன் போன்ற முக அழகில் லயித்திருந்தவன். பௌர்ணமி என்று

விட்டான். மன்னன் சபாஷ், அடப்பைத்தியமே நீ நிஜப்பைத்தியம்தான். மக்களின் கூற்று உண்மைதான். அடே சுப்பிரமணியா இன்று நீ பௌர்ணமியைக் காட்டாவிட்டால் உன் தலை உன் உடலில் இருக்காது என்று கிளம்பி விட்டான். தன் நிலை உணர்ந்த சுப்பிரமணியன் தாயே உன் மகன் பைத்தியக்காரனா. உன் முகத்தையே பார்த்திருந்த நான் இன்று பௌர்ணமி என்று விட்டேனே. என் உயிருக்குப் பயந்து அல்ல உன் மகன் பைத்தியக்காரனல்ல என்பதைக் காட்டுதாயே என்று கூறி நூறு இழைகளால் உறியமைத்து, அதன் கீழே விறகினால் தீ மூட்டி ஏறி உறியினில் தானமர்ந்து அதன் இழைகளை ஒவ்வொன்றாய் வெட்டலுற்றார். ஓரிழை வெட்டிட ஓர் பாடல் வீதம், அன்னைக்கு அந்தாதி பாடிக்கொண்டு வெட்டலுற்றார். அன்னைக்கு அந்தாதி பாடலுற்றார். அங்கே அனைவரும் வேடிக்கை பார்த்து நின்றனர்.

ஆம், உதிக்கின்ற உச்சித்திலக முணர்வுடையோர்.... எனத் தொடங்கி 1, 2, 3, 4, 5....10,....20,... 30,... 40... என்று பாடல் தொடர்கிறது. மக்கள் பெருங் கூட்டம் மன்னனும் வந்து விட்டான். பாவி சுப்பிரமணியன் பாழாய்ச் சாகப்போகின்றான் என்று காத்துப் பார்த்திருந்தனர் பாதர்கள் 50... 60... 70.... 79ஆவது பாடல் விழிக்கே அருளுண்டு . அபிராம வல்லிக்கு வேதஞ் சொன்ன... என்ற பாடலைப் பாடி அம்பிகை தோன்றி தனது திருத்தோடுகளில் ஒன்றைக் கழட்டி ஆகாயத்தினில் வீசினாளாம். அங்கே அழகான சந்திரன் பௌர்ணமி தோன்றியதாம். மன்னன் உணர்ந்தான். மக்கள் உணர்ந்தனர். அன்னையின் அருளினைத் தெரிந்தனர். அபிராமி தாசனை வியந்தனர். மீதிப்பாடலையும் பாடி முடித்து சுப்பிரமணியனுக்கு அபிராமிப்பட்டர் என நாமஞ் சூட்டி ஒரு தொகுதி நெல்வயல் நிலத்தையும் மன்னன் பரிசளித்தானாம். இன்றும் பட்டரின் சந்ததியினர் அவ் வயல் நிலத்திலிருந்து பயன் பெறுகிறார்களாம். இது பட்டர் பெருமானின் திவ்ய வரலாறு. இதிலுள்ள தத்து வத்தைச் சற்றுப் பார்த்தால் ஏன் தாய் திருத் தோட்டால் செயற்கைச் சந்திர மாயையைத் தோற்றிக் காட்டினாள். ஏ, சந்திரா இங்கே வா என்றால். சந்திரன் வரமாட்டானா? பெரியோர்களே எமது சமயம் விஞ்ஞானத்தை வெட்டிப் போவதில்லை. ஒட்டியே செல்கிறது என பலதலைப்புகளிலே காட்டமுடியும். நவகோள்களிலே மாற்றம் சடுதியாக ஏற்படின் அன்று ஓர் சுனாமியே ஏற்பட்டிருக்கும். இயற்கைச் சமநிலை மாறின் பேரழிவு எந்த மக்களும் எந்த மன்னனும் உண்மையான ஓர் பக்தனை காமுகனாக்கினரோ அவர் கண்தெளிவுற அக்குழுவினர் மட்டுமே சந்திரனை அன்று கண்டார்கள். அன்னை காண்பித்தாள். ஏனையோர்க்கு அன்று அமாவாசையே. இவ் வரலாறு இன்றைக்கு 350

வருடங்களுக்குள்ளானது. இந்தியாவின் வானிலைத் தரவுகளில் அக்காலத் தில் அப்படி ஓர் பதிவு... ஆகா இது ஓர் ஆன்மீக நிகழ்வு அவ்வளவே.

அத்துடன் வங்காளக் காளி கோவில் பூசாரி இராமகிருஷ்ணர் அவர் காளியோடு கதைத்து இராமகிருஷ்ண பரமஹம்சரானவர். மேலை மருவத்தூர் பங்காரு அடிகளார் தொட்டு இன்று எங்களூர் கிராமங்களிலும் ஆங்காங்கே அன்னை அருள்பெற்று அருள்வாக்குரைக்கும் சித்தர்கள் இருக்கவே செய்கின்றனர். இவர்களோடு பழகும் எம்மில் சில ஆசாட பூதிகளால் இவர்களை அந்நிலையில் பார்க்க மனம் ஒப்புதில்லை பொறுக்குதில்லை அவ்வளவே. ஏன் எதுவுமே தெரியாத இச் சிறியேனையும் அம்மா அம்மா என் தாயே..." எனப் பாடவைத்து இன்று உலக நாடுகளிலுள்ள அம்பிகை ஆலயங்களிலுள்ள அடியார்களையும் இப்பாடலூடு பணியவைத்து நூலாக்கி இறுவட்டாக்கிப் பதிப்பித்து 20.07.1993 இல் அன்னை துரந்தரியால் பொன்னாடை பொற்கிழி தரவைத்து அன்னைதாயன் என உலகிற்குக் காட்டிய வள் என்தாய் என்பதை மிக அடக்கமாக அவனியோர்க்கு அன்னை வருஷப்புலம் மகாமாரி அம்பாளின் இம் மாண்புமிகு மலரூடாகத் தெரிவித்து அவரின் பொற் பாதங்களைப் போற்றித் தொழுகிறேன்.

ஆக தாயே மகா சக்தி அவளே பெருஞ் சக்தி
தாயின்றித் தரணியேது
தாயே தெய்வம்
அன்னையைத் தொழுங்கள் அனைத்தும் தருவாள்.

கவிமணி அன்னைதாஸன்
ஸ்ரீரங்கம்
ஊரெழு.

❋ ❋ ❋

அன்னையின் அருள்

மதுரையில் மீனாட்சி, காஞ்சியில் காமாட்சி, காசியில் விசாலாட்சியாகக் காட்சியளிக்கும் ஆதிபராசக்தி அன்னையானவள் சுன்னைநகரின் வருஷப்புலத்தில் வாய்க்கால்க்கரை ஓரம் மகாமாரி அன்னையாகக் காட்சி கொடுக்கின்றாள். மழைக்காலங்களில் வெள்ளம் கரைபுரண்டோட அதைப்பார்த்து அந்தக் குளிர்ச்சியில் தானும் மகிழ்ந்து அவ்வூர் மக்களை மட்டுமன்று அயல் கிராம மக்களையும் மகிழ்ச்சியாக வாழவைக்கிறாள்.

[வயிற்றோட்ட நோயினால் பாதிப்புற்று இறந்து கொண்டிருக்கும்] மக்களைக் காப்பாற்ற "அசரீரியாக" தனக்கொரு ஆலயம் அமைத்து வழிபட வேண்டும் எனப்பணித்த அன்னைமாரி இந்த [வாய்க்கால்க் கரைஓரம்] அமர்ந்தது ஒரு அற்புதமான சம்பவம் ஆகும்.

"விண்ணில் உறையும் தெய்வங்கள்" மண்ணில் குடிகொள்வது என்பது அதுவும் விரும்பிய இடத்தில் அமர்வது சாதாரணமானதல்ல. அவர்களும் தாங்கள் எங்கிருந்தால் அருள்பாலிக்க முடியும், தங்களைத் தகுந்த முறையில் யாரால் ஆதரிக்க இயலும் என்பதைத் உணர்ந்துதான் உற்பத்தியாகிறார்கள்.

அந்த வகையில் [இக்கரைஓரம்] அமர்ந்த அன்னையின் ஆலய திருப்பணிச்சபையி னரின் அயராத தொண்டினால் இன்று ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ மாரித்தாய் மகிழ்வுடன் அருள்புரிகின்றாள்.

"நம்பினார் கெடுவதில்லை"

இது நான்கு மறைத்தீர்ப்பு. அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம் என்பது வாக்கு. அதை நிரூபிப்பதுபோல மக்களுக்கு அன்னைமாரி அருளை வாரிவாரி வழங்குகின்றாள்.

"ஆலயம் என்பது அழகாக அமையவேண்டும்
கோயில் என்பது கோபுரமாகவேண்டும்"

என்பதற்கு உதாரணமாக இவ் ஆலயம் அமைந்திருக்கிறது. [தலவிஷேடம், தீர்த்தவிஷேடம், விருட்ஷ விஷேடம் என்பார்கள்.] [வாய்க்கால்க்கரைஓரம்] தன் இருப்பிடமாக அமைத்து அதை விஷேச

தலமாக விளங்கச் செய்திருக்கின்றாள். "அவனன்றி ஒரு அணுவும் அசையாது" என்பது முற்றிலும் உண்மை. அவனருளாலே அவன்தாள் வணங்கு என்பதுபோல் அன்னையின் அருளால் இந்த ஆலயம் அமைக்கப் பெற்றருக்கிறது.

[அடியேன் சுன்னாகத்திலே பிறந்து வளர்ந்திருந்தாலும்,, வேறு பிரதேசங்களில் கடமையாற்றி இரண்டாயிரம் ஆண்டு மாசிமாதம் அன்னையின் அயல் கிராமத்திற்கு வேலை மாற்றலாகி வந்தேன் அதற்கு மறுதினம் கொடியேற்றத் திருவிழா என அறிந்தேன். எனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி ஆலயத்திற்கு வரும் பாக்கியத்தைப் பெற்றேன். நான் வந்த நேரம் நல்லநேரம். காரணம்; மாரி அம்மன் வீதியுலா வந்துகொண்டிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அன்னையின் எழில் திருவுருவம் மெய்மறக்கச் செய்தது.]

[அம்மா அருள்பார்வையுடன் அமர்ந்திருக்கும் அழகே தனி அழகுதான். அன்றிலிருந்து அந்த ஈர்ப்பு சக்தி அன்னை ஆலயத்திற்கு வரச்செய்தது. அதுமட்டு மல்லாது தேவாரங்கள், அபிராமி அந்தாதி பஜனைப்பாடல்கள் ஊஞ்சல்ப்பாடல்கள் என பாடவைத்ததும் அன்னை அருள்தான்.]

ஆண்டவன் அமர்ந்திருக்கும் ஆலயங்கள் அருளுடன் பொலிவுடன் அழகுடன் திகழ அங்கு நடைபெறும் பூசைகள் அந்தணப் பெரியார்கள் செய்யும் கிரியைகளும் காரணமாகின்றன. அது இந்த ஆலயத்தில் திறம்பட நடைபெறுகின்றன அதனால்தான் மகாமாரித்தாய் அருளுடன் பொலிவுடன் மக்களுக்குக் காட்சியளிக்கின்றாள்.

[நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து சிலவரிகள் எழுதவைத்த நாயகி தன்னிடத்தில் என்னைப்பாடவைத்த நாயகி, தன் எழில் உருவத்தைக் காணவைத்த நாயகியை வாயாரப்பாடி மனதாத் துதித்து "மல்லிகையில் மாலைகட்டி மாதாவே சூட்டிடுவேன்" என்று வேண்டி அம்மா உன் அருள்கடாட்சம் எமக்கு நித்தம் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு பெறுகின்றேன்.]

வைத்திய கலாநிதி
திருமதி S. அருமைநாயகம்

❋ ❋ ❋

சித்தாந்தம் கூறும் சைவசமயம்

சில குறிப்புகள்

உலகில் சமயம்

ஆதியில் உலக நாடுகளில் வாழ்ந்த மக்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்தனர். உணவு, உடை உறையுள் பழக்க வழக்கங்கள் வழிபாடுகள் என்பவற்றில் வளர்ச்சியடைந்தனர்.

கடவுள் வழிபாட்டில் எல்லா நாடுகளிலும் ஒரே தன்மைகள் காணப்பட்டன. சூரியன், சந்திரன், மலை, ஆறு, கடல், மரம், காற்று என்பவற்றைக் கடவுள்களாக வழிபட்டனர். இந்த இயற்கை வழிபாட்டு முறைகள் பேணப்பட்டு வந்தன. இன்றும் உலக நாடுகளில் பேணப்படுகின்றன. சூரிய, சந்திர மற்றும் மரம் போன்றவற்றினை இன்றும் கடவுளாகக் கருதி வழிபட்டு வருகிறார்கள். எல்லா இன மக்களுக்கும் இது விதிவிலக்கல்ல.

கடந்த சில வருடங்களுக்கு முன் அன்று தைப்பொங்கல் நாள் எங்கள் வீட்டில் தைப்பொங்கல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அன்றைய தினம் ஆங்கில நாட்டு வெள்ளையர் குடும்பம் வந்திருக்கிறது. பொங்கல் நடைபெற்று சூரியனுக்குப் படைத்து, வழிபாடு நடந்து பொங்கலும் உண்டு மகிழ்ந்தது இந்த நிகழ்வில் தங்கள் மூதாதையர்கள் சூரிய வழிபாட்டினைச் செய்தார்களென்றும் இன்று சூரிய வழி பாட்டினை வெவ்வேறு முறைகளில் நடாத்துகிறார்கள் என்றும் கூறினார்கள்.

இதிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் உலக நாடுகளில் ஒத்திருக்கின்றன என்பதாகும். உலகத்தமிழர்களின் (மக்களின்) வாழ்க்கையில் இது விதிவிலக்கல்ல. கதைகள், கிரியைகள் மூலமாக வழிபாடு நடாத்திய தமிழர்கள் சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்டு வழிபடத் தொடங்கினர்.

புராணங்களும் ஆகமங்களும் நல்ல கருத்துள்ள தத்துவங்களும் இணைந்ததே சைவசித்தாந்தம் எனப் பெயர் பெற்றது.

சைவ சித்தாந்தம்

சித்தாந்தம் என்றால் என்ன? முடிந்த முடிவு என்ற பொருளாகும். சைவசித் தாந்தம் எப்படித் தமிழில் வந்தது என்று பார்த்தால் வடநாட்டிலிருந்து வந்த பரஞ்சோதி முனிவர் தமிழ்நாட்டில் பக்குவ நிலை கண்ட திருவெண்காடருக்கு சைவசித்தாந்த மெய்ப்பொருளை உபதேசித்ததர். அத்தோடு தனது குருவான சத்தியஞானதரிசியின் பெயரை திருவெண்காடருக்கு மெய்கண்டார் என வைத்தார். இந்த மெய்கண்டாரே முதலில் சைவசித்தாந்தத்தைப் போதிக்கத் தொடங்கியவராவார். இவரே சிவஞான போதம் எனும் நூலையும் தந்தார். இவரைத் தொடர்ந்து அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார் போன்றோரும் சைவ சித்தாந்த நூல்களைச் சுருக்கியும், விரித்தும் தந்துள்ளனர். ஆனால் மறைஞானசம்பந்தரைத் தவிர ஏனைய மூவரும் தமிழில் சித்தாந்த நூல்களைத் தத்துவர்களாவர்.

சிந்துவெளி நாகரீகத்திற்கு முன்பே சைவ சித்தாந்தக் கொள்கைகள் பேணப்பட்டு வந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். சைவசித்தாந்தக் கோட்பாடுகள் தமிழ்நாட்டில் பரவியதாகச் சொல்லப் பட்டாலும் இந்தியாவின் வடபிரதேசமான காஸ்மீரிலும் ஏன் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, இந்தோனேசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற இடங்களிலும் சித்தாந்தக் கொள்கைகள், சிவவழிபாடுகள் இருந்ததாகவும், இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கூறுவர். இன்று அமெரிக்க மலைத் தொடர்களில் சிவன் கோயில்கள் இருப்பதாகக் கண்டு பிடித்திருக் கிறார்கள்.

சைவ சித்தாந்த உட்பொருள்

அநாதியான முப்பொருட்களாக பதி, பசு, பாசம் என்பவற்றின் விளக்கமாகவும் வழிநடாத்தலாகவும் வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாக அமைந்த ஒன்றாகும். சித்தாந்தம் இந்த முப்பொருளுக்குள்ளே உலகம் நடக்கிறது. பதி என்றால் கடவுளைக் குறிக்கும் பசு என்றால் ஆன்மாக்களைக் குறிக்கும் பாசம் என்றால் ஆன்மாக்களைப் பிடித்திருக்கும் நோய்களைக் குறிக்கும். இங்கே பார்த்தால் ஆன்மா அதாவது உயிர்கள் உலகிலே தம்மைப் பிடித்திருக்கும் மலங்களை நீக்கி இறைவனை அடைய வேண்டும். இங்கே பதியாகிய கடவுள் விருப்பு வெறுப்பு அற்றவர். தம்மை அடைபவர்களுக்கு சுகம் செய்பவர். பசு என்றால் ஆன்மா என்றும் அந்த மூன்று வகையினரும் முறையே சகலரென்றும் பிரளையாகலர் என்றும் விஞ்ஞானகலர் என்றும் வகைப்படுவர். இறைவனால் படைக்கப்பட்ட ஆன்மாக்களுக்கு ஏன் இந்தப் பாகுபாடு என்றால் அவர்களில் பற்றியிருக்கும் நோய்களேயாகும். இங்கே சகலர் என்னும் உயிர்களுக்கு

மூன்று மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற நோய் பிடித்திருக்கும் பிரளையாகலருக்கு இரு நோய்கள் அதாவது இரு மலங்கள் பிடித்திருக்கும் அவை ஆணவமும் கன்மமுமாகும். அடுத்து வரும் ஆன்மா விஞ்ஞானகலராகும். இந்த ஆன்மாக்களை ஒரு மலத்தார் என்றும் அழைப்பார். இவர்களுக்கு ஆணவம் மட்டும் பிடித்திருக்கும்.

இந்த மூன்று மலங்களையும் அதாவது உலக உயிர்களை பிடித்திருப்பவற்றை ஆணவத்தைத் தவிர கன்மம், மாயை என்பவற்றைப் போக்கலாம். ஆனால் ஆணவத்தை மட்டும் எந்த உயிர்களிடமிருந்தும் போக்க முடியாது. சாதாரண மக்களின் வாழ்க்கையிலே வைத்தியர்கள் நோயாளிகளிடத்தே சில நோய்களைக் கட்டுப்படுத்து வார்களேயன்றி முற்றாக நீக்கிவிடும் வல்லமை அற்றவர்களாக இருப்பார்கள். அதே போன்றே உயிர்கள் இடத்தே இருந்து ஆணவத்தை மட்டுப்படுத்துவதால் வைத்தியராகிய பதி (கடவுள்) இதனைக் கொண்டுதான் திருவருட் பயனிலே மூன்று திறத்துள்ளாரும் மூலமலத்துள்ளார் என்று சொல்லப் படுகின்றது.

பசுக்கள் எப்பொழுதும் கட்டப்பட்டிருக்கின்றன. இவை பாசம் என்ற கயிற்றினால் கட்டப்பட்டிருக்கின்றன. கோயில்களிலே கொடி யேற்ற விழாவின் போது பதியைக் கொடிமரமாகவும் ஆன்மாக்களை கொடிச்சீலையாகவும் மலங்களை தர்ப்பைக்கயிறாகவும் கற்பிக்கிறார்கள். பாசமாகிய கயிறு ஆன்மாவைப் பதியுடன் சேர விடாது தடுக்கிறது.

ஆன்மாக்கள் தானாக எதனையும் அறிய மாட்டாது. குரு காட்டத்தான் இவற்றை அறியும் தன்மையுடையன. இது அறிவித்தால் அறியும் தன்மையுடையது. இது அறிவித்தால் அறியும் பசுக்கள் கடவுளால் படைக்கப்பட்டவை அல்ல. அவைகள் அநாதியானவை பதி ஒன்று; பசுக்கள் பல; பாசமோ மூன்று என வரும். உயிர் பிராணவாயுவை உயிர்த்தல் தன்மையுடையதால் உயிர் தன்மை என அழைக்கப்படுகிறது. உயிர்களிடத்தேயிருந்து பாசங்கள் நீங்கினால் அல்லது மட்டுப் படுத்தப்பட்டால் பதியை அடையலாம். பதியைப் பார்க்கலாம்.

பதி கடவுள்

எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிபவன், என்றும் உள்ளவன், என்றும் இறையை அறிந்தபோதும் சித்தாந்தத்தில் கடவுள் பற்றிச் சொல்லியவற்றைப் பார்ப்போம். ஆகமங்களில் இருந்து வந்ததே சைவசித்தாந்தம் ஆகும். என்ற போதிலும் பதி (கடவுள்) மூவகைத்

திருமேனிகள் உடையவர். அவை அருவம், உருவம், அருவுருவம் அருவுருவத்திருமேனியைப் பார்க்க முடியாது. ஒலியை மட்டும் கேட்கலாம். அருவுருவ த்திருமேனியைப் பார்க்கலாம். சிவலிங்கத்தைக் குறிக்கும் உருவத்திருமேனி உருவ நிலையிலே ஆன்மாக்களுக்கு இறைவன் காட்சி கொடுப்பான்.

இந்தத் திருமேனிகளுக்கும் பசுக்களுக்கும் அதாவது ஆன் மாக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஆன்மாக்களின் வல்லமைக் கேற்ப அவர்களுக்கு இறைவன் காட்சி கொடுப்பான். அருவத்திரு மேனியில் விஞ்ஞானகலருக்கு, அருவுருவத் திருமேனியில் பிரளயா கலருக்கும் காட்சி கொடுப்பான்.

கடவுளுக்கு எட்டுக் குணங்கள் இருக்கின்றன. அவைகள் தன்வயத் தனாதல், இயற்கை உணர்வினன், முற்றும் உணர்ந்தவன், அளவிலா ஆற்றலுடையவன், வரம்பிலா அன்புடையவன், பேரருள் உடையவன், பாசங்களில் நின்று நீங்கியவன், தூய உடம்பினன் என்பனவாகும். இறைவனுடைய தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவை ஆன்மாக்களுக்காகச் செய்கின்ற இறை தொழிலாகும்.

இறைவவன் ஆன்மா ஈடேறும் பொருட்டு இந்த ஐந்து தொழில் களையும் செய்கின்றான். ஆன்மாக்கள் இறைவனை அடைவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களில் நின்று வழிபாடு செய்ய வேண்டும்.

சைவசித்தாந்தம் பற்றிச் சில குறிப்புக்களைப் பார்த்தோம். எந்த மொழிகளிலும் முதலில் இலக்கியங்கள் தோன்றின. அவற்றை வைத்துக் கொண்டே இலக்கணங்களை வகுத்தார்கள். இது கற்றோரின் ஆய்வாகும். இதே போன்றுதான் சைவக் கதைகளுக்கு மட்டுமல்ல புராணங்களுக்கும் அமைய தத்துவங்கள் பிறந்தன. அது மட்டுமல்ல இந்து தத்துவங்களும், சைவ சித்தாங்களும் தோன்றின. ஏற்கனவே இலக்கியங்கள் கண்டதற்கே இலக்கணங்கள் என்பதைப் போன்றே புராணங்களும் ஆகமங்களும் கொண்டு எடு க்கப்பட்டதே சைவசித்தாந்தம் ஆகும்.

நமது இலங்கைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சைவ சித்தாந்தத்தைப் பேணுகின்றோம். வளர்க்கின்றோம்.

கலாபூஷணம் சு. துரைசிங்கம்

ஸ்ரீ மாரியம்மன் (சீதளாதேவி)

சீதளேத்வம் ஜகன்மாதா சீதளேத்வம் ஜகத்பிதா
சீதளேத்தவம் ஜகத்தாத்ரி சீதளாயை நமோ நம: ஆதிசங்கரர்

உலகிலே சகல ஜீவராசிகளுக்கும் ஒரு தாய் உண்டு. தாயில்லாது எந்த ஜீவராசிகளும் தோன்ற முடியாது. தாய் (1) பெற்றமாதா (2) கோமாதா (3) பூமாதா (4) ஜகன் மாதா என நான்கு வகைப்படும். பெற்றமாதா தொடர்பு உயிர் உள்ளவரை தான். கோமாதா பால் கொடுத்துக் காக்கின்றவரை மட்டும் தான். பூமாதா இந்த சரீரம் இந்த உலகத்தில் உள்ளவரை தான். ஆனால் ஜகன்மாதாவோ உயிர்த்துணையாம் தோன்றாத் துணையாக இருந்து வருவதை "அபிராமி என்றன் விழித்துணையே" என்று ஸ்ரீ அபிராமி பட்டரும் தோன்றாத்துணைக்கோர் துணையாகி என்று குமரகுருபரசுவாமிகளும் கூறுவார்கள்.

இந்த ஜகமானது (உலகம்) ஐந்து வடிவமாகவுள்ளது. 1. மண் (ப்ருதவி) 2. அப்பு (ஜலம்) 3. தேயு (நீ) 4. வாயு (காற்று) 5. ஆகாயம் (சப்தம்) இந்த ஐந்தையும் சக்தி வடிவமாகக் காண்கிறோம். மண்ணைப் பூமாதேவியாகவும் ஜலத்தைக் கங்காதேவி யாகவும், காற்றைப் பிராண சக்தியாக காத்தாயி என்றும் சப்தரூபமான ஆகாயத்தை நாதரூபினி ஆகாசவாணியாகவும் அழைக்கப்படுவதால் உலகத்தை ஜகன்மாதா என்று கூறப்படுகிறது. அகிலாண்ட கோடி பிரமாண்டங்களையும் ஈன்றெடுத்த அன்னையாம் ஜகன்மாதா சகல ஜீவராசிகளையும் அதனதன் தன்மைக்கேற்ப வினைக்கொப்ப சுகதுக்கங்களையும் மாறி மாறி அனுபவிக்கச் செய்வதால் அவளை மாரி அம்மா என்றழைக்கிறது.

கந்த புராணத்தில் மாரி அம்மனின் வரலாறு அறியக் கிடைக்கிறது. தேவர்களுக்கு சூரபத்மனால் ஏற்பட்ட துன்பங்களைப் போக்க ஸ்ரீ முருகப் பெருமான் சிக்கலில் வேல்பெற்று, திருச் செந்தூரில் படை வீடு அமைத்துப் போரிடும்போது சூரபத்மனின் அமைச்சர்களில் மந்திர சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற ஒருவன் ஆபிசாரஹோமம் (தீய வேள்வி) செய்து மிக உஷ்ணமான ரோகத்தைத் தேவபடைகள் மீது ஏவி விட தேவப்படைகள் உஷ்ணரோகத்தால் சரீரமெல்லாம் கொப்புளங்கள் ஏற்பட, மிகச் சோர் வடைந்துள்ளதை அறிந்து, தேவஸேனாபதியான ஸ்ரீ முருகப்பெருமான்

வடக்கு நோக்கி சற்றுத் தியானத்தில் அமர, உமாமகேசசனான இறைவன் தோன்றி தனது அஷ்டமூர்த்தமான (எட்டு சரீரங்கள்) 1. பிருத்வி (மண்) 2. அப்பு (ஜலம்மூ 3. தேயு (அக்னி) 4. வாயு (காற்று) 5. ஆகாய (சப்தம்) 6. சூரியன் (பகலவன்) 7. சந்திரன் (நிலா) 8. ஆத்மா (உயிர்) இந்த எட்டு சரீரங்களில் 2ஆவது ஜல சரீரத்திலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்து சீதளாசக்தியென்ற பெயரையும் ஞானகட்கம் என்ற வாளையும் பல ஆற்றலையும் தந்து போர் முனையிலிருந்து வரும் உஷ்ண ரோகங்களை ஆகர்ஷித்துக் கொண்டு தேவசேனைகளைப் பாதுகாத்து வெற்றி பெற அருளினார். ஸ்ரீ சீதளாசக்தியின் துணையுடன் ஸ்ரீ முருகப்பெருமான் வெற்றி பெற்றுள்ளார் என்பதைக் கந்தபுராணம் கூறுகிறது.

பிறகு இறைவன் இந்த சீதளா சக்தியை மக்களின் நன்மைக்காக கிராம தேவதையாக இருந்து தீயவர்களை அடக்கி நல்லவர்களைக் காத்திட போர் முனையில் ஆகர்ஷித்துள்ள உஷ்ணரோகத்தை வைசூரியாக உபயோகிக்கவும் மக்களின் மிகத் தேவையான ஜலத்தை வான்முகில் வாழாது செய்திடச் செய்து, மழைவளம் சுரக்கச் செய்திட மழைக்கு அதிதேவதை யாக சீதளாதேவி மகாமாரி என்ற பெயரோடு விளங்கச் செய்தருளினார்.

அன்னையின் தோற்றம்

சிவமும், சக்தியும் நாராயணமும் ஆன மூன்று சக்திகளின் சேர்க்கையால் உருவானவள் இவள்.

சங்கரநாராயணராக ஒரே ஒரு தலத்தில் காட்சி தருகிறார். சங்கரநாராயண ரூபம் என்பர் இதை.

சிவமும் சக்தியும் சேர்ந்த சிவசக்தி ரூபம் அர்த்தநாரீச்வர ரூபம்

சிவமும் விஷ்ணுவும் சேர்ந்த கலப்பு ஐயப்பன் - சிவசக்தி கலப்பால் தோன்றியவர். முருகன். சிவம் -சக்தி - விஷ்ணு கலப்பால் தோன்றியவள் கருமாரி.

அழித்தல் தொழிலை ருத்திரன் செய்கிறார்.

இந்தத் தொழில்களுக்குக் கருணை வேண்டும். கருணையைப் பொழி பவளே கருமாரி எனும் தேவி.
உலக வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது அதற்கு அழை ரிஷி மூலம்.

மழையில்லாமல் நீர் சுரக்காது.

நீரின்றி உலகம் அமையாது - அசையாது - இயங்காது

உலகில் வாழும் உயிர்களுக்கு உயிர்நாடி தண்ணீர். அறத்தொடும் பொருளோடும் இன்பங்களளோடும் வாழ்ககை நடாத்த மழை அவசியம் தேவை.

மழையாயிருப்பவளும் மாரியே - மகமாரியே...

சிவசக்தியே மாரி என வழங்கும் பெரும்தேவி அந்த மாரியைப் பற்றி,

"நீர் இன்றியமையாது உலகு எனின் யார் யார்க்கும்
வான் இன்றி அமையாது ஒழுக்கு"
என்றார் திருவள்ளுவர்.

மாராசூரனைக் கொன்றவள் மாரி. அம்மாரி இன்றும் காலதேவனிடம் தேவியாக இருக்கிறாள் என்கிறது தொந்நூல்.

மேலும் ஜனங்களையும் மயங்கச் செய்ய வைக்கும் மாயா சக்தியைப் போக்கி நல்ல ஞானத்தைத் தர தன் கையில் உள்ள ஞான கட்கத்தினால் அருளுவதால் மகாமாயை, மகமாயி என்ற சொல் மருவி "மகாமாரி" என்று வழங்கி வருகிறது. இறைவனின் ஆக்ஞா வண்ணம் நாடெங்கும் பல தலங்களிலும் பல வடிவங்களில் அமர்ந்து பல அற்புதங்கள் புரிந்து மக்களுக்கு வேண்டுவதை வாரி வழங்கிடும் அருட்சக்தியாக விளங்கி வருகிறாள். திருச்சி சமீபம் சமயபுரம் மஹாமாரியாகவும், தஞ்சையில் புன்னைநல்லூர் மகாமாரி யாகவும் திருவேற்காட்டில் கருமாரி யென்றும் திண்டுக்கல்லில் கோட்டை மாரியம்மன் என்றும் வலங்கைமானில் மகாமாரி என்றும், வேப்பிலை ஆடை அணிந்து வழிபடுபவர்களுக்கு பெரியபாளையத்து மாரி அம்மனாகவும் ஆலயத்தை இடிக்க வேண்டும் என்று அகம்பாவத்தில் வந்த ஆங்கிலேயரின் கண்ணை மறைத்து அவன் வருத்தி மன்னிக்க வேண்டியும், பல ஆபரணங்களையும் கட்டளை களையும் செய்யவைத்த தம்பிக்கோட்டையில் ஸ்ரீ மாரியம்மனாகவும் விளங்கி வருகிறாள்.

சீதாளதேவி தியானம்

வாமே சூவம் கபாலம் டமருகஸஹிதாம் ஊர்த்வகேசம் கரண்டாம்!
கட்கம் தாடங்க யுக்மம் ஸ்தனபரயுகளாம் கனுரகாவ ஹ்நிநேத்ராம்!!
ரௌத்ராம் வீராஸனஸ்தாம் ஜ்வரஹர துரிதஸ்போடகாதினி ஹதஹந்தீரிம்!
ஸாந்திநித்யம் நிம்ப வ்ருஷ ஸ்திதிமருண நிபாம் சீதளாதேவி ம்டே!

காயத்ரீ

சீதளாயைச வித்மஹே ஸர்வ ஸித்தீச தீமஹி!
தந்நோ மாரி ப்ரசோதயாத்!

ச. குமாரபாலன்

❋ ❋ ❋

முன்னைஒப் பாயுள்ள மூவர்க்கும் மூத்தவன்
தன்னைஒப் பாய்ஒன்றும் இல்லாத் தலைமகன்
தன்னைஅப் பாயெனில் அப்பனு மாயுளன்
பொன்னைஒப் பாகின்ற போதகத் தானே.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

கும்பாபிஷேகக் கிரியைகளின் மகிமைகளை தெரிந்து கொள்வோம்.

வேதங்களும் ஆகமங்களும் கிரியை மரபு பற்றி அறியப் பெரிதும் துணை புரிவன. சமயதத்துவச் சிந்தனை வளர்ச்சிக்குப் பெருமளவில் இணைக்கும் சாதனங்களாக வேதங்களும் ஆகமங்களும் விளங்கு கின்றன. திருக்கோயில் கிரியை மரபில் இவ்விரு நூல்களும் தரும் சமயக்கிரியை அம்சங்கள் சங்கமமாகின்றன. இவை சைவ பாரம்பரியத் திற்கு முதல் நூல்களாக விளங்குவதோடு கிரியை மரபுகளுக்கும் அடிப்படையாகவுள்ளன. வேதங்கள் கூறும் வழிபாட்டு மரபிலும் சுவறி யுள்ளதைம நாம் அவதானிக்கலாம். ஆகமம் வகுத்துக் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கை சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல் ஆகும். இவை யாவற்றிற்கும் மேலாகப் பரம்பொருளை ஒளி வடிவில் போற்றப்பட்ட சிற்பம் வேதத்தில் காணப்படுகின்றது. இந்த வைதிகப் பண்பு ஆகமம் வகுத்துக் கூறும் வழிபாட்டு மரபிலும் சுவறியுள்ளதை நாம் அவதானிக்கலாம். ஆகமம் வகுத்துக் கூறும் நைமித் தியக் கிரியைகளில் உயர் இடம் பெறும் கும்பாபிஷேகக் கிரியையில் நாம் இச் சிறப்பம்சங்களை உணரலாம்.

ஆகம வழிபாட்டிற்கு சிகரம் வைத்தாற் போல் அமைவது பிரதிஷ்டை என்னும் கிரியையாகும். இக்கிரியை நிகழ்ந்த பின்னர்தான் ஆலயங்களிலே ஏனைய மூர்த்திகளுக்குரிய நித்திய, நைமித்திய கிரியைகள் நிகழும் காரணங்களால் நைமித்தியக் கிரியை மரபில் பிரதிஷ்டை முதன்மை பெறுகின்றது. பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளங்குவதன் மூலம் கும்பாபிஷேகத்தின் உட்பொருளை உணரலாம். "பிர" என்ற பகுதி " சிறப்பாக" என்றும் 'நன்கு புலனாகும் படி' என்றும் பொருள்படும். "திஷ்ட" என்ற பகுதிக்கு "நிற்றல்' என்ற பொருளும் உண்டு. எனவே பிரதிஷ்டை எனும் பொழுது ஏனைய இடங்களில் புலனாவதைக் காட்டிலும் "சிறப்பாக நிலை நிற்றல் என்றும் ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும் படி நிற்றல்' என்றும் பொருள்படுகின்றது. இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஸ்டையாகும்.

அனாதிமலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனைக் கடந்த சோதியாகிலும் அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப்

போக மோட்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் சிவலிங்கத் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகத்திலே கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு, குட நன்னீராட்டு விழா, பெருஞ்சாந்தி விழா என்றெல்லாம் இதனை அழைப்பர்.

பிரபஞ்ச மூலங்களான பஞ்சபூதங்களின் மார்க்கமாகப் படிப் படியாகப் பரம்பொருளை அண்மித்து வரச் செய்பவை கும்பாபிஷேகக் கிரியைகள். பஞ்சபூதங்களின் வடிவாக மாத்திரமின்றி அட்டமூர்த்திகளின் வடிவாகவும் இறைவன் இருக்கின்றான். ஆகாய வடிவில் எங்கும் பரந்துள்ள ஆண்டவனை உணருதல் மிகவும் சிரமம். எமது புலன்களால் சிறிதுணரும் வகையில் வாயுவாக அவனையறிதல் முதற்படி, வாயுவும் கண்ணால் தரிசிக்க முடியவில்லை. அதற்கடுத்தபடியாக அக்கினியாக ஆண்டவனைக் காண்கின்றோம். அடுத்து நீராக இறைவனை அறிதல். ஐந்தாவது நிலையாக எல்லாவகையிலும் எம்மோடு தொடர்புற்று இருக்கும் மண். இந் நிலையில் இறைவனைக் கண்டு வழிபடுதலே எமக்கு இசைந்த எளிய நிலை. இவ்வகையில் மண்ணோடு தொடர்பு கொண்டிருக்கும் கருங்கல்லும் செம்பு முதலிய உலோகங்களும் இறையருளை ஆகர்ஷித்து எமக்கு வழங்கும் பெரும் சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

இவ்வைந்தும் தழுவியதாகக் கும்பாபிஷேகக் கிரியை அமைவது கண்கூடு. யாகசாலையில் ஆகாயவெளியும் காற்றும் உள்ளன. அங்கு அக்கினி வளர்க்கப்படுகின்றது. கும்பங்களில் நீர் நிறைக்கப்பெற்று அதிலேயே இறையருட்சக்தி ஆவாகனமாகிப் பின், மூர்த்தியில் அபிசேகமாகிறது கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் பிருதுவியம்சம். அது மண்ணோடு தொடர்புபட்டது. இறுதியில் அபிஷேகமாகி ஸ்தாபிக்கப்பெறும் ஸ்தானமும் பிருதுவியுடன் தொடர்பான கருங்கல் விக்கிரகம் அல்லது உலோக விக்கிரகமாகும்.

இத்தகைய பிரதிஷ்டா மகாகும்பாவிஷேகம் அனாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம் என நால்வகைப்படும். என சிவாகமங்கள் வகுத்துரைக்கின்றன. ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து இங்கு புதிதாக ஒரு மூர்த்தியை பிரதிஷ்டை செய்வது அனாவர்த்தப் பிரதிஷ்டை ஆகும். முன்பிருந்த ஆலயம் முற்றாக அழிந்துவிட்டால் அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் ஆவர்த்தனப் பிரதிஷ்டையாகும் நித்திய,

நைமித்திய வழிபாடுகள் நிகழும் கோயிலில் திருத்த வேலைகள் முடிந்த பின் மறுபடி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தனப் பிரதிஷ்டை ஆகும். திருடர் முதலிய ஆசாரக் குறைவுடையோர் நுழைதல், எதிர்பாராத நிகழ்வுகள் போன்ற வற்றினால் நித்திய பூசைகள் தடைப்படின் உடன் நிகழ்த்தப்படுவது அந்தரிதப் பிரதிஷ் டையாகும். இந்த நான்கு வகைகளில் அந்தரிதப்பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்றுவகைப் பிரதிஷ்டைக்கும் சுப முகூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம்.

கும்பாபிஷேகமானது பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு தடவையாக நடைபெற வேண்டும். என்பது விதி. தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். பூரணமான ஒரு கும்பாபிஷேகமானது அறுபத்தி நான்கு வகையான அம்சங்களைக் கொண்டது. எனச் சில ஆகமங்கள் கூற , வேறுஆகமங்கள் அதனைச் சுருக்கி 55 கிரியைகளை உடையது. எனவும் விதிக்கின்றன. இவற்றுள் முகூர்த்த நிர்ணயம், ஆசாரிய வரணம், சல்ய உத்தாரணம் , திரவியபாகம், கர்ப்பநியாசம், கணேசபூசை, அனுஞ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரஷோனஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்த்து சாந்தி, நவக்கிரகமகம், கிராமப்பிரதஷிணம், சயனாரோபணம், அக்கினிகாரியம், நாமகரணம், பிம்மசுத்தி பிம்பப்பிரதஷிணம், கர்ப்பக்கிரகபதவிந்நியாசம், ரக்நநியாசம், இயந்திர ஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், ஷடத்துவநியாசம், ஆசீர்வாதம், ரஷாவிசர்ஜனம், அவபிருதம், ஆசாரியோற்சவம், மண்டல பூசை என்பன முக்கியமான கிரியைகளாகும். சல்ய உத்தாரணம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயனோன்மீலனம், கிராமப்பிரதஷிணம், சயனாரோபணம், அக்கினிகாரியம், நாமகரணம், முதலிய கிரியைகள் புதி மூர்த்தியை பிரதிஷ்டை செய்யும் போது மட்டும் நடைபெறும் ஏனையவற்றிற்று இவையில்லை.

வழிபாடு நடந்துவரும் ஒரு ஆலயத்திலே திருத்த வேலைகள் செய்யப்பட வேண்டிய ஒரு தேவையேற்பட்டால் அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருடகால கட்டம் கடந்துவிட்டால் அங்கு புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறவேண்டும். அதற்காக அங்குள்ள மூல கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாகணம் செய்து பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதிமுறைப்படி அமைக்கப் பெற்ற பாலாலயத்தில் ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாகணம் செய்துவைப்பர். இதுவே பாலஸ்தானம் எனப்படும்.

கும்பாபிஷேக நிகழ்ச்சி ஒழுங்கு முறைகளையும் அவற்றின் அடிப்படையிலான தத்துவக்கருத்துக்களையும் பின்வருமாறு காணலாம். பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தப்போகும் சிவாச்சாரியாரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துமாறு வேண்டுவதே ஆச்சாரியவரணம் எனப்படும். நல்லொழுக்கம், ஆகமசாஸ்திர அறிவு பக்தி, செயல்வண்மை, என்பன ஆசாரியார் ஒருவருக்கு இருத்தல் வேண்டும். பக்தி, செயல்வண்மை என்பன ஆசாரியார் ஒருவருக்கு இருத்தல் வேண்டும். தவவலிமையாலும், நித்திய நைமித்திய பூசை முறையாலும் உருவத்திருமேனியைத் தூய்மையாக நன்கு அலங்கரிப்பதிலும் விக்கிரகம் தெய்வ சாந்நித்தியம் பெறுகின்றது.

இதன்பின் ஆசாரியார் பாலாலயம் சென்று விநாயகரிடமும் மற்றும் தேவர்களிடமும் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய உத்தரவு பெறுதல் அனுஞ்ஞை எனப்படும். விநாயகரிடம் அனுமதி பெறுதல் விநாயகர் அனுஞ்ஞை எனவும், இறைவனிடம் பெறுதல் தேவானுக்ஞை எனவும் கூறப்படும். சிவாச்சாரியார்களிடமும் இவ்வனுஞ்ஞை பெறப்படும் இவர்கள் ஒழுக்கம் சீலம், மந்திரோச்சாடனம் கிரியைப் பயிற்சியுடைய பெரியோராதலில் இவர்களிடம் இவ்வனுஞ்ஞை பெறப் பட வேண்டும். கீதையிலே கண்ணன் உருவத்திருமேனியில் என்னை ஆராதிக்கும் மந்திர உச்சாடன சிவாச்சாரியார் இடத்தும் நான் உறைகின்றேன். "என்கிறார். ஆதலில் சிவாச்சாரிய அனுஞ்ஞை பிரதானம் பெறுகின்றது.

எக்காரியத்தையும் நிறைவேற்ற இடையூறு வராது இருக்க விநாயகப் பெருமான் திருவருள் வேண்டும். ஆதலில் கணபதி ஹோமமும் இயற்கை உற்பாதங்கள் ஏற்படாது மங்களகரமாக நிறைவேற நவக்கிரக ஹோமமும் செய்யப்படும்.

பிரதிஷ்டைக்கு வந்திருக்கும் பொருட்களை சிவாஸ்திரி மந்திர ஜெபம் ஹோமம் முதலியன செய்து , கும்ப நீரால் சுத்தமாக்கி பதினொரு பாகமாக்கி எஜமானிடம் கொடுப்பதே திரவிய சுத்தி ஆகும். நெய் , தேன், பழம் இவற்றில் ஆன்மாவித்தியா சிவதத்துவங்களைப் பூசித்து அவற்றை ஆசாரியார் புசித்தல் என்னும் மதுபாகக் கிரியை செய்கிறார். அதனால் முற்பிறவியில் புத்திபூர்வமாகவோ சிவநிந்தை, சிவசாஸ்திர நிந்தை சிவனடியார் நிந்தைகள், செய்திருந்தால் அக்குற்றங்கள் நீங்கி ஆன்மா சுத்தியடையச் செய்வது ஆன்மசுத்தியாகும், அத்துடன் பத்து வகையான நீராடிப்புறச் சுத்திகளையும் பெறுவதால் உடற்சுகம், பாவநீக்கம் மனஒருமை, திரிகரண சுத்தி ஆகியவற்றையும் பெறுகின்றார்.

நல்ல காரியங்களைச் செய்யப்போகும் போது தீயவர்களால் இடையூறு செய்ய முனையாதிருக்கும் பொருட்டு ரஹோக்னம் ஷோமம் செய்வர். அக்கிராமவாசிகள் நோய், பிணி, அகாலமரணம், வறுமை தீமையற்றவர்களாக வாழவேண்டும் என்ற கிராம நன்மைகளாக கிராமசாந்தி செய்யப்படும். பெருவிழாவிற்கு இடையூறு ஏறபடாது மங்களம் ஏற்படும் படி காவற்தெய்வமாகிய வைரவப்பெருமானுக்கு விசேட பூசை, ஹோமம், பலி என்பன செய்தலே கிராமசாந்தியாகும். நாற்றிசையில் இருந்து வரும் தீயசக்திகள் நீங்கிய பின் ஆலயத்தின் வெளிவீதிகளில் எட்டுத் திசைகளிலும் நின்று அமைதியைக் கொடுக்கும் இயக்கர், அரக்கர், பூதம், பிசாசுகள், பிரமராட்சகர், மகாகாளி, சூளி, வடுகர் ஆகிய எண்மருக்கும் பலிகொடுத்து நீங்கள் இவ்விடத்தை விட்டு நீக்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை , பாலைவனம், மயானம், ஆகிய இடங்களில் சென்று வசியுங்கள் இங்கே இறைவனை எழுந்தருளச் செய்கின்றோம். என்று ஆணையிடுவதாகிய பிரவேசப்பலி கொடுக்கப் படும்.

அதன் பின் பிரம்மா , இந்திரன், அக்கினி, முதலிய அட்டதிக்குப் பாலகர் அவ்விடத்தே வசிக்கக் கூடியதாக பூமியைச் சுத்திகரிக்கும் பொருட்டு வாஸ்துசாந்தி செய்யப்படும். இறைவனின் பெருஞ்சாந்தி விழாவில் தேவர்கள் ஆலயத்தைச் சுற்றிலும் வந்திருந்து கலந்து கொள்ளவே இச்சாந்தி செய்யப்படும். பின் முளைப்பாலிகை இடுதல் ஆகிய அங்குரார்ப்பணம் மிக முக்கியமாகச் செய்யப்படும். இதற்குரிய மண்ணை புண்ணிய பூமிக்குச் சென்று பூமாதேவியைப் பூசித்து வழிபட்டு பிரார்த்தனை முடித்து பூமாதேவியின் வயிற்றில் இருந்து எடுப்பதே" மிருத் சங்கிரகணம்" எனப்படும். இக்கிரியை படைப்புத் தத்துவத்தை குறிக்கும். படைப்புக்குரிய இடம் வயிறாகும். பாலிகைத் தெளித்து நவதானியங்களை அம் மண்ணுக்குள் அவை வளருவதனால் தானிய வளர்ச்சி, படைப்புக்கள், வளர்ச்சியுண்டாகும். அப்போது பயிர் வளர்ச்சிக்குச் காரணமான சந்திரன் பூசிக்கப்படுகின்றான். இதன் பின் நிகழ்வது ரஷாந்தனம் என்னும் காப்பு கட்டும் நிகழ்ச்சியாகும். எடுத்த கருமம் தடையின்றி நிறைவேறுவதற்கும், அக்கருமமின்றி வேறு செயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் காப்புக் கட்டப்படும்.

பின் சிவாச்சாரியார் பாலாலயம் சென்று அங்கிருந்து இறைவனை யாகசாலைக்கு அழைத்துச் செல்வதற்காகப் பிரசன்னாபிஷேகம் செய்யப்படும். இறைவா! எங்கள் அழைப்பை ஏற்று சகலகலா மூர்த்திகளோடும் யாகசாலைக்கு எழுந்தருள வேண்டும். எனப்

பிராத்தனை செய்து கும்பத்தில் இறைவனை ஆவாகித்து கடஸ்தாபனம் , கலாகர்சணம் செய்து வாத்தியங்களுடன் வலமாக யாகசாலை சென்று தானிய பீடத்தில் வைக்கிறார். உருவத்திருமேனியில் அவ்வுருவத்திரு மேனியாகிய கலசத்தில் எழுந்தருளிய இறைவனை ஆறாதாரணங் களையும் கடந்தவன் என்பதன் அருவுருவத்திருமேனியாகிய கலசத்தில் எழுந்தருளிய இறவனை ஆதாரங்களையும் கடந்தவன் என்பதன் கருத்தாக பூர்மாசனம் (நெல்), அநந்தாசம் (அரிசி) சிங்காசனம் (கடலை), யோகாசனம்(பயறு) பத்மாசனம் (உழுந்து) விமலாசனம் (எள்ளு) என்னும் ஆதாரங்களின் மேல் அமர்ந்திருக்கின்றார். நிஷ்களரூபத்திலுள்ளவரைச் சகலமாகப் பூசிக்க வேண்டும் . நிஷ்களத்தில் முறையே சாந்தியதீதலை - சிரசு, சாநதிகலை - முகம், வித்தியாகலை - மார்பு பிரதிஷ்டாகலை- குஹ்யம், நிவிர்த்திகலை - முழங்காற்பாதம், புவனாத்துவா- தசை, தத்துவாத்துவா - என்பு இந்திரியங்களாகப் பாவிக்கப்படும்.

பாலயத்திலுள்ள உருவத்திருமேனியை எடுத்துச் சுத்தம் செய்து அலங்கரித்து வீதி கிராமம் பிரதட்சணம் செய்து வந்து யாகசாலையில் சயனாரோகணத்தில் விடுவர். புதிதாக ஸ்தாபிக்கப்படுவதாயின சிற்பியைக் கொண்டு கண்திறத்தல் ஆகிய நயேனோன்மீலனம் எனும் கிரியை செய்விக்கப்படும். சிற்பி குருவின் கையிலிருந்து ஆயுதத்தைப் பெற்று உருவத்திருமேனியைச் சுற்றி திரையிட்டு முறையே நெற்றிக்கண் ,சூரிய சந்திர நேத்திரங்கள் வாய், மூக்கு, காது, கொப்பூழ், நகக்கண், ஆகியவற்றை இறை சிந்தனையோடு திறக்கிறார். திரைநீக்கம், செய்யும் போது அவ்வுருவத்திருமேனிக்கு முன் பால், நெய், ஆமன், கண்ணாடி, நெல், யானை, குரு, கன்னிப் பெண், தீபம், பசு எஜமான், பாஞ்சாராத்திரிகம் என்பவற்றை தரிசிக்கச் செய்கிறார். அதனால் பசுச் செல்வம்,,தானிய வளர்ச்சி, இன்பவாழ்வு, வீரியம், மனோபலம், வேதாகமநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், பஞ்சகிருத்தியம், யாவும் நாட்டில் சிறப்பாக நிலவும் என்பதாகும்.

பின் பிம்பத்தைச் ஜலத்தில் மார்பளவுக்கும் சக்தி வடிவமாயின் காதளவிற்கும் வைத்து விஷேட பூஜை , அபிஷேகம் ஆகியன செய்வதை ஜலாதிவாசம் என்பர். ஒரு முகூர்த்தம் வரை விட்டு பின் எடுத்து சுத்தமான தானியத்தைப் புண்ணிய நீரால் தெளித்து முன் கூறியளவு உருவத்திருமேனியை வைத்து எட்டு வித மலரால் அதனை அர்ச்சித்து அதேயளவு காலம் விட்டு எடுத்து பிம்ம சுத்தி செய்து வீதி, கிராமபிரதட்சணம், செய்யப்படும். வலம் வந்த பெருமானுக்கு கண்ணுறு நீங்க ஆலர்த்தி செய்யப்படும். சயனாரோகணம் இவ்வைந்தும் முறையே ஒளி, உணவு, நீர், காற்று , வெளியாக இருக்கும் இறைவன் உயிர்களைக்

காக்கின்றான். என்பதற்காக செய்யப்படும். அருவமாக பஞ்ச பூதங்களில் வியாபித்திருக்கும் இறைவனை உருவத்திருமேனியில் வந்து சேரும் படி செய்யப்படும்.

சுபவேளையில் தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், முறையே செய்யப்படும். எட்டுவகை சரக்குகளைச் சேர்த்து இடித்துக் குழைவாக்கி அதனால் பீடித்திருக்கும் பிம்பத்திற்கும் இணைப்பை உண்டாக்குவதே அஷ்ட பந்தனம் என்ற மருந்துக் கலவையின் காரணமாக ஏற்பட்ட வெப்பத்தைப் போக்கும் முகமாக இறைவனுக்கு எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

இதன் பின் மூர்த்தியின் திருவுருவத்தில் உள்ள தோஷங்களை நீக்குவதற்காக பிம்பசுத்தி செய்யப்படும் அதன் பின் விஷேட திரவிய ஷோமம் செய்யப்படும். யாகசாலையில் பிரவேசிக்கும் சிவாச்சாரியார் முதலில் விக்னேஸ்வர பூஜை புண்ணியாக வாசனம், என்பற்றைச் செய்த பின் சூரிய பூஜை பரிவார கும்ப பூஜை அஷ்டமங்களப் பூஜை யாகேஸ்வரன், யாகேஸ்வரி பூஜை என்பவற்றையும் செய்வர். இதன் பின் பிரதான வேதிகையில் உள்ள ஸ்நபன கும்பங்களில் பலவித நியாசங்கள் மூலமாக மந்திர சக்திகளைக் கும்பத்தில் பதித்துப் பூஜிப்பர். அதன் பின அக்கினி காரியம் செய்து பூர்ணாகுதி வழங்கப்படும்.

இதன் பின் குறிப்பிட்ட சுப நேரத்தில் பிரதான கும்பத்தை மங்களவாத்தியங்கள் முழங்க ராஜஉபகாரங்களுடன் வீதி வலமாக எழுந்தருளவிருக்கும் கும்ப உத்தாபனம் என்னும் கிரியை நடைபெறும். கும்பம் சுற்றி வரும் போது அத்தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஆலயங் களின் விமானத்தில் உள்ள ஸ்தூபிக்கு கும்பாபிஷேகம் நிகழும். கும்பம் கோயிலை அடைந்தவுடன் பிம்பத்திலே கும்பத்தை எழுந்தருளச் செய்கின்ற ஆவாஹனக் கிரியை நடைபெறும். இப்பிரபஞ்சத்திலே சூரிய, சந்திரர்கள், உள்ள காலம் வரையும் குறித்த திருவுருவத்திலே தெய்வீக சாந்தித்தியம் கொண்டு அருள்புரியும் வண்ணம் மந்திர பூர்வமாக வேண்டுவது இந்த ஆவாஹனக் கிரியையின் முக்கிய நோக்கமாகும். இதன்பின் ஏற்கனவே குறித்த முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நிகழ்ந்து தெய்வீகத்திருவுருவம் தெய்வீக சாந்நித்தியம் பெற்று விளங்கும் கும்பாபி ஷேகம் முறையே விநாயகரில் இருந்து தொடங்கி பின்னர் கருவறை அதனைத் தொடர்ந்து ஏனைய பரிவார மூர்த்தங்கள் என இடம்பெறும். மூலமூர்த்திக்கு மஹாஹவிர் நிவேதனம் என்னும் விஷேட நைவேத்தியம் நிவேதித்த பின்னர் கதவைச்சாத்தி விடுவர். தெய்வ சாந்நித்தியம் திருவுருவத்திலே வந்து படிவதற்கு கால அவகாசமாக இது அமையும்.

இதன் பின் பண்ணிசை கதவினைத்திறந்து மங்களதரிசனப் பொருட்களான நிறைகுடம், தீபம் கண்ணாடி, சுவஸ்திகம, சங்கு, இரட்டைச்சாமரை, இடபம் முதலியவற்றையும் சிவாச்சாரியார், சுமங்கலி, கன்னிப்பெண், ஆகியவர்களையும் தரிசிக்கச் செய்வர். கும்பாபிஷேகத்தின பலனைப் பெற நிகழ்வதே தசதரிசனம் என்ற மங்கல தரிசனமாகும்.

கும்பாபிஷேக வைபவத்திலே நிகழ்ந்த பல்வேறு குறைகளை நிறைவு செய்யும் வகையில் நடைபெறுவது மண்டலாபிஷேகமாகும். நாற்பத்தைந்து நாட்கள் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் நடை பெறும். பொருள் வசதிக் குறைவாலோ வேறு காரணங்களாலோ இருபது நாள் இல்லது பத்து நாள் தொடர் அபிஷேகம் நடைபெறலாம். நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். பூசைக்குரிய உபகரணங்களுள் சங்க மிகத் தூய்மையானது. இதில் பிரான கும்பத்தில் வலம்புரிச்சங்கும் ஏனையவற்றிற்கு இடம்புரிச் சங்கும் உபயோகிக்கப் படும்.

இவ்வாறு ஒரு திருக்கோயில் புதிதாக எழுச்சி பெறுகின்ற போது தொடக்கத்திலிருந்து இறுதிவரை இடம் பெறுகின்ற பல்வேறு செயற்பாடுகள் சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று அம்சங்களின் வெளிப்பாடாக விளங்குகின்றமை கவனிக்கத்தக்கதாகும். ஆலயக்கிரியை களில் ஒன்றான நைமித்தியக் கிரியைகளில் சிறந்து விளங்கும் கும்பாபிஷேகம் என்னும் பிரதிஷ்டைக் கிரியை இயற்கை சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல். அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம், அருச்சின ,தோத்திரம் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய ஒரு கிரியையாக விளங்குவதை நாம் உணரலாம். எனவே நித்திய நைமித்திய கிரியைகள் சிறப்பாக கும்பாபிஷேகக் கிரியை நீண்ட காலமாகப் பேணப்பட்டு வருகின்ற சமயமரபுகளை காலத்திற்குக் காலம் நினைவு கூறத்தக்க வகையிலே ஆலயங்களிலே இடம் பெற்று வருகின்றன.

உசாத்துணை :

வருஷப்புலம் மகாமாரி அம்மன் வேதஸ்தான பிரதமகுரு கணேசசபாபதி குருக்களின் அவ்வப்போதய கும்பாவிஷேக விளக்க உரையில் இருந்து.

திரு. இரைாசையா கருணாகரன்

❋ ❋ ❋

ஆடி மாதப் பெருமை

ஆடி மாதம் மங்கலகரமான காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாதம். கல்யாணம் செய்து மாப்பிள்ளை வீட்டிலிருந்த பெண்ணைப் பெண் வீட்டார் ஆடி மாதம் முழுவதும் தம் வீட்டிற்கு அழைத்து வைத்திருந்து ஆவ்ணியில் திருப்பி அனுப்பி வைக்கும் வழக்கம் ஆகையால் இந்த மாதத்தை இறைவழிபாட்டிற்கு உகந்த மாதமாக காலம் காலமாகப் பின்பற்றி வருகின்றனர்.

ஆடி மாதத்திலிருந்துதான் விரதங்கள், பண்டிகைள், உற்சவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக ஆரம்பிக்கின்றன. குறிப்பாக இவ் மாதம் அம்மன் வழிபாட்டிற்கு மிகவும் உகந்த மாதமாகும். இம் மாதத்தில் வரும் ஆடிப்பிறப்பு ஆடி அமாவாசை , ஆடி பௌர்ணமி, ஆடிக்கிருத்திகை, ஆடிப்பூரம் என விஷேசமான விரதங்கள் தொடர்ந்து செல்கின்றன.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இயற்றப்பட்ட

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி ,கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.....

என தொடரும் இப் பாடல் வரிகள் ஆடி மாதத்தின் முதல் நாள் எப்படி மகிழ்ச்சிகரமாக குழந்தைகளின் குதூகலமான நாளாகக் கொண்டாடப்படுகின்றது என்பதை விளக்குகிறது.

ஆடி மாதத்தில் வரும் அமாவாசை ஆடி அமாவாசை எனக் சிறப்பிக்கப்படுகிறது. ஆடி அமாவாசை இந்து சமயத்தவர்களுக்கு மிகவும் புனிதமானதும் சிறப்பானதுமான தினமாகும். இத்தினத்தில் தந்தையை இழந்தவர்கள் விரதத்தை அனுஷ்டித்து புண்ணிய திருத்தலம் சென்று நீராடி இறந்தவர்களை நினைத்து அவர்களின் பாவத்தைப் போக்கி முத்தி கிடைக்க இறைவனை வழிபாடு செய்யும் வழக்கம் இந்து சமயத்தினரிடம் தொன்று தொட்டு காணப்பட்டு வருகின்றது.

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் மிகவும் விஷேசமானது. "ஆடிச் செவ்வாய் தேடிக்குளி" என்பது பழமொழி. அதாவது விரதம் அனுஷ்டித்து

எண்ணெய் தேய்த்துக் குளித்து அம்மனை மெய்யன்போடு வழிபட பெண்களின் மாங்கல்ய பலன் கூடும் என்பதாகும்.

இந்தியாவில் இந்துக்கள் ஆடித்திங்களில் முதன் முதலில் ஆறுகளில் நீர் பெருகி வருவதை களிப்புடன் வரவேற்று விழாவாகக் கொண்டாடுவர். ஆடி பதினெட்டாம் நாளில் கொண்டாடப்படுவதனால் அதனை ஆடி பதினெட்டு அல்லது பதினெட்டாம் பெருக்கு என்று கூறுவர். இதனையே பழந்தமிழ் இலக்கியங்கள் "புனலாடல்" என்று கூறிச் சிறப்பித்தன.

சுவாதி என்பது நட்சத்திரங்கள் இருபத்தேளுள் சிறப்பானது சுவாதி நாளில் பெய்யும் மழைத்துளி கடலில் சிற்பியின் வாயில் விழுந்தால் அது முத்தாக மாறும் என்பது முன்னோர் நம்பிக்கை. இத்தகைய சிறப்பான சுவாதி நட்சத்திரத்தில் தான் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயம் சென்றடைந்தனர் என்பது வரலாறு.

இன்றைய விஞ்ஞானம் சுவாதி நட்சத்திரம் சூரியனைப் போல் பதினெட்டாயிரம் மடங்கு பரிமாணம் உடையது. என்றும் செம்மஞ்சள் நிறம் உடையது என்றும், கூறுகிறது. ஆடிக் கிருத்திகை என்பதும் சிறப்பம்சம் பொருந்திய நாளாகும். முருகன் சரவணப் பொய்கையில் தோன்றிய வரலாற்றோடு தொடர்புடையது இந் நட்சத்திரம் கார்த்திகை நட்சத்திரத்திற்கு வழங்கும் மறுபெயரே கிருத்திகை.

இன்றைய விஞ்ஞானம் வேட்டைக்காரன் (ORION) மண்டலத்திற்கு சற்று வடமேற்கிலமைந்து ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களில் சாதாரணமாகப் பார்க்கும்போது தெரியும் ஆறு நட்சத்திரங்களில் கிருத்திகையும் ஒன்று என்றும், இக்கிருத்திகை கூட்டத்தில் பல விண்மீன் கூட்டங்கள் (NEBULA) சூழந்து காணப்டுகின்றன என்றும் கூறுகிறது.

சிவபெருமானுக்கு திருவாதிரை போலவும், திருமாலுக்கு திருவோணம் போலவும் அம்பிகைக்கு இம் மாதத்தில் வரும் ஆடிப் பூரம் சிறப்பான ஒரு நாளாகும். அம்பிகை திரு அவதாரம் செய்த நாளும் இந் நன் நாளே.

பூரம் என்பது ஒவ்வொரு மாதத்திலும் வருவதாயினும் ஆடிப்பூரம் சிறப்பான ஒன்றாகும். ஆண்டாள் நாச்சியாரும் தோன்றியது இந்நாளில் தான். "ஆடிப்பட்டம் தேடிவிதை" எனும் உழவர் பழமொழி இன்னும் வழக்கில் உள்ளது.

ஆடி மாதத்தில் வரும் திருத்தொண்டர் திருநாள்கள்.

1. கார்த்திகை - மூர்த்தி நாயனார், புகழ்ச்சோழ நாயனார்
2. திருவாதிரை - கூற்றுவநாயனார்
3. சித்திரை - பெருமிளலைக்குறும்ப நாயனார்
4. சுவாதி - சுந்தரமூர்த்தி நாயனார்
5. கேட்டை - கலிய நாயனார், கோட்புளி நாயனார்.

"வாடி வருந்தும் மனம் தண்மையாக மழை பொழிவாய்
கோடி மாத்தாண்ட சமசோதி வீசும் குளிர் நிலாவே
பாடி வந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடிவருவாய் சிவன் கொஞ்சும் அஞ்சுகமே"

என்று அகத்தியர் பாடிய பாடல் மூலம் அம் மாதத்தின் பெருமை புரியும்.

கு. சுதாகரன்
அபிவிருத்தி அலுவலகர்,
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்
இரத்தினபுரி

❋ ❋ ❋

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே.

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தண்கட லாமே.

அம்மையே ...!

பக்தியின் மொழி தமிழ். செம்மொழி அந்தஸ்து கிடைப்பதற்குத் தமிழ் மொழியின் கண் உள்ள அற்புதமான பக்தியிலக்கியங்களே முதன்மைக் காரணம் அவற்றுள்ளும் சைவ, வைணவ பக்தியிலக்கியங்களின் வகிபாகம் மிகமிக அதிகமானது. இதில் சைவ பத்தி இலக்கியங்களுள் இதன் முதன்மையது பன்னிரு திருமுறைகள். இப் பன்னிரு திருமுறைகளில் அம்பாளின் அருட்பெருங்கருணை பல் விடங்களில் பாடப்பட்டிருப்பது காணக்கிடைக்கிறது.

அன்னையே விழித்துப் பாடியிருக்கக் கூடிய பாடல்களில் என்ன தனித்துவம் அல்லது என்ன தனிச்சிறப்பு என எண்ணலாம். முருகக் கடவுள் சைவர்கள் அத்தனை பேரினதும் மனம் நிறைந்த தெய்வம், ஆனால் "முருகா" என்றழைக்கிறோமேயன்றி "மகனே" என்றோ வேறு அதிகம் பரீட்சயமான நாமத்தாலோ அழைப்பதில்லை. அதுபோல சிவநேயச் செல்வர்கள் ஏராளம் ஏராளம்! ஆனால் "சிவனே" என்று தான் விழிக்கின்றோம். ஏன் மஹா விஷ்ணுவைக் கூட "பெருமாளே" என்றோ "நாராயணா" என்றோ தான் அழைக்கிறோம். ஆனால் அன்னையை வழிபடும் போது "அம்மா" அம்மா என்று மனமார வாயார நெஞ்சுருகி அகம் குழைந்து அழைக்கின்றோம். அவ்வாறு அழைக்கும் போது நம்முள்ளத்தில் உணர்வில் ஏற்படும் அனுபவமே தனி. அதற்கு நிகர் வேறொன்றுமில்லை!

இத்துணை அருளுணர்வு மிக்க பிரார்த்தனைத் தெய்வமாகிய உமையை திருமுறைகளில் பல விடங்களில் பலவாறு விழித்துள்ளனர். திருமுறையாசிரியர்கள் முழுவதனையும் கிரமமாக ஆய்வாக நோக்குவது அற்புதமானது. ஆனால் விரிவஞ்சி அதனை விடுத்து முக்கியமான ஒரு சில இடங்களை இங்கு தொட்டு அனுபவிப்பதே இவ்வெழுத்துக்களில் நோக்கம்.

மனிதப் பிறவி பெற்ற எங்களிடம் இருக்கும்ஒவ்வோர் அங்கமும் இறை வழிபாட்டிற்கே என்பது அப்பர் திருவாக்கு திருவரங்கமாலையில் அழகுற இதனைப் பதிவு செய்துள்ளார். கண்களின் பயன் அவன் திருவழகைக் காணுதலேயன்றி வேறு யாதாக இருக்க முடியும். அவ்வாறு இறைவன் திருவடியைக் காணும் தோறும் தெவிட்டாத இன்ப உணர்வினால் எம்மை

மறந்து மெய்மறந்து கண் வெட்டாமல் நிற்பதில்லையா, இது ஒருவகை அசையாநிலை, ஆடவல்லானிடம் கூட ஓர் அசையா நிலையைக் காட்டுகிறார். ஞானசம்பந்தர். மைம்மரு பூங்குழல் .....'என ஆரம்பிக்கும் பாடலில் மூன்றாவது அடியில் "எம்மிறையே இமையாதமுக்கண் ஈச என்நேச இதென் கொல் சொல்லாய்" என்கிறார். திருவீழி மிழலைத் திருப்பதிகத்தில் வரும் இறைவன் பெருமான். ஆன்மாக்கள் மேற் கொண்ட அளப்பருங் கருணையால் இமையாமற் பார்த்த வண்ணமிருப்பதை அருமையாக அனுபவிக்கிறார் சம்பந்தர். அதேபோல அம்பாளின் அழகிய தினங்களைப்பற்றியும் ஓர் குறிப்பைப் பதிவு செய்கிறார்.

முதலாவது பதிகம்

தொண்ணுற்றேழாம் பாடலாகிய திருவண்ணாமலைத்திருத்தலம் குறித்த பாடலில் "உண்ணாமுலை உமையாள்' என்கிறார். சாதாரணமாக சாமான்ய மனித உலகில் முலைப்பால் உண்டு. மகிழ்தலும் வளர்தலுமே பெரு வழக்கு! ஆனால் முருகப் பெருமானுக்குக் கூடக் கார்த்திகைப் பெண்களே பாலூட்டினர். இதனை வேற்றுப் பேர் முலை உண்டு அமுதே விளையாம் நற்றைப் பாலன் என சூரபன்மனும் உணர்கின்றான். இதனை இனிய பக்தியுணர்வுடன் உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்" என்று அம்மையின் திருத்தலங்களின் சிறப்பைக் குறித்துக் கொண்டு அண்ணாமலையான் சிறப்பைச் சொல்கிறார். சம்பந்தர்!

சம்பந்தர் சிவசிந்தையாளர் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானியாக வாழ்ந்தார். இருந்தும் சிவனைப் போற்றுங்கால் அம்பிகையைக் குறித்துக் கொண்டே அம்மனைப் பாடியுள்ளமை எண்ணி நெகிழ்தற்குரியது! மேலும் திருவேணுபுரப் பதிகத்தில் " வண்டார் குழல் அரிவையொடு பிரியாவகையாகம்" என்கிறார். அம்பிகையை அருகிருத்தியமையாலேயே ஆண்டவனின் அருமை ஒருபடி அதிகமாகத் தெரிகிறது. அப்பர் சுவாமிகளும் நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' என்று முருகனைக் குறித்து, அம்முருகக் கடவுளரும் கடம்பனைப் பெற்றவள் என்று தாயைக் குறித்து அந்தத் தாயைப் பாகமாகக் கொண்ட பெருமான் என்கிறார். இவ்வண்ணம் சிவனைப் பாடுங்காலும் சக்தியாகிய அம்மையை அனுபவித்த இடங்கள் ஏராளம்! சிவனுக்குப் பாடிய புராணம் ஆகிய சிவபுராணத்தில் கூடி "நமச்சிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க" என்று பஞ்சாட்சரத்தையும் அது குறிக்கும் நாதனையும் குறித்த மணிவாசகப் பெருந்தகை கூட அனுபவமிகுதியால் "அம்மையே அப்பா" என்றல்லவா அகம் குழைகிறார். "தாயிற் சிறந்த" முதலாக

எத்தனையிடத்து தாயைக் குறிக்கின்றார். போற்றித்திருவகவில் எண்பத்தேழாம் அடியில் " தாயேயாகி வளர்ந்தனை போற்றி" என்கிறார். இறைவனை நண்பனாக , தந்தையாக குழந்தையாக வெல்லாம் தொழுது வழிபட்ட வரலாற்றில் தாயாக வழிபட்ட பக்குவம் ஒப்பற்றது. தனித்துவமானது என்பது வெள்ளிடைமலை.

நிறைவாக, காரைக்காலம்மையார் தனிமையில் நடந்து கைலயங் கிரியை அடைகிறார். சிவனருகேயிருந்த உமையம்மை "இவர் யார்" என்று வினவ' வருகிறவர் நம்மைப் பேணும் அம்மை காண்" என்கிறார். பெரியான்! என்ன ஆச்சரியம் சக்தி பின்னமிலானாகிய சிவபிரானே சக்தி கேட்ட வினாவிற்கு "நம்மைப் பேணும் அம்மையே" என்றாரே! சிவபிரான் கூட இந்த அம்மை எனும் உறவு அல்லது தகமைக்கு எத்துணை உணர்வு கொடுத்துள்ளார். காட்சி தொடர்கிறது.... அங்ஙனம் தலையால் நடந்து வந்த காரைக்காலம்மையார் சிவனருகே வந்தணைய ... அன்பு மீதூர அப்பெருமானும் "அம்மையே என்னும் செம்மை ஒரு மொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார்" என்று தெய்வச் சேக்கிழார் இதனைப் பதிவு செய்கிறார். சிவபிரான் பக்கத்தில் உமையாகிய தாய் இருக்க , அருளின் வடிவாக அன்பின் வடிவாக வந்த அம்மையாரை "அம்மையே" என்று அழைக்கிறாரே.....! நெக்கு நெக்குருகி நெஞ்சமே குறைகிறது! காட்சியின் நிறைவு.

" அங்கணன் " அம்மையே" என்றருள் செய்ய "அப்பா என்று
பங்கயச் செம்பொற்பாதம் பணிந்து வீழ்ந்து எழுந்தார். என்று நடத்துகிறார் சேக்கிழார் சுவாமிகள். எம் மொழியிலும் எவ் உணர்விலும் மேம்பட்ட தனியொரு அனுபவம் தரும் அற்புதம் அழகு, ஆனந்தம் சுற்றி நல்கும் கோலம் அம்பிகைத் திருக்கோலம் அழகொழுக எழுதிப் பார்க்கும் உயிர் ஓவியம் எது! அதனை அம்மா தாயே, அம்மையே என்று உணர்வு என்று அழைக்கும் போது உருவாகும் ஆனந்தம் சொற்களுக்குள் எட்டாது. அற்புதத்தின் அதி உச்சம் எனவே அம்பிகை வழிபாட்டில் அயராது திளைக்கும் அடியார்கள் உள்ளத்தில் ஊறிநிற்கும் உணர்விற் காலந்து வாய்மையும் தூய்மையும் மிக்க வழிபாட்டில் ஈடுபட இந்த அனுபவத் தையும் மனங்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

திரு. கு. பாலசண்முகன் M.A

❋ ❋ ❋

கேட்ட வரமெலாம் தந்தருளும் ஸ்ரீ சந்தோஷி மாதா

பிள்ளையாரைக் குழந்தைத் தெய்வமாகவும் பாவித்து வணங்குவது நம் வழக்கம். வீட்டில் எந்தப் பண்டம் செய்தாலும் முதலில் வீட்டுக் குழந்தைகளுக்குப் கொடுப்பது போல, எல்லாம் முதலில் பிள்ளை யாருக்குத்தான். வெல்லக் கொழுக்கட்டை கொடுத்து மகிழ்வித்தும், மகாவிஷ்ணு தன் சக்கரத்தைப் பிள்ளையாரிடமிருந்து மீட்க தோப்புக் கரணம் போட்டு சிரிக்க வைத்த வழியில், தோப்புக் கரணம் இட்டு மகிழ் வித்தும் நாம் ஆசிபெறுவது வழக்கம். இப்படிக் குழந்தைத் தெய்வமாகத் தெருவுக்குத் தெரு எளிமையாக அரசமரநிழலிலும் ஆலமரநிழலிலும் எளிமையாகக் கோயில் கொண்டிருக்கும் பிள்ளையாரை நித்திய பிரம்மச்சாரி என்று நாம் கருதிவருகின்றோம். அபூர்வமாகச் சிவன் கோயில்களில் சித்தி புத்தியுடன் கூடிய வினாயகரைப் பார்க்கலாம். வினாயகர் திருமணம் ஆனவர் என்றும் அவருக்கு இரு மகன்களும் ஒரு மகளும் உண்டு என்றும் துணைப்புராணங்கள் கூறுகின்றன. அந்த மகள் தான் சந்தோஷிமாதா வினாயகப் பெருமானின் மகளாக அவதரித்து உலகத்து உயிர்களைக் காத்துப் பரிபாலிக்கும் ஸ்ரீ சந்தோஷிமாதாவின் வரலாறு மிக பக்திபூர்வமானது.

ஆவணி மாதம், நிறைவான பௌர்ணமித்தினம், நிலவுலகில் கோலாகலமான "இரட்சாபந்தன்" விழா இல்லம் தோறும் பாசம் பொங்கும் சந்தோஷப் பெருவிழா. பூவுலகின் பெண்கள் எல்லோரும் தங்கள் சகோதரர்களின் நல்வாழ்வை வேண்டி இறைவனைப் பிரார்த்தனை செய்து தங்கள் சகோதரர்களின் கைகளில் அன்போடு இரட்சை (காப்பு) கட்டும் ஆனந்தத்திருநேரம்.... ஆனால் அந்நேரத்தில் இரண்டு பிள்ளைக் குழந்தைகள் முகத்தில் வாட்டம். அவர்கள் பிள்ளையாரின் இருபுதல் வர்கள்! அவர்கள் முகவாட்டத்திற்குக் காரணம்? தங்களுக்கு இரட்சை கட்டி, பாசத்தால் தங்கள் இதயத்தைக் கட்டிப்போட ஒரு அன்புச் சகோதரி இல்லையே என்ற ஏக்கம் தான் அவர்கள் முகவாட்டத் திற்குக் காரணம்.

விநாயகப் பெருமானின் புதல்வர்கள் இருவரும் நாரதரிடம் தங்கள் மனக்குறையைக் கூறி, தங்களுக்கும் ஒரு அன்புச்சகோதரி வேண்டும் என்ற கோரிக்கையை தங்கள் பெற்றோர்கள் முன்வைத்து,

தங்கள் விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கொண்டனர். குழந்தைகளின் மனவாட்டத்தைப் பொறுக்க முடியாத நாரதர் விநாயகப் பெருமானிடம் ஒரு பெண் குழந்தையை உருவாக்கித் தருமாறு வேண்டி நின்றார்.

விநாயகப்பெருமான், தன் இரு மனைவியராகிய சித்தி,புத்தி மூலமாக, இலட்சுமி, சரஸ்வதி, பார்வதி ஆகிய மூன்று தேவியர்களின் பூரண அம்சங்களும் நிரம்பிய ஓர் அழகிய பெண் குழந்தையை வழங்கினார்.

வெள்ளிக் கிழமையன்று மங்கலமாகத் தோன்றிய அப் பெண் குழந்தையின் பிறப்பு விநாயகரின் புதல்வர்கள் மனதில் இன்பம் பொங்க வைத்தது. அப்பெண் குழந்தை தம் சகோதர்கள் இருவருக்கும் இரட்சை கட்டி அவர்கள் விருப்பத்தை இனிதே நிறைவேற்றியது. சகோதரர்கள் இருவருக்கும் அளவிலாமகிழ்ச்சி, இல்லத்தில் சந்தோஷம் பொங்கச் செய்த அப் பெண் குழந்தை சந்தோஷமாதா என்ற திருப்பெயர் பெற்று விளங்கியது.

மும் மூர்த்திகளும், முத்தேவியரும் தோன்றி அப்பெண் குழந்தையை வாழ்த்தினர். "உன்னை வழிபடுகின்றவர்கள் கல்வி, செல்வம், வீரம் எல்லாம் ஒருங்கேசேரப்பெற்று வாழ்வில் நிம்மதியும் சுகபோகமும் பெற்று சிறப்பாக வாழ்வார்கள்" என்று ஆசீர்வதித்தனர்.

"வெள்ளிக் கிழமை தோறும் மனம் ஒன்றி, பக்தியுடன் சந்தோஷிமாதாவை வணங்கி வழிபட்டு விரதம் நிறைவேற்றுபவர்கள் எல்லாவித சிறப்புக்களும் பெற்று, மனதில் சந்தோஷம் நிரம்ப பேரின்பப் பேற்றினை அடைவார்கள்" என நாரத முனிவர் உரைத்தருளினார்.

சந்தோஷிமாதாவின் விரதம் மிக எளிமையான ஒரு விரதம். சந்தோஷி பூஜையை மேற்கொண்டு விரதமிருக்கும்போது துன்ப துயரங்கள் விலகி கல்வி, செல்வம், வீரம் ஆகியவை நம்மை சுலபத்தில் வந்து சேருகின்றன. எண்ணியவை ஈடேறுகின்றன. மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் பொங்குகின்றது.

வெள்ளிக்கிழமை விரதமிருந்து சந்தோஷி மாதாவை வணங்கிப் பயனடைந்தவர்கள், பயனடைந்து கொண்டிருப்பவர்கள் கோடானு கோடி பக்தர்கள். குறிப்பாக சுனீதி என்ற பக்தையின் வரலாறு அன்னையின் கருணை எல்லையற்றது என்பதை உணர்வதாக அமைந்துள்ளது.

ஆனந்த நகர் என்ற சிற்றூரில் வாழ்ந்த கோபால்நாத் என்ற பாடகரின் மகள் சுனீதி. குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்துவிட்ட அவளைக் கண்ணும் கருத்துமாக அவள் தந்தை பேணி வளர்த்து வந்தார். சுனீதியும் தாயில்லாத பெண்ணாக வளர்ந்தபோதிலும் நற்குணங்கள் நிரம்பியவளாய், நற்குணங்களும் தெய்வபக்தியும் கொண்டவளாய்த் திகழ்ந்தாள்.

கோபால் நாத்துக்குத் தன் மகளின் எதிர்காலம் நல்ல விதமாக அமையவேண்டுமே; இங்கு செல்வமாக வளர்ந்த குழந்தை மணமானபின் புகுந்தவீட்டில் சிரமப்படாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை.

அவளுக்கு நல்ல கணவன் கிடைத்து, இல்வாழ்வு நல்வாழ்வாக அமையவேண்டும் என்ற நோக்கில் கோபால்நாத் தன் மகள் சுனீதிக்கு ஒரு வெள்ளிக்கிழமையில் சந்தோஷிமாதாவின் படம் ஒன்றை வாங்கி வந்து அளித்து பூஜை, விரத முறைகளை விளக்கி சந்தோஷிமாதாவின் மகிமை பெருமைகளை அவளுக்கு எடுத்துக் கூறினார். சுனீதி பக்தி சிரத்தையுடன் மனமொன்றிய நிலையில் விரதபூஜைகள் செய்து வரலானார்.

ஆனந்தநகரை அடுத்த சனத்தகுடி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் போலாநாத் சிறந்த பக்திமான். ஒரு பெரிய குடும்பத்தில் கடைசி மகனாய்ப் பிறந்தவர். அவருக்கு ஆறு சகோதரர்கள். போலநாத் ஆலயங்களில் கதாகாலட்ஷேபங்கள் பஜனைகள் நடாத்தி அதிக அளவில் பணம் சம்பாதிக்காமல் இருந்தபடியால் வீட்டில் உள்ளவர்கள் அவரை மதிப்பதில்லை. பெற்ற தாயே அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டார். போலநாத் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தெய்வ சிந்தனையாகவே வாழ்ந்துவந்தான்.

ஒரு வெள்ளிக் கிழமை போபால்நாத்தை கோபால்நாத்தின் வீட்டிற்கு அழைத்து வந்து இராமாயணம் பற்றிய விளக்கங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். சந்தோஷி பூஜையை முடித்துக் கொண்டு தந்தைக்குப் பிரசாதம் கொடுக்க வந்த சுனீதி போபால்நாத்தைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அறிவும், பக்தியும், அழகும் நிரம்பிய அவனை மணம் செய்ய விழைந்த சுனீதி தந்தையிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த கோபால்நாத், போபால்நாத்தின் இல்லம் சென்று வீட்டாருடன் பேசி முடிவெடுத்துத் திருமணத்தை நடாத்தி வைத்தனர். நற்குணமான கவன் கிடைக்கப் பெற்றமையால் மகிழ்வுடன் வாழ்ந்த சுனீதிக்குப் புகுந்த வீட்டில் நிம்மதி

கிடைக்கவில்லை. போபால் நாத்தின் தாயும், அண்ணிமாரும் அவளைத்துன்புறுத்தினர். ஆனால் சுனீதி கணவனின் அன்பில் பண்பில் நிறைவு கண்டும் அம்பிகையை வழிபட்டும் தமது வாழ்வை இனிமையாக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் தமது கணவனையும் அவர்கள் அவமதிப்பதை எண்ணி மிக மனம் வருந்தினாள்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதைப் புரிந்து கொண்ட போலாநாத் வருத்தமுடன் அழுது கொண்டிருந்த சுனீதியைச் சமாதானப்படுத்தி பொருளீட்டும் பொருட்டு வெளியூர் சென்றான். சுனீதியைத் தான் திரும்பி வந்து பின் அழைத்துச் செல்வதாகக் கூறி, பிறந்த வீட்டில் இருக்குமாறு கூறினான். சுனீதி மணமான பெண் புகுந்தவீட்டில் இருப்பது தான் பெருமை என்று மாமியார் வீட்டில் தங்கிவிட்டாள். கொடுமைகள் தொடர்ந்தன.

போலாநாத் மாதவன்பூரை அடைந்து அங்குள்ள வட்டிக் கடைக்காரரின் கடையில் வேலைக்கமர்ந்தான். இவனுடைய கடினமான உழைப்பையும் நேர்மையையும் கண்ட கடைக்காரர் அவனைச் சம பங்குதாரனாக்கிக் கொண்டு கடைப்பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து விட்டு தீர்த்தயாத்திரை புறப்பட்டான்.

சொல்லொணாக் கொடுமையும் கஷ்டங்களும் அடைந்த சுனீதி வீட்டாருக்கு அஞ்சி, தான் சதாசர்வ காலமும் உழலும் மாட்டுக் கொட்டிலில் ஒரு மூலையைத் தூய்மைப்படுத்தி, சந்தோஷிமாதா படத்தை வைத்து வறுத்த கடலையும் வெல்லமும் படைத்து புஜை செய்தாள். தன் கணவன் நல்ல படியாகத் திரும்ப வேண்டுமென்று மன முருகிப் பிரார்த்தனை செய்தாள்.

அப்போதுதான் போல்நாத்திடமிருந்து செய்தியும் ஒரு தொகைப்பணமும் வந்து சேர்ந்தது. அந்தப்பணத்தைத் தன் மாமியாரிடம் கொடுத்தாள். மாமியார் பணத்தைப் பறித்துக் கொண்டாளேயன்றி, அவள் சுனீதிக்குச் செய்யும் கொடுமைகள் சற்றும் குறையவில்லை.

போலாநாத்யாத்திரைக்குச் சென்று வந்த முதலாளியிடம் பொறுப்பை ஒப்படைத்து மிகுந்த செல்வத்துடன் தமது ஊர் திரும்பினான். தன் மனைவியின் நிலையைக் கண்டு கலக்கமுற்ற போலால்நாத் புதிதாக வீடு வாங்கி சுனீதியை அங்கு அழைத்துச் சென்று இன்பமாக வாழ்க்கை நடாத்தினான்.

இத்தனைக்கும் காரணமான ஸ்ரீ சந்தோஷிமாதாவின் விரதத்தைப் பூர்த்தி செய்து அன்னைக்குச் சிறப்பான விழா எடுத்து நன்றி செலுத்த ஏற்பாடு செய்தாள் சுனீதி. இந்த விரதம் மேற்கொள்பவர்கள் புளியோ, புளிப்பதார்த்தங்களையோ உண்ணக் கூடாது. மைத்துனர் பிள்ளைகளை அழைத்து பூர்த்தி செய்யும் நான் புளிப்பண்டங்களைத் தவிர்த்து விருந்து படைக்க வேண்டும். சுனீதி விரதத்தைப் பூர்த்தி செய்யும் நன்னாளில் மைத்துனர் பிளைகளை விருந்துக்கு அழைத்திருந்தாள். சுனீதியின் விரதத்தை எப்படியாவது பங்கப்படுத்த வேண்டுமென்று பொறாமையில் வெந்து கொண்டிருந்த அண்ணிமார்கள் சுனீதியிடம் தட்சணை பெற்று அந்தப் பணத்தில் புளிப்பு மிட்டாய்களை வாங்கிச் சாப்பிடும் படி தங்கள் பிள்ளைகளுக்குப் பணித்தனர்.

விரதம் நன்கு நிறைவேறினாலும் அண்ணிமார்கள் செய்த சூழ்ச்சியால் மைத்துனர் பிள்ளைகள் தட்சணை பெற்று அப் பணத்தில் புளிப்பு மிட்டாய்களை வாங்கி உண்டபடியால் விரதம் பங்கப்பட்டு விட்டது.

இந்தநேரத்தில் அரசனின் ஆணையினால் போலாநாத் காவலாளிகளினால் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். சுனீதியின் மாமியாரும் மைத்துனர்மார்களும், அண்ணிமார்களும் போலாநாத் திருடியதாலேயே இத்தனை செல்வங்களையும் கொண்டு வந்திருக்கின்றான் என்று கூறி சுனீதியை மனம் பதைக்க வைத்தனர்.

விரத பங்கத்தால் வந்த சோதனை என்று நினைத்து அழுதபடி சந்தோஷி அன்னையைத் தஞ்சம் புகுந்தாள் சுனீதி. சந்தோஷிமாதா மனமிரங்கி அவள் முன் தோன்றினாள்.

சுனீதி! உன் கணவன் கள்வனில்லை. உனக்கோ உனது கணவனுக்கோ ஒரு குறையும் வராது. தீர்த்த யாத்திரைக்குச் சென்று திரும்பிய முதலாளியிடம் உன் கணவன் ஒப்படைத்த கணக்கைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் முதலாளி போலாநாத் மீது சந்தேகப்பட்டு அரசனிடம் வந்து முறையிட்டிருக்கிறான். கணக்குப் புத்தகத்தைப் பார்த்து அதில் தவறு ஒன்றுமில்லை என்று அரசனுக்குப் புரிந்து, மேலும் முதலாளி ஊரில் இல்லாத நேரம் பொறுப்புடன் சத்தியம் தவறாமல் போலாநாத் செலவு செய்து, வருவாயைப் பெருக்கியதும் அதில் தெரியவர, போலாநாத்தை நேரில்ப் பார்த்து அவன் கண்ணியத்தைப் பாராட்டிப் பரிசு தர வேண்டுமென்று அவன் அழைத்திருக்கின்றான். இதுவே விஷயம் எனவே நீ கவலையற்று இரு" என்று கூறி மறைந்தாள்.

அரசனின் பாராட்டும் பரிசும் பெற்றுத்திரும்பிய போலாநாத்தும் சுனீதியும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சுனீதி பின்னர் மீண்டும் ஒரு முறை எட்டுப் பிள்ளைகளை அழைத்து விருந்து படைத்து விரதத்தை நிறைவு செய்தாள்.

சுனீதியின் பத்தியால், கொடியவர்களாக இருந்த உறவினர்கள் சந்தோஷிமாதா திருந்தும்படி அருள் செய்தாள். போலாநாத் சுனீதிக்குப் புத்திர பாக்கியம் சகல ஐஸ்வரியங்கள் தந்து சந்தோஷி வாழ்வளித்தாள்.

வெள்ளிக் கிழமைகளில் செய்யப்படும் இந்த சந்தோஷிமாதா விரதம் எல்லோரும் ஏற்றுச் செய்யக்கூடிய எளிய விரதமாகும். உள்ளும் புறமும் சுத்தமாக வைத்து வழிபட்டு சுலபத்தில் பயனடையக்கூடிய விரதமாகும்.

மெழுகிச் சுத்தப்படுத்திய இடத்தில் பீடமிட்டு அதில் சந்தோஷிமாதா படத்தை வைத்து மலர்களால் அலங்கரிக்க வேண்டும். தலைவாழை இலை பரப்பி, அதன் மீது பச்சை அரிசி பரப்பி தூய தீர்த்தம் நிறைந்த செம்பில் நாணயங்கள் போட்டு, மாவிலை செருகித் தேங்காய் வைத்துக் கும்பம் வைக்க வேண்டும். விளக்கேற்றி வைத்து, சந்தோஷிமாதா போற்றிப் பாடல்கள் படித்து, வறுத்த கடலை, வெல்லம், நைவேத்தியம் செய்ய வேண்டும். இறுதியில் சுனீதியின் கதையைப் படிக்க வேண்டும் தீப ஆரத்தி காட்டி பூஜை முடித்து செம்பில் உள்ள தீர்த்தத்தை பிரசாதமாக உட்கொண்டு, நீரை வீடு முழுவதும் தெளித்து எஞ்சிய நீரைத் துளசிச் செடிக்கு ஊற்ற வேண்டும். இவ் விரதத்தை மேற்கொள்கின்றவர்கள் விரதம் பூர்த்தியாகும் வரை உணவில் வெள்ளி தோறும் புளி சேர்க்கக் கூடாது. எண்ணம் ஈடேறியதும் விரதத்தை நிறைவு செய்து மைத்துனர் பிள்ளைகள் அல்லது அண்டை அயலில் உள்ள பிள்ளைகள் எட்டுப்பேருக்குப் புளிப்புச் சேர்க்காத விருந்து அளிக்க வேண்டும். கண்டிப்பாக பிள்ளைகளுக்குத் தட்சணை கொடுக்கக் கூடாது.

ஏதாவது ஒரு வெள்ளிக் கிழமையில் விரதத்தை ஆரம்பிக்கலாம். தொடர்ந்து வெள்ளிக்கிழமை தோறும் சாதாரணமான ஏனைய விரதங்கள் போல் அனுஷ்டிக்கலாம். தாம் நினைத்த காரியம் கை கூடும் வரை தொடர்ந்தும் விரதம் அனுஷ்டித்து, அதன் பின் ஒரு வெள்ளிக்கிழமையில் இதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும். பகல் ஒரு நேரம் அன்னம் உட்கொள்ளலாம். நிவேதித்த பிரசாதங்களை உணவாக உட்கொள்வது விஷேசம்.

எளிமையான சந்தோஷிமாதா விரதம் மேற்கொண்டு சந்தோஷி மாதாவை வழிபட்டால் எண்ணங்கள் ஈடேறி சகல சௌபாக்கியங்களும் வாழ்வில் சந்தோஷமும் பெறுவது திண்ணம்

சிவானந்தவாரிதி
சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்
மயிலணி, சுன்னாகம், இலங்கை.

❋ ❋ ❋

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலில் முடிவும் மற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே.

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன் என்றுஅறியகி லார்களே.

சைவ மக்கள் வாழ்க்கையில் விரதங்கள்

உலகின் கண்ணே தோன்றிய பல சமயங்களுள் சாலச் சிறந்ததும் முடிவும் முதலும் இல்லாததுமான சமயம் சைவசமயமாகும். இச்சமய விதிகள் வேதம், ஆகமம், சித்தாந்தம், வேதாந்தம், புராணம், இதிகாசம், ஜோதிடம், திருமுறை, திருவாசகம் என்னும் முதல் நூற் பொருள்களின் மரபுவழியாக அமைந்தவை. மெய்யடியார்கள் பலர் இதன் வழியில் வாழ்ந்து, முத்தியடைந்து உலகு வாழ வழி வகுத்து வைத்த பெருமை சைவ சமயத்திற்கு அணியானது, சைவம் சிவசம்பந்தமுடையது. சிவத்தோடு தொடர்பு படுத்துவது, சமுத்திரத்தின் அலைக்கு ஓய்வு கிடையாது, அதேபோல் சைவன் எனப்பிறந்தவன் எவனும் மனதை அல்லற் படவிடாது அமைதியாகவும், பக்தியாகவும், சமயப்பற்றுடனும் சமய அறிவுடனும் வாழவேண்டும். இதற்கு உபகாரமாக சமய சாஸ்திர நூல்கள் அமைந்துவிளங்குகின்றன. இவ்வகையில் சைவ வாழ்க்கையில் விரதங்கள் பெறும் முக்கியத்துவத்தைச் சற்று நோக்குவோம்.

சைவர்களின் சமய வாழ்க்கையில் விரதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. விரதம் என்றால் ஒரு தீர்மானத்தைக் கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளுதல் என்று பொருள்படும். ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக குறிப்பிட்ட வகையில் தன்னைக் கட்டுப்படுத்துதலே விரதமாகும். விரதம் அல்லது நோன்பு அனுட்டித்தல் பிற சமயத்தவர்களிடம் காணப்படு கின்றது. விரதம் வேறுபட்ட பல சமயங்களையும் இணைத்து நிற்கும் பொற்சங்கிலியாகும். இதனால் தான் "காப்பது விரதம்" என்று ஔவைப் பிராட்டியாரும் எல்லா மக்களுக்கும் பொதுவான முறையில் கூறியுள்ளார். ஆத்திசூடியின் அச்சாணிபோல் திகழும் இவ்வாக்கியத்திற்குப் பலரும் வெவ்வேறு வித உரைகண்டனர். உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவற்றைக் காப்பாற்றுவதே விரதமென்பது ஒரு உரையாகும். கொல்லா விரதம் குவலயமெல்லாம் பரவவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கை யினின்று எழுந்தது இவ்வுரை "விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குகாயம் என்ற மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விஷேஷமாக வழிபடுதலாகும்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இரண்டாம் சைவ வினாவிடையில் கூறியுள்ளார். விரதத்தைக் காப்பாயாக என்பதே இதன் பொருளாகும். சாதாரண ஒருவர் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறவொழுக்கங்களை முறைப்படி

கொண்டொழுவதும் உண்மையில் விரதமேயாகும். ஆன்மீக மேம்பாட்டிற்காக நாம் கையாள வேண்டிய நியம நெறியே விரதம் என்பது இதனால் புலப்படும்.

அந்தக்கரணங்கள் பொறிவாயிலால் புலனிற் செல்லாது தூயவாதற் பொருட்டு அனுஷ்டிக்கப்படுவது விரதம். திருக்குறளாசிரியர் இவ் விரதத்தைத் துறவறப்பகுதியில் தவமும் தவங்காத்தலும் என வகுத்தலும் என வகுத்துள்ளார். அந்தக் கரணங்கள் புலன்களிற் செல்லாது நிற்றற்கு உதவி புரிவது புலால் மறுத்தல் முதலியன தவங்களாம். விரதங்களே அக்காலத்தில் தவம் எனப்பட்டது. இதனையே "தவம் செய்வார் தம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்று பொய்யாமொழியாரும். "விரதமெலாம் மாண்டமனதார் மனத்தான் கன்டான்" என்று அப்பர் சுவாமிகளும் கூறியுள்ளார்.

பூசைவழிபாட்டில் ஈடுபாட்டையும் பரிமளிப்பையும் பெருக்கு வதற்காக ஏற்பட்ட ஒருவகை நியமங்கள் தான் விரதங்கள் என்ற பெயரில் இருக்கின்றன. விரதம் என்ற பெயர் காரணத்தை ஆராய்ந்தால் இது விளங்கும் 'வ்ரத்: சங்கல்ப பூர்வபுண்யகர்ம:' சங்கற்பத்துடன் செய்கின்ற சமய காரியமும் மற்றும் புண்ணியச் செயல்களும் விரதமாகும் என்று வடமொழி அகராதியில் சொல்லப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சங்கற்ப முள்ளதாயிருத்தல், சமய காரியமாயிருத்தல் நன்மையானதாய் இருத்தல் என்ற மூன்று கருத்தும் விரதத்திற்கு இருக்கக் காண்கின்றோம்.

ஒருவர் தாம் செய்யும் காரியமொன்றுக்கு மனம், வாக்கு, காயம் மூன்றையும் நேர்படுத்திக் கொள்ளுதல் சங்கற்பமாகும். அதாவது அந்தக் காரணங்கள் மூன்றிலும் தூய்மை பெற்று மனக் கட்டுப்பாடும் அடைந்தபின் செய்யப் போகும் கிரியையினைச் சொல்லி அதனை நிறைவேற்றி வைப்பதாக மனதில் உறுதிகொள்ளுதலே சங்கல்பமாகும். தர்ப்பையினால் மோதிரம் செய்யப்பட்ட பவித்திரத்தை வலது கை மோதிர விரலில் அணிந்து கொண்டு, தர்ப்பாசனத்தில் அமர்ந்திருப்பதாகப் பாவனை செய்து, இரு தர்ப்பைகளைக் காலின் கீழிட்டு, வேறு சில தர்ப்பைகளை மடித்து, மோதிர விரலினூடு வைத்துக் கொண்டு வலதுமுழந்தாளின் மேல் விரித்து வைக்கப்பட்ட இடக்கைமேல் மூடிய வலக்கையை வைத்துக் கொண்டு சங்கல்பம் செய்யப்படும். சிறிது அட்சதை, பூ என்பனவும் வலக்கைக்குள் வைத்துக் கொள்வர். சங்கல்ப்பத்தில் கிரியை நிகழும் இடம் வருசம், மாதம், பட்சம், திதி, நட்சத்திரம், கிழமை என்பவற்றைக் கூறி இன்னநோக்கத்திற்காக இன்ன

கிரியையை செய்யப்போகின்றேன் என்று மனதிட்பம் செய்வது மரபு. நோன்பின் மகத்துவத்தை திரு. வி.க. அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். "நோன்பு உடலை வளர்க்கும் உடல் நலத்துக்கென அன்பால் காப்பது உடல் ஓம்பலுக்கு இன்றியமையாதது நோன்பு. நோன்பு வயிற்றில் உள்ள பழைய நஞ்சை எரித்து, அன்றாடம், உண்ணும் உணவு சீரணமாகத் துணைபுரிய உள்ளுறுப்புக்களைத் துலக்கி தூய்மைப்படுத்தி ஈரலுக்கு ஊக்கமூட்டி குருதியோட்டத்தை செம்மைப் படுத்துவது" விரதமானது. தூய உடம்பினையும் அந்தகரணங்களையும், ஆன்மாவையும் செம்மைப் படுத்தும் சிறப்பு வாய்ந்தது.

"மருந்தெனவேண்டாவாம் யாக்கை கருந்திய
தற்றது போற்றியுனின்"

எனும் தமிழ் மறை உடம்பில் வியாதி நீக்கம் ஏற்படுவதை விளக்குகின்றது. விரதத்திற்கு உபவாசம் என்பது ஒரு பரியாயம். உபவாசத்திற்கு மேற்பட்ட ஔடதம் இல்லை. ஆகையால் உபவாசம் இருப்பது மிகுந்த புண்ணியம் அழிப்பதாகும். உபவாசம் என்றால் கிட்ட இருத்தல் என்ற கருத்து பிராமணங்களில் இடம் பெற்றுவந்திருக்கின்றது. எதற்க்கு கிட்ட எனில் வழிபடு பொருட்குக் கிட்ட என்பர். கிட்ட என்பது இடத்தினாலும் தான் மனச்சேர்க்கையாலும் தான் அகலாதிருத்தலைக் குறிக்கும். இடத்தாற் கிட்டுதல், மனத்தாற் கிட்டுதல், இரண்டும் சைவத்தில் மகா முக்கியமானவை . உபவாசம் சக்தி இல்லாதவனுக்கும் சக்தி அழிக்கும். புண்பட்டவனுக்குப் புண்ணாற்றும்ம, நோயாளிக்கு ஔடதம் ஆகும். கோபிஷ்டனது கோபத்தை அகற்றும் வறுமைப் பிணியால் அவதிப்படு பவனுக்கு செல்வம் கொடுக்கும். தேகத்திலுள்ள அழுக்குகளை நீக்குவதற் காகவும் இந்திரியங்களின் விசப்பற்று நீங்கி ஒரு வேளை புசிப்பதையும், உபவாசம் இருப்பதையும் விரதங்களாகக் கொள்கின்றனர் என ஒரு நூல் ஆசிரியர் எழுதியுள்ளார்.

"உண்ணாவிரதம் உடலின் பிணிபோக்கி
திண் கருத்துமீயும் திறம்"

என்பது அறநூல் விரதம் நம்முடைய உடம்பிலுள்ள நோய் நீக்கத்திற்கு இன்றியமையாதது என்பது புலப்படும். இயற்கை சிகிச்சை ஆதரவாளர்கள் உபவாசத்திற்கே முதன்மை கொடுக்கின்றனர். விரதம் என்ற கருத்து வாழ்க்கை அனுசரணைகளில் பல்வேறு முறைகளில் நின்று மனிதரை நல் வழிப்படுத்தி வருகின்றது. பொய்சொல்லாமை, வெகுளாமை, பிறர் பொருளை இச்சியாமை ஐம்புல நுகர்ச்சிகளில் அளவு கடந்து செல்லாமை என்பன சாமானியமாக அனைவருக்கும் உரியன.

இவையும் சங்கல்ப்ப பூர்வமாக அனுட்டிக்கப்பட்டால் தத்தம் அளவில் விரதங்களாவதுடன், மற்றும் உயர் விரதங்களுக்கு இவை அங்கமும் ஆகும். "கொல்லாவிரதமொன்று கொண்டவரே நல்லோர் என்றார் தாயுமானவர்" அன்றியும் இவற்றிலொன்று வழுவினும் எவ்விரதமும் வீறுகொள்ளாது தன் கணவனையன்றி பிறரெவரையும் ஒருபொருளாகக் கருதாத பதிவிரதம் என்பது பெண்களுக்கு விசேட விரதமாக வேண்டப்படுகிறது.

இத்தகைய விரத நிலை ஒவ்வோர் சமயத்தவர்க்கும் அவ்வவர் போக்கிக்கேற்ப அமைந்திருக்கிறது. ஆனால் சைவ சமயம் அவ்வெல்லா வற்றையும் ஒருமுகப்படுத்திக் கொண்டுபோய் பூஜை வழிபாட்டுக்குச் சாதகமாய் அமைந்திருக்கிறது. ஏற்கனவே முடிந்துவிட்ட கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்ற மூன்று யுகங்களிலும் வாழ்ந்தவர்கள் இறைவனை அடைவதற்கு ஜபதவங்கள் யாகங்கள் போன்ற பெரிய வழிபாட்டு முறைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் கலியுகத்திலே நாம் பஜனையும் பக்திமார்க்கமான விரதாதி அனுட்டான ங்களுமே இறைவனையடையப் போதுமானவையாகும். இவ்வாறாக சைவ வாழ்க்கையில் விரதங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குவதெனில் வியப்பில்லை.

வைத்திய கலாநிதி புனிதவதி கருணாகரன்
வரிஷப்புலம்

❋ ❋ ❋

அன்றும் இன்றும் என்றும் அம்பாள்

நான் அம்மாவுடன் முதன் முதலாக அம்மன் கோயிலுக்குச் சென்ற சம்பவம் நீங்காத நினைவாக என் மனதில்... ஒரு பெரிய மருதமரம் ஆலயத்தின் முன் பெரு விருட்சமாகக் கிளைகள் பரப்பி நாலாபுறமும் நிழல் கொடுத்த வண்ணம் காட்சியளித்தது. சிறிய கோயில், மூன்று மண்டபம், ஒரு திருமஞ்சனக் கிணறு, சிறிய மடப் பள்ளி இவைதான் அன்றைய நிலை. நான் சென்ற முதல்நாள் பொங்கல் தினம் ஆலயத்தைச் சுற்றி அனைத்து இடங் களிலும் பொங்கல் காட்சி. மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி பிட்டு அவித்து, களி கிண்டி, பலகாரவகை சுட்டு, பொங்கல் பொங்கிப் படைக்கும் காட்சி எல்லோரையும் பரவசமடைந்து மெய்சிலிர்க்க வைக் கும் என்பதில் ஐயமே இல்லை.

சிறிய ஆலயமாக இருந்த கோயில் பலரது முயற்சியினால் கட்டடம் 1971ஆம் ஆண்டில் ஓரளவு பெரியதாக்கப்பட்டு முதலாவது கும்பாபிஷேக நிகழ்வைக் கண்டது. தொடர்ந்து வருடாவருடம் சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 1983இற்கு முற்பட்ட கால சங்காபி ஷேக நிகழ்வுகள், தற்கால சங்காபிஷேக நிகழ்வுகளில் முற்றிலும் மாறுபட்டவை, முன்பு ஒரு மாதத்திற்கு முன்னரே பந்தல் போட ஆரம்பித்து விடுவார்கள். பிற இடங்களில் உள்ள வருஷப்புல மக்கள் எல் லோரும் நமது வீட்டுக் கல்யாண நிகழ்வுகளுக்கு வருவது போல ஒரு கிழமைக்கு முன்னரே வந்து ஆலயத் தொண்டுகள் பலவற்றிலும் ஈடுபடுவர். மணியண்ணை கொப்பியுடனும் காசுப்பையுடனும் சுற்றித்திரியும் காட்சி என் கண்முன் இன்றும் நிற்கின்றது. நானும் என் வயதொத்தவர்களும் எனது தகப்பனாரின் மாட்டு வண்டியில் சென்று நீர்வேலியில் தாழங்காய் பிடுங்கி வந்து பந்தலை அலங்கரிப்போம். அப்பந்தலில் அம்பாள் வீற்றிருக்கும் காட்சி மிகவும் அற்புதமாக இருக்கும். இவ்வாலயத்தில் நவராத்திரி, திருவெம்பாவைப் பூசைகளும் சிறப்பாக நடைபெற்று வந்தன. வருகின்றன.

இவ்வூர் இளைஞர்கள் மட்டுமன்றி அயற்கிராமத்து இளைஞர்களும் ஆலயத் தினருகே ஒன்று கூடுவர். "Eleven Star Club" ஒன்றை ஆரம்பித்து உதைப்பந்தாட்டக்குழு, துடுப்பாட்டக்குழு, போன்றவற்றை உருவாக் கினர். உதைப்பந்தாட்டக் குழு பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றியும் கண்டது. ஆலயத்திற்கு அருகில் பெரியவர்களின் உதவியுடன் இளைஞர் களும் ஒன்று சேர்ந்து வாசிகசாலை ஒன்றை ஆரம்பித்தனர். இந்தியா விலிருந்து "நூல்கள்" கொண்டுவரப்பட்டு இரவல் கொடுக்கும் பகுதியும் ஆரம்பிக்கப்பட்டது. 1980இற்கு முன்னர் பிரதான வீதியால் வருவோர் வெள்ளவாய்க்கால் வீதியாலே ஆலயத்திற்குச் செல்வர். பின்னர்

"சட்டத்தரணி" செல்லத்துரை வீதி பலரது முயற்சியாலும் திறந்து வைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்பாள் வீதி உலா வருவதற்கு சித்திரத் தேர் ஒன்று அமைப்பதற்கான பணிகள் ஆரம்பமாகின. 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தநடிவடிக்கைகள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தமையால் சிறிது காலம் பணிகள் முடக்கப்பட்டன. எனினும் "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதற் கிணங்க 2000ஆம் ஆண்டளவில் புதிய தேர் அமைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கொடியேற்றத் திருவிழா, தேர்த்திரு விழா என திருவிழா ஆரம்பிக்கப் பட்டது. இந்நிகழ்வுகள் சிறப்பாக அமைய அமரர் திரு. கா. ஐயம்பிள்ளை ஆசிரியரினதும் அமரர் திரு. மனமோகன் அவர்களினதும் பணி முக்கிய பங்கு வகிக்கின்றது.

சிறப்பான முறையில் ஆலய விழாக் கள் நடைபெற்று வரும் வேளையில் விழாக்காலங்களில் மாகேசுரபூசை செய்வதற்கு மண்டபம் ஒன்று தேவை எனக் கருதி 2008ஆம் ஆண்டளவில் மண்டபம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. திரு. செ. சிவயோகம், திரு. பெ. ஜெயந்தன் அவர்களின் உடலுழைப்பும் வருஷப்புல வெளிநாட்டு உள்நாட்டு மக்களின் நிதி உதவியாலும் எண்பது வீதமான (80%) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் மண்டபம் பல தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக் கின்றது.

2011ஆம் ஆண்டு திரு. மு. இந்திரன் தலைமையில் ஆலய புனர்நிர்மாணசபை ஒன்று அமைக்கப்பட்டது. அச்சபையில் ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்வதும் இங்கு பிரதிஷ்டை செய்யப்படாத விக்கிர கங்கள் வைப்பதும் ஆலயத்திற்கு அமைவான கோபுரம் ஒன்று அமைப்புதும் என முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன் பிரகாரம் திரு. இந்திரனின் அயராத உழைப்பாலும் அவர் வெளிநாடுகளுக்குச் சென்று வருஷப்புலம் மக்களிடம் நிதியுதவி பெற்றும் ஆலயம் புனர்நிர்மாணிக்கப் பட்டு அழகான கோபுரத்துடனும் பல பரிவார மூர்த்திகளுடனும் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. 08.06.2014 அன்று பிரம்மஸ்ரீ கணேச சபாபதிக் குருக்கள் அவர்களின் தலைமையில் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக நிறை வெய்தியது.

ஆலய நிர்வாகசபை, ஆலய திருப் பணிச்சபை, அன்னதான மண்டப திருப் பணிச்சபை, அன்பளிப்புச் செய்தோர், சகல வழிகளிலும் உதவியோர் கும்பாபி ஷேகத்தைக் கண்டுகளித்தோர் அனை வருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன். அன்றும் அம்பாள் தான் இன்றும் அம்பாள் தான் அவளின் அருட்கடாட்சம் என்றென்றும் நிலைக்கும். கிடைக்கும்.

க. கருணைநாயகம்
வலிதெற்கு பிரதேச சபை உறுப்பினர்
நிர்வாகப் பொருளாளர், மண்டபக் காப்பாளர்
திருப்பணிச் சபை உபதலைவர்.

கண்ணகி வழிபாடு

இந்துசமய வழிபாட்டு மரபில் மிகப் பழங்காலத்திலிருந்தே பத்தினித் தெய்வ வழிபாடு நிலவி வந்துள்ளது. குறிப்பாக தென்நாட்டிலும், ஈழத்திருநாட்டிலும் பத்தினித் தெய்வம் எனக் கருதப்படுவது சிலப்பதிகார இலக்கியத்தில் வரும் கற்பரசி ஆகிய கண்ணகியே. கண்ணகியைத் தம் துன்பம் தீர்க்கும் அருட்தெய்வமாக தென்நாட்டவரும், ஈழநாட்டவரும் கருதி வழிபட்டமைக்குப் பல இலக்கியங்களும் வழிபாட்டு ஆலயங்களும் சான்றாக விளங்குகின்றன. சிலப்பதிகாரம், பிறந்த பாரத நாட்டில் இன்று கண்ணகியை நினைவு படுத்தக்கூடிய சிறப்புக் கலைக்கூடங்கள் மட்டுமே விளங்குகின்ற போதிலும் ஈழ மண்டலமாகிய இலங்கையில் பல பாகங் களில் கண்ணகிக் கோயில்கள் எழுச்சிபெற்று அழியாச் சான்றாதாரமாகச் சிறப்புற்று விளங்கு கின்றது. சங்க இலக்கியமாகத் திகழும் சிலப்பதிகாரம் இந்துமத வழிபாட்டு மரபுகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் நன்கு தெளிவுபடுத்தியுள்ளது. சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் பலவகைக் கோயில்களை அக்காலத்தவர்கள் வழிபட்டார்கள் என்ப தனை இளங்கோவடிகள் பின்வரும் வரிகளின் ஊடாகக் குறிப்பிடுகின்றார்.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாழுது முதல்வன் வாய்மையின் வழாக
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்"

என இந்திரவிழா எடுத்த காதையில் குறிப்பிட்ட இளங்கோவடிகள் சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்திலே பத்தினித் தெய்வ மாகிய கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுத்த வரலாற்றைக் குறிப் பிட்டுள்ளார். அத்தோடு இலங்கை அரச னாகிய கஜபாகு வேந்தனும் கண்ணகிக்கு இலங்கையில் கோயில் எழுப்பினான் எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

"வலமும் மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்

குடகக் கொங்கரும் மாளுவ வேந்தனும்
எந்நாட்டாங்கண் இமய வரம்பன்
இந்நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர் வேண்டித்
தந்தேன் வரமென் றெழுந்ததொரு குரல்"

ஈழத்திருநாட்டில் கண்ணகி வழி பாட்டில் சிங்கள மக்களும் ஈடுபாடு கொண்டு விளங்கினர் என்பதற்குப் பல சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. இவர்கள் "பத்தினித் தெய்யோ" எனக் கண்ணகியை வழிபாடு செய்தமையை இராசவழி என்னும் நூல் தெளிவாக விளக்குகின்றது. கி.பி. 2ஆம் நூற்றாண்டிலே இலங்கையில் கண்ணகி வழிபாடு தென்னாட்டிலிருந்து பரவியதாகச் சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் தெரிவிக் கின்றன. இலங்கையின் பல பாகங்களிலும் கண்ணகி வழிபாடு நிலவியபோதிலும், குறிப்பாக, கிழக்கிலங்கையாகிய மட்டக் களப்புப் பகுதியில் கண்ணகி வழிபாடு செல் வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. இலங்கை யில் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்தில் "அங்கணாமைக் கடவை" என்னுமிடத்தி லேயே முதன்முதலாகக் கண்ணகை அம்மன் கோயில் எழுந்ததாக இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய கலாநிதி க. கணபதிப்பிள்ளை தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு பற்றி எடுத்து விளக்கும் உடுகுச் சிந்து என்னும் நூற்குறிப்புக்கள் அங்க ணாமைக் கடவை பற்றிய தகவல்களையும் தருவதாகக் கூறப்படுகிறது. உடுகுச்சிந்து எனும் நூலை ஊர்சுற்றுக் காவியம் எனவும் அழைப்பர். இந்நூல் அங்கணாமைக் கடவைக் கண்ணகையம்மனைப்பற்றி நான்கு பாடல் களிலே வழுத்தி உள்ளது. மேலும், காரைதீவு, வந்தாறுமூலை, செட்டிபாளையம், களு வாஞ்சி, வீரமுனை, நீலாவணை போன்ற இடங்களில் விளங்கிய கண்ணகைத் திருத்தலங்கள் வாழ்த்தப்படுவதை அறியலாம். மேலும் கண்டி, அநுராதபுரம் போன்ற இடங்களில் சிங்கள மன்னர்கள் கண்ணகை வழிபாட்டைப்பேணி வந்தமையை இந்நூல் மூலம் அறியமுடிகின்றது.

இலங்கையின் வடபாகத்தில் முல்லைத் தீவுப் பகுதியில் அமைந்த வற்றாப்பளை கண்ணகையம்மன் பல ஐதீக வரலாற்றைக் கொண்ட கண்ணகையம்மன் தலமாக இன்றும் விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் பல கண்ணகை வழிபாட்டுத் தலங்கள் பல நூறு வருடங்களாகச் சிறப்புப்பெற்று விளங்கியபோதிலும் காலப்போக்கில் பல கண்ணகை யம்மன் கோயில்கள் ராஜராஜேஸ்வரியம்மன் கோயில்களாக மாற்றப் பட்டுவிட்டதாகத் தமிழ் அறிஞரும் சிறந்த கல்விமானுமாகிய திரு. சு. நடேசபிள்ளை தமது ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளார். எனினும், யாழ்ப்பாணத்தில் மிகப் பழமை வாய்ந்த கண்ணகையம்மன் கோயில்கள் இன்றும் அழியாத நிலையில் சிறப்பாக விளங்குவதைக் காணலாம். வட்டுக் கோட்டை கண்ணகையம்மன், மாகியப் பிட்டி

கண்ணகையம்மன், உடுவில் கண்ணகையம்மன், கோப்பாய் பாலாணை கண்ணகையம்மன், சுட்டிபுரம் கண்ணகை யம்மன் போன்ற தலங்கள் பிரசித்திபெற்ற கண்ணகை கோயில்களாக விளங்குகின்றன. முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகை யம்மன் கோயில், திருகோணமலை, மட்டக் களப்புப் பகுதிகளில் வாழும் மக்களையும் யாழ்ப்பாண மக்களையும் இணைக்கும் தலமாகச் சிறப்புப்பெற்று விளங்கியுள்ளது.

ஈழநாட்டில் கண்ணகை வழிபாடு ஓரளவு இன்னும் நிலைபெற்று விளங்கு கின்றபோதிலும் கண்ணகி பிறந்த பாரத நாட்டில் கண்ணகை வழிபாடு அமைதி பெற்றுவிட்டது என நினைக்கத்தோன்றும் அளவிற்கு கண்ணகை பெயர் குறிப்பிடும் கோயில்கள் இல்லாமல் போய்விட்டன. மலையாள நாட்டில் சிறாங்கலூர் என்ற நகரத்தில் ஒற்றை முலைச்சி என்னும் அம்மன்கோயில் ஒன்று சிறப்பாக விளங்கு கின்றது. இத்திருத்தலம் ஒரு முலை இழந்த திருமாபத்தினி என்ற கண்ணகியின் வழி பாட்டைக் குறிப்பதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றார்கள். தென்நாட்டில் சில இடங்களில் பகவதி எனப் பெயர் குறித்து வணங்கப்படும் தலங்கள் கண்ணகி வழி பாட்டுத் தலங்களாக முன்பு விளங்கியிருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். ஈழ நாட்டில் கண்ணகையம்மன் வழிபாட்டினை பல கிராமத்துப் பாடல்கள், கூத்துக்கள் ஊடாகவும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. கிழக்கிலங்கையில் அம்பன்பள்ளு, வசந்தன் கூத்து, கோலாட்டம் என்பவற்றிலும் போர்த் தேங்காய் அடித்தல், கொம்பு விளையாட்டு என்பவற்றின் ஊடாகவும் கண்ணகை வழிபாட்டு மரபுகளை இன்றும் உணரலாம்.

கண்ணகி வழிபாட்டில் குறிப்பாக மக்கள் குறிப்பிட்ட சில நோய்கள் கண்ணகை யம்மனால் ஆட்கொள்ளப்படுவதற்காகத் தரப்படுவ தாகக் கருதி வழிபட்டுள்ளனர். சில வெம்மை நோய்கள் பத்தினித் தெய்வத்தின் கோபம் காரணமாக வருவதாக மக்கள் நம்பி வழிபாடு செய்கின்றனர். கண்ணகை அம்மன் வழிபாட்டில், படையல் குளிர்த்திமுறை, ஆடிப் பாடி வணங்குதல், தீக்குளித்தல், காவடி எடுத்தல் முதன்மை பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. கிழக்கிலங்கையில் கண்ணகை யம்மன் கோயிலில் நடக்கும் பூசையைச் சடங்கு என்றும் கூறுவர். வயலை நம்பி வாழும் மக்கள் மழை பெய்வதும், மண்செழிப்பதும், பயிர் விளைவதும் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியால் நடைபெறுவதாக நீண்ட காலமாக நம்பிக்கைகொண்டு வழிபட்டு வருகின்றனர். பொங்கல் படையல் செய்து வழிபடும் மக்கள் குளிர்த்திப் பாடல் பாடுவதும், வழக்குரைகாதை படிப்பதுவும் கூத்தாடிக்கலைமூலம் வழிபாடு செய்வதுவும் இன்றுவரை காணப்படும் வழிபாட்டு அம்சமாகும். கிழக்கிலங்கையில் நிலவும் குளிர்த்திப் பாடல்கள் சிலவற்றில்,

"தாட்டான் பெரிடியாகத்தார் வேந்தன்
நீறாகச் சுட்டெரித்துப் போட்டதொரு
தேங்காய் குளிர்ந்தருள்வாய்
எல்லைபடும் பழிக்கு எண்ணவொண்ணப் பழிவாங்கிச் சொல்லரிய
மாமதுரை கட்டாய் குளிர்ந்தருள் வாய் மதுராபுரித் தெய்வம் வாய்
மாற்றந்தான் கேட்டுச் சதுராக வேகம் தணிந்தாய் குளிர்ந் தருள்வாய்"

போன்ற அடிகள் அம்மனைக் குளிருமாறு வேண்டுவதனை அறிய முடிகிறது.

யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும் வழக்குரை காதை படிப்பதுவும், வசந்தன் கூத்து முறையீடு எனப்பல ஆடல்பாடலோடு கூடிய கண்ணகை வழிபாடு கிராமங்களில் நிலவியுள்ளதனை கலைபண்பாட்டு மரபுகள் இன்றும் விளக்குகின்றன. இன்று ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாட்டுத் தலங்கள் ஆகம முறைசார்ந்த ஆகமமுறை சாராத இரு நிலையில் விளங்குவதனைக் காணலாம்.

(வணிகநாதம் 1997-1998)

செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன்

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

கடந்துநினின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணம்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க்கு அப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே.

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந்துஆர்ந்துஇருந் தான்அருள்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே.

வாழ வைக்கும் கோவில் திருப்பணிகள்

"கோவில் விளங்கக் குடி விளங்கும்" என்பது பெரியோர் வாக்கு. அப்பர் சுவாமிகளோ 'திருக்கோவிலில்லா திருவிலூர்' என்றும் அதை "அடவி, காடே" என்றும் அழைக்கின்றார். ஔவைப் பாட்டியோ 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் கூறிச் சென்றுள்ளார்.

ஆலயம் - "ஆன்மா இறைவனிடம் லயிக்கும் இடம்" ஓர் ஊர் ஆலயம் சிறப்புடனும், பொலிவுடனும் விளங்குகின்றது என்றால் அது அவ்வூர் மக்களின் கல்விச் சிறப்பு, செல்வச் சிறப்பு, ஆன்மிகச் சிறப்பு, பக்தி உணர்வு என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது எனலாம்.

இறையருளினால் அன்றைய மன்னர்களினதும், தனவந்தர் களினதும் நற்சிந்தனையாளர்களதும் சிந்தனையில் உதித்தவையே நாம் இன்றும் வழிபட்டு மன அமைதி காணும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஆலயங்கள். விஞ்ஞானம் வளராத அக்காலத்தில் மெஞ் ஞானத்தின் பயனாக ஆன்மிக உணர்வுடன் இறைசக்தியின் துணை கொண்டு, அழகு மிளிர் சிற்ப வேலைப்பாடுகளுடனும் உறுதியான கட்டட வேலைப்பாடுகளுடனும் நிர்மாணிக்கப்பட்ட ஆலயங்கள் இன்றும் பூஜிக்கப்பட்டு வருகின்றன. கோடான கோடி இந்து மக்களின் வாழ்க்கை யோடு பின்னிப் பிணைந்துள்ள ஆலய வழிபாடு அவர்களை வாழ்வாங்கு வாழ வைப்பதுடன் இடர்மிகுந்த சூழ்நிலைகளிலெல்லாம் ஆறுதலளிக்கும் வல்லமை பொருந்திய புனித இடமாகவும் விளங்குகிறது.

"மனம் உடையவன் மனிதன்" இறை சக்தியின் திருவருளால் மனம் படைத்த மனிதர்களின் உள்ளத்தில் கோவிற் திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்படுகிறது. அவ்வெண்ணம் செயலுருவாகி பணிகள் யாவும் தடையின்றி நிறைவேற மனிதவளம், பௌதிக வளம் இரண்டும் இன்றியமையாதவை. மனிதவளமும், ஏனைய வளங்களும் இருந்து பொருள் வளம் (செல்வம்) இல்லையேல் திருப்பணியை நிறைவேற்றுவது என்பது முடியாத செயலாகி விடும்.

எமது வருசப்புல மகாமாரித்த் தாயாருக்குப் பன்னிரெண்டு வருடங்களின் பின்னர் புனராவர்த்தன பிரதிஷ்டை நிமித்தம் இடம்பெற்ற கும்பாபிஷேகத் திருப்பணிக்கு, அம்பாளின் உள்நாட்டு, வெளிநாட்டு

பக்தர்கள் அவளின் அருட்கொடையால் கிடைத்த செல்வத்தின் ஒரு பகுதியை மனமுவந்தளித்து கோவிற் திருப்பணிக்கு உதவிகள் புரிந்து ஆலயம் அழகுற புனருத்தாரணம் செய்து மகிழ்ந்துள்ளார்கள். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க மகாமாரித் தாயாருக்குப் புதிய கோபுரம் அமைக்கப் பட்டமை சிறப்பம்சமாகும்.

கோவில் திருப்பணிக்கென கொடுத்த நிதிப் பங்களிப்பானது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கோவிலை அழகுற வடிவமைக்க உதவியது டன் எத்தனை தொழிலாளர்களை வாழவைக்கப் பயன்பட்டிருக்கும் என்பதனை சற்று எண்ணிப் பாருங்கள். அம்பாளின் கருணையினால் சிலரின் சிந்தனையில் உதிக்கும் நற்பணிகள் மூலம் பயனடைவோர் பல்வேறு தரப்பினர். இவ்விடத்தில் மருவூர் அன்னையின் அருள் வாக்கு நினைவு கூரத்தக்கது.

"இருப்பவனிடமிருந்து வாங்கி இல்லாதவனுக்குக் கொடுக்கச் சொல்கிறேன். கொடுப்பவனுக்கும் கர்மத்தைக் குறைக்கிறேன். கருவி யாகப் பணிபுரியும் உன் கருமத்தையும் குறைக்கிறேன். நீ கருவியாக இருக்க வேண்டும், காரியாகி விடக் கூடாது. கட்டடங்களை கட்ட வைக்கிறேன். விழாக்களைச் செய்ய வைக்கிறேன். கருவறையை அமைக்க வைத்து ஸ்தபதிகளுக்கு வேலை கொடுக்கிறேன். மண் கலசங்களை வைக்கச் சொல்கிறேன். குயவர்களுக்கு வேலை கொடுக்கிறேன். பூ விற்பவனுக்கும் பழம் விற்பவனுக்கும் தொழில் பிழைக்க வழி செய்கிறேன்."

"ஆன்மீகம் என்ற போர்வை மூலமாகவே தொழிலாளிகளுக்குத் தொழில்களைத் தந்து அவர்களின் பிழைப்புக்கு வழி வகுக்கின்றேன். காய்ந்த நிலம் மழை பெய்தால் செழிக்கும். கட்டைப்புல் மேய மேயத் துளிர்க்கும். ஆன்மிகப் பணிக்காகச் செலவழிக்க, செலவழிக்க உன் சொத்து மேலும் மேலும் வளரும்."

எத்தனையோ பேர் வேலைவாய்ப்பின்றி, வருமானமின்றித் தவிக்கும் இக் காலகட்டத்தில் திருப்பணி வேலைகள் மூலமாக கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள், ஆச்சாரியார்கள் ஏனைய துறைசார்ந்த வல்லுநர்கள் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். அவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர முடிவதுடன், அவர்களின் தொழில் நிபுணத்துவங்களுக்கும் ஒரு சமூக அங்கீகாரம் கிடைக்கப்பெற்று உளத் திருப்தியும், பூரிப்பும் அடைகின்றனர்.

"எத்தனையோ ஏழை மக்கள் வறுமையில் வாடும்போது அவர்களின் கஷ்டத்தைப் போக்க உதவாது. ஏன் இந்தக் கோவில்களை உடைத்து இடித்துக் கட்டுகிறார்கள். இது தேவையற்ற செயல்" என்று சிலர் ஆதங்கப்படுகின்றனர். ஆனால் கோவில் நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் எத்தனை தொழிலாளர்களின் குடும்பங்கள் அவர்கள் பெறும் ஊதியம் மூலம் பயன்பெறுகின்றன என்பதனை அவர்கள் சிந்திப்பதில்லை. இறை நம்பிக்கையும், நல்லெண்ணமும் கொண்ட தனவந்தர்களின் மனதில் சக்தியின் உந்துசக்தி காரணமாக இப்படியான நற்காரியங்களுக்கு உனது பொருளின் ஒரு பகுதியைக் கொடு என்கின்ற எண்ணம் உருவாக்கப்படு கின்றது. இதன் விளைவாக நாம் முன்னர் குறிப்பிட்டது போல் ஒருவரிடம் செல்வம் முடங்கிக் கிடக்காது தொழிலாளவர்க்கத்திடம் பகிரப்படுகிறது. இவ்வருமானம் மூலம் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் மேலோங்கி அவர்கள் சிறப்புடன் வாழ்கின்றனர்.

மறுபுறத்தில் மஹா கும்பாபிஷேகக் கிரியை முறைகளைக் கூட இறைவனே வகுத்துள்ளான் என்பது பெரியோரின் கருத்து. இப்படிப் பெருமை வாய்ந்த கிரியைகளை முறைப்படி நிறைவேற்ற அறிவையும், ஆற்றலையும் கொண்ட சிவாச்சாரியார்கள் அரும்பணி ஆற்றுகின்றனர். தெய்வீகம் மிளிரக் கிரியைகளை நடாத்தி வைக்கின்றனர். எனவே ஆலயத்திருப்பணிகள் சிவாச்சாரியார்களின் அறிவு, திறமை, பக்தி, தியாகம் என்பவற்றை வெளிப்படுத்துவதோடு அவர்கள் சிறப்புடன் தமது வாழ்க்கையினை நடாத்திச் செல்லவும் உதவுகின்றன.

உள்ளத் தெளிவோடு ஆன்மிகப் பணிகள் செய்ய அன்னையாரால் வாய்ப்பளிக்கப்பட்ட ஏனைய சரீர உதவி புரியும் தொண்டர்கள் எவ்வித ஊதியத்தினையும் எதிர்பாராது தமது அன்றாட வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் தமது சேவைகளைப் புரிந்து அம்பாளின் கருணையினைப் பெறும்பேறு பெற்றவர்கள். தானங்களுள் சிறந்தது அன்னதானம். அன்னதானம் தான் சித்தர்களுக்கு உவப்பு. அதுவே ஆதிபராசக்திக்கும் உவப்பு. அந்தவகையில் இக்கோவில் இயந்திர பூசை தொடக்கம் சங்காபிஷேகம் வரை இடம்பெற்று வரும் அன்னதானத்தினை உண்டு, பசியாறி, வாழ்த்திச் செல்லும் அடியார்களின் மனநிறைவு கூட தானம் செய்தவர்களை வாழ வைக்கும்.

இவ்வாறாக ஆலயத் திருப்பணிகள் பல்வேறு வகையில் பல்வேறு தரப்பினரை யும் வாழ வைக்கின்றது என்றால் அது எல்லோராலும்

"ஆலயத் திருப்பணிகளுக்கு உதவுவோம்
ஆனந்தமாய் வாழ்வோம்"

திருமதி யாழினி நந்தகுமார்.

நான் கண்ட இந்திர விழா

அருள்மிகு வருஷப்புலம் மகாமாரி அம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக பெரு விழாவிற்கு நான் சென்றிருந்த முதல் கிழமை கே.கே.எஸ். வீதியில் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் அருகில் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த மகாமாரி அம்பாளின் நுளைவாயில் தூபியைப் பார்வையிடச் சென்றேன். அம்பாளின் ஆலயத்தை அமைத்த ஸ்தபதிகளே தூபியையும் அழகுறச் செதுக்கிக்கொண்டிருந்தனர். நீண்ட நேரம் அதை இரசித்துக் கொண்டிருக்கும் போது பாடசாலை அரசமரத்தின்கீழ் ஓர் தமிழ்ப் பாட ஆசிரியை மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார். "ஆகுபெயர்" பற்றி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியை மாணவர்களிடம் மதிப்பீட்டு வினாக்களைக் கேட்டார். "வருஷப்புலம் அழுதது" என்று ஆசிரியை சொன்னதும் மாணவர்கள் கோரசாகவருஷப்புலமக்கள் அழுதனர் என்று ஒப்புவித்தனர். மீண்டும் ஆசிரியை வருஷப்புலம் சிரித்தது என்றார். மாணவர்கள் வரியப்புல மக்கள் சிரித்தனர் என்றார்கள். இவ் வாசிரியையின் உதாரணங்கள் என்னை இருபது வருடங்களுக்கு முன்னைய நினைவுக்குக் கொண்டு சென்றன.

1995ஆம் ஆண்டு ஆவணி 15 முழு ஊருமே இடம்பெயர்ந்திருந்தது. எங்கும் பொம்பர் குண்டு போட்டபடி, செல்லடி, நாலாபக்கமும் ஹெலியில் இருந்து சூடுகள், எங்கும் மரண ஓலம், இந்நிலையில் வருஷப்புலத்தில் தனித்திருந்த என் தந்தையைப் பார்க்க இரவு எட்டுமணிபோல் பதுங்கிப் பதுங்கி வந்தேன் வரும் வழியில் தந்தையார் மகாமாரி அம்மன் கோயில் வாசலில் ஒரு கண்ணாடிவிளக்குடன் தனித்து அம்மனைப் பிரிய மனமில்லாமல் அழுதுகொண்டு இருந்தார். அம்மனுக்கு வெளியில் ஒரு கண்ணாடி விளக்காவது எரிகிறது என்றாலும் அம்பாள் இருட்டில் இருக்கிறாள் என்று எண்ண என் மனம் அழுதது என் தந்தையாரை என்னுடன் அழைத்துச் செல்லும் போது உண்மையில் நான் வாய் விட்டுக் கதறினேன் தாயே இந்தப்போர்ச் சத்தத்தில் கார் இருளில் உன்னைத் தனியே விட்டு செல்கிறேன் என்று கொழும்புக்குச் சென்றதும் காலையும் மாலையும் எனது சுவாமி அறையில் இறைவனை வணங்கும் போது மகாமாரி தாயே இனி எப்போது உனைக் காண்பேன் என்று வேதனைப்படுவேன்.

ஏதோ ஒரு மாதிரி யுத்தம் ஓய்ந்து அமைதி சூழல் தோன்றியது. ஓடோடி வந்தேன். அம்பாள் சந்நிதானம் அப்படியே இருப்பதுகண்டு ஆனந்தப்பட்டேன். ஆனால் அதன் பின் மாசிமகத் திருவிழாவிற்கு ஊர் கூடித் தேர் இழுக்கும் போது ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் எனது எண்ணத்தை மோர்த் தண்ணீர் குடித்துக் கொண்டே சொன்னேன் கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்றேன். எவரும் எனது முன் மொழிவைக் காது கொடுத்ததாகத் தெரியவில்லை. பதிலுக்கு ஆயிரம் பழமொழிகள் மட்டும் சொன்னார்கள். ஆண்டி மடம் கட்ட முடியுமா? பூனைக்கு மணிகட்டுவது யார்? வெறுங்கை முழம் போடுமா? என்றனர் இந்நிலையில் நானும் மௌனியாகிவிட்டேன். இருந்தாலும் பூசலார் போன்று கோயில் திருப்பணியை மனதில் நினைத்து உறக்கத்துக்கு செல்வேன். இந்நிலையில் ஒருநாள் நான் சந்தோசமான செய்தி ஒன்றைக் கேள்விப்பட்டேன். இந்திரன் அண்ணா கோயில் புனருத்தாரண வேலைகளைச் செய்யப் போகிறார் என்று, ஆனந்தக்களிப்பில் குதூ கலித்தேன். பூசலாருக்கு ஏற்பட்ட அனுபவம் எனக்கும் ஏற்பட்டது. திரு. முருகேசு இந்திரன் தலமையில் ஊர் பெரியோர் ஒன்றிணைந்து கும்பாபிஷேகத் திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டதாக அறிந்து கொண்டேன், நேரடி யாக இந்திரன் அண்ணாவைச் சந்தித்து என் எண்ணம் இடேறி ஆனந்தத்தை வெளிப் படுத்தினேன், திருப்பணிக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தவேளை, தனது திட்டங்களை விளக்கினார் நிதியை எப்படிச் சேகரிக்கப்போகிறேன், ஸ்தபதியை எப்படி தெரிவு செய்யப்போகிறேன் என்று விபரித்தார். பணத்தை திரட்ட மேலைநாடுகளுக்குப் பயணிக்கப் போவதாகவும் ஸ்தபதி தெரிவுசெய்ய அண்மையில் கோபுரங்கள் புனரமைக்கப்பட்ட கோயில்களைப் பார்வையிடப்போவ தாகவும் தனது புனருத்தாரண திட்ட வரைபுகளைக் காண்பித்ததும் நான் பிரமித்துப் போனேன்.

பேஸ்புக் மூலம் உலகிற்கு இதை வெளிச்சம் போட்டுக்காட்டினேன். பாலஸ்தாபனம் செய்த நாள் முதல் கும்பாபிஷேகத்துக்குக் கொண்டுவந்த பசுமாட்டை உரியவரிடம் ஒப்படைக்கும் வரை தனி ஒரு மனிதனாக இந்திரன் அண்ணா பட்ட கஷ்டங்கள் எல்லாவற்றையும் இந்தப் புத்தகத்தில் எழுத இடம் போதாது. இராமபிரானுக்கு அணில்பிள்ளை ஒன்று செய்த உதவிபோல் என்னால் முடிந்த உதவிகளை மட்டும் செய்ய முடிந்தது. திரு. மு. இந்திரனுடன் கூடவே நின்று உதவிய திருப்பணிச் சபையினருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனே. கோபுரத்திற்குப் போட 100 அடி மாலைகேட்டார் கும்பாபி ஷேகத்திற்கு முதல் நாள் 100 நிமிடத்தில் அந்தமாலை கிடைக்க உறுதி செய்தேன். அவர் மேல் உள்ள

அபிமானத்தால் இந்த இறைகைங்கரியத்தை ஊரின் உயர்வுக்காக சிறப்புற நிறைவேற்றி 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை நாம் கண்டது மகாமாரி அம்பாளின் கும்பாபிஷேகப் பெருவிழா மட்டும் அல்ல எம் கண்குளிர வைத்த இந்திரவிழாவும் ஆகும். சூரியசந்திரர் உள்ளவரை இந்திரன் அண்ணா எம் ஊருக்குச் செய்த தொண்டினை மறந்துவிட முடியாது. இக் கண் கொள்ளாக்காட்சியை வருஷப்புலம் உள்ளவரை போற்றும். அதாவது வருஷப்புல மக்கள் உள்ளவரை போற்றுவர்.

செல்லத்துரை பாஸ்கரன்
W.A. சில்வா மாவத்தை
கொழும்பு - 6

❋ ❋ ❋

ஏழு நற்குணங்கள்

- ஏழ்மையிலும் நேர்மை
- கோபத்திலும் பொறுமை
- தோல்வியிலும் விடாமுயற்சி
- வறுமையிலும் பரோபகாரம்
- துன்பத்திலும் தைரியம்
- செல்வத்திலும் எளிமை
- பதவியிலும் பணிவு.

பற்று வரவு

கடவுளின் திருவடிகளில் பற்று வைத்தால் மோட்சம் என்பதை வரவாகப் பெறலாம்.

அப்பாவின் டயரியில் இருந்து அன்பு மகள்

சுன்னாகம் வருஷப்புலம் எனும் ஊரில் வாழும் மக்களை ஆண்டாண்டு காலம் அன்புடன் அரவணைத்து அருள்பாலித்துவரும் மகாமாரி அம்பாளின் திருவருட்பார்வை எனக்குக் கிடைத்து விட்டது. ஆம், எனக்கு இருபத்தாறாவது வயதிலேயே அரசாங்க வேலை கிடைத்து விட்டது. மனதிற்குள் மகிழ்ச்சி ஆரவாரம். இருந்தும் வேலை கிடைத்து வெளிமாவட்டம் செல்ல வேண்டியுள்ளதே என்று மனதிற்குள் ஒரு நெருடல். சகோதரர்களைப் பிரிந்து, பிறந்த மண்ணைப் பிரிந்து, நண்பர்களைப் பிரிந்து எல்லாவற்றுக்கும் மேலாக தாயாகி இருந்து என்னை வழிநடாத்திக் கொண்டிருக்கும் மகாமாரி அம்பாளைப் பிரிந்து எப்படிப் போவது? தினமும் அவள் திருமுக தரிசனம் காணாது மலரும் பொழுதுதான் நன்றாக அமையுமா? மனதில் பிரிவுச்சுமைகளைச் சுமந்தபடி எட்டியாந் தோட்டைக்குப் புறப்பட்டேன். ஓரிரு தமிழ் நண்பர்களுடனும் பல சிங்கள நண்பர்களுடனும் அன்னியோன்னியமாக இருக்க நாட்கள் நகர்ந்தன. அப்போது தான் அந்தச் சம்பவம் நடந்தது.

நான் தினமும் மனதில் வைத்துப் பூசிக்கும் மாகாமாரி அம்பாளுக்கு நாளைய தினம் 1008 சங்கு வைத்துச் சங்காபிஷேகம் நினைவு தெரிந்த நாளில் இருந்து இந்த கண்கொள்ளாக் காட்சியை நான் காணாமல் விட்டதில்லை. ஒரு மாதத்திற்கு முதலே ஆரவாரங்கள் ஆரம்பித்துவிடும். கோயிலைச் சுத்தப்படுத்துவதும், காசு சேர்ப்பதும், இளநீர் வெட்டுவதும், பந்தல் போடுவதும், சந்தைக்குச் சென்று மரக்கறி சேகரிப்பதும், வண்டிலில் அரிசி மூட்டை வாங்கி வருவதும் எல்லாமே இத்தனை காலமும் நான் இல்லாமல் நடை பெற்றதில்லையே. இவ்வருடம் எனக்கு இப்படியொரு நிலை வந்துவிட்டதே. தாயே நான் என் செய்வேன். இங்குள்ள சிங்கள மேலதிகாரியிடம் எனது தாய்க்கு இங்கு அபிஷேகம், எனக்கு லீவு தாருங்கள் என்றால் எப்படித் தருவார்கள். வேலைக்குச் சேர்ந்து இன்னும் இரண்டு வாரங்கள் கூட ஆகவில்லை. ஏன் அம்பாளே என்னைச் சோதிக்கின்றாய் என மனம் புலம்பியது. கடமையா? பக்தியா? என்று ஒரு போராட்டம் . இறுதியில் கடமையே வென்றது. நான் அதிகாலை எழுந்து கடமைகளை முடித்து வேலைக்குச் செல்லத் தயாரானேன். தலை சீவும் போது கண்ணாடியில் எனது முகத்தைப் பார்த்தேன். நெற்றியில் சின்னதாக ஒரு பரு அதைக் கிள்ளி எறிந்துவிட்டு வேலைக்குச் சென்று விட்டேன். கையெழுத்து இட்டு கடமையைத் தொடங்கினேன். அங்குள்ள எல்லோரும் என்னையே பார்ப்பது போன்ற ஒரு பிரமை. இல்லை அது பிரமை இல்லை. உண்மை எனது சிங்கள நண்பர்கள் என்னிடம் நெருங்கி வந்து கூறினார்கள். உமது முகமெல்லாம் அம்மைப் பருக்கள் போட்டு விட்டன. நீர் இங்கு இருப்பது நல்லதல்ல. உடனே யாழ்ப்பாணம் செல்லும்

என்று கூறினார்கள். அப்போதுதான் நான் என்னையே அவதானித்தேன். எனது உடல் பூராகவும் அம்மைப் பருக்கள் போட்டுவிட்டன. காச்சல் ஒருபுறம். எனது மேலதிகாரி என்னை உடனே யாழ்ப்பாணம் போவதற்கு அனுமதி தந்து என்னை புகைவண்டியில் ஏற்றி விட்டார். இப்படியான நோய் உடையவர்கள் பொது மக்களுடன் கலந்து பிரயாணம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே ஒரு பெரிய படுக்கை விரிப்பால் எனது உடலையும் முகத்தையும் மறைத்தபடி புறப்பட்டேன். என்னுடைய சங்காபிஷேகம் பெரிதா? உன்னுடைய வேலை பெரிதா? என்று அம்பாள் என்னைக் கேள்வி கேட்பது போன்ற குற்ற உணர்வுடன் சுன்னாகம் வந்து சேர்ந்து நடையாக வருஷப்புலம் வந்து கொண்டிருந்தேன். மங்கல வாத்திய ஒலி என்னை விரைந்து வரும்படி அழைப்பது போல் ஒலித்துக் கொண்டிருந்தது. இரவு 10.00 மணி இருக்கும். அம்பாளின் சந்நிதானத்தை வந்தடைந்தேன். அம்பாளே நான் செய்த பிழையை மன்னித்துக் கொள். இனிமேல் என்ன தலை போறகாரியம் என்றாலும் உன் சங்காபிஷேக த்திற்கு வந்து விடுவேன் என்று கதறி அழுதேன். அன்பின் மறுவடிவம் அல்லவா அம்பிகை. அவள் என்னை மன்னித்து ஏற்றுக்கொண்டாள். அன்றிலிருந்து நான் சங்காபிஷேகத்தைத் தவறவிடுவதில்லை. என்ன பெரிய வேலை இருந்தாலும் எத்தனை மைல் தொலைவில் இருந்தாலும் அவள் அடிக்கு ஓடோடி வந்து விடுவேன்.

எனது தந்தையார் அமரர் முருகேசு சின்னத்துரை தனக்கு அம்பாள் செய்த அற்புதங்களை அடிக்கடி என்னிடம் கூறுவார். அவரது குறிப்பேட்டில் இருந்து தொகுத்தவையே மேலே உள்ள விடயங்கள். எனது தந்தையார் நான் அறிந்தகாலம் முதல் இறக்கும் வரை மகாமாரி அம்பாளின் மீளா அடிமையாக வாழ்ந்து வந்தவர் என்பதை பெருமையுடன் நினைவு கூறுகிறேன். மகாமாரி அம்பாளின் நிர்வாக சபையில் தலைவராக, செயலாளராக, பொருளாளராக இருந்து தன்னால் இயன்ற தொண்டினைச் செய்து வந்தவர். அப்பா அடிக்கடி கூறுவார் அம்பாளை நம்பியவரை அவள் கைவிட்ட தில்லை. அவவை நினைத்த வர்க்கு நித்திய இன்பம். அவர் அம்பாளிற்குச் செய்த தொண்டின் பலனோ என்னவோ அம்பாள் அபிராமிப்பட்டருக்குக் காட்சி கொடுத்த அந்த பட்டரின் பூரணை திதியிலேயே அப்பா அம்பாள் அடியினைச் சென்று அடைந்து விட்டார். நாமும் என்ன துன்பம் வந்தாலும் "சிக்கெனப்பிடித் தேன் தேவியே செய்வது ஒன்றும் நானறியேன்" என்று அவனது மலர்ப்பாதங்களை இறுகப்பற்றினால் கடைக்கண் பார்வை என்ன? முழுப்பார்வையே எமக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

"முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லையே"

மாரி மகள்

நா. கௌரி

❋ ❋ ❋

எங்கெங்கும் சக்தி மயம்

"நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலை ஞானம்
கற்குஞ்சரக் கன்று காண்.

முப்பெரும் சக்திகளில் முத்தவளே!
முக்கண்ணனுக்கு என்று மேத்தவளே!
எப்பொழுது மெமைக் காப்பவளே!
என்றும் தவக்கோலம் ஏற்றவளே!
அப்பொருள் என்ன வென பதிலு ரைப்பவளே!
அம்பிகையே மகாமாரி யானவளே!
இப்பொழுது வந்தெமை ஆட்கொள்ள வேண்டி
இரஞ்சுகின்றோம் உன் தாள் சரணமம்மா.

கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தில் இருந்து முன்தோன்றியதுவே இந்து சமயம். அது முப்பெரும் பிரிவுகளாக முன் வகுக்கப்பட்டு பின்னிரு பிரிவுகளும் சேர்க்கப்பட்டு ஐம் பிரிவுகளாகியுள்ளது.

சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம் என்ற ஐம் பிரிவுகளும் முறையே சிவன், விஷ்ணு, சத்தி, முருகன், விநாயகர் என்போரை முழுமுதற் தெய்வங்களாக வழிபாட்டிற்கென அமைக்கப் பட்டுள்ளது.

உலகிலேயே உள்ளயாவுமே பெண்மைக்கே உவமையாகக் கொள்ளப் படுகின்றது. பொறுமைக்குப் பூமாதேவியும், செல்வம், கல்வி, வீரம் என்பவற்றிற்கு முறையே அலைமகள், கலைமகள், மலைமகள் ஆகக் கொள்ளப்படுவதுமுண்டு.

குழந்தையின் முதல்வார்த்தை அம்மா, பசுக்கன்றையும், கன்று - பசுவையும் அழைக்கும் பாசையும் அம்மாவே எந்தவொரு வெற்றியை எடுத்தாலும் அங்கே பின்னால் நிற்பவள் பெண்ணே! எனவேதான் சக்தி இல்லையேல் சும்மா சிவனே என்றிரு" என ஆன்றோர் பகர்ந்துள்ளனர்.

ஆதியும் அந்தமும் இல்லாதவன் அந்த ஆதிபராசக்தியே அன்னைய வள் அம்சங்களே சிவன் முதலானோரும் அவர்கள் சக்தியுமே.

அவ்வகையிலே சக்தி வழிபாடு முதன்மையடைகிறது. அன்னையவள் நவராத்திரியில் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் சக்திகளாக முறையே முதல் மூன்று நாட்களும் வீரம் வேண்டி துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களும் செல்வம் வேண்டி இலக்குமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்வி வேண்டி சரஸ்வதியையும் பூசித்து வந்து, இறுதி பத்தாவது நாள் விஜயதசமியில் (இது புரட்டாதி மாத வளர்பிறை பிரதமையில் இருந்து நவமி ஈறாக உள்ள ஒன்பது இரவுகள்) பராசக்தி யானவள் மகிஷாசுரவர்த்தினியாகி, மகிஷா சுரனை சங்கரித்து பெண்மைக் ச் சாந்தமுண்டு. அதுவே பொங்கியெழுந் தால் உலகு தாங்காது என்பதனை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

அதே சக்தியானவள் தன் குழந்தை தனைக் காப்பதற்கென அபிராமிப் பட்டருக்கு முழு அமாவாசை அன்று பூரணச் சந்திரனை வானில் காட்டி (தைமாத அமாவாசை) கருணை காட்டினாளே. அபிராமி அந்தாதி பாடவைத்தாளே.

சக்தியவள் மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சி யாகவும் கைலையிலே விசாலாட்சியாகவும் பெயர் கொண்டாளே. அட்ஷி எனப்படுவது கண். கண் எப்படி எமக்கு இன்றியமையாததோ. அவ்வாறே தாயவள் எமைக் கண்போலக் காக்கின்றாள். அந்த சக்தியவள் தவக் கோலம் பூண்டு கன்னி மகாமாரியாக சுன்னாகம் வருஷப்புலம் தனிலே எமை இரச்சிக்கவென சக்திபீட மகாமாரியாக உருவாகியுள்ளாள்.

சிறு கொட்டகை தனிலே ஆரம்பமாகிய அன்னையவள் தன் குழந்தைகளை நல்லாக்கி பிறநாடுகளுக்கு அனுப்பிவைத்து நலமுடனாக்கி வைத்தாள். அந்நன்றியுணர்வுடன் அவர்களது பேருதவிகளினால் மண்டபங்கள் உருவாகி, அலங்காரத் திருவிழா மஹோற்சவமாக மாறி தேர் மீது அன்னை பவனிவந்து அபிஷேகங்கள் சில பல ஏற்று வந்தாளே.

"கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்"


இன்று பேரன்பர்கள் ஒத்துழைப்பினாலே அன்னையவள் குறுகிய கால வேளைதனிலே இராஜ கோபுரமும் ஏற்று கும்பாபிஷேகமும் கண்டு கொண்டாள்.

மகாமாரியம்பிகைக்கு இன்று தினமொரு அபிஷேகம் மகேஸ்வர பூசையென அன்னபூரணி "அபிஷேகமாரி" ஆகி விழாக்கோலம் காணும் ஆலயத்தில் இருந்து விழி தூங்காது காலமெல்லாம் எமைக் காத்து நிற்பாள்.

சக்தி பீடநாயகியே மகாமாரி!
சங்கடங்கள் தீர்த்திடுவாய் மகாமாரி!
பக்தியுடன் பாடுகின்றோம் மகாமாரி!
பாவவினை போக்கிடுவாய் மகாமாரி!
ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கம்
பொ. புவனேந்திரன் குடும்பம்

❋ ❋ ❋











மாலை அணியும் பொழுது
கூறவேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம் வனமுத்ராம் சுத்தமுத்ராம் சுத்ரமுத்ராம் நமாம்யஹம் சாந்தமுத்ராம் சத்யமுத்ராம் வருத முத்ராம் நமாம்யஹம் சபர்யாஸ்ராம் சத்யேனமுத்ராம் பாது சதா பிமே நமாம்யஹம் குருதஷிணயா பூர்வம் தஸ்யாநுக்ரண காரிஹே சரணாகத முத்ராக்யம் த்வன முத்ராம் தார யாம்யஹம் சின்முத்ராம் கேசரீ முத்ராம் பத்ரமுத்ராம் நமாம்யஹம் சபரியாசல் முத்ராயை நமஸ்தூப்யம் நமோ நமோ!

மஹா கும்பாபிஷேக மகிமை

நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்
தேடுமின் தேடிச் சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்திற் கோயிலாய்க் கொண்மினே.

இறைவன் திருவருளைப் பெறுவதற்குச் சிறப்பிடமாக விளங்குவன திருக்கோயில்களே. தனி மனிதனுடைய நன்மைக்கும் சமுதாய நன்மைக்கும் ஆலயங்களின் நலன் இன்றியமையாதது ஆகும். ஆகவே நாட்டுக்கு நலம் செய்யக் கருதுவோர் எவரும் ஆலயங்கள் செம்மையுற்று விளங்கவும் அவற்றுள் நித்திய, நைமித்திக நிகழ்ச்சிகள் குறைவற்று விளங்கவும் ஆவன செய்தல் வேண்டும். ஆலயங்கள் புறக்கணிக்கப் படுமாயின் அது நாட்டுக்கே தீமையை விளைவிக்கும்.

"ஆற்றகு நோய்மிகும் அவனி மழைகுன்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

என்பது திருமூலர் வாக்கு. உடம்பிற்கு இருதயம் போன்றது ஓர் ஊருக்கு ஆலயமாகும். அகப் பூசையால் உள்ளம் தூய்மையடைவது போல் ஆலய வழிபாட்டால் நாடும் கிராமமும் நற்பலன் அடையும்.

திருக்கோயில்களில் முக்கியத்துவத்தை நோக்கிய மகாமன்னர்கள் தங்கள் அரண்மனைகளை விடத் திருக்கோயில்களையே மிகச் சிறப்பானதாகவும், அழியாதனவாகவும் ஆக்கி வைத்தனர். தங்கள் வெற்றிச் சின்னங்களையும் கலை அழகுகளையும் அவர்கள் தங்கள் அரண்மனை முதலிய இடங்களில் கண்டு மகிழாமல் திருக்கோயில்களி லேயே கண்டு மகிழ்ந்தனர்.

திருக்கோயிலின் அமைப்பை உற்று நோக்கின் அது நமது உடம்பின் அமைப்பையே ஒத்திருப்பதைக் காணலாம். கற்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் ஆறும் முறையே மூலாதாரம்,

சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாக அமையவும், மூன்று ஆபரணங்கள் தூல, சூக்கும, காரண சரீரங்களாகவும்; பஞ்ச ஆபரணங்கள் அன்மைய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்பனவாகவும் அமைகின்றன. திருக்கோயில் அமைப்புக்கள் அனைத்தும் உடம்பின் அமைப்பையே பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. எனவே, நாட்டின் உயிராகத் திருக்கோயில்களும், இறைவனும் காட்சி அளிப்பதை யாவரும் அறிவர். திருக்கோயில்களில் நித்திய நைமித்தியங்கள் செவ்வனே நடைபெறச் செய்வதோடு அவை பழுதடையாமல் அவ்வப்பொழுது திருப்பணிகள் பல செய்தும், மூர்த்திகட்கு அஷ்டபந்தனம் சாத்தியும், கும்பாபிஷேகங்கள் செய்வித்தல் வேண்டும். அப்பொழுதுதான் கோவில் கள் புத்தம் புதியனவாய் இறைவன் திருவருட் பொலிவை உடையனவாகி விளங்கும். பன்னிரெண்டு ஆண்டுகட்கு ஒருமுறையேனும் தவறாது கோயில்களில் மூர்த்திகளுக்கு மருந்து சாத்தி கும்பாபிஷேகம் செய்வித்தல் வேண்டும் என்பது சிவாகம விதி.

கும்பாபிஷேகம் என்பது எல்லாவகையான குறைபாடுகளும் நீங்கி இறைவன் திருவருள் விளக்கம் மேம்பட்டுத் தோன்றுமாறு செய்யும் பெருஞ்சாந்தியாகும். இது திருக்கோயில்களில் உரிய காலங்களில் நடாத்தப்பட வேண்டியது இன்றியமையாதது.

மஹா கும்பாபிஷேகத்தைச் செய்விப்பவரும் தரிசித்தவரும் எல்லா வகையான குற்றங்களிலும் நீங்கி இறைவன் திருவருளுக்குப் பாத்திரரா வார்கள், யந்திர, மந்திர, உபாசனா மார்க்கங்களால் வேறு எங்கும் காணாத அற்புத தெய்வீக சக்தியை அனுபவத்தில் கண்டு களித்த நாடு நம்நாடு. தெய்வத் திருவுருவங்களை மந்திர ரூபமாக வைத்து வழிபடுவதாலேயே விஷேட பலன் உண்டாகும். அதற்குக் காரணம் மந்திரங்களிலே தெய்வ சாந்நித்தியம் மிகுந்திருப்பதே. தெய்வ வழிபாட்டில் மந்திரம் முதன்மை யானதாகவும் அதற்குரிய பாவனையும் கிரியையும் உடன் நிகழ வேண்டுவனவாகவும் அவற்றால் வழிபடும் இடங்களைக் கும்பம், விம்பம், தம்பம் என மூன்றாகவும் வைதீக சமயங்கள் கூறும் மூன்று வகையில் கும்பத்தில் சிறப்பாக வழிபட்டு அதில் தெய்வீக சத்தி விளங்கப்பெற்ற நீரை விம்ப தம்பங்களுக்கு அபிஷேகித்தலே கும்பாபிஷேகம் ஆகும். இதன் முக்கிய அங்கம் இறைவனை யாகத்தில் வழிபடும் அக்கினி காரியமாகும். ஆலயத்தின் அமைப்பைப் போலவே கும்பத்தின் அமைப்பும் தத்துவங் களையுடையது. கும்பம் சிவனது திருமேனியாகவும், அவனது அளவற்ற சக்திகளின் சொரூபமாகவும், முப்பத்தாறு தத்துவங்களின் வடிவமாகவும்,

எல்லாத் தேவர்களின் சொரூபமாகவும், சர்வ தீர்த்தங்களின் ரூபமாகவும் அமைகின்றது. யாகசாலை, யாககுண்டங்கள், முதலியனவும், யாக அக்கினியும் அவ்வாறே பல தேவர்களின் சொரூபமாகவும், தேவ தேவரான சிவபெருமானது அருள் வடிவமாகவும், மற்றும் பலவாறாகவும் அமைகின்றன. அவைகளைத் தக்க ஆகம சீலர்களால் முறைப்படி அமைத்து வேதசிவாகம அத்தியயனம், திருமுறைப் பாராயணம், சிவனடியார் தோத்திரங்கள் முதலியவற்றோடு செய்து கும்பத்திலுள்ள நீரை ஸ்தூல லிங்கமாகிய இராஜகோபுரத்திலும், கோயில் விமானத்தின் உச்சியிலும் சூக்கும லிங்கமாகிய மூலஸ்தான மூர்த்தியின் மேலும் அபிஷேகிப்பதால் தூய்மை பெற்று அவ்விடங்களில் சிவ சாந்நித்தியம் மிகுந்து விளங்கும். நித்திய, நைமித்திய, காமிக வழிபாடுகளுக்கு விஷேட பலன்கள் சித்திக்கின்றன. அவைகளை அனுபவத்தில் உணர்ந்தே பெரிய அரசர் முதலான நம் முன்னோர்கள் கும்பாபிஷேகத்தை முதன்மையாகக் கருதிச் செய்தும் வந்தனர். செய்தும் வருகின்றார்கள். இத்தகைய சிறந்த மஹா கும்பாபிஷேகச் சிறப்பு இப்பொழுது இத்திருக்கோவிலில் வாய்த்துள்ளது நாம் செய்த தவப்பயனாகும்.

இத் திருக்கோயிலின் மஹா கும்பாபிஷேகக் காட்சியும், வேத, சிவாகம அத்தியயனங்களும், திருமுறைப் பாராயணமும் இவற்றின் கேள்வியும் சைவ சித்தாந்த மகா நாட்டுப் பேருரைகளும் அன்பர்களுக்குக் கண்பெற்ற பயனாகவும், செவி பெற்ற பயனாகவும் அமைகின்றன. இச்சிவ புண்ணிய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு அன்பர்கள் இருமைப் பயனும் பெற்று இன்புறுவார்களாக.

சிறந்த சிவபுண்ணியம் :

"செய்தார் சிறக்கச் சிவபுரத்தைச்
சிற்ப வுரையில் திகழ்விதியால்
எய்தார் பிறப்பிற் சிவலோகம்
எய்திப் போகம் இனிதருந்தி
வெய்தாம் வினையும் ஆணவமும்
வீயா மாயை யொடும்விடவே
மெய்யாம் பரம வித்தையுற
விமலன் கமலம் விரவுவரே"

என்று திருப்பணி செய்பவர்கள் அடையும் பேறுகள் பேசப் பட்டுள்ளன. அருட்பணி செய்யத் துடித்துக் கொண்டிருக்கின்ற அம்பாள் திருக்கூட்டத்துக்கு இது அரியதோர் வாய்ப்பான காலமாகும்.

துர்க்கைஅம் மாவருள் வாயென நைந்துனைத் தோத்தரித்தால்
நற்குண மாண்பும் சிறந்தவில் வாழ்க்கையும் ஞானம்நன்றி
பொற்புயர் மக்களும் போதமும் வீடும் பொழிந்தருள்வாய்
சர்க்கரை பால்பழம் ஊறிய சாறெளச் சார்ந்தவர்க்கே.

கும்பாபிஷேகக் கிரியைகள்

ஆசார்ய வர்ணம்:

முதலில் அடியார்கள், ஆலய அறங்காவலர்கள் தமக்கு இவ் விழாவைக் குறைவுற நடாத்தி நிறைவுறச் செய்யும் ஓர் ஆசாரியாரையும் அவர் மூலம் சாதக போதகர்களையும் தேடிக்கொள்வர். இதுவே ஆசார்ய வர்ணம் எனும் கிரியை ஆகும். பின்பு குருவானவர் சாதக சிஷ்யர்களோடு விழாவெடுக்க இருக்கும் ஆலயத்தை அடைந்து குறைவிலாத் திரவியங் களோடும் நிறைவுற்ற மந்திரங்களோடும் பின்வரும் கிரமத்தில் விழாவை இனிதே செய்வர்.

விநாயகர் வழிபாடு:

விழாவானது இடர்களெதுவுமின்றி இனிது நிவேற வேண்டுமென வேண்டி விநாயகரை வணங்குதல்.

சங்கற்பம்:

விழாவினைக் குறைவற முடிப்பதாகக் குருவும், அறங்காவலரும் சேர்ந்து செய்து கொள்ளும் பிரதிக்ஞை.

திரவியசுத்தி:

கும்பாபிஷேக திரவியத்தைச் சுத்தம் செய்தல்.

கணபதி ஹோமம்:

விக்கினம் தீர்க்கும் விநாயகனுக்குச் செய்யப்படும் விழா. இது பெரிய அளவில் செய்யப்பட்டு முடிவிற் பிரார்த்தனை செய்யப்படும்.

அனுஞ்ஞை:

இறைவனிடம் விழாத் தொடங்க அனுமதி பெறல்.

கிராம சாந்தி பிரவேச பலி:

நகரத்திலுள்ள துர்தேவதைகளைப் பலிகள் மூலம் திருப்தி செய்து நகரையும், ஆலயத்தையும் இரட்சிக்குமாறு அட்டதிக்குப் பாலகர்க ளையும், பைரவரையும் வேண்டுதல்.

இரக்ஷோக்ன ஹோமம், திசா ஹோமம் முதலியன:

இரக்ஷோக்ன தேவதையை வழிபட்டு கிழக்கே சிவாஸ்திர தேவரையும், தெற்கே அகோரஸ்திர தேவரையும், மேற்கே பாசுபதாஸ்தி தேவரையும் வடக்கே பிரத்தியங்கிரி தேவரையும், ஸ்தாபித்தல்.

வாஸ்து சாந்தி:

யாக சாலையையும், ஆலயத்தையும் சுத்தி செய்தவதற்காக வாஸ்து புருஷனைப் பூசித்தல்.

மிருத்சங்கிரகணம் (மண் எடுத்தல்):

முளைப்பாலிகை போடுதவற்காக பூமாதேவியிடமிருந்து மந்திர பூர்வமாக மண் எடுத்தல்.

அங்குரார்ப்பணம் (முளையிடுதல்):

"பண்ணிய புண்ணியம் பயிரினில் தெரியும்" என்ற முதுமொழிக் கேற்பச் செய்யும் பலா பலன்களை அறிவதற்காகச் சந்திரனை வழிபட்டு முறையிடல்.

ஆசார்ய ரட்சாபந்தனம் (காப்புக் கட்டுதல்):

ஆசாரியரையும், ஏனையோரையும் இடர்களிலிருந்து பாது காப்பதற்காகக் கட்டப்படும் காப்பு.

பிரசன்ன பூசை:

கும்பத்தில் எழுந்தருளுவதற்காகப் பிம்பத்தில் இறைவனைப் பூரண கலைகளோடு பிரசன்னமாகுமாறு வேண்டப்படும் விஷேட பூசை.

கடஸ்தாபனம்:

மந்திரங்களோடு குடத்தில் நூல்சுற்றி, வாசனா திரவியங்கள், நவரத்தினங்கள் முதலியவையிட்டு நீர் நிரப்பிக் கும்பத்தை உருவாக்குதல்.

கலாகர்ஷணம்:

விம்பத்திலிருந்து இறைவனைக் கும்பத்துக்கு எழுந்தருளிவித்தல்.

யாகசாலைப் பிரவேசம்:

கும்பத்தை வேத, திருமுறைப் பாராயணங்கள் ஒலிக்க, மங்கல வாத்தியம் முழங்க யாகசாலைக்கு எடுத்து வந்து விஷேசமாக விதிமுறைப்படி அமைக்கப்பட்ட மேடையில் வைத்தல்.

விஷேச சந்தி:

பிரதான ஆசாரியரும், மூர்த்தியர்களும் தாம் செய்யும் ஜபங்கள், ஆகுதிகள் அனைத்தும் இறைவனை அடைய வேண்டும் என்ற நோக்குடன் காயத்ரி ஜபம் செய்து தர்ப்பணங்கள் செய்தல்.

யாக பூசைகள்:

யாகத்தில் பூசை, அக்கினி காரியம், தீபாராதனை, வேதத் திருமுறை பாராயணங்கள ஆகியன காலக் கணக்கில் நடைபெறும்.

தீபஸ்தாபனம்:

நெய்யினால் தீபமேற்றி அர்ச்சித்து தீபத்தைச் சுமங்கலிப் பெண் கைகளால் தாங்கி வீதியை வலம் வரும் படி செய்து மூலஸ்தானத்தில் வைத்தல்.

இரத்தின ஸ்தாபனம்:

விக்கிரகம் ஸ்தாபிக்கப்படவிருக்கும் பீடத்திலிருக்கும் குழிகளில் நவரத்தினங்கள், தானியங்கள், உலோகங்கள் ஆகியவற்றைத் தனித்தனியே உரிய உரிய மந்திரங்களுடன் வரிசையாக வைத்தல்.

யந்திர ஸ்தாபனம்:

பொற்தகட்டில் யந்திரம் எழுதிப் பூசித்து அதனைப் பீடத்தில் வைத்தல்.

பிம்பஸ்தாபனம்:

விக்கிரகத்தை (பிம்பம்) பீடத்தில் ஸ்தாபித்தல்.

அஷ்ட பந்தனம்:

சுக்கான் கல், குங்குலியம், செம்பாக்கு, தேன் மெழுகு, நாற்காலி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் ஆகிய எட்டுத் திரவியங்களின் சேர்க்கை அஷ்ட பந்தனமாகும், இத்திரவியங்களை நன்கு இடித்துப் பீடமும், விக்கிரகமும் நன்கு ஒன்றி இணையும் வண்ணம் சாத்துதல் வேண்டும்.

எண்ணெய்க் காப்பு:

பக்த ஜனங்கள் சுவாமிக்கு எண்ணெய் சாத்துதல்.

பிம்ப சுத்தி:

விக்கிரகத்தைச் சுத்தி செய்தல்.

சுவாமி ரக்ஷாபந்தனம்:

விக்கிரகத்துக்குக் காப்புக் கட்டுதல்.

நியாசம்:

விக்கிரகத்தில் அங்கங்களைப் பதித்தல்.

ஸ்பர்சாகுதி:

யாகசாலையில் உள்ள அக்கினி, கும்பம் இவற்றோடு விக்கிரகத்திற்கு நூலினால் தொடர்பு ஏற்படுத்தி எட்டு மூர்த்திகளையும் ஆகுதி செய்து, விக்கிரகத்தில் சுவாமியை எழுந்தருளச் செயயத் தயார் செய்தல்.

பூர்ணாகுதி:

யாகத்தை நிறைவு செய்தல்

தச தரிசனம்:

மங்கலமான பத்துப் பொருட்களைச் சுவாமிக்குக் காண்பித்தல்ல அதாவது, பசு, ஆசாரியர், வேதம் அறிந்தவர், கண்ணாடி, பூரண கும்பம், தீபம், கன்னி, கணிகை, எஜமானர், சிவபக்தர்கள் ஆகிய பத்து வகையும் தச தர்சனமாகும்.

தொடர்ந்து மஹாஅபிஷேகம் அலங்கார விஷேட பூசை, சுவாமி வீதி வலம், ஆசாரியர் சம்பாவனை, திருக்கல்யாணம் என்பவற்றோடு கும்பாபிஷேக விழா நிறைவு பெறும். நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று முடிவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நிகழ வேண்டும். இக்கிரியைகளை ஆலயத்தில் செம்மையாக நிகழ்த்துவதால் சர்வ மங்கள சுபம் யாவருக்கும் கிடைக்கிறது.

சிவஸ்ரீ கனகபாலகுரமாரக் குருக்கள்
ஆலய பிரதம குரு
இலண்டன் ஈலிங் ஸ்ரீ
கனகதுர்க்கை அம்மன் ஆலயம்.

❋ ❋ ❋

அம்பாள் பெருமை

சிவபூமி என்று திருமூலரால் பேற்றப்பட்டதும் தேவாரங்களிலும் புராணங் களிலும் விதந்துரைக்கப்பட்டதுமான இலங்காபுரியின் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். யாழ் குடாநாட்டின் மத்தியில் அமைந்த ஊர் சுன்னாகம். சித்தர்களும் புலவர்களும் பத்திமான்களும் தமிழும், சைவமும் வளர்ந்த சுன்னாகத்தின் வடபால் அமைந்துள்ள பதிதான் வருஷப்புலம். முக்கனிச் சோலைகளும் முகிழ் வெடிக்கும் மலர்ச் சோலைகளும் நிறைந்துள்ள இப்பதியில் வெள்ளவாய்க்கால் ஓரமதில் மகாமாரி கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள்.

இற்றைக்கு ஏறத்தாள 200 ஆண்டுகளுக்கு முன் இவ்விடத்தில் சிறுகுடிசை அமைத்து, விளக்கு வைத்து அம்பாளை வழிபடத் தொடங்கினர். இதன் பின் ஊரவர்கள் சுண்ணாம்புக்கல்லால் சிறு கோயில் அமைத்தனர். பின் எமது கிராமத்து அயல் கிராமமான சுன்னாகம் ஐயனார் கோயிலில் சங்காபிஷேகம் நடைபெறுவதைப் பார்த்து எமது கிராமத் திலுள்ள இளைஞர்கள் அவ்வாறு எங்கள் கோயிலிலும் சங்காபிஷேகம் செய்ய வேண்டும் என்ற ஆவாவில் அமரர் கந்தையா சுப்பிரமணியம் தலைமையிலான இளைஞர்கள் ஒன்று திரண்டு வீடு வீடாகச் சென்று பணம் சேர்த்து அம்பாளுக்கு 1949ஆம் ஆண்டளவில் சங்காபிஷேகத்தை சிறப்பாகச் செய்தார்கள். இதன் பின்னர் மிகதியாக உள்ள பணத்தையும் செல்லர் நடராஜா (கிராம உத்தியோகத்தர்) அவரின் முதல் மாத சம்பளப் பணத்தையும் சேர்த்து நாலு தூண் போட்டு சிறு மண்டபம் அமைத்தார்கள். அதன் பின்னர் எமது கிராம மக்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற அன்னிய நாடுகளுக்குச் சென்று வேலை பார்த்து பணம் அனுப்பினார்கள். அவர்களின் பண உதவியும் எமது ஊர் மக்களின் பண உதவியையும் ஒன்று சேர்த்து அம்பாளுக்கு வைகாசி மாதம் வரும் பூராட நட்சத்திரத்தில் 1008 சங்காபிஷேகத்தை மிகவும் சிறப்பாகச் செய்து மகேசுவரப் பூஜையும் செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து அயல் கிராமமான ஐயனார் கோயிலில் வேள்வி நடைபெறுவது வழக்கம். அந்த வேள்வியின்போது துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் ஒன்று வைத்து அதில் சேர்ந்த பணத்தைக் கொண்டு அம்பாளுக்குத் தேவையான குடை, மணி போன்ற பொருட்களை வாங்கினார்கள்.

வெளிநாடுகள் சென்று பணம் சம்பாதித்து அதில் ஒரு பங்கு அம்பாளுக்கு அனுப்பினர். பெரியோர்களின் முயற்சியாலும் அம்பாளுக்கு 1971ஆம் ஆண்டு முதல் முறையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து 1987ஆம் ஆண்டும், 2000ஆம் ஆண்டுகளிலும் சிறப்பாக நடைபெற்றது பின்னர் வெளி வீதி அமைத்துப் புதிதாக அமைக்கப்பட்ட தேரில் முதல் முதலில் அம்பாள் வீதி உலா வந்தாள். தற்போது 2014ஆம் ஆண்டு புதிதாக கோபுரமும் அமைக்கப்பட்டு கோயில் மூலஸ்தானம் வசந்த மண்டபம் அர்த்த மண்டபம் புதுப்பிக்கப்பட்டு மகா மண்டபம், முன் மண்டபம், வில்லு மண்டபம் அமைக்கப்பட்டு குட முழுக்குப் பெரு விழாவும் நடைபெற்றது.

ஆரோக்கியம், நீண்ட ஆயுள், குறைவில்லாத செல்வம் செயல்கள் யாவிலும் சிறப்புடன் செழிக்க தானார்த்த சித்திப்ரதாம் நானா புஸ்பவரா ஜிதாங்க ரியுகளாம் நாராயனேனார்ச்சிதாம் நாதப் ரஹம் மயீம் பாரத் பரதாம் நானார்த்த தர்வாத்மிகாம் மஹாமாரிப்ரண தோஸ்மி ஸ்நதத மஹம் காருண்ய வாராம் நிதிம்?

பக்தி மிக்கவர்களின் இதயத்தில் வசிப்பவளும், அர்வார்த்த சித்தியைக் கொடுப்பவளும் வண்ண வண்ணப் பூக்களால் அர்ச்சிக்கப் படுகிற இரண்டு பாதத் தாமரைகளையுடையாளும், நாதப் பிரம்மாவை களும், சர்வவேதாந்தங்களின் சாரமானவளும், கருணைக் கடலான வளுமாகிய வருஷப்புல மகாமாரி அம்மனை வணங்குவோம். வருடத்தில் மாசி மாதம் மகம் நட்சத்திரத்தில் பெருநாளை தீர்த்த உற்சவமாகக் கெண்டு ஒன்பதாவது தினம் இரதோற்சவம் நடைபெறும். பக்தர்களின் பாவ புண்ணியங்களை மேம்படுத்தி அனைத்து மக்களும் அருட்கடாட்சம் பெற்று பெருவாழ்வு வாழ அம்பாளின் பாதங்களில் பணிகின்றோம்.

சுனிதா

(அமரர் கந்தையா சுப்பிரமணியம் நினைவாக)

❋ ❋ ❋

அன்னை மகாமாரி

கடவுளின் திருவடிகளை அடையவே நாம் பிறவி எடுத்தோம். அத்திருவடிகளை சிந்தித்து துதித்து வணங்குதல் நம் கடமையாகும்.

"ஆக்கையாற் பயனென் -அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டில் போற்றி என்னாதவில்
வாக்கையாற் பயனென்"

கடவுளை வணங்க எமக்கு உதவுவது திருக்கோயில்கள். அன்னை மகாமாரியின் கோயில்களிற்கு அருகிருக்கும் பாக்கியம் பெற்ற அடியார்களில் ஒருவராகத் திகழ்வதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

"தனம் தரும் கல்வி தரும், ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவம் தரும் , நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே."

இப் பாடலுக்கு ஏற்ப தன் குடிமக்கள் அனைவரது குறைகளையும் தீர்த்து நல்லன எல்லாம் அவர்களுக்கு அருளி வளமுடன் வாழ வைக்கிறாள் அன்னை மகாமாரி. கடந்த மாதம் 08.06.2014 இல் ராஜகோபுரத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கிறாள். அன்னை மகாமாரி சிறந்த சிற்பிகளின் கைவண்ணத்தில் அழகான சிலைகளும், சுவரோவியங்களும் மண்டபத்தை அலங்கரிக்கின்றன. அதீமூலத்தில் அன்னை அமர்ந்திருக்கின்றாள். செல்வத்தை வழங்கும் மகாலஷ்மியும் கல்விக்கரசி சரஸ்வதியும் அன்னையில் இருமருங்கிலும் அடுத்த மண்டபத்தில் அமர்ந்துள்ளனர். பரிவார மூர்த்திகளாக வினைகளை அகற்றும் விநாயகப் பெருமான், காக்கும் கருணைக் கடலான கார்மேக வண்ணன் கண்ணனும் ஸ்ரீதேவி , பூதேவி சமேதரராக வீற்றிருக்கிறார். அழகுத் தெய்வம் முருகன் வள்ளி தெய்வயானை சமேதரராக அமர்ந்துள்ளார். காவல் தெய்வம் வைரவரும் முன் வாசலில் உள்ளார். அனைவரும் புடைசூழ அம்பிகை அனைவருக்கும் அருள் பாலிக்கின்றாள். எங்கள் குல தெய்வத்தின் அருள் பெற்று அனைவரும் நலமுடன் வாழ அன்னை மகாமாரியின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறோம்.

நிர்மலா சிவராசா

❋ ❋ ❋

பிரார்த்தனை

பிரார்த்தனை என்பது ஓர் அறநெறி, ஓர் உந்துசக்தி ஓர் உற்சாகமருந்து. பிரார்த்தனை மூலம் நமக்குக் கிடைக்கும் மன அமைதி அளவிலாத ஆனந்தம் உடல் உளசுகம் என்பவற்றை உணரும் போதுதான் அதன் மகிமையைப் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் இந்த அவசரயுகத்தில் கடவுளைப் பிரார்த்திக்க நேரமின்றி அவசர அவசரமாக பிரார்த்தனையை முடிப்போர் எத்தனைபேர்? முதலில் கடவுளை முழுமையாக நம்ப வேண்டும். கடவுளின் அற்புதங்களுக்கு அளவே இல்லை அவருடைய சக்திக்கு எல்லையே இல்லை. அவரது கருணைக்கு விளிம்பே இல்லை. கடவுளை நம்மோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள பிரார்த்தனை ஒன்று தான் பாசக்கயிறு. மனிதசக்திக்குப் பின்னாலிருக்கும் இறைசக்திதான் நம் தினசரி வாழ்க்கையை நடாத்துகிறது. அந்தக் கடவுளை உணரவேண்டும். மனம் முழுவதும் கடவுள்மீது லயிக்கவேண்டும். பூதக்கண்ணாடி வழியே பாயும் சூரிய கிரகணங்களைப் போல கடவுளிடம் மனம் குவியவேண்டும் அப்போதுதான் பிரார்த்தனையின் சக்தியை உணரமுடியும்.

நாம் ஒவ்வொருவரும் சந்தோஷமாக இருக்கநினைக்கின்றோம். இன்று சந்தோஷம் தருவதாக நாம் நினைப்பது நாளையோ இன்னும் சிலநாட்களில் பெருந்தொல்லையாக வேதனையாக மாறிவிடுவதைக் காண்கிறோம். சந்தோஷம் மன அமைதி என்பது ஒருவித மனநிலைதான். அதற்காகத்தான் நாம் பாடுபடுகிறோம். இந்த மனநிலையைப் பெறுவது மந்திரத்தால் அல்ல. கடவுளிடம் இறைஞ்சும் பிரார்த்தனையால் மட்டுமே முடியும்.

நம் முன்னோர்களும் அநேக கஷ்டங்களால் துன்பமடைந் திருக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கடவுள் அருள் என்ற மாபெரும் சக்திதான் துணைநின்று காப்பாற்றும் என்பதைச் சொல்லி வைத்துள்ளனர். கடவுள் அருள் என்பது பேரொளி. அதைத் தேடிநாம் ஓடவேண்டும். அதைத்தேடி நாடி ஓடவைப்பது பிரார்த்தனை தான். இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் அவன் நம்மைநோக்கி ஆயிரம் அடி எடுத்துவைப்பான். உலகப் பற்றை விடுவதற்குச் சுலபமான வழி கடவுளைப் பிரார்த்தனை மூலமாக நெருங்குவதுதான். பிரார்த்தனை அதிகமாக அதிகமாக கடவுளுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி குறைந்து கொண்டே வரும். பிரார்த்தனை மூலம் ஆன்மிக எழுச்சி ஏற்படும்.

இதனால் தேகம் பூரிப்படைகின்றது. அறிவு தீட்சண்யம் பெறுகிறது. மனித உறவுகளுக்குப் பின்னே மறைந்து கிடக்கும் உண்மை களைத் தெரிந்து கொள்ளும் ஆழ்ந்த ஞானம் உண்டாகிறது.

மனப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்யும் போது வாழ்க்கை மிகத் தெளிவானதாக மாறுதல் அடைந்துவிடும். செயலிலும் மாறுதல் ஏற்படும். மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்வதில் தனது சுயநலம் பேராசைகள், அச்சங்கள், தவறுகள் ஆகியவற்றைக் கண்டு கொள்ள முடியும். கடமையிலே பற்றுதலும் அறிவிலே பணிவும் அவனுக்கு உண்டாகின்றன. தெய்வீக அருட்பிரசாதத்தை நோக்கி ஆன்மாவின் யாத்திரை ஆரம்பமாகி விடும். பூமியின் ஆகர்ணசக்தி எவ்வளவு உண்மையானதோ அவ்வளவு உண்மையானது பிரார்த்தனையின் சக்தியும். நாம் பிரார்த்திக்கும்போது அவ் அண்டமெல்லாம் இயக்கவைக்கும் மூலசக்தியோடு நம்மை நாமே ஒட்டிக் கொள்ள செய்கிறோம். வெறும் விண்ணப்பமாக இல்லாத சரணாகதி முறையில் பிரார்த்தனை புரியும்போது நாம் மாபெரும் சக்தியைப் பெறுகின்றோம். ஈஸ்வர சாந்தியை அடைவதற்கான பயிற்சி என்றே பிரார்த்தனையை மதிக்க வேண்டும். மகாபாரதத்தில் பிரார்த் தனையைப் பற்றிக் கூறும் போது - துன்பம் கண்ணீரைத் துடைக்கும் . உன் தரிசனம் துன்பம் வரும்போது கிட்டுவதால், அடிக்கடி துன்பம் வரட்டும் என்பது என் பிரார்த்தனை. துன்பங்கள் வரும் பொழுது கடவுளைப் பிரார்த்திக்க அவர் அருகே வருகிறாரென்பது மகாபாரதக் கதை மூலம் அறிய முடியும்.

நான் தினமும் வருஷப்புலம் மகாமாரி அம்மனைப் பிரார்த்திப்பதன் மூலம் இத்தனை மைல்களுக்கு அப்பாலும் ஆனந்தமாய் வாழ முடிகிறது.

கேசரத்தினம் செந்தில்பவன்

ஓமான்

❋ ❋ ❋

வருஷப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பிகையின் சித்திரத்தேர்

யாழ்ப்பாணத்தின் வடபால் வெள்ளைநாகம் பூரித்த கதிரமலைச் சிவனார் முதலாகச் சைவாலயங்கள் துலங்கும் சுன்னாகம். இப் புனிதமான பதியிலே வருஷப்புலம் எனும் இடத்தில் அருளாசி வழங்கும் உத்தமியாள் ஸ்ரீ மகாமாரி அம்பாள். இவ் அம்பாளினை அழகிய சித்திரத்தேரில் எழுந்தருளச் செய்து வீதிவலம் வடம் தொட்டுத் தொழுதிட அடியார்கள் பெருவிருப்புக் கொண்டனர். முத்து சிரிப்பழகியார். தேரேறிடும் தேசநாயகியாய், எங்கள் குலத்தாயாக அன்னை மகாமாரி நாயகி தேரினிலே எழுந்தருளும் திருப்பணியை அடியார்கள் உளவிருப்புடன் ஆரம்பித்தனர். திருப்பணிச்சபையானது 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

அந்த வகையில் திருப்பணியை அருட்பணியாகத் தலைமை ஏற்றிடும் திருவாளர் பொ. மனமோகன் தலைமையில் தேர்த்திருப் பணிச்சபை ஆனது அமைக்கப்பட்டது. அத்திருப்பணிச்சபையில் திருவாளர் வை. அம்பிகாவலன் உபதலைவராகவும், திருவாளர் கா. ஐயம்பிள்ளை (ஆசிரியர்) செயலாளராகவும், திருவாளர் கு. நந்தன் உபசெயலாளராகவும், திருவாளர் பொ. புவனேந்திரராஜா பொருளாள ராகவும் இருந்தனர். அத்துடன் இச் சபையினருடன் இவ்வூர் மக்கள் அனைவரும் இணைந்தனர். அம்பிகையின் அழகிய இரதத்தினைச் செய்வதற்குத் தகுதியான ஆச்சாரியாரைத் தெரிவு செய்யும் நிலையில் காங்கேசன் துறைவீதியில் கொக்குவில் பதியில் வாழ்ந்து வருகின்ற சிற்பாச்சாரியார் பெருந்தகை திருவாளர் செ. பாலச்சந்திரன் (ஸ்ரீ காளிகா சிற்பாலயம்) அவர்களை நியமித்து திருப்பணிகளை ஆரம்பித்தனர்.

தேரினுக்குரிய அச்சாணியை கொழும்பு மாநகரில் இருந்து தரைவழியாக அன்று எடுத்துவர முடியாத சூழ்நிலை இராணுவத்தின் இடர்பாடுகள் மத்தியிலும் அதனை தம் முயற்சியாக அம்பிகை கருணையாகக் கொண்டு திருவாளர் ஐயம்பிள்ளை அவர்கள் 1999ஆம் ஆண்டளவில் காங்கேசந்துறைமுகமாக எடுத்துவரப்பட்டது. அதனோடு மருதமரம், வேப்பமரம் முதலான நல்லினமரங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆலயத்திற்கு எடுத்து வரும் முயற்சியால் திருப்பணிச்சபையினர்

சளைக்காது பணியாற்றினர். தேர் செய்வதற்கு அழகான கொட்டகை அமைத்துக் கொடுத்தனர். அவர்களுக்கான உணவு, சிற்றுண்டி, வழங்கி அவர்களில் ஒருவராக விளங்கியவர்கள். திருவாளர் நன்னித்தம்பி குடும்பத்தினர்கள். திருப்பணியின் செயற்பாடுகளுக்கு சிறுதுளி பெரு வெள்ளம் என நிதிகளை உள்ளூரிலும், கடல் கடந்த தேசங்களிலும் வாழும் அடியார்கள் நிதிகளை அன்றைக் கொடுக்கல் வாங்கல் பரிமாற்று ஊடகங்கள் கஷ்டமாக இருந்த போதும் அம்பாளின் காரியங்கள் துரிதகதியில் செயற்பட்டன.

நிதிகள் வந்ததோடு அடியார்கள் உளவிருப்புடன் தம்மாலான அளவிற்கு உடலால், உள்ளத்தால், இரவு பகல் பாராது எங்கள் அன்னையின் இரதோட்டம் பார்த்திட வேண்டும் என்னும் பெரு விருப்புடன் செயற்பட்டனர்.

அம்பிகையின் இரதமானது அக்கினிவடிவாய் தீமைகளை நீறாக்கி அருள் காட்ட வேண்டும் என 25 அடி உயரமுடையதாயும், எண்கோண வடிவுடனும், பவளக்கால்கள் ஒளிர யாழிகள் அசைந்தாடிட முன்னே இரதத்தினைச் செலுத்திட அம்பிகையின் தேர் வெள்ளோட்டம் 2000 ஆம் ஆண்டு அம்பிகையின் வருடாந்த மகோற்சவத்தின் 5ஆம் திருவிழாவில் நடைபெற்றது. பத்தாவது நாள் அம்பாளின் தேர்த்திருவிழாவில் சிங்காரநாயகி சிம்மாசனத்தில் எழுந்து சிவப்பு பட்டுடன் சிரிப்பழகியாய் செஞ்சூலம் விளங்கிய புதிய தேரினில் எழுந்தருளினார்.

புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேரினில் அம்பாளைப் பார்க்க அடியார்கள் அலைமோதி "உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பார்க்க வந்தேன்" என்று தாயுமானவர் கூறியது போல் கண்களை அகலத்திறந்து உள்ளம் என்னும் இதயபீடத்தில் அம்பாள் மகாமாரியை எழுந்தருளச் செய்து திருவருள் கிடைத்திட மந்தாரமலையான இரதத்தை அடியார்கள் வாசுகி போன்ற பாம்பினை ஆதாரமாய்க் கொண்டு பாற்கடலைக் கடைவதுபோல் திருவருளைக் கடைந்து பெற்றுக்கொள்ள அடியார்கள் கூடி அருள்பெற்றுள்ளனர்.

பல்வேறுபட்ட நாட்டின் இன்னல்கள் கஷ்டங்கள் சூழ்ந்த காலத்திலும் மகாமாரியின் கருணை அடியார்களை ஊக்குவித்து செயற்படுத்திய நிலையில் தலைவர் உளத்தூய்மையோடு எப்படியாவது தேர் ஓடவேண்டும் என்ற விடாமுயற்சியால் " ஊர்கூடித் தேர் செய்ததோடு மட்டுமல்ல ஊர்கூடித்தேர் இழுத்துவாரீர் என்ற ஒற்றுமையினை

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்று கூறும் வழி அன்று இரதோட்டம் இடம்பெற்று அடியார்கள் அனைவரும் அம்பாளின் திருவருளுக்கு ஆட்பட்டனர். அதனாலேதான் பாரதியார் கூறுகின்றார். "அம்பிகையை சரணடைந்தால் அதிக லாபம் பெறலாம் நான்குமறைத் தீர்ப்பு" என்பதற்கு அமைவாக, மகாமாரியின் சரணாகதியைத் தேரோட்டத்தில் பாரோடு பதினான்கு உலகப்பாவம். பழி, ஆணவம் எல்லாம் ஓடிவிடும். அவைநீக்கி அ ருள் பெருக்கிடும் எங்கள் உத்தமியாள் மகாமாரி தாயே சரணம்.

" சித்திரத் தேரினிலே சிங்காரநாயகியார்
சிவப்பழகி மகாமாரி நாயகியாய்
சித்தனையாய் வந்தனை செய் அடியாரிடம்
சிறப்புடனே கருணைபொழி மகாமாரியே சரணம்"

மனமோகன் பிரியாங்கன்
வருஷப்புலம், சுன்னாகம்

❋ ❋ ❋

இறைவனுக்கு உகந்த எண்ணெய்கள்

நெய்	-	மகாலெட்சுமி
நல்லெண்ணெய்	-	நாராயணன்
தேங்காய் எண்ணெய்	-	கணபதி
இலுப்ப எண்ணெய்	-	ருத்திரபதி, தேவதை
ஆமணக்கு எண்ணெய்	-	நல்லது நடக்கும்

மாரியம்மா... மாரியம்மா

மாரியம்மா..... மாரியம்மா....
மாரியம்மா..... மகாமாரியம்மா....

எப்பொழுதும் மனமுருகி
உன் புகழை நான் பாட.....
அற்புதங்கள் புரிகின்ற
உனை வேண்டி
பாடுகின்றேன்.....

மாரியம்மா..... மாரியம்மா.....
மாரியம்மா..... மகாமாரியம்மா....

மாசிமக திருநாளில்
தேர் ஏறி வந்திடுவாய்
உன் அழகைக்
காண்பதற்கே
நாங்கள் இங்கு வந்துள்ளோம்....
நோய் நொடிகள் இல்லாது
வாழ்வதற்கே.....
மாசி மக தீர்த்தமாடி வணங்குகின்றோம்....
நாங்கள்
மாசி மக தீர்த்தமாடி வணங்குகின்றோம்.....

மாரியம்மா..... மாரியம்மா.....
மாரியம்மா..... மகாமாரியம்மா.....

ஊரை விட்டு நாம் பிரிந்து சென்ற போதும்...
வழித்துணையாய்
வந்து எம்மைக் காத்து நின்றாய்....
வாரி வாரி வழங்குவதில்
வள்ளலம்மா....
நீ

வருஷப்புல மகாமாரியம்மனம்மா....
வருஷப்புல ஸ்ரீ மகா மாரியம்மனம்மா.....

மாரியம்மா..... மாரியம்மா.....
மாரியம்மா..... மகாமாரியம்மா.....

எத்தனையோ சோதனைகள் வந்ததம்மா....
அத்தனையும் ஒரு நொடியில் சென்றதம்மா
உன்னடியில் சரணடைந்து
வேண்டி நின்றேன்....
அத்தனையும் ஒரு நொடியில் சென்றதம்மா.....

மாரியம்மா..... மாரியம்மா.....
மாரியம்மா..... மகாமாரியம்மா.....

கலை மிளிரும் திருக்கோவில்
அழகுதனைக் காண்பதற்கு
எண் திசையில் இருந்தும்
நாங்கள் இங்கு வந்தோம்.....
கும்பாபிஷேகம் பார்த்து அருள் பெறவே
எண் திசையில் இருந்தும் நாங்கள் இங்கு வந்தோம்....

மாரியம்மா..... மாரியம்மா.....
மாரியம்மா..... மகாமாரியம்மா.....

எப்பொழுதும் மனமுருகி
உன் புகழை நான் பாட.....
அற்புதங்கள் புரிகின்ற
உனை வேண்டி
பாடுகின்றேன்.....

மாரியம்மா..... மாரியம்மா.....
மாரியம்மா..... மகாமாரியம்மா.....

கி. ஈஸ்வரன்
இல. 21, கிரீன் வீதி,
திருகோணமலை.

❋ ❋ ❋

ஆலய வழிபாட்டின் மகத்துவம்

இந்துக்களின் இதயமாக விளங்குவது இந்துக்களின் ஆலயமாகும். "கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்" என்பதற்கிணங்க ஆலய வழி பாட்டின் அவசியத்தை நாம் உணர்ந்துகொள்ளலாம். ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு சிறிய ஆலயமாவது அமைந்திருத்தல் வேண்டும். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" "கோயில் இல்லாத ஊர் ஊர்அல்ல; அடவி" என்ற மூதாதையரின் கூற்றுக்கள் மூலம் ஆலய வழிபாட்டின் மகத்துவத்தை உணர்ந்து மாண்பினை மதித்து இறை தொண்டின் மூலம் அவனை அடைவதற்கு வழிகளை மேற்கொள்ளுதல் சிறந்த பயனைத் தரும். மனிதன் முதலில் மனிதனாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் உயர்திணையில் வைத்து எண்ணப் படுவான். இறைவழிபாட்டின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தலாம். இறைநாமத்தைச் சொல்லச் சொல்ல நமது உள்ளம் தூய்மையடையும், தூய்மையான உள்ளத்தில்தான் இறைவன் குடிகொள்வான்.

ஆலயங்களில் கோபுர வாசலில் காட்சியளிக்கின்ற துவாரபாலகர் களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்கின்றார். இது ஆலயத் தினுள்ளே வழிபடச் செல்வோருக்கு கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்து கின்றது. மற்றொரு துவாரபாலகர் ஒரு கையை விரித்துக் காட்டி நிற்கின்றார். கடவுள் ஒன்றே என்பதுதான். அதைத் தவிர வேறொரு தெய்வமுமில்லையென உணர்த்துகிறது.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்..." என்கிறது திருமந்திரம்.

ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் திருவுருவங்கள் தேவர்களா லும், முனிவர்களாலும், சிவனருள் பெற்றுய்ந்த சான்றோர்களாலும் பிரதிஸ்டை செய்யப் பட்டுள்ளது. அதில் சிவசக்தியை வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி வேண்டு வோர் வேண்டுவதை ஈர்ந்து கொண்டிருக்கிறது. அந்த திருவருட் சக்தி விறகில் தீயும், பாலில் நெய்யும், சார்ந்திருப்பதுபோல் சிவத்திருவுருவத்தில் மறைந்திருப்பதாக அப்பரடிகள் கூறுகிறார். "விறகில் தீயினன் பாலில் நெய்போல்..." உடம்பிலே உயிரும் உயிரிலே இறைவனும் தங்கியிருக்கின்றது. பசுவின் உடம்பு முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதைப் பெறுதல் போல எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளை திருக்கோயில்களிலுள்ள

சிவத்திரு மேனிகளை வழிபட்டுப் பெறுதல் வேண்டும். இறைவன் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட மார்க்கண்டேயருடைய உயிரைப் பறிக்க வந்த இயமனைத் தடுத்து நிறுத்தி மார்க்கண்டேயருக்கு சாகாதவரத்தை ஆண்டவன் அருளினான். அவ்வாறே இறைவன் மீது பக்தி கொண்டெழும் ஆன்மாக்களுக்கு இறைவாத இன்பப் பெருவாழ்வு அளிப்பான். என்ற உண்மையை "பரிந்து நன்மனத்தால் வழி படுமேனி" என்ற பதிகம் மூலம் கூறியுள்ளார். துன்பத்தி லிருந்து விடுதலை பெற்று இன்பத்தை அடைதலே மானிடப் பிறவியின் நோக்கமாகும். உலகியல் இன்பங்கள் யாவும் நிலையில்லாதவை. இறைவனை அடையும் பேரின்பமே நிலையான இன்பம் என்ற தெளிந்த முடிவை நாயன்மார் அருட்பா விலிருந்து நாம் அறியக்கூடிய தாக உள்ளது. எனவே நாம் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதி யாகிய இறைவனை வழிபட்டு இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து பெற்றுக் கொள்ளும் பேறான பெரும் பேறே திருவருள்.

கருணாகரன் கஜானன்
திருகோணமலை.

❋ ❋ ❋

பிரார்த்தனை எல்லோருக்கும் உதவட்டும்

பலர் கோவிலுக்குச் சென்றால், தனக்காகவும், தனது குடும்பத்துக் காகவும் மட்டுமே வேண்டிக்கொள்வார்கள். மிகச் சிலர்தான் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று தாராள மனதுடன் வேண்டிக் கொள்வார்கள். வள்ளலார் ராமலிங்க அடிகளாரும் இதே கருத்தையே வலியுறுத்துகிறார். எல்லோரும் பிரார்த்தனை செய்யும்பொருட்டு ஒரு பாடலையும் அவர் எழுதி இருக்கிறார். அந்தப் பாடல்

"பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருட்
ஜோதி அளித்தென் உள்ளகதே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை
ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே...."

"நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது உங்களுக்காக மட்டுமின்றி, எல்லோருக்காகவும் வேண்டிப் பிரார்த்தனை செய்யுங்கள். இந்த உலகம் எல்லாம் வாழும்படி வேண்டுங்கள். இப்படி பிரார்த்தனை செய்வதால், தனியொரு மனிதனுக்கு வேண்டியவையும், அதில் அடங்கிவிடுகின்றன" என்கிறார் வள்ளலார்.

வருஷப்புல நாயகியே!

வருஷப்புலநாயகியே மகாமாரியே! - வெள்ள
வாய்க்கால் கரையிலிருந்து அருள் வாரி வழங்குபவளே!
சிறிய கொட்டிலிலிருந்து சிற்பரையே ! - உனை நாடிவந்தவர்களை
சித்தங் கொண்டு வாழ வழி வகுத்து அருளை வாரி வழங்கியவளே!

அரிய உனதருளாலே அயல் நாடு கட்கு - உன்
அடியவர்களை அனுப்பிவைத்து உயர்வடையச் செய்தவளே!
பெரியமனங் கொண்டவர்கள் பேருழைப்பை ஏற்றுப் படிப்படியாய்
பெரிதாகி; தேர்பவனி வந்து, மண்டபங்களுமேற்று

பெரும் பகைவர் பேரழிவுகட்கு மத்தியிலும்
பேணிக்காத்தாய் உன் பேரடியார்களையே
பெருமைகள் பல சேர்கவெனப் பேரொளியே
பெரும் மனம் கொண்டு உனதில்லம் பெருமையடைய

இராஜகோபுரமும் வேண்டுமென இதம் கொண்டதனாலே
இரவுபகலாய் பாடுபட்டு எல்லாமினிது நிறைவு பெற்று
இன்று கும்பாபிஷேகமும் ஏற்றுக் கொண்டு
இந்திரலோகமாக்கி இவ்வருஷப்புலத்தில்

அருளாட்சிபுரியும் உன் திருவருளோ
அளப்பரியதுவே! என் தாயே மகாமாரி வாழி - உன்
அரிய குழந்தைகளும் நீடுவாழி !! வாழி!!
அருமருந்தே அம்பிகையே சரணமம்மா!
அரண் நாயகியே சரணமம்மா!
சரணமம்மா வருஷப்புலநாயகியே!!

ஆக்கம்:
பு. மதுஷா
வருஷப்புலம்

❋ ❋ ❋

ஆலய தரிசனம்

" ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"; ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாசகங்கள் ஆலயங்களின் அவசியத்தைப் பற்றிக் கூறுகின்றன. நாவலர் பெருமான் "நமக்கு இச்சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கேயாம்" என்றார். இதனை நிறைவேற்ற வல்லது விதிமுறைகளோடு கூடிய குருலிங்க சங்கம வழிபாடேயாகும். இதில் நடுவே இருப்பது "லிங்கம்" இலிங்கம் மந்திரம், கிரியை பாவனையோடு கூடிய ஆலயத்தைக் குறிப்பதாகும். ஆலயம் ஆன்மாக்கள் மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை வழிபடுவதற்கு ஏற்ற இடம் எனப் பொருள்படும்.

இறைவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிபவன்; தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான். அவன் எமக்குள்ளே இருக்கிறான். இவ்விறைவனைத் தேடி எங்கும் அலைய வேண்டியதில்லை என்று எம்மில் சிலர் கூறுவர். அப்படியானால் நாம் ஏன் ஆலயத்துக்குச் செல்ல வேண்டுமென்ற வினாவும் எமக்குள் எழலாம். பசுவின் உடலெங்கும் பரந்திருக்கும் பாலினை அதன் மடியிலிருந்து கறந்து கொள்வதற்கு ஒப்பானதே ஆலய வழிபாடு. எனவே இறைவனை வழிபடுவதற்கு ஏற்ற இடம் ஆலயம் என்று கூறுவதே மிகப்பொருத்தமானதாகும்.

ஆலயம் தூய்மை நிறைந்த இடமாகும். ஆதலால் அங்கு செல்வோர் உடலையும், உள்ளத்தையும் தூயனவாய் வைத்துக் கொள்ள வேண்டும். அழுக்கு நிறைந்த உடலும், சஞ்சலம் நிறைந்த மனமும் வழிபாட்டிற்கு ஏற்றதல்ல. மாமிசம் புசித்தவர், மது அருந்தியவர், அசுத்தமான பொருளைத் தீண்டியவர், மனதில் குற்றம் நிறைந்தோர், ஆசாரங்களைப் பின்பற்றி நடக்காதோர், ஆசௌசம் உள்ளோர் ஆலயத்துக்குச் செல்வதைத் தவிர்த்தல் நன்று.

ஆலயத்திற்கு நாம் நாள்தோறும் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். நாள்தோறும் செல்ல முடியாதவர்கள் வெள்ளிக் கிழமைகளில் மாத்திரமாவது செல்வது ஏற்றதாகும். இதனைவிட பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி, சிவராத்திரி, நவராத்திரி போன்ற விரத காலங்களிலும்; சித்திரை வருடப்பிறப்பு, தைத்திருநாள், ஆடிப்பூரம், தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களிலும் ஆலயம் சென்று இறைவனைத் தரிசித்தல் வேண்டும்.

சாதாரண மக்கள் பெரியவர்கள், சிறியவர்கள் நோயாளிகளைப் பார்க்கச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்வதில்லை. அதுபோல ஆலய வழிபாட்டிற்குச் செல்வோர் பஞ்சகௌவியம், இளநீர் போன்ற அபிஷேகப் பொருட்களுடனும், பூசைக்குரிய பொருட்களுடனும் செல்வது நல்லது. இவற்றை எடுத்துச் செல்ல முடியாதவர்கள் ஒரு பச்சிலையாவது கொண்டு செல்வது நல்லது.

வீட்டிலிருந்து புறப்பட்டு ஆலயம் வரை சுவாமியைப் பற்றிய சிந்தனையோடு செல்லுதல் வேண்டும். ஆலயத்தை அண்மித்ததும் வெளியிலிருக்கும் நீர் நிலைகளில் கால்-கை கழுவி, வாய் அலம்பி, எடுத்துச் செல்லும் பொருட்களுக்கு நீர் தெளித்து எடுத்துச் செல்லுதல் வேண்டும். ஆலயத்துக்குள் சென்றதும் முதலில் விக்கினேஸ்வரப் பெருமானாகிய பிள்ளையாரையே முதலில் வணங்குதல் வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். ஆலயம் இறைவனின் உறைவிடம். அங்கு இறை அருளைப் பெறுவதற்காகச் செல்கின்ற அடியார்கள் உடலுக்கும், மனதுக்கும் ஒவ்வாத செயல்களைச் செய்யக்கூடாது. வீண்வார்த்தை பேசுதல் பாதணிகளை அணிந்து செல்லுதல், சண்டையிட்டுக் கொள்ளுதல், விக்கிரகங்களைத் தொடுதல், தூபி, பலிபீடம், விக்கிரகம் போன்றவற்றின் நிழலை மிதித்தல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையில் நமஸ்கரித்தல், திரையிட்ட பின் வணங்குதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

இறைவனைப் போற்றி வாழும் போது வாழ்வு மேன்மை அடையும். அத்தகைய மேன்மையினைப் பெற எப்போதும் நாம் கடைப்பிடித்து வாழவேண்டியவை இயமம் எனப்படும். உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், எப்போதும் உண்மையைப் பேசுதல், மூத்தோரை மதித்தல், களவெடுக்காதிருத்தல், இரக்கச் சிந்தனை, வஞ்சனை செய்யாமை, பொறுமையைக் கடைப்பிடித்தல், மனங்கலங்காமை போன்றவை இயமங்களுள் அடங்கும். சைவர்களாகப் பிறந்த நாம் கடவுள் உண்டு என்னும் நம்பிக்கை யோடு செபம், விரதம் போன்றவற்றை அனுட்டித்து, உயிர்களுக்கு உறுதி பயக்கும் நல்ல நூல்களை வாசித்து ஆண்டவனின் அருட்கடாட்சத்தைப் பெறுவோமாக.

"நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்"

செல்வி ப. கோபிகா
தரம் 7
வருஷப்புலம் , சுன்னாகம்.

❋ ❋ ❋



கும்பாபிஷேக திருப்பணிச் சபை

இடமிருந்து வலம் நிற்பவர்கள் :- திரு.சு.சுஜீவன், திரு. சி. துரைசிங்கம், திரு. கை. தனேஞ்செயன், திரு. யோ. சகிந்தன், திரு. மா. கதிர்காமநாதன் (உபதலைவர்) , திரு.க. கருணைநாயகம், திரு. மு. இந்திரன் (தலைவர்) , சிவஸ்ரீ கணேச சபாபதிக் குருக்கள்(பிரதம குரு) , திரு. சி. சிவயோகநாதன் (செயலர்) , திரு. சி. நந்தகுமார் (பொருளாளர்), திரு. சு. ஜெயக்குமார், திரு. க. தர்சன் திரு. ந. யோகராசா, திரு. த. சசிக்குமார், திரு. செ. சிவயோகம்



ஆலய நிர்வாக சபையினர்

இடமிருந்து வலம் நிற்பவர்கள் :- திரு. பொ.புவனேந்திரராசா (உபசெயலர்), திரு. கை. தனேஞ்செயன், திரு. பொ. ஜெயந்தன், திரு. சி. துரைசிங்கம், திரு. செ. சிவயோகம், (களஞ்சியப் பொறுப்பாளர்), திரு. க. கருணைநாயகம் (பொருளாளர்), திரு. சி. யோகநாதன் (செயலர்), சிவஸ்ரீ கணேச சபாபதிக்குருக்கள் (பிரதம குரு), திரு. நா. பழனிவேல் (உபதலைவர்), திரு. ந. யோகராசா, திரு.இ.ரவிச்சந்திரன் திரு.சு. ஜெயக்குமார், திரு.சு.சசிக்குமார், திரு.க.தர்சன், திரு.சு.கிரிதரன் (உபபொருளாளர்.)

அன்னதான, கல்யாண மண்டப சபையினர்



இடமிருந்து வலம் :- திரு. கை. தனேஞ்செயன், திரு. சு. ஜெயக்குமார், திரு. சி. துரைசிங்கம், திரு.க.கருணைநாயகம், குருக்கள் ஐயா, திரு. ந. யோகராசா (தலைவர்), திரு. பொ. ஜெயந்தன், சு.சசிக்குமார், செ. சிவயோகம், நா. பழனிவேல் (செயலர்), திரு. கு. தயானந்தன் (பொருளாளர்)

மகளிர் தொண்டர் சபையினர்



இடமிருந்து வலம் நிற்பவர்கள் :- திருமதி. சி. நிர்மலா, திருமதி. ச. நாகராணி, திருமதி. ஜ. சாந்தினி, திருமதி. கு. இராசமலர், திருமதி. ம.கலா, திருமதி. ப. கோசலா, திருமதி. சு. இராஜேஸ்வரி, திருமதி. சி. சுகிர்தா, செல்வி. க. தீலீபா, திருமதி. மு. சுமித்திரா, திருமதி. இ. இராஜநாயகி, திருமதி. பு. சசிகலா

இருப்பவர்கள் :- செல்வி. பு. மதுசாளினி, செல்வி. வ. கீர்த்தனா, செல்வி. ப. கௌதமி, செல்வி. அ.ஜெயந்தினி, செல்வி.ஜெ. ஹேமசுதா, செல்வி. ம. அயிவர்சினி

சக்தி வழிபாடு

உலகநாயகியான சக்தி பல திருவுருவங்களாகக் காட்சிதருகின்றாள். ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது நடராஜப் பெருமானின் திருநடனம் எனினும் எம்பெருமான் அம்பிகையின் பக்கமே நோக்கி ஆடுகின்றார். தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம்.

"தாயினும் சிறந்த தொருகோவிலும் இல்லை"
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

"மாதா, பிதா, குரு, தெய்வம்" எனத் தாயை எல்லாவற்றிற்கும் மேலாக எண்ணிப் போற்றுகின்றனர். சக்தி வடிவங்களை ஐந்து வகையாக நோக்கலாம்.

1. போகசக்தி - பராசக்தி
2. வீரகச்தி - துர்க்கை
3. கோரசக்தி - காளி
4. அதிகாரசக்தி - நாராயணி
5. அருட்சக்தி - மனோன்மணி ஆகவும் திகழ்கின்றாள்.

சக்தியானவள் மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், திருக்கடவூரில் அபிராமியாகவும், திருநெல்வேலியில் காந்திமதியாகவும் விளங்கு கின்றாள்.

"தனம் தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவருக்கே
கனம் தரும் பூங்குழலால் அபிராமி கடைக்கணகளே"

இப்பெருமைகள் வாய்ந்த சக்தி வடிவமாக எம் கிராமம் வருஷப் புலத்தில் அருளாட்சி புரிபவளாக மகாமாரி அம்பாள் விளங்குகின்றாள். நாம் அனைவரும் அவள் பாதம் பணிந்து அவள் புகழ்பாடி மகாமாரி அம்பாளின் கடைக்கண் பார்வை அருளைப் பெற்று, யாவரும் இன்பமே சூழ, எல்லோரும் நலமுடன் வாழ சக்தி வடிவமாகிய வருஷப்புல மகாமாரி அம்பாளை வேண்டிநிற்போமாக.

வருஷப்புல மகாமாரி அம்மனுக்கு அரோகரா!

கோ. துலக்சினி
யாழ். சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
தரம் 5 , மாணவி.

வருஷப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாள் ஊஞ்சல் பாட்டு


விநாயகர் துதி

பொன்னாரும் மணிமுடியாய் திகழ்ந்து மின்னும்
பொலிவளங்கள் சூழதமிழ் ஈழத்தாயின்
மின்னாரும் நுதலிலவே மிளிர் யாழ்ப்பாணம்
மிகுந்துமலி மங்களமாம் திகல மன்ன
சுன்னாகப்பதி வரியப் புலத்தில் வாழ்ந்து
சோபன மாய்ச் சுபமருளும் மஹா மாரிக்கே
பன்னாரும் தமிழுஞ்சல் பாடி ஏத்த
பதி விநாயகன் பாதம் காப்ப தாமே

பவளக்கால் நான்கும் நான் மறைகளாகப்
பனிநிடும்ஆ கமம் வியிர விட்டமாக
புவனியிலே வடம் ஞானக் கலைக ளாக
பிரணவமாம் ஓங்காரம் பீட மாக
தவநிறையும் தமிழஞ்சல் தனிலே வைகி
தண்ணருளைத் தந்தாடும் தாயே மாரீ
சில் மயமாம் தல வருசப் புலத்தி மேவும்
சிற்பரையே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

காசினியில் பத்தியெனும் கால் நிறுத்திக்
கட்டிணைத்தே புலனைந்தை விட்டமாக்கி
தேசுலவு நாற்கரண வடங்கள் மாட்டி
திருவருளாம் துணையான பலகை கோத்து
பேசுமெழில் சீவனவன் பேரின் பத்தின்
பெறற்கரிய முத்தியெனும் ஊஞ்சலாட
ஆசியருள் நல்வருசப் புலத்தில் மேவும்
ஆரணியே மஹா மாரீ ஆடீர் உஞ்சல்

மணிப் பொன்னின் முடியா மலரும் ஆட
மலர்ந்த திரு வதனதில் அருளும் ஆட
அணிப்பூவின் மணியாரம் மார்பில் ஆட
அலங்காரப் பூங்கூந்தல் விரிந்தே ஆட




பணித்தங்க வளையாட பதக்க மாட
பசு மார்பில் மாங்கல்யம் பதிந்தே ஆட
பிணி தீர்க்கும் தலைவருஷப் புலத்தில் மேவும்
பூரணியே மஹாமாரி ஆடீர் உஞ்சல்

மஞ்சளணி குங்குமமும் மாலை யாட
மன்னு செவிக் குண்டலங்கங்கள் மின்ன ஆட
கஞ்சமலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம் அபய வரதங்க களிந்தே ஆட
கொஞ்சு தமிழ் இதழமுதில் இன்பம் பூக்க
குலவு மொழில் நகைபுரிந்து அருளும் தேவீ
மஞ்சுலவு தலைவரியப் புலத்தில் மேவும்
மனே ஹரியே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்

மரகதத்தின் பச்சைவன மேனி ஆட
மாலாட அயனாட அரனும் ஆட
உரகவட ஒய்யாரப் படமுமாட
உடுக்கை திரி சூலமொடு கபால மாட
கரகமெனும் வேப்பமிலைக் கும்ப மாட
காற்சிலம்பு கலகலவென் றிசைத்தே ஆட
பரகதியைத் தரும் வருஷப் புலத்தில் மேவும்
பார்வதியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

ஆதித்த ஞாயிறு வெண் குடையை ஏந்த
ஆலவட்டம் தனைத்திங்கள் தூக்கி நிற்ப
காதல் தண் மன் மதனும் செவ்வாய் பூக்க
கரகரதி இலை வேம்பு தனைத் தாங்க
கீதத்தை கலைச்செல்வி யாழன் போடு
கிளர்ந்டவே வெள்ளியரி யாசனித்தே
பாதத்தை அருள் வருஷப் புலத்தில் மேவும்
பராபரையே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

செந்திருவும் வந்தமர்ந்தோர் வடந்தொட் டாட்ட
செய்யகலை வாணியுமோர் வடந்தொட்டாட்ட
புந்தி மகிழ்ந் தரம்பையரோர் வடந்தொட்டாட்ட
சுந்தரியாம் மஹாமாரி அம்மை ஆடீச்
சுகுணவருள் தந்தெம்மை ஆண்டு கொள்ள
கந்தமலர்ப் பொழில் வருஷப் புலத்தில் மேவும்
கருமாரி மஹா மாரி ஆடீர் ஊஞ்சல்



கமல மலர்ப் கழலினைகள் கருணை யோடு
காசினியில் பக்தருக்கே அருளும் தேவீ
குழுத மலர்ச் செவ்விதழில் முறுவல் பூத்துக்
குறை தவிர்த்து வருமருளும் தாயே காளீ
அமுதமென நின்புகழைப் பாடி ஏத்தும்
அடியவருக் கினிய தெலாம் அருளும் மாயே
தமிழமுதத் தலைவருஷப் புலத்தில் மேவும்
தயாபரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

முன்னொரு நாள் கொடுமரக்கன் மகிஷா சூரன்
முனிவருக்கும் தேவருக்கும் கொடுமை செய்ய
பன்னெடிய திரிசூலப் படையை ஏந்தி
பாயுமொரு சிங்கவா கனத்தில் ஏறி
மின்னலென வந்தரக்கன் மார்பில் ஏற்றி
மிடி செய்த அரக்கர் குலம் மடித்த காளீ
கன்னல் தமிழ் வளர் வருஷப் புலத்தில் மேவும்
கருணை மிகு மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

அரியவனின் சோதரியே ஆடீர் ஊஞ்சல்
அம்பிகையே அபிராமி ஆடீர் உஞ்சல்
அரனவனின் நாயகியே ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த பைரவியே ஆடீர் ஊஞ்சல்
அரவணியும் ஆரணியே ஆடீர் ஊஞ்சல்
அடியவருக் கருள் பவளே ஆடீர் ஊஞ்சல்
புரமேனும் நற் தலவருஷப் புலத்தில் மேவும்
புரந்தரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

பித்தமொடு வாதங்கள் சிலேற்ப னங்கள்
பிணிகள் தனைத் தீர்ப்பவளே ஆடீர் ஊஞ்சல்
பக்தியுடன் தொழுவாரின் நோய்கள் தீர்க்கும்
பராபரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்
சித்திரையில் அம்மைசின்ன முத்து நோய்கள்
எமக்கென்றும் வராமல் காத்தருளும்
முத்தழகீ தலைவியப் புலத்தில் மேவும்
முதுகாளீ மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

பூசுரரும் ஆவினமும் வாழி! வாழி!
பூமாரி பொழிந்திந்தப் புவியும் வாழி!
தேசு மிகு செங்கோலின் நெறியும் வாழி!
திருமகளிர் கற்பு நெறி ஞானம் வாழி!
பேசு தமிழ் மொழி வாழி சைவம் வாழி!
புவியெல்லாம் மாரியருள் பொலிந்து வாழி!
வீசு தமிழ் மணவரியப் புலமும் வாழி!
விளங்கு திரு மஹாமாரி வாழி! வாழி!

எச்சரிக்கை

வருஷப்புலம் வாழும் மஹாமாரி எச்சரீக்கை
வாரகியே வந்தே அருள் தாயே எச்சரீக்கை
அரிமாலயன் அருஞ் சோதரி காளீ எச்சரிக்கை
அரநாயகி திரி சூலினி மாரீ எச்சரிக்கை

பரமேஸ்வரி ஜெகதீஸ்வரி நீலி எச்சரீக்கை
பதினாலுல கேத்தும் சக்தி மாயே எச்சரீக்கை
புரிருஷப் புலம் வாழ்ந்திடும் மாரீ எச்சரீக்கை
புவனேஸ்வரி கருணாநிதி தாயே எச்சரீக்கை

மகிடாசூர மாயே சம்காரிணி எச்சரீக்கை
மஹா தேவனின் மனோகாராணி மாரீ எச்சரீக்கை
அகிலாண்டிடும் சிவனேஸ்வரி ரூபி எச்சரீக்கை
அழகார் புர வருஷப்புலம் மாரீ எச்சரீக்கை

துதிப் போர்க் அருள் நல்கும் தேவீ பராக்கு
துரந்தரியே நிரந்தரியே நீலீ பராக்கு
மதிப்போர்க்கு மகிழ்ந்தருள செய்வோம் பராக்கு
மகா மாரீ வருஷப்புலம் தாயே பராக்கு

திரிசூல ஏந்திடும்நற் தாயே பராக்கு
தீனதயா பரியே மாயே பராக்கு
அரிமாயன் சோதரியே காளி பராக்கு
அம்பிகையே அபிராமி ஆதீ பராக்கு

சிங்கவா கினி நீயே தேவீ பராக்கு
சிற்பரையே கற்பகமே மாரீ பராக்கு
அங்கயற் கண்ணியே ஆயீ பராக்கு
ஆனந்த பைரவியே சூலி பராக்கு

லாலி

வருஷப்புல வராளிக் லாலி சுப லாலி
வாராகி வைஷ்ணவிக்கு லாலி சுப லாலி
அரியயனார் துதிப்போர்க்கு லாலி சுப லாலி
அம்பிகை மஹாமாரிக்கு லாலி சுப லாலி

கரியகண்டன் நாயகிக்கு லாலி சுப லாலி
கருமாரி யம்பாளுக்கு லாலி சுப லாலி
வரிகுழலின் எழிலிக்கு லாலி சுப லாலி
விளங்குதிரி சூலினிக்கு லாலி சுப லாலி

நாகபடம் அணிபவர்க்கு லாலி சுப லாலி
நாயகி மகா மாரிக்கு லாலி சுப லாலி
எகனவன் தேவியர்க்கு லாலி சுப லாலி
எழிலி வடி வழகியர்க்கு லாலி சுப லாலி.

முற்றிற்று

❋ ❋ ❋

சுன்னாகம் வருஷப்புலம்
அருள்மிகு ஸ்ரீ மகாமாரியம்பாள்

பக்திரஸக் கீர்த்தனைகள்

ஐங்கரன் அடிகளை நாம் அனுதினமும் பணிவோம்
சங்கடம் தீர்த்தென்றும் சாந்தி சந்தோஷம் தரும் - ஐங்கரன்

வருஷப்பு லத்திலுறை மகாமாரி அம்பாளின்
பரிவார மூர்த்தியாய்ப் பக்தர்க ளுக்கருளும் - ஐங்கரன்

கல்வி செல்வம் சிறக்க கமம் புலங்கள் செழிக்க
தொல்லை தடை துன்பம் தூரச் சென்றே தொலைய
நல்ல செயல் பொலிய நாடு முன்னேற்றம் பெற
எல்லையில் லாத இன்பம் இவ்வுலகை நிறைக்க -ஐங்கரன்

பல்லவி
எந்தனுளக் கோவிலில் உன் சந்தனச் சிலை வடிப்பேன்
வந்திருந் தருள்வாயா வருஷப்புலத் தரசி

அனுபல்லவி
முந்தை வினை உறுத்த வெந்து நான் வருந்துகின்றேன்
எந்தன் நிலைக்கிரங்கி எனக்கருள் புரிவாயா

சரணம்
அன்பெனும் பாலால் நான் அபிஷேகம் செய்திடுவேன்
பண்ணிசை யால்நாளும் பாமாலை சூட்டிடுவேன்
பாசப் பன்னீர் தெளித்து பக்திமந் திரம் செபிப்பேன்
நேயப் பணிகளினால் நித்தம் அர்ச்சனை செய்வேன்.

பல்லவி
பக்தி ஏணியில் வந்துன் பாதமலர் பரவும்
சக்தி எனக்கருள் வாய் முத்துமாரி அம்மா

அனுபல்லவி
நித்திய சிறீ நீயே நிர்மல ரூபிணி நீ
சத்திய தேவதையே தர்மவழி காட்டிடம்மா - பக்தி ஏணி

சரணம்
நித்தம் கவலை எந்தன் நெஞ்சினை அறுக்குதம்மா
புத்திதடு மாறுதம்மா புன்னெறியில் போகுதம்மா
சித்தத்தினைச் சீராக்கி சித்திபல பெற்றுவரும்
வித்தையெனக் கருளம்மா மேல்வருஷப் புலத்தாயே - பக்தி ஏணி

மனங்கனிந் தருள்வாய் மகாமாரித் தாயே
உனைநினைந் துருகிடும் உன்னடி யோங்களுக்கு - மனங் கனி

வண்ணமா லைகள் சூடும் வருஷப்புலத் தரசி
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்
கண் திறந்து எமைப் பார்த்து - மனங்கனி
முன்னைப் பிறவிகளில் மோக வெறிப்பிடியில்
என்னபா வம்செய்தோம்? ஏதுமறியோம் அம்மா
துன்பக் கடல்நடுவே துணையின்றித் தவிக்கின்றோம்
அன்னை உன்னிடமல்லாமல் ஆரிடம் போவோம் அம்மா - மனங்கனி

பாதக மலம்போக்கும் உன் பாதக்க மலம் பற்ற
மாதரசி உந்தன் வாசலில் வந்து உள்ளோம்
வேதனை தாளோம் அம்மா வேறுதெய்வம் அறிவோம்
பேதையோம் எங்களை நீ புறந்தள்ளி டாமல் இன்றே -மனங்கனி

இன்பத்தையே நாங்கள் நாடுகின்றோம் - அதை
என்றுமெமக் கருள்க என்று பாடுகின்றோம்

ஒருகணமும் மறக்கா துன்னை நாம் வேண்டுகின்றோம்
திருக்கோயி லுக்கு வந்து திருப்பணி யும்செய்கிறோம்
கருணைக் கடலே எங்கள் கருமாரியே தாயே
வருஷப் புலத்திலுறை மகாமாரியே அருள்வாய் - இன்பத்

மாடு மனை விளங்க மக்கட் செல்வம் சிறக்க
பாடுபட் டுழைப்பார்கள் பலன்பல பெற்றுயர
கூடியுனைத் தொழுவோர் குறைக ளெல்லாம் மறைய
தேடிவந் துந்தன் பாதம் தேன்மலர் கள் சொரியும் - இன்பத்

பஞ்சம் பட் டினிபகை படுகொலை கள் திருட்டு
வஞ்சகம் ஏமாற்று வருத்திடும் நோய் பிணிகள்
நெஞ்சுறுத் தும்பேச்சு, நேயமின்மை பொய்மை
கொஞ்சமும் இல்லாமற் கூடிக் குலாவி வாழும் - இன்பத்

என்ன புண்ணியம் செய்தோம் - உள்
வண்ண எழில் காண்பதற்கு
அன்னையே மஹாமாரி ஆனந்த வாஹினியே -என்ன
திருவருட் சுடர்வீசி திசையெட்டும் ஒளிர்பவளே
வருஷப் புலத்திருந்தே வையகம் காப்பவளே - என்ன
நிந்தனை செய்துழல்வோர் நெஞ்சங் கலங்கி யழ
செந்தழல் வண்ணமுடன் திகழ்ந்திடும் திரிசூலி
வந்தனை செய் யடியார் வாஞ்சையுடன் பற்றவே
உந்தனிடப் பாதந் தொங்க உவந்தமர்ந் தருள்பவளே - என்ன

வெம்மை தணிக்கும் பச்சை வேப்பிலை மாலையோடு
சிம்ம வாகனம் மீது செம்மாந் திருப்பவளே
நம்பிடும் அடியவர்க்கு நாளும் அருள் புரிவாய்
அம்மையே அங்காளம்மா ஆதிமகா மாரியம்மா - என்ன
மூத்தபிள்ளை யார்திரு முருகன் தேவியர் இருவர்
காத்திடும் எம்பெருமாள் காலபைரவர் வாணி
சேர்த்துநற் பலன் வழங்கும் திருச்சண்டீ வரிசேர்
வேத்தவை நாயகியாய் வீறுகொண் டிருப்பவளே - என்ன

பஜனைப்பாடல்

வருஷப் புலத்து மக்கள் வாழ்வு உயர
வாய்க்கால் கரை அமரும் மாரியம்மா
முன்னர் பெரு நோயினுக்கு இலக்காகி
கன்னியாக இந்த ஊருக் கோடி வந்தாய்
சின்னஞ்சிறு கொட்டிலுக்குட் சென்று சரிந்தாய்
பின்னர் மகா மாரியாகக் கோயிலுங் கொண்டாய்
உந்தன் திருக் கோயிலுக்கு ஓடி வருவோம்
உந்தன் அருட் கோலங்களையும் பாடி மகிழ்வோம்
ஐந்துதலை நாகம்படம் எடுத்து நிற்க
செந்தழலின் வண்ணத் துடன் சிரிப்பவளே
தீச்சுடராடய ஒளிர்வீடும் கூந்தல் விரிய
பூச்சரங்கள் சூடி என்றும் பொலிபவளே!
உந்தன் இடப்பாதம் தொங்க இருப்பவளே
வந்திப்பவர் பற்ற மகிழ்ந் தருள்பவளே
கத்தி சூலம் பாசம் உடுக்கையுடனே
நித்தியமும் நீதி நிலை நாட்டுபவளே
மிண்டி யென்றும் பாவம் பழி செய்பவருக்கு
தண்டனை வழங்கித் தடுத்தாள் பவளே
பங்குனிமா தத்தில் வரும் திங்கள் நாளிலே
அங்கங் குளிர்ந்திடு மலங்க காரங்கள் செய்வோம்
வேப்பமிலை மாலை பல சூட்டி மகிழ்வோம்
வெம்மை தணியச் சந்தனம் பன்னீர் சொரிவோம்.

கற்பூரச் சட்டி தலை ஏந்தி வருவோம்
காவடிகள் ஆடி உனைப் பாடி வருவோம்
பானகமாம் தேனமுதப் பாகு படைப்போம்
கானமழை யாலுமுளம் களிக்க வைப்போம்

அம்மை சின்னமுத்து முதலான பிணிகள்
எம்மை அணுகாமல் என்றும் ஒட்டியருள்வாய்
மாரிமுத்து மாரி மஹா காளியம்மா
மாரி மழை யாயருள்வாய் மாரியம்மா

சங்கடங்கள் தீர்த்தருள்வாய் சக்தியம்மா
மங்களங்கள் தந்தருள்வாய் மாரியம்மா
மங்களங்கள் தந்தருள்வாய் மாரியம்மா
மங்களங்கள் தந்தருள்வாய் மாரியம்மா.

பிரம்மஶ்ரீ சி.சிவசாவனபவன், (M.A)
(சிற்பி)

யாழ்ப்பாணத்துப் பண்ணிசை மரபு

இசை என்னும் சொல்லுக்கு இசைவிப்பது, வசப்படுத்துவது எனப் பொருள் கொள்ளலாம். இறைவனை வசப்படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு. "பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்" என்று இறைவன் கூறுவதாகப் பெரியபுராணம் பேசுகின்றது.

யாழ்ப்பாணம் என்ற பெயருள் ஓர் இசைத் தொடர்பு இருப்பதை யாவரும் அறிவர். யாழ்ப்பாணர் என்போர் யாழினை மீட்டிப் பாடித் தொழில் செய்பவர்கள் என இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. ஆயினும் யாழ்ப்பாணத்தின் இசை மரபு பற்றிய செய்திகளைப் பண்டைய இலக்கியங்கள் வாயிலாகத் தெளிவாக அறியமுடியவில்லை.

இலங்கையை ஆண்ட இராவணேசன் இசை வல்லவன் எனவும் சாமகானம் பாடி சிவனை மயக்கியவன் எனவும் புராண இதிகாசக் கதைகள் பேசுகின்றன. இலங்கை வேந்தனின் கொடியாக வீணைக் கொடி அமைந்திருந்தது. பல்லவர் காலத்தில் சுந்தரரும் சம்பந்தரும் ஈழத்தில் உள்ள தலங்கள் மீது பண்ணிசைப் பாடல்களைப் பாடியுள்ளனர். இவை தல வர்ணனைப் பாடல்களாக, இறைவன் பெருமைகளை எடுத்தியம்புவ னவாக அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்து இசைப் பாரம்பரியத்தின் நிலைக்களமாகக் கோவிலே அமைந்திருந்தது. திருமுறைப்பாடல்களும் திவ்வியப் பிரபந்தப்பாடல்களும் கோவில்களிலே பூசை வேளைகளில் பாடப்படும் மரபு நீண்டகாலமாக நிலவி வருகின்றது. ஆயினும் போர்த்துக்கேயர் காலப் படையெடுப்பு இந்துக்கள் சார்ந்த ஆவணங்கள் யாவற்றையும் அடியோடு அழித்துவிட்டமையால் அக்கால இந்துக்களின் நிலை பற்றியோ பண்ணிசை பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியோ தெளிவாகக் கூறமுடியாதுள்ளது.

இந்து மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சைவத்தின் காவலர் எனப் போற்றப்படுகின்ற ஆறுமுகநாவலர் பண்ணிசையின் அவசியத்தை உணர்ந்து தமிழகத்தில் இருந்து ஓதுவார்களை வரவழைத்து இசைத் தொண்டுகளில் ஈடுபடுத்தினார். இக்கலைஞர்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் தங்கி ஆலயங்களிலே தேவார மற்றும் திவ்வியப் பிரபந்தங்களைப் பண்ணோடு பாடியும் பாடப்பயிற்றுவித்தும் வந்தனர்.

வண்ணார் பண்ணை, நீராவியடி, வடக்கம்பிராய், நல்லூர், மந்துவில், கைதடி, காரைதீவு (காரைநகர்) போன்ற இடங்களில் இக்கலைஞர்கள் தங்கியிருந்ததாக சி. பத்மலிங்கம் தனது ஆய்வே டொன்றில் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில் கர்நாடக இசை முக்கியத்துவம் பெற்ற அளவுக்கு பண்ணிசை முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. நாவலர் போன்ற பெருமக்களது பேராதரவு பண்ணிசைக்கு இருந்தபோதிலும் பண்ணிசை முக்கியத்துவம் இழந்ததன் காரணம் என்ன? என்பது ஆய்வுக்குரியது.

1972ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைக் கலைத்திட்டத்தில் இசையும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டது. அத்துடன் சாதாரண மக்களையும் சென்றடையக் கூடிய ஊடகமாக வானொலி விளங்கிய நிலையில் அதில் இசைக் கலைஞர் அந்தஸ்து கர்நாடக இசையை மையப்படுத்தியே வழங்கப்பட்டிருந்தது. இதனை ஒரு கௌரவமாக இசைக் கலைஞர்கள் கருதிய காலம் ஒன்றிருந்தது. இத்தகைய ஊக்குவிப்புக்களால் பண்ணிசையைக் காட்டிலும் கர்நாடக இசை முக்கியத்துவம் பெற்றது.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள் எனச் சமூக உயர் மதிப்புப் பெற்றவர்கள் கர்நாடக இசையைப் பயில்வதை ஒரு கௌரவமாகக் கொண்டனர். இம்மனோநிலையும் பண்ணிசையின் பின்னடைவுக்குக் காரணமாக அமைந்தது. ஆலயங்களில் ஒரு காலத்தில் ஓதுவார்களைத் தவிர மற்றையவர்கள் திருமுறைப் பாடல்களை உரத்துப் பாடுவதற்கு சந்தர்ப்பம் பெற்றிருக்கவில்லை. மேற்காட்டிய காரணங்கள் பண்ணிசை மரபில் தாக்கங்களைச் செலுத்தியமையால் பண்ணிசை வளர்ச்சி மந்தித்தது.

யாழ்ப்பாணத்தில் தனியே பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும் சந்தர்ப்பமும் அருகியே காணப்படுகின்றது. அத்துடன் பண்ணிசையைப் பயில்வோருடைய எண்ணிக்கையும் அருகியே காணப்படுகின்றது. பண்ணிசையைப் பயில்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வசதிகள் மற்றும் வளவாளர்கள் இருந்தபோதிலும் அதனைப் பயிலும் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றமை துரதிஷ்டமானதாகும். பண்ணிசையைக் கற்றால் வேலை வாய்ப்புக் கிடைக்குமா என்ற வினாவுக்குரிய விடை கிடைக்காமையால் மாணவர்கள் இத்துறையைத் தெரிவு செய்வதைத் தவிர்க்கின்றனர் எனக் கொள்ளலாம்.

கோவில்களில் பண்ணிசைக்குரிய மரியாதை கிடைப்பதும் அரிது. தெரிந்த மொழியில் பாடப்படும் தேவாரப் பாடல்களைக் கூட அடியவர்கள் அமைதியாகக் கேட்டு லயிப்பதில்லை. பூசைகளில் தேவாரம் பாடப்படும் நேரத்தை ஓர் இடைவேளை நேரமாகக் கருதும் போக்கே

பெரும்பாலான ஆலயங்களில் காணப்படுகின்றது. வேத மந்திரங்களுக்கு ஈடானசக்தி திருமுறைகளுக்கு உண்டு என காசிவாசி செந்திநாதையர் போன்ற பெரியவர்கள் நிறுவியபோதிலும் பூசைக் கிரமங்களில் திருமுறைப் பாடல்களுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. பெரும் பாலான ஆலயங்களில் வேதபாராயணத்தின் பின்னர் திருமுறைப் பாராயணம் இடம்பெறாமல் ஆசீர்வாதம் இடம்பெற்றே திருமுறைப் பாராயணம் இடம்பெறுகின்றது. இவ்வாறாகத் தெரிந்தோ தெரியாமலோ திருமுறைகளைத் தாழ்த்தும் செயற்பாடுகளுக்கு ஆலய நிர்வாகத்தினரும் துணைபோகின்றனர். இக்காரணங்களும் நம்மத்தியில் பண்ணிசையின் செல்வாக்கைக் குறைத்துள்ளன.

தேவாரப் பதிகங்களை சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இசை வடிவில் தாள வேறுபாடுகளுடன் பாடியுள்ளனர். பழந்தமிழகத்தில் நூற்றிமூன்று பண்கள் வழக்கத்தில் இருந்தன என்றும் மூவர் பாடிய தேவாரங்கள் 23 பண்களில் அமைந்தன எனவும் விபுலானந்தர் எழுதிய யாழ் நூலில் தேவாரவியலில் குறித்துள்ளார். காலப்போக்கில் இவ்விருபத்து மூன்று பண்களும் நிலைத்துவிட ஏனையவை பேணுகை யின்றி மறைந்துவிட்டன. இதனால் பண்ணிசை மரபானது மூவர் தேவாரங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டு வளர்ச்சியில்லாது போய் விட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மடங்களும் ஆதீனங்களும் பண்ணிசையை வளர்ப்பதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குகின்றன. பண்ணிசைப் பயிற்சி பெற்றவர்களுக்கு கோவில்களில் ஓதுவார்களாக நியமனம் கிடைத்து ஊதியம் பெறும் வாய்ப்புக் காணப்படுகின்றது. ஆனால் நம்மண்ணில் பண்ணிசைக்கு ஊதியம் பெறும் வாய்ப்பு மரணச் சடங்கின்போதே காணப்படுகின்றது. நம் பிரதேசங்களில் சா வீட்டில் பண்ணிசை பாடுபவர்களை 'ஓதுவார்' என அழைக்கும் வழக்கம் கிடையாது. 'பாட்டுக்காரர்' என்றே அழைக்கின்றனர். இப்பாட்டுக் காரர்களும் வெற்றிலை மென்றபடி பாடுபவர்களாகவும் மது அருந்தி விட்டுப் பாடுபவர்களாகவும் இருக்கும் நிலையை நோக்கமுடிகின்றது. இவை யாழ்ப்பாணத்தின் பண்ணிசை வளர்ச்சிக்கான சாபக்கேடோ என எண்ணத் தோன்றுகின்றது.

பண்ணிசையானது சபாகானமாக அதாவது மேடைக்கலையாக வளராமைக்கு அது தனித்தன்மை கொண்டதாக இருக்காமையும் ஒரு காரணமாகும். கர்நாடக இசையின் பரம்பல் பண்ணிசையை மறை முகமாகத் தன்னுள் அடக்கிவிட்டது. கர்நாடக இசை சமயம் கடந்து இனங்கடந்து பேணப்படக்கூடியது என்பதாலும் அது பண்ணிசையைக்

காட்டிலும் வளர்ச்சிபெற்றுள்ளது. இத்தகைய சவால்களைப் பண்ணிசை எதிர்கொண்ட போதிலும் கோயிற் கிரியைகளில் குறிப்பாக கொடியேற்றம் மற்றும் கொடியிறக்கம் இடம்பெறும் நாட்களில் நவசந்திப் பண்களைப் பாடும் மரபு காணப்படுகின்றது. ஆனால் அதிலும் ஓர் அவசரத்தன்மை காணப்படுவதை இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் பழம்பெரும் பண்ணிசையாளர் வரிசையில் கொக்குவில் குமாரசாமிப் புலவர், சங்கர சுப்பையர், நாகலிங்க சுவாமிகள், குப்பிளான் செல்லத்துரை, தாவடியூர் இராசையா, நல்லை சி.எஸ்.எஸ். மணி பாகவதர் (மணி ஐயர்), நா.வி.மு. நவரத்தினம், எஸ். சிவஞானசேகரம், எஸ். திருஞானசம்பந்தர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் கோவிற் கும்பாபிஷேகக் கிரியைகளின்போது தமிழகத்தில் இருந்து பண்ணிசை வல்லோரை அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது.

1970களில் பி.ஏ. எஸ். இராசசேகரன் என்பவர் யாழ்ப்பாணத்தில் பலகாலம் தங்கியிருந்து பண்ணிசை வகுப்புக்களை நடாத்தினார் என அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் கர்நாடக இசையைப் பயிலும் போது பண்ணிசைப் பாடல்களைச் சேர்த்துப் பயிலும் மரபும் கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் இடையிடையே அவற்றைச் சேர்த்துக் கொள்ளும் மரபும் காணப்படுகின்றது. இதனால் பண்ணிசை எம்மண்ணில் தனித்துவம் பெற்ற துறையாக வளர்ச்சியடையவில்லை.

யாழ்ப்பாணத்தில் பண்ணிசைக் கற்கையை வளர்க்கவென பல்கலைக்கழக மட்டத்தில் கற்கை நெறி இருந்தும் வட இலங்கைச் சங்கீத சபையில் முதலாம் தரம் முதல் ஆசிரியர் தரம் வரை பண்ணிசைக் கற்கை நெறி இருந்தும் இத்துறை இன்னும் கவன ஈர்ப்புப் பெறாத துறையாகவே இருக்கிறது. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் பண்ணிசை பயிற்றுவிக்க வேண்டிய தேவையிருந்தும் அதனை முறையாகப் பயிற்றுவிக்கும் தன்மையும் குறைந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்துப் பண்ணிசை மரபை வளர்ப்பதில் கோவில்கள் அதிக பங்களிப்பை வழங்க முடியும். ஆலயங்களில் பண்ணிசைப் பயிலகங்களை நிறுவுதல், மற்றும் பிற்காலப் பாடல்களைப் பாடுவதைத் தவிர்த்துப் பண்ணிசைப் பாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குதல் என இவற்றை அடுக்கிச் செல்லலாம். எது எவ்வாறாயினும் இவை குறித்துக் கோவில் சார்ந்த நிர்வாக அமைப்புக் களிடம் விழிப்புணர்வு ஏற்படல் அவசியமானது.

செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன்,
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



அருள்மிகு வருஷப்புல சூர்ய மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

நவகுண்டபக்ஷி புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா நூதன திரிதள கோபுர, நூதன விமான

மகாகும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம்

கிரிய ஆரம்பம் - 03-06-2014 சங்கல்பக்காப்பு - 05 / 06 -06-2014 கும்பாபிஷேகம் - 08-08-2014

அன்பிலை அழைக்கின்றேன்!

சிவபூமியாம் அமைகாரி மாநகரின் 13ஆம் நூலை [03-06-2014] திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு

மாலை 6.00 மணிக்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் [சன்னலைக்காப்பு] சாத்துதல் நடைபெறும் [05-06-2014 மதியம் 12.00 மணியுடன் 06-06-2014 காலை 6.00 மணிவரை]

மாலை 6.00 மணிக்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் [சன்னலைக்காப்பு] சாத்துதல் நடைபெறும் [05-06-2014 மதியம் 12.00 மணியுடன் 06-06-2014 காலை 6.00 மணிவரை]

குருமார் விபரம்

சர்வபோதகம் : சிவஞானபாலர்கள், தீர்ப்பாளர்மூதா குருகுல அதிபர் தாரணி மகாவித்தகம் குருக்கள் (ஆறுமுகம்)

ஆசாரசீல மதுரமான முருகனாசிரியர்கள்

பிரதிஷ்டை பிரதம குரு
ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயபிரதமகுரு
கலை சாதகக் குருக்கள்
தேவஸ்தான பிரதமகுரு
முன்னாள் நிர்வாகம் - வாக்கிய பஞ்சாங்கம் நோக்குபவர்

சிவஸ்ரீ க. மயூரேசக் குருக்கள்
சிவஸ்ரீ க. கமலநாதக் குருக்கள்
சிவஸ்ரீ ப. ஸ்ரீதரக் குருக்கள்
சிவஸ்ரீ ப. பிரபாகரக் குருக்கள்

சிவஸ்ரீ க. சுகந்தக் குருக்கள்
சிவஸ்ரீ க. ரவிக்குமாரக் குருக்கள்
சிவஸ்ரீ ஸ். கோகிலராஜ்
சிவஸ்ரீ ஸ். ஸ்ரீதரக் குருக்கள்

அருள் உதவி : ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான நிர்வாகசபை

ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான திருப்பணி வேலைத் திட்டக் குழு


அருள்மிகு வருஷப்புல ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
மகா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி
பெருவிழா 08.06.2014
நேரம்:
காலை 8.27
மணி முதல்
8.36 மணி
வரை

தன் பணிக்கு ஆளாக்கிய தாய் மகாமாரி

எம் மக்களின் இதயத் தாயாகிய வருஷப்புலம் சக்திபீட ஸ்ரீ மகாமாரி அம்மனின் தலவரலாற்றில் பல மஹா கும்பாபிஷேகங்களைக் கண்டு நிற்கின்றாள். அன்று 2010 பெருந்திருவிழாவின் பொழுது அடியேன் அன்னையைத் தரிசித்துக் கொண்டு நின்ற வேளை இவளுக்கு ஓர் கோபுரம் அமைத்து கும்பாபிஷேகஞ் செய்தால் அம்பிகை அருள் இன்னும் பல்கிப் பிரவாகித்து எம் ஊர் சிறக்கும் எனும் ஓர் உந்துதல் என்னுள்ளத்தில் தோன்றவைத்தாள் என் தாய்.

இக் கருத்தை செயலாக்கும் பொருட்டு வந்திருந்த எங்கள் கதிரமலைச் சிவனின் குரு சர்வேஸ்வரக் குருக்களிடமும் ஐயா! அண்மையில் நீங்களும் ஓர் கோபுரம் அமைத்து குடமுழுக்குஞ் செய்துள்ளீர்கள் அடியேனுக்கும் ஓர் அவாவை அவ்விதம் இவளுக்கு அமைக்கத் தாய் ஏற்படுத்தியுள்ளாள் உத்தேசமாக எவ்வளவு செலவு ஏற்படும் என வினாவினேன். ஆமாம் அருமையான முயற்சி ஏறக்குறைய அறுபது லட்சம் (60) வரும் தம்பி என்றார். அதிர்ந்து விட்டேன்; தாயே இப்பெருந்தொகையை யான் எப்படிச் சேர்ப்பேன் யாரிடம் போவேன் என்னால் இது முடியுமா ஏன்தாயே இக் கருவை என்னுள் விதைத்தாய் என்று தாயை நொந்தேன். தொடங்கு - செய்து முடிப்பேன் என்னும் தெய்வத் திருவாக்குக்கமைய மனந்தளராது இலண்டனுக்கு மீண்டு, இதனை எம்மூர் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்தேன். இதனைக் கேள்வியுற்ற எம்மவரான திரு. குமாரபாலன் அவர்கள் மிக அருமையான முயற்சி நீங்கள் திரிதளகோபுரத்தை அமைக்க ஆசைப் படுவதால் அடியேனும் இதில் ஒரு தளத்திற்குரிய செலவினைத் தருகிறேன் என்று உற்சாகப்படுத்தினார்.

ஏனைய அன்பர்களும் திரு. ஐயம்பிள்ளை ரவீந்திரனின் வீட்டில் ஒரு கூட்டம் கூட்டி கலந்துரையாடியபொழுது அடியேன் இதன் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படும் பட்சத்தில் எல்லோரும் உழைத்து உருவாக்குவோம் என்றனர். இம் மாபெரும் பொறுப்புக்கு சிறியேன் எத்துணை தகுதியுமில்லேன். எதற்கும் 3 நாட்கள் அவகாசம் தாருங்கள் என் குடும்பத்தினருடனும் ஏனையோர்களிடமும் கலந்துரையாடி முடிவு செய்கிறேன் என்றேன். சிந்தனை செயலாக வேண்டும் என்பது தாயின் திருவருள் போலும்; அனைவரும் ஆதரவு தந்தனர். ஆம் என்று ஓடோடி வருஷப்புலத்தாளிடம் வந்தேன். இங்குள்ள நிர்வாக சபையினரிடம் எனது கருத்தைத் தெரிவித்த பொழுது நன்று நன்று தாராளமாகச் செய்யலாம் ஆனால் ஒரு நிபந்தனை. இதற்கென ஓர் கும்பாபிஷேக திருப்பணிச்சபை

எனப் புதிதாகத் தெரிவுசெய்து பாலஸ்தாபனம் தொடக்கம் கும்பாபி ஷேகம் வரையான அனைத்தையும் நீங்களே செய்யுங்கள் என்றனர்.

அம்பிகை அருளால் சொல் செயல் வடிவம் ஆனது. அடியேனைத் தலைவராக்கி எம்மூர் மக்கள் அனைவரதும் ஏகோபித்த ஒத்துழைப்பினால் எம்மோடு கூட செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர் என 19 பேர் கொண்ட வருஷப்புல சக்திபீட ஸ்ரீ மகாமாரி அம்மன் கும்பாபிஷேகத் திருப்பணிச் சபை தெரிவாயிற்று. அருட்பணிவேலைகள் ஆரம்பமாகின. ஒரு தளத்தை மட்டும் செய்ய உதவி தருவேன் என்ற திரு. குமாரபாலன் அவர்களைக் கொண்டு முழு இராஜகோபுரத்தையும் அமைத்துத் தர வைத்தாள் தாய்.

லண்டன் வாழ் மக்களிடம் மட்டுமல்ல ஏனைய கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்குநாடுகள், அமெரிக்கா, நோர்வே, ஹொலண்ட் போன்ற நாடு களிலுமுள்ள எம்மூர் மக்களிடம் தொடர்பு கொண்டோம். அவர்களையும் கிள்ளித்தர வைத்தாள் தாய். கிள்ளித்தந்த நிதிகள் அள்ளி எடுக்கும் பெரு நிதிகளாயிற்று. இன்று பாலஸ்தாபனம் தொட்டு இராஜகோபுரம் வரையான அனைத்துப் பணிகளும் மிகவும் நேர்த்தியாக அழகாக இனிது நிறைவேறி அழகுற அன்னையின் திருவருளில் திழைக்கும் வண்ணம் எம்மக்களுக்கு ஓர் ஒப்பற்ற ஆலயத்தில் தானிருந்து தன்னருள் பொழி கின்றாள் தாய். அதுமட்டுமெல்ல, பேசும் சிலைகளை உருவாக்கி அன்னையின் இராஜகோபுரத்தை அமைக்க வைத்த சீர்காழிச் சிற்பவேந்தன் திரு. கலியப்பெருமாள் புருஷோத்தமனை அறிமுகமாக்கி அரும்பணி செய்ய வைத்தவளும் என்தாய் மகாமாரியே தான்.

இதற்கு ஒத்துழைத்த அம்பிகை அடியார்கள் ஒவ்வொருவரின் அளப்பரிய பங்களிப்பை எண்ணிப்பார்க்கிறேன். சிறு காசு தொடக்கம் பெரும் நிதி தந்த பேரருளாளர்களான உங்கள் பங்களிப்புக்கள் இன்றேல் இவ்வருட்பணி ஆக அம்பிகை தொடக்கினாள். எங்களைக் கொண்டு தன் பணி செய்ய வைத்து தலைநிமிர்ந்து நிற்கிறாள். அவளே தொடக்கினாள் அவளே நிறைவு செய்கிறாள். அவளின்றி அகிலமேது. தொடர்ந்தும் சேய்கள் எம்பணி தொடர தாயிடம் வேண்டி தளராது பணி செய்யும் உள்ளத்தை அனைவர்க்கும் தாயிடம் இறைஞ்சுவோம்.

திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்படுவதாக அறிந்து தாமாகவே மனமுவந்து தமக்குரிய பணிகளை நிறைவேற்ற நிதிவழங்கிய அம்பாளின் அடியவர்களுக்கு திருப்பணிச்சபை சார்பாக எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்

திரு. சரவணமுத்து தவபாலன்	திரிதள இராஜகோபுரம்
திரு. முருகேசு இந்திரன்	மூலஸ்தானம், வசந்தமண்டபம்
திரு. பாலகுமார், திரு. உதயகுமார்	மூலஸ்தான கூரைவேலை
திருமதி சுதாகரன் சுகந்தி	மகாமண்டபம்
திரு. செ. பிருந்தன். திரு. செ. ஜெயந்தன்	தம்ப மண்டபம்
திரு. க. பிரேமாகரன், திரு. அருந்தவராசா	மகாலக்குமி
திரு. சிவயோகம் குடும்பம்	ஸ்தம்பப் பிள்ளையார்
திரு. மகேசன் ஐங்கரன், திரு. மகேசன் தயாபரன், திரு. மகேசன் தற்பரன்	சரஸ்வதி
திரு. இந்திரன் கௌரிபாலன்	திருமஞ்சக்கிணறு
திரு. சி. பங்சலிங்கம்	கே.கே.எஸ். வீதியில் அருகாமையில் ஆலய நுழைவாயில்
திருமதி சுப்பிரமணியம் இராஜேஸ்வரி (சித்தியக்கா)	வாகனசாலைக்கான காணியை வழங்கியவர்
திரு. நடராசா அருள்ராஜ் திருமதி மகாதேவன் கலாநிதி திருமதி கருணாகரன் புனிதவதி திரு. செல்லத்துரை கேசரட்ணம் புதல்வர்கள் திரு. செல்லத்துரை சிறீதரன் திரு. செல்லத்துரை பாஸ்கரன்	வாகனசாலை நிர்மாணம்
திரு. ச. சிவராசா திரு. மு. கிரிதரன் திரு. மு. வாசுதேவன் திரு. மு. சிவா திரு. மு. சுகன்	கும்ப மண்டபம்
திருமதி அபிராமி சசிதரன்	நிலத்திற்கு பளிங்குக்கல் பதித்தல்
திரு. செ. ரவீந்திரன் திரு. செ. யோகேந்திரன்	நில வேலை
திரு. தேவராஜா பிரபாகரன் திரு. தேவராஜா பகீரதரன் திரு. தேவராஜா பரணீதரன்	மடப்பள்ளி அலுவலகம் களஞ்சிய அறைகள்
திரு. செல்லப்பா முரளீதரன்	மின்சார இணைப்பு
திரு. கந்தசாமி ஹரிஹரன்	வசந்தமண்டப கதவு
திரு. அ. சுகன் திரு. அ. குமார்	பைப், வடிகால் அமைத்தல்
திரு. த. யோகநாதன்	மின்பிறப்பாக்கி
திரு. த. பரணி திரு. சி. கலைச்செல்வன்	பொருட்கள் கொள்வனவும் அவற்றை அனுப்பி வைத்தலும்

நன்றிகள்...

அம்பாளின் அருள் ஒளிகயில் இன்று மகிழ்ச்சியுடன் நாம் எல்லோரும் கூடித் திழைத்திருக்கின்ற வேளையில் ஸ்ரீ மகாமாரி அம்மனின் பாதங்களைத் தொழுது எனது நன்றியுரையைக் கூற முற்படுகிறேன்.

இவ்வாலயத்தில் நீண்ட நாள் தொண்டர்கள் தொடர்ந்து பணி செய்து வருகின்றனர். பலர் மறைமுகமாக பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றனர். இன்னும் நாம் உதவிகோரிய போது வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றனர். எல்லோரையும் தனித் தனி குறிப்பிட முடியாவிட்டாலும் சம்பிரதாய முறையில் முதற்கண் எல்லோருக்கும் நன்றி கூறுகின்றேன். கும்பாபிஷேகம் சார்ந்த விடயங்களிலும், ஏனைய ஆலயக் கருமங்களிலும் பங்குபற்றிய அம்பாள் அடியார்களுக்கும் அவர்களின் அருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து எனது நன்றியுரையை ஆரம்பிக்கிறேன்.

ஆலய பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள் அவர்கள் ஆலயத்தின் பூசை வழிபாட்டுடன் பாலஸ்தாபனம் முதல் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் வரை சகல கிரியை வழிபாடுகளையும் அம்பாளின் விருப்புக்கேற்றவாறு நிறைவு செய்தமைக்காக ஐயா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அத்தோடு ஐயாவுடன் கூடி இந்த வழிபாடுகளில் ஈடுபட்ட அனைத்து அந்தண சிவாச்சாரியார்களுக்கும் மனமுவந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

திருப்பணி வேலைகளுக்கான ஆலோசனைகள் நிலையம் தீர்மானிக்க உதவிய சிவப்பிரம்மஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள், சிவப்பிரம்ம ஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், சிவப்பிரம்மஸ்ரீ சு. சண்முகானந்தக் குருக்கள் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவிக் கின்றேன்.

ஆலய நிருவாக சபையினர் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இவர்களுக்கு எமது நன்றிகள். கும்பாபிஷேகம் முதல் இன்றுவரை அன்னதானசபையின் பொறுப்பிலுள்ள அன்னதான மண்டபத்தைப் பயன்படுத்த உதவியுள்ளனர். அவர்களுக்கும் எமது நன்றி.

புதிய கும்பாபிஷேக திருப்பணிச்சபை 2012ஆம் ஆண்டு நிறுவப்பட்டு கும்பாபிஷேக திருப்பணியைத் திட்டமிடல், நிதி சேகரித்தல் பணிகளை மேற்கொள்ளுதல், முகாமை செய்தல், மீளாய்வு செய்தல், குறைகளை நிவர்த்தி செய்தல் முதலிய கடினமான பணிகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களுக்கும் எமது நன்றிகள்.

மேலும் சிற்பவேலையுடன் கூடிய கட்டடங்கள் எல்லாவற்றையும் சிற்பக் கலைஞர் புருஷோத்தமன் அழகிய முறையில் நிறைவேற்றித் தந்துள்ளார். கால எல்லையினுள் நிறைவேற்றியது பாராட்டப்பட வேண்டியது.

திரு. கணேசபிள்ளை சாரங்கன் எம்மால் கேட்கப்பட்ட கட்டடவேலைகளை திறமையான முறையில் நிறைவேற்றித் தந்துள்ளார். இவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இவர்களோடு க. திருமுருகன், க. தேவராசா, திரு. S. ரட்ணசிங்கம் திரு. சாந்தகுமார், திரு. பரம், ரவிச்சந்திரன் ஆகியோர் தம் பணியை தெய்வீகப்பணியாகக் கருதி ஓயாது செய்து நிறைவேற்றியுள்ளனர் இவர்களுக்கும் எமது நன்றி.

மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் தொடக்கம் மண்டலாபிஷேக, சங்காபிஷேக பூர்த்தி வரை இசை மழை பொழிந்த இசைக்கலைஞர்களான நாதஸ்வர, தவில் வித்துவான்களுக்கும், ஏனைய விசேட இசை வழங்கிய வித்துவான்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

மேலும் திருப்பணிகளுக்கும், மஹா கும்பாபிஷேகத்திற்கும் அனைத்து வழிகளிலும் உதவிய நிதி வழங்கிய அன்பர்களுக்கும், அடியார்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் ஒலி, ஒளி வழங்கியவர்களுக்கும், கும்பாபிஷேக நிகழ்வினைத் தொலைக்காட்சியூடாக ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கும் எமது அன்பான நன்றிகள். கும்பாபிஷேக கிரியைகள் தொடக்கம், இறுதிச் சங்காபிஷேகம் வரை தினமும் பூமாலை புனைந்து வழங்கிய அன்பருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது மஹா கும்பாபிஷேக மலரான "சக்தி பீட நாதம்" வெளிவருவதற்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்ததுடன் ஆலோசனைகள் வழங்கி அருட்பாக்கள், வாழ்த்துச் செய்திகள், ஆசிச்செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைத் தந்துதவிய பெரியோர்களுக்கும், அன்பர்களுக்கும் முதற்கண் நன்றி நவில்கின்றோம்.

"சக்தி பீட நாதம்" கும்பாபிஷேக மலர் சிறப்புற வெளிவருவதற்கு தனது அர்ப்பணிப்பான சேவையினை வழங்கிய இதழாசிரியர் வைத்திய கலாநிதி திரு. ஜெயக்குமரன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.


மேலும் இம் மலரை சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய "கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் " எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மலர் வெளியீட்டு விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்த அனைத்து அன்பர்களுக்கும், பெரியோர்களுக்கும் மற்றும் மலரினைப் பெற்று எம்மை ஊக்குவித்தவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ஸ்ரீ மகாமாரி அம்பாள் பொலிவுடன் எமக்கு அருள் புரிகின்ற இந்த வேளையில் திருப்பணிவேலைகள், கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், கும்பாபிஷேக மலர் வெளியீடு வரை நடைபெற்ற சமய நிகழ்வுகள், அன்னதானம், கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும் ஆலய வீதிகள், சுற்றுப்புறங்களைத் தமது தொண்டாக சுத்தமாகவும், அழகாகவும் பேணிவரும் அடியார்கள் உட்பட நேரடியாகவும், வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்த அனைத்து அம்பாள் அடியவர்களுக்கும் அம்பாளின் அருளால் சீரும் சிறப்புடனும் நிறைவாக வாழ வேண்டுமென அம்பாளைப் பிரார்த்தித்து எனது நன்றியுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

மு. இந்திரன்
தலைவர்,
வருஷப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாள்
கும்பாபிஷேகத் திருப்பணிச்சபை.







Harikaran, Jaffna.